
இதயத்திலே
அமர்வாய்!
பிரேமா
இதயத்திலே அமர்வாய்! ★ பிரேமா ★
இதயத்திலே
அமர்வாய்!
பிரேமா

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

உங்களை என்னுடைய எட்டாவது கதையில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு தொடர்ந்து ஆதரவு அளித்துக் கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்பது வள்ளுவர் வாக்கு. எந்தக் கருத்தை எவர் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமை யாகும். இந்தக் கருத்தை மையமாகக் கொண்டே இக்கதையின் கரு அமைந்துள்ளது.

இக்கதையின் நிறை குறைகளை premaarumugam@yahoo.com என்ற என்னுடைய மின்னஞ்சலுக்கு அனுப்பி நான் மேலும் வளர உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய கதைகளை புத்தகமாக வெளி யிடும் 'அருணோதயம்' திரு. அருணன் ஐயா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புடன்

**பிரேமா**

# இதயத்திலே அமர்வாய்

## 1

**மா**ங்கல்யம் தந்துனானே... என அய்யர் மந்திரம் உச்சரிக்க, கெட்டி மேளம் முழங்க சென்னையில் உள்ள அந்த மத்திய தர திருமண மண்டபத்தில் அமர்ந் திருந்தவர்கள் தங்கள் கைகளில் உள்ள அட்சதையை தூவி மணமக்களை ஆசீர்வதிக்க தயாராகினர்.

மணமகன் கண்ணன் தன் கையில் உள்ள தாலியை ராதிகாவின் கழுத்தில் கட்டுவதற்கு முன்பு குனிந்து அவளைப் பார்வையிட சரியாக அந்தக் கணம் ராதிகாவும் நிமிர்ந்து கணவனாகப் போகிறவனின் முகம் பார்க்க நிமிர... கண்கள் நான்கும் சந்தித்துக் கொண்டன.

ராதிகாவின் கண்களில் ஏக்கம் தென்பட்டதென்றால், கண்ணனின் கண்கள் கோபத்தை காட்டின. சில நொடிகளில் இருவருமே தங்களை நிகழ்காலத்திற்கு மீட்டுக் கொண்டார்கள்.

ராதிகா தன் தலையை குனிந்து கொள்ள, கண்ணன் அவளது கழுத்தில் அந்த பொன் தாலியை முடிந்து அவளை தன் மனைவியாக ஏற்றுக் கொண்டான்.

திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் அட்சதை தூவி ஆசீர்வதித்தனர். மணமக்களின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என தங்களது இஷ்ட தெய்வங்களை வணங் கியவாறு நடப்பவற்றை பார்த்துக் கொண்டிருந்தனர்.

''அக்னியை மூன்று முறை வலம் வந்திடுங்கோ!'' என அய்யர் சொன்னதும்,

வேண்டா வெறுப்பாய் ராதிகாவின் கரம் பற்றி கண்ணன் வலம் வந்தான். அவன் பட்டும் படாமலும் தன் கையை பற்றி இருப்பதை உணர்ந்த ராதிகாவிற்கு எதிர்காலம் மிகப் பெரிய கேள்விக் குறியாய் தன் கண் முன் தோன்றி அவளை மிரட்டியது.

''அம்மா அப்பாகிட்டே ஆசீர்வாதம் வாங்கிக்கோங்க!'' என அய்யர் அடுத்த உத்தரவைப் பிறப்பிக்க,

கண்ணன் ராதிகாவுடன் நடந்து சென்று தன் தாய் தேவகியின் காலில் விழுந்தான்.

''நல்ல ஆயுளோடு எல்லாவித வளங்களும் பெற்று வாழணும்!'' என்று அவர் வாழ்த்தினார்.

கண்ணனின் கரம் பற்றி, ''ஹாப்பி மேரீட் லைஃப் அண்ணா!'' என அவன் தங்கை கயல்விழி வாழ்த்தினாள்.



அவளது தலை மீது தனது இடது கையை வைத்து அழுத்தி, ''தாங்க்ஸ் கயல்.'' என்று நன்றி உரைத்தான்.

கயல்விழியின் அருகில் நின்று கொண்டிருந்த அவளது கணவன் சங்கரும் மனைவியை பின் தொடர்ந்து வாழ்த்த, கண்ணன் அவனுக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டான்.

கயல்விழியும் சங்கரும் ராதிகாவிற்கும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

தந்தையும் தாயும் மாமாவிற்கு வாழ்த்துச் சொல்வதை பார்த்திருந்த கயல்விழியின் மூன்றரை வயது மகன் நிகில், ''மாமா, நானு நானு...'' என்று கூறிக்கொண்டே அவனருகில் ஓடி வந்தான்.

''என்னடா நிகில் குட்டி?'' என கண்ணன் அவன் புறம் குனிய, நிகில் தன் மாமனை நோக்கி கை கொடுத் தான்.

அந்த பிஞ்சு கைகளை கண்ணன் பற்றியவுடன், ''ஹாப்பி பர்த்டே மாமா!'' என்று நிகில் வாழ்த்தினான்.

அவனை தூக்கிக் கொண்டே, ''பர்த்டேயா?'' எனக் கேட்டு கண்ணன் சிரிக்க,

''மாப்பிள்ளை என் பையன் சரியா தான் வாழ்த்துறான். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே அவங்க அத்தையோட கணவனா பிறந்து இருக்கீங்க'' என்று சங்கர் விளக்கம் கூறவும், சுற்றி இருந்த அனைவரும் நகைத்தனர்.

கண்ணன் சிரித்துக் கொண்டே நிகிலின் கன்னத்தில் முத்தம் பதித்தான்.

''மாமா, கிஸ் பண்ணாதீங்க. மீசை குத்திருச்சு'' என்று சொல்லிய நிகில் தன் கைகளால் கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டான்.

ராதிகா ஓரக் கண்ணால் தன் கணவனைப் பார்வை யிட்டாள்.

சற்றே நிமிர்ந்து பார்க்கக் கூடிய உயரம். எங்கேயும் கூடுதல் சதை இல்லாமல் அளவான உடற்கட்டு அவனை நல்ல உழைப்பாளி என்று காட்டியது. கருகரு வென்று அடர்த்தியான மீசை. அந்தக் கருமைக்கு சற்றே குறைவான கருமை நிறம். ஆம். அந்த மாயக் கண் ணனைப் போன்று இன்னும் கருமை நிறத்தவன். நிறம் தான் கருப்பே ஒழிய ஆள் லட்சணமாகவே இருப்பான்.

'இவன் மட்டும் கொஞ்சம் கலரா பொறந்திருந்தால் நம்மை காலி பண்ணிடுவான்' என்று நண்பர்கள் கண்ணனை கிண்டல் செய்வதுண்டு.

''அண்ணா, எங்கள் குடும்பத்திலே எல்லோரும் வாழ்த்துச் சொல்லிட்டோம்'' என கயல்விழி மகிழ்ச்சி யுடன் சொல்லவும்,

''இல்லை கயல் இன்னும் ஒரு ஆள் பாக்கி இருக்கு'' என்று கூறிய கண்ணன் நிறைமாத கர்ப்பிணியான தங்கையின் மேடான வயிற்றின் மீது கை வைத்து,

''குட்டி, நீங்களும் மாமாவுக்கு வாழ்த்துச் சொல் லிடுங்க'' என்றான்.

பார்த்திருந்த அனைவரும் புன்னகைத்தனர். அதன் பின் ராதிகாவின் பெற்றோர்களின் காலில் விழுந்து மணமக்கள் ஆசி பெற்றனர்.



ராதிகாவின் தங்கை சந்தியா, ''மாமா கங்கிராட்ஸ்'' என்று கை குலுக்கி வாழ்த்துக் கூறினாள். கண்ணன் அவளைப் பார்த்து முறுவலித்துக் கொண்டே நன்றி கூறினான்.

ராதிகாவின் பெற்றோர்களுக்கு கண்ணோரம் நீர் துளிர்த்தது. மகள் படித்து முடித்ததும் திருமணம் செய்ய வேண்டும் என்று எண்ணிய அவர்கள் அவள் எம்.எஸ்ஸி கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கும்போதே மிக மும்முரமாக வரன் பார்க்க ஆரம்பித்தார்கள்.

ஜாதகம் பொருந்தி வந்தால் மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் வரதட்சணை பொருந்தி வரவில்லை. ஒரு இடத்தில் வேலை பார்க்கும் பெண் வேண்டும் என்று கேட்டார்கள். இரு இடங்களில் பையனின் பழக்க வழக்கங்கள் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை என்று ராதிகா வீட்டினர் தட்டிக் கழித்தனர். ஒரு வரனுக்கு எல்லாம் பொருந்தி வந்தது. ஆனால் மாப்பிள்ளைக்கும் பெண்ணிற்கும் வயசு வித்தியாசம் அதிகமாக இருந்தது.

இப்படியாக ராதிகாவின் திருமணம் தள்ளிக் கொண்டே போய் அவளது இருபத்து நான்காவது வயதில் தான் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது.

பல மாத தேடுதலுக்குப் பின் கண்ணன் மாப்பிள்ளை யாக வந்தது தங்களது அதிர்ஷ்டமே என்று ராதிகாவின் தந்தை எண்ணினார்.

ஏனென்றால் கண்ணனும் தன் பெண்ணைப் போலவே எம்.எஸ்ஸி படித்திருக்கிறான். தன் பெண் ணிற்கும் அவனுக்கும் ஆறு வயது தான் வித்தியாசம். சொந்தமாக டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வைத்திருக்

கிறான். வரதட்சணை என்று எதுவும் கேட்கவில்லை. என்ன ஒன்று நிறம் தான் கம்மி. அது அவருக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவரது நிறமும் அதுவே!

சடங்கு சம்பிரதாயங்கள் முடிந்த பின் சின்ன குடத்திற்குள் மோதிரம் போட்டு அதை எடுத்து விளையாடும் விளையாட்டிற்காக அனைவரும் மேடையில் அமர்ந்தனர்.

தண்ணீருக்குள் மோதிரத்தை போட்டு மணமக்கள் இருவரையும் தேடச் சொல்ல கண்ணனும் ராதிகாவும் தங்களது கைகளை அதற்குள் விட்டார்கள்.

அவளது கை பக்கத்தில் தன் கை கரிக்கட்டை போல் காட்சி அளிப்பதாகவே கண்ணனுக்கு தோன்றியது. கண்ணன் எந்த அளவிற்கு கருப்போ ராதிகா அந்த அளவிற்கு வெளுப்பு.

கண்ணன் இந்த நிற வேறுபாட்டையே வெறித்துக் கொண்டு இருக்க அவனது நெருங்கிய நண்பன் பாலு அவனது காதில்,

''கண்ணா மோதிரத்தை தேடுற மாதிரி பாவ்லா வாச்சும் பண்ணு. எல்லோரும் உன்னையே பார்த்துக்கிட்டு இருக்காங்க'' என்றான்.

'எங்கே என் கையை தொட வேண்டி இருக்குமோன்னு பயந்து போய் கையை உள்ளே மட்டும் வெச்சுக்கிட்டு சும்மாவே இருக்கார்' என்று ராதிகா மனதிற்குள் புழுங்கினாள்.

அவளே அந்த மோதிரத்தை எடுத்து போட்டியில் வெல்லவும் செய்தாள்.



அனைவரோடும் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டு சாப்பிட்டு முடித்து மண்டபத்தை காலி செய்யும்போது மாலை ஆனது.

முதல் நாள் மாலை நிச்சயதார்த்தம் நடந்ததால் வரவேற்பு நிகழ்ச்சி என்று அவர்கள் தனியாக ஏற்பாடு செய்யவில்லை.

## 2

இரவு... முதல் இரவும் வந்தது. ராதிகாவை நன்றாக அலங்கரித்து கண்ணனின் அறைக்குள் அனுப்பி வைத்தனர்.

தடதடக்கும் இதயத்தோடு ஒருவித பயத்துடனே ராதிகா அறைக்குள்ளே நுழைந்தாள். கண்ணன் எங்கே இருக்கிறான் என்று தேடத் தேவையின்றி அவளுக்கு சில அடிகள் முன்பு தான் அவன் நின்று கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்துக் கொண்டே அவ்ளை கடந்து சென்ற கண்ணன் அறையை தாழிட்டுவிட்டு வந்தான். அவளை கண்டு கொள்ளாது படுக்கையில் வந்து விழுந்தவன் ஒரு புறமாக... அவளுக்கு முதுகு காட்டி திரும்பி படுத்துக் கொண்டான்.

அவனது நடவடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகா தனது பெட்டியில் இருந்த இரவு உடை ஒன்றை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்று மறைந்தாள்.

உடை மாற்றி வந்தவள் அந்தக் கட்டிலின் மறு ஓரத்தில் படுத்துக் கொண்டாள். அவனது முதுகைக் கூடப் பார்க்க விருப்பம் இல்லாதது போல் அவளும் முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

இருவரும் அடுத்தவருடன் வாய் மொழியாய் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் இருவரும் தத்தம் மனதில் அடுத்தவரை பற்றி எண்ணிக் கொண்டு... இல்லையில்லை திட்டிக் கொண்டு இருந்தனர்.

கண்ணன் தன் மனதிற்குள், 'முகத்திலே ஒரு சின்ன ஏமாற்றமாச்சும் தெரியு'மா பாரு! ஒண்ணுமே பேசாமல் வந்து படுக்கிறேன். ஏன் என்னன்னு கேட்காமல் தொல்லை விட்டதுன்னு நினைச்சிக்கிட்டு ஜாலியா டிரஸ் மாத்திட்டு வந்து படுத்துட்டாள்' என திட்டிக் கொண்டிருந்தான் என்றால்,

ராதிகாவோ, 'நான் நடந்து வந்துக்கிட்டு இருக்கேன். என்னை பார்க்காத மாதிரி என்னை கடந்து போறாருன்னு பார்த்தால்... இந்த ரூமிலே நான் ஒருத்தி இல்லைங்கிற மாதிரியே நடந்துக்கிறார். என் மேலே அவ்வளவு வெறுப்பு.

ம்ம்ம் அவ்வளவு வெறுப்பை மனசிலே வைச்சுக் கிட்டு ஏன் எனக்கு தாலி கட்டணும்? மணமேடையிலே எதுக்கு ஈன்னு பல்லைக் காட்டணும்?' என்று பொருமிக் கொண்டிருந்தாள்.

இருவரும் அடுத்தவர்களைத் திட்டிக் கொள்வதின் மூலம் தங்களது மனதை தேற்றிக் கொள்ள முயன்றனர்.

வெகு நேரம் வரை இருவருக்குமே தூக்கம் வர வில்லை. புரண்டு படுத்தால் சிறு சப்தம் எழுப்பினால்



கூட தான் விழித்திருப்பது அடுத்தவருக்கு தெரிந்து விடும் என நினைத்து அசையாமல் படுத்திருந்தனர்.

காலையில் இருந்து அதிக நேரம் நின்று கொண்டு இருந்ததால் ஏற்பட்ட களைப்பால் ராதிகா முதலில் தூங்கினாள்.

நடு இரவு தாண்டியும் கண்ணனிற்கு தூக்கம் வர வில்லை.

மறுநாள் காலை ராதிகா எழுந்து பார்த்த பொழுது கண்ணன் குளித்து முடித்து பேப்பர் படித்துக் கொண் டிருந்தான். ராதிகா குளித்து முடித்து கீழே செல்வதற்காக அறையின் கதவைத் திறக்க முயன்றபோது,

"வெளியே போகப் போறியா?" என்ற கேள்வியின் மூலம் கண்ணன் தன் மனைவியிடம் முதன் முதலாகப் பேசினான்.

'நேத்தெல்லாம் பேசணும் என்று தோணலை. இப்ப வந்து இப்படி ஒரு கேள்வியை கேட்கிறாரு. இந்த ரூமிலே இருந்தா மட்டும் மானே தேனே பொன் மானேன்னு கொஞ்சப் போறாராக்கும்? கல்லையும் மண்ணையும் பார்ப்பது போல பார்த்து வைப்பாரு!' என்ற எண்ணம் ராதிகாவின் மனதில் தோன்றவும்,

"ரூமை விட்டுப் போகப் போறியான்னு கேட்கிறீங் களா? அல்லது உங்க மனசை விட்டு போகப் போறி யான்னு கேட்கிறீங்களா?" என்று நக்கலாகக் கேட்டாள்.

"நீ எப்போ என் மனசுக்குள்ளே வந்தே?" என்று அவன் படு நக்கலாகத் திருப்பிக் கேட்க,

அவனது கேள்வியில் அவளுக்குக் கோபம் வந்தது.

"உங்க மனசுக்குள்ளே நான் எதுக்கு வரணும்? எட்ட நின்னாலே உங்க பார்வையின் உஷ்ணம் தாங்கலை. இதிலே உங்க மனசுக்குள்ளே வந்துட்டாலும்... உங்க மனசு என்ன பைஃவ் ஸ்டார் ஹோட்டல் சூட்டா? அப்படியே விசாலமா குளு குளுன்னு இருக்குதாக்கும்?" என்று அவள் நொடித்துக் கொள்ளவும்,

"ஆமா இந்தம்மா பெரிய மகாராணி. இவங்க குடி இருக்கிறதுக்காக மனசைக்கூட ஏ.சி. பண்ணி வைப்பாங்க. பெருசா சொல்ல வந்துட்டாள். உன் வேலையைப் பார்த்துக்கிட்டு போ" என்று அவன் சிடுசிடுக்கவும்,

"நான் என் வேலையைப் பார்த்துக்கிட்டுதான் போக இருந்தேன். நீங்க தான் என்னை நிறுத்தி வைச்சு பேசிக்கிட்டு இருக்கீங்க" என்று கெத்தாளமாக சொன்னாள்.

அறையைத் திறந்து கொண்டு வெளியேறப் போனவளை, "நான் உன் கூடக் கொஞ்சம் பேசணும்" என்ற அவனது கூற்று அவளைத் தடுத்து நிறுத்தியது.

"நான் இதை நேத்தே எதிர்பார்த்தேன்" என்று மெதுவான குரலில் கூறிக் கொண்டே திரும்பி நின்றாள்.

பேசு என்பது போல் அவனின் முகம் பார்த்து ராதிகா நிற்க... சில நொடி தயக்கத்திற்கு பின்,

"எல்லாக் கல்யாணத்திலும் தாலி கட்டும்போது

**மாங்கல்யம் தந்துனானே மம ஜீவன ஹேதுனா**

**கண்டே பத்னாமி சுபாகே த்வம் சஞ்சீவ சரத சதம்**

அப்படிங்கிற மந்திரம் சொல்லுறாங்களே. உனக்கு அதன் அர்த்தம் தெரியுமா?" என்று அவன் கேட்டதும்,



"நல்லாத் தெரியும். மங்கலகரமானவளே! உன்னோடு நல்ல முறையில் இல்லற வாழ்வு நடத்த வேண்டும் என்பதற்காக இந்த திருமாங்கல்ய சரடை உன் கழுத்தில் அணிவிக்கிறேன். என் மனைவியாக, என்னுடைய சுக துக்கங்களில் பங்கு கொள்பவளாக சுபயோகங்களுடன் நூறாண்டு காலம் வாழ்க!

இதுதான் அதனோட அர்த்தம். ஏன் கேட்கிறீங்க?" என்று கேட்டாள்.

"அந்த மந்திரத்தை... அதன் அர்த்தத்தை நான் உணர்ந்து தான் உன் கழுத்திலே தாலி கட்டினேன் நீ..." என்று அவன் கேள்வியாய் நிறுத்த,

"நீங்க தாலி கட்டின அந்த நிமிஷம் நானும் உங்க சுகதுக்கங்களில் கடைசி வரை கூட இருக்கணும் என்று கடவுளை வேண்டிக் கொண்டேன்" என்றாள்.

இருவருக்குமே அடுத்தவரின் பதில் 'அப்பாடா! இது போதும்!' என்ற நிம்மதியை உணர்வை அளித்தது.

'இது தெரிஞ்சிருந்தால் நேத்து கல்யாணம் நடக்கும் போது சந்தோஷமாக இருந்து இருக்கலாமே! தேவையில்லாமல் பயப்பட வேறு செய்தோம்' என்ற எண்ணமும் இருவர் மனதிலும் தோன்றியது.

வேற என்ன சொல்லப் போகிறான் என்பது போல் அவனது முகத்தையே பார்த்து கொண்டு ராதிகா நிற்க...

"நீ கீழே போ" என்றான்.

"இது தானா உங்க பேச்சு? நான் ஏதோ சமஸ்கிரத டியூஷன் என்று நினைச்சேன்" என்று முணுமுணுத்துக் கொண்டே,

அவனது பதிலுக்காகக் காத்திருக்காமல் அறையைத் திறந்து கொண்டு வெளியேறினாள். அவளைப் பின்பற்றி அவனும் கீழே இறங்கிச் சென்றான்.

'கீழே யாருகிட்டே எப்படிப் பேசப் போகிறாளோ?' என்ற பயத்துடனே கண்ணன் தன் மனைவியை பின்பற்றி மாடியில் இருந்து கீழே இறங்கினான்.

அவர்கள் மாடியில் இருந்து கீழே வந்த பொழுது கயல்விழியின் கணவன் சங்கர் மும்பை செல்வதற்காகத் தயாராகிக் கொண்டு இருந்தான். அவன் மும்பையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''இன்னைக்கே கிளம்புறீங்களா அண்ணா?'' என்று ராதிகா சங்கரைப் பார்த்துக் கேட்டதும்,

ராதிகாவின் இயல்பான 'அண்ணன்' என்ற அழைப்பு சங்கரின் முகத்தில் புன்முறுவலை மலர வைத்தது என்றால் கண்ணனின் வயிற்றில் குடம் பாலை வார்த்தது.

'அப்பாடா! வீட்டு மாப்பிள்ளை முன்னாடி என் மானம் போகாது. கயல் அல்லது அம்மா முன்னாடி போனால் பரவாயில்லை. சமாளிச்சுக்கலாம்' என்று கண்ணன் எண்ணிக் கொண்டான்.

ராதிகாவிடம் சங்கர், ''ஆமாம்மா உடனே கிளம்பணும். கயல் பிரசவ சமயத்திலே லீவு தேவைப்படுமே.. அதான்'' என்றதும்,

''நீங்க சொல்லுறதும் சரி தான் அண்ணா'' என்று அவனது கூற்றை ராதிகா ஆமோதித்தாள்.

கண்ணன் சங்கரிடம், ''எல்லோரும் பொண்டாட்டிக் காக சொத்து சேர்த்து வைப்பாங்க. நீங்க லீவை சேர்த்து வைக்கிறீங்களா?'' என்று கிண்டல் பண்ணி...



''நேத்து தானே மாப்பிள்ளை உங்களுக்குக் கல்யாணம் ஆகி இருக்கு. நீங்க என்னவெல்லாம் செய்யப் போறீங்கன்னு நானும் கயலும் பார்க்கத் தானே போறோம். என்ன கயல் சொல்லுறே?'' என்று சங்கர் தனது மனைவியை துணைக்கு அழைத்தான்.

''அண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வைச்சிருக்கார். அவர் கடைக்கு அவரே ராஜா. அவரே மந்திரி. நினைச்சா லீவு எடுத்துக்குவார். அதனால அவருக்கு லீவை சேர்த்து வைக்கத் தேவையில்லை...'' என்று கயல் கூறியதும்,

அவளை இடைமறித்த தேவகி, ''வியாபாரம் பண்ணுறவங்க நினைச்சப்ப எல்லாம் லீவு எடுக்க முடியாது. உங்க அண்ணன் லீவு எடுக்கணும் என்றால் கடையை மூடினால் தான் உண்டு'' என்ற நிதர்சனத்தை எடுத்து உரைத்தார்.

''ம்ம்ம் நீங்க சொல்லுறதும் கரெக்ட் தான். ஆனா நானும் எங்க வீட்டுக்காரரும் சொல்ல வந்த விஷயம் என்னன்னா... இனிமேல் அண்ணன் விக்கல் எடுத்தா தண்ணி குடிக்கக் கூட வீட்டுக்கு தான் வருவார்'' என்று கயல் கேலியில் இறங்கினாள்.

ராதிகா தன் அருகே நின்று கொண்டிருந்த கண்ணனிடம் மெதுவான குரலில், ''எதையாவது சொல்லி பயங்காட்டினால் தானே விக்கல் போகும் என்று சொல்லுவாங்க. என்னைப் பார்த்தால் உங்களுக்கு பயம் வராதே. வெறுப்பு தானே வரும். வெறுப்பிலே கூட விக்கல் மறையுமா என்ன?'' என்று கிண்டலாகக் கேட்டாள்.

அவனை நக்கல் பண்ணிய போதும் சுற்றி நிற்பவர்களுக்காக அவள் தனது உதட்டில் புன்னகையை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

"நீ மட்டும் என்னை காதலா பார்க்கிறாயாக்கும்?" என அவன் பதிலுக்கு கேட்டான்.

'உங்களைப் போய் எப்படி காதலா பார்க்க முடியும்?' என்று ராதிகா தன் மனதில் நினைத்ததைக் கேட்கும் முன்பே அவன்,

"நான் என்னவோ உன்னைப் பார்த்துட்டால் தேன் குடிச்ச நரியா மாறிடுவேன் என்று என் தங்கச்சி நினைச்சுக்கிட்டு இருக்காள். ஆனா அவ அண்ணன் தன் பொண்டாட்டியை பார்த்தால் இஞ்சி தின்ன குரங்கா மாறுவான் என்று அவளுக்குத் தெரியலை" என்று கடுப்புடன் சொன்னான்.

"பரவாயில்லையே. சந்தடி சாக்கிலே உண்மை எல்லாம் சொல்லுறீங்க" என்று ராதிகா கிண்டல் அடிக்கவும்,

அவளை ஒரு நொடி முறைத்தவன், தன் குடும்பத்தாரை மனதில் நினைத்துப் பார்த்து தனது முக பாவனையை மாற்றிக் கொண்டு புன்னகை முகமாக நிமிர்ந்தான்.

இவர்கள் இருவரும் அடுத்தவரை திட்டிக் கொண்டிருப்பது தெரியாமல் தேவகியும் கயலும் புது மண மக்கள் ஏதோ காதல் ரசம் சொட்ட தங்களுக்குள் ரகசியம் பேசிக் கொள்வதாக நினைத்துக் கொண்டார்கள்.

தன் மனைவி தன்னைக் கிண்டலடித்தாலும் தன் தாய் மற்றும் தங்கையின் முன்பு சிரித்த முகமாகவே



நடித்ததால் அவள் அவர்களிடமும் நன்றாக நடந்து கொள்வாள் என்று கண்ணனுக்குத் தோன்றியது. அதனால் அவன் நிம்மதியாக உணரவும் செய்தான்.

"உங்களுக்கு டிரைன் எத்தனை மணிக்கு மாப்பிள்ளை?" என்று தேவகி சங்கரை பார்த்துக் கேட்டவுடன்,

"சென்ட்ரலில் இருந்து பதினொண்ணு ஐம்பத்தஞ்சுக்கு அத்தை. நான் ஒரு பத்தரைக்கு இங்கே இருந்து கிளம்பினால் சரியா இருக்கும்" என்று சங்கர் பதில் அளிக்கவும்,

"முதல்ல சாப்பிட வாங்க" என்று தேவகி அனைவரையும் சாப்பிட அழைத்தார். அனைவரும் காலைச் சிற்றுண்டியை சாப்பிட ஆரம்பித்தனர்.

நிகிலின் படிப்பைப் பற்றி அறிய விரும்பிய ராதிகா கயலிடம், "நிகில் ஸ்கூலுக்கு லீவா? எத்தனை நாளைக்கு?" என்று கேட்டாள்.

"நிகில் அங்கே பிரி.கே.ஜி. படிச்சிக்கிட்டு இருந்தான். இவருக்கு இன்னும் கொஞ்ச நாளிலே இங்கே சென்னைக்கே டிரான்ஸ்பர் கிடைச்சிடும். இங்கேயே வீடு பார்த்து செட்டில் ஆகிடுவோம். அதனால நிகில் சென்னையிலே எல்.கே.ஜி. படிக்கப் போறான்" என்று கயல் பதில் அளித்ததும்.

ராதிகா முகம் மலர, "ரொம்ப சந்தோஷம் அண்ணி" என்று நாத்தனாரைப் பார்த்துச் சொன்னவள்,

நிகிலிடம் திரும்பி, "நிகில் இனிமே இங்கேயே இருக்கப் போறியா? ஜாலி இல்ல? உனக்கு சென்னை

பிடிக்குமா? இல்லை மும்பையா?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டாள்.

அவன், ''சென்னை தான் பிடிக்கும். இங்க மாமா பாட்டி இருக்காங்க...'' என்று தனக்கு ஏன் சென்னை பிடிக்கும் என்பதற்கான காரணத்தையும் சேர்த்து சொன்னான்.

தன் மகள் அருகிலேயே வந்து விடப் போகும் விஷயம் புதிதாக வந்த மருமகளுக்கு சந்தோஷம் தருகிறது என்பதை கவனித்த தேவகி மனதில் நிம்மதியாக உணர்ந்தார்.

தன் மகள் தாய் வீட்டிற்கு நிம்மதியாக வந்து செல்ல வேண்டும் என்று தான் எந்தத் தாயும் விரும்புவாள்.

அதற்கு அந்த வீட்டு மருமகளுக்கும் மகளுக்குமான நட்பு நல்ல விதத்தில் அமைய வேண்டியது மிக முக்கியமானது.

ராதிகாவிற்கும் கயலுக்குமான நட்பு நல்ல விதத்தில் இருக்கும் என்று தோன்றியதால் தேவகி நிம்மதியானார்.

''அம்மா, நான் மச்சான் கூடப் போய் டிரைன் ஏத்திட்டு வரேன்'' என்று கண்ணன் கூறினான்.

''நீங்க எதுக்கு கண்ணன் வரீங்க. நானே போயிடுவேன். நீங்க மறுவீட்டு விருந்துக்கு போகலையா?'' என்று சங்கர் விசாரிக்க,

''இல்ல மாப்பிள்ளை நாளைக்கு தான் மறுவீட்டு விருந்து. அதனால கண்ணன் உங்க கூட வரட்டும். நீங்களும் இன்னைக்கு சென்னையிலே இருந்தீங்கன்னா இன்னைக்கே மறுவீட்டு விருந்தை வச்சிருப்பாங்க.



ஆனா உங்களுக்கு லீவு இல்லை. நீங்க இன்னைக்கு ஊருக்குப் போறதால நாளைக்கு தான் மறுவீட்டு விருந்து.

ம்ம்ம்... முன்னெல்லாம் கல்யாண வீடுன்னா கல்யாணத்துக்கு முன்னாடியும் பின்னாடியும் வீடே சொந்தக்காரங்களோட வருகையால நிறைஞ்சு இருக்கும்.

ஆனா இப்ப பாருங்க... எல்லோரும் கல்யாணத்துக்கு முதல் நாள் தான் வராங்க. கல்யாணம் முடிஞ்சதும் மண்டபத்தில் இருந்தே அவங்கவங்க ஊருக்குக் கிளம்பிடுறாங்க. அவங்களைச் சொல்லியும் குத்தமில்லை. வேலையைப் பார்க்கப் போக வேண்டி இருக்கே!

முன்னெல்லாம் மறு வீட்டு விருந்துக்கு சொந்த பந்தம் சம்பந்திகள் என்று எல்லோரும் சேர்ந்து போவோம். உங்க அம்மா அப்பா நேத்தே கிராமத்துக்குப் போயிட்டாங்க. நீங்களும் கிளம்புறீங்க. இன்னும் கொஞ்ச நாள் போச்சுன்னா பொண்ணு மாப்பிள்ளை மட்டுமே மறுவீட்டு விருந்துக்குப் போவாங்க'' என்று தேவகி அங்கலாய்த்தார்.

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்பது போல் சிறியவர்கள் அமைதியாய் இருந்து விட்டனர்.

## 3

கண்ணனும் சங்கரும் இரயில் நிலையத்திற்கு கிளம்பிச் சென்ற பின் தேவகி மதியச் சமையலை கவனிக்க ஆரம்பித்தார்.

ராதிகா மாடியில் தங்கள் அறையில் தன்னுடைய துணிகளை எல்லாம் கண்ணனின் பீரோவுக்குள் அடுக்க ஆரம்பித்தாள். அடுக்கி முடித்ததும் கீழே வந்தாள்.

அவளுக்கு அந்த வீட்டில் எந்த வேலை எப்பொழுது செய்ய வேண்டும் என்று ஒன்றும் புரியாததால் சமையலறை வாயிலில் வந்து தயங்கி நின்றாள். தேவகி பாதி சமையல் வேலையை முடித்திருந்தார்.

''நீ இப்போ ஃப்ரீயா இருக்கியா ராதிகா?'' என்று கேட்டார்.

''வேலை எதுவும் இல்லை அத்தை. ஏன் கேட்கிறீங்க?''

அடுப்பில் உள்ளதை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நான் உன்கூடக் கொஞ்சம் பேசணும்'' என்று கூறி, மருமகளை அழைத்துக் கொண்டு வரவேற்பறையில் இருந்த சோபாவில் தன் அருகே அமர வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''என் குடும்பத்தைப் பத்தி உனக்கு எவ்வளவு விஷயங்கள் தெரியும் என்று எனக்குத் தெரியலை. இப்போ இந்த குடும்பத்திலே நீ முக்கியமான ஆள். அதனால சில விஷயங்களை உனக்குச் சொல்ல வேண்டியது என் கடமை'' என்று ஆரம்பித்தார்.

'இவர் என்ன சொல்ல... அல்லது குண்டு போடப் போகிறாரோ?' என்ற பயத்துடனே அவரது பேச்சை ராதிகா செவிமடுத்தாள்.

''எங்க வீட்டுக்காரர் ஒரு அப்பிராணி. நியாயவாதி. தொழிலில் அவருக்கு நல்ல பேர் இருந்த போதும் அவருக்கு திறமை பத்தலைன்னு சொல்லுறதா இல்லை



அகல கால் வைக்க அவர் விரும்பலைன்னு சொல்லுற தான்னு எனக்குத் தெரியலை.

நான் ஏன் இப்படிச் சொல்லுறேன்னா எங்க வீட்டுக்காரர் பெருசா சம்பாதிக்கலை. அதே சமயம் எந்தக் கடனும் வாங்கி கட்டாமல் பாக்கி வைக்கவும் இல்லை.

இந்த வீடும் அவர் வைச்சிருந்த மளிகை கடையும் எங்க மாமனார் சொத்து. பிள்ளைங்க ரெண்டு பேரும் வீடு பழங்காலத்து மாடலில் இருக்கு. இடிச்சிட்டு இந்தக் காலத்துக்கு தகுந்த மாதிரி கட்டணும் என்று பிரியப்பட்டாங்க என்று கீழ் போர்ஷனை மட்டும் கட்டினார். அவரது சம்பாத்தியத்திலே அதை மட்டும் தான் அவரால செய்ய முடிஞ்சது.

பொண்ணு காலேஜ் போகிற சமயத்திலே அவ கல்யாணத்துக்கு நகை வாங்கிக்கலாம் என்று நானும் மெத்தனமா இருந்துட்டேன். ஆனா கண்ணன் கடைசி வருஷம் படிக்கும்போது, பரீட்சைக்கு ஒரு மாசம் இருக்கும்போதே அவர் மாரடைப்பு வந்து இறந்து போனார்.

இத்தனைக்கும் ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. விதி... அவர் போய் சேர்ந்திட்டார்.

என்னடா செய்யப் போறோம் என்று எனக்குக் கவலையா இருந்துச்சு. கண்ணன் பொறுப்பான பிள்ளை தான். ஆனா அவனும் சின்னப் பையனாச்சேன்னு நினைச்சேன்.

ஆனா அவர் இறந்து போன ஒரே வாரத்தில் அவன் வருங்காலத்தைப் பத்தின திட்டத்தோட என் முன்னாடி வந்து நின்னபோது தான் என் பையன் வளர்ந்துட்டான் என்ற விஷயம் எனக்குப் புரிஞ்சது.

அவன் பரீட்சை முடிஞ்சதும் முழு மூச்சா தொழிலில் இறங்கிட்டான். ஏற்கனவே அவன் இது மாதிரி செய்யணும் என்ற ஆசையில் இருந்து இருக்கான் என்ற விஷயம் அப்புறமாத் தான் எனக்கு புரிஞ்சது.

அவர் வைச்சிருந்த மளிகைக் கடை இடத்தை வாடகைக்கு விட்டான். ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோர் தொடங்க வாடகைக்கு இடம் பார்த்துப் பேசி முடிச்சான். வீட்டை அடமானம் வைச்சு பேங்கிலே கடன் வாங்கி இப்போ இருக்கிற டிபார்ட்மெண்டல் ஸ்டோரை தொடங்கினான்.

கடுமையான உழைப்பு. நல்ல சம்பாத்தியம். அவன் எந்தளவுக்கு சம்பாதிச்சான் என்றால் வீட்டிலே முதல் மாடியை எடுத்துக் கட்டினான். தங்கச்சி கல்யாணத்துக்கு தேவையான நகை, பணத்தை சேர்த்து வைச்சான்.

எங்களோட மளிகை கடையிலே வாடகைக்கு இருந்த வங்களை காலி பண்ணச் சொல்லிட்டு அந்த இடத்திலே சொந்தமா டிபார்ட்மெண்டல் ஸ்டோர் ஆரம்பிக்கணும் என்று அதுக்கான வேலையிலும் இப்போ இறங்கி இருக்கான். கட்டிட வேலை நடக்குது. கூடிய சீக்கிரம் அதைத் திறந்திடுவான்.

சொத்து சேர்க்கிறதோட என் வேலை முடிஞ்சிடுச் சுன்னு இல்லாமல் தங்கச்சிக்கும் நல்ல குடும்பத்திலே சம்பந்தம் பேசினான். அவ கல்யாணத்தை எந்தக் குறையுமில்லாமல் நடத்தி வைச்சான்.

இதுக்கு இடையிலே தபாலில் எம்.எஸ்ஸி படிப்பையும் படிச்சான்.

அவனைப் பார்த்து யாரும் ஒரு சொல் குறையா சொல்லிட முடியாது. என்ன... அவன் நிறந்தான்



கொஞ்சம் கம்மியா போச்சு. அதை குறையாச் சொல்லி பொண்ணு வீட்டுக்காரங்களெல்லாம் நிராகரிச்சப்போ என் பையன் மனசு என்ன பாடுபட்டுச்சு தெரியுமா?

சில சம்பந்தம் தட்டிப் போனதை நான் அவனுக்குத் தெரியாமலே மறைச்சிடுவேன். இல்லைன்னா கல் யாணத்தையும் பொண்ணுங்களையும் வெறுத்துடு வானே!

உத்யோகம் புருஷ லட்சணம் என்று சொல்லுவாங்க. ஆனா இந்தக் காலத்திலே பொண்ணுங்க தனக்கு வரப் போற கணவன் நல்ல வேலையில் இருக்கானான்னு மட்டும் பார்க்க மாட்டேங்கிறாங்க. பார்க்க அழகா இருக் கணும், நல்லா சம்பாதிக்கணும், சொந்தமா வீடு வைச் சிருக்கணும் அப்படின்னு ஏகப்பட்ட கண்டிஷன் போடு றாங்க.

.பிற்காலத்திலே சம்பாதிச்சு சேர்த்து வைச்சு வீடு வாங்குவோம் அப்படின்னு எல்லாம் நினைக்க மாட்டேங் கிறாங்க. வரப் போற புருஷன் முதலிலேயே எல்லாம் வைச்சிருந்தால் அதில் தன்னை புகுத்திக்கிட்டு சொகுசு வாழ்க்கை வாழணும் என்று நினைக்கிறாங்க.

அப்படிப் பார்த்தாலும் என் பையனுக்கு சொந்தமா வீடு கடையெல்லாம் இருக்கே. அதனால பொண்ணு சுலபமா அமையும் என்று நினைச்சால் நிறத்தைக் கார ணம் காட்டி பொண்ணு வீட்டுக்காரங்க நிராகரிச்சாங்க.

யாருமே என் பிள்ளையோட மனசை... அவனோட நல்ல குணத்தைப் பார்க்கலை. அவன் நிறத்தை பார்த்திட்டு வேண்டாம் என்று போயிட்டாங்க.

எங்க வீட்டுக்காரர் தங்கச்சி கொஞ்சம் வசதி குறைவா இருக்காங்க. அவங்க தன் பொண்ணைக் கண்ணனுக்குக் கட்டித் தரதா சொன்னாங்க. ஆனா கண்ணன் சொந்தத்திலே பொண்ணு கட்டக் கூடாதுன்னு மறுத்துட்டான்.

அவன் அப்படிச் சொன்னான் என்றால் நம்ம கயல், 'ஐயோ அம்மா! அவங்க வீட்டிலே பொண்ணு எடுத்தீங்கன்னா எனக்கு தாய் வீடுன்னு ஒண்ணு இல்லாமலே போயிடும்' என்று பயந்தாள்.

எங்க நாத்தனார் குடும்பம் அப்படிப்பட்டது தான். எங்க மாமனார் எங்களுக்குக் கொடுத்த மாதிரியே என் நாத்தனாருக்கும் சொந்தமா வீடு கொடுத்தார். ஆனா என் நாத்தனாருக்கு ஆடம்பர வாழ்க்கை வாழணும் என்று ஆசை. அதிலே எல்லாத்தையும் இழந்துட்டாங்க.

என் பையனைக் கட்டிக்கணும் என்று நினைச்சது கூட வசதியா வாழ ஆசைப்பட்டு தான். ஒரு வேளை அந்தக் கல்யாணம் நடந்திருந்தால் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்த பின்னாடி அம்மா பொண்ணு ரெண்டு பேரும் என் பையன் நிறத்தைக் கண்டிப்பா குத்திக் காட்டிப் பேசி இருப்பாங்க. ரெண்டு பேருமே குணம் கெட்டவங்க.

என் நாத்தனார் பொண்ணு மகிளா இருக்காளே... அவளுக்கு தான் ஒரு உலக அழகின்னு நினைப்பு. அப்படி அலட்டிக்குவாள்.

என் பையன் கல்யாணம் தள்ளிப் போகுதுங்கிறதுக்காக அவனை நான் மகிளாவுக்கு கட்டிக் கொடுத்து அவனை ஆயுசுக்கும் அவஸ்தைப்பட வைக்க முடியுமா? அதனால நானும் மகிளாவை மருமகளா ஆக்கிக்க முடியாதுன்னு சொல்லிட்டேன்.



அதனால என் நாத்தனார் குடும்பம் எங்க மேல கோபத்திலே இருக்காங்க. இருந்துட்டுப் போகட்டும். எங்க வீட்டுக்காரர் உயிரோடு இருந்தாலாவது அவர் முகத்துக்காக என் நாத்தனாரை நான் தூக்கி வைச்சுக் கொண்டாடணும். அவரே போனதுக்குப் பின்னால எனக்கு என் பிள்ளைங்களும் அவங்க சந்தோஷமும் தான் முக்கியம்.

நான் பேசுறது சுயநலமாத் தெரியும். நான் அப்படித் தான். என் வீட்டுக்காரர் இறந்த உடனே என் வீட்டிலே இருந்து காசு ஒண்ணும் கிடைக்காதுன்னு பல வருஷமா இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காமல் இருந்தாங்க.

கண்ணன் நல்ல நிலைக்கு வந்துட்டது தெரிஞ்சதும் திரும்பவும் வந்து ஒட்டிக்கப் பார்க்கிறாங்க. அவங்களுக்கு எதுக்கு நான் மதிப்பு கொடுக்கணும்?

மனுஷங்களை பணத்தை வைச்சு அளக்கிறவங்க யாரா இருந்தாலும் அவங்க எனக்கு தேவை இல்லை'' என்று சற்று காட்டமாகவே தேவகி சொன்னதும்,

தன் நாத்தனாரால் தேவகி ரொம்பவே பாதிப்பு அடைந்து இருக்க வேண்டும் என்பது ராதிகாவிற்கு புரிந்தது.

அருகிலிருந்த கூஜாவில் இருந்து தண்ணீரை டம்ளரில் ஊற்றி மாமியாரிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பருகியவர் சில நிமிடங்கள் அமைதியாய் இருந்தார்.

பின் ராதிகாவின் வலது கையை தனது கைகளுக்குள் அடக்கிக் கொண்டு, ''நான் உன்கிட்டே எதிர்பார்க்கிறது ஒண்ணே ஒண்ணு தான். என் மகன் கூட மனசு ஒன்றி நீ குடும்பம் நடத்தணும். எக்காரணத்துக்காகவும் அவன் நிறத்தை குத்தலாப் பேசிடாதே.

நீ ரொம்ப கலரா இருக்கியா... அதனால உன் போட்டோ பார்த்திட்டு உன்னை கல்யாணம் பண்ணிக்க கண்ணன் ரொம்ப யோசிச்சான். அப்புறம் நான் தான் அவனை சமாதானப்படுத்தினேன்.

உங்க அப்பாவும் என் பையனை மாதிரி கருப்பா தானே இருக்கார். உனக்கு உன் அப்பான்னா ரொம்பப் பிடிக்குமாமே. அதனால ராதிகாவுக்கு நிறம் ஒரு குறை யாத் தோணாதுன்னு சொன்னேன். மனசே இல்லாமல் தான் சம்மதிச்சான்'' என்று தேவகி கூறினார்.

'அந்த நல்ல காரியத்தை பண்ணினது நீங்க தானா?' என மனதுக்குள் நினைத்த ராதிகா அமைதியாக அவரது பேச்சைக் கேட்க ஆரம்பித்தாள்.

அவர் பேச ஆரம்பித்ததில் இருந்து ஒன்று ம்ம் என்பாள். இல்லையென்றால் வெறுமனே தலையை தலையை ஆட்டுவாள்.

அதே போல் இப்பொழுதும் ராதிகா தலையை ஆட்டவும் தேவகி தனது பேச்சினை தொடர்ந்தார்.

''உங்க அப்பா உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் என்று சொன்னாலும் உன் வாயால கேட்கணும் என்று தான் பொண்ணு பார்க்க வந்த அன்னைக்கு உன் வாயால உனக்கு கண்ணனைப் பிடிச்சிருக்குன்னு சொல்ல வைச்சோம். அப்போ தானே அவன் மனசுக்கு நிம்மதியா இருக்கும்.

நீ அவன் நிறத்தை குறையா சொல்லிடுவியோன்னு பயந்து போய் தான் கல்யாணம் முடிவானதுக்கு பின்னாடியும் உன்னிடம் அவன் பேசவே இல்லை.



அவன் மனசு தும்பை பூ மாதிரி வெள்ளையானது. பழகப் பழக உனக்கே தெரியும். அவனை நல்லா புரிஞ்சுக்கிறதுக்கு முன்னாடி அவன் நிறத்தைப் பத்தி எதுவும் தப்பா பேசிடாதே. அது ஆயுசுக்கும் உங்களுக்கு இடையிலே நெருஞ்சி முள்ளா உறுத்திக்கிட்டே இருக்கும். அவனை புரிஞ்சு நடந்துக்குவே தானே?'' என்று அவளது முகம் பார்த்து ஏக்கத்துடன் தேவகி கேட்க,

ராதிகா தன்னையும் அறியாமலே தனது தலையை ஆட்டினாள்.

''எனக்கு அது போதும்மா'' என்று சொல்லியவர்,

''நீ போய் உங்க ரூமிலே கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கோம்மா'' என்று அவளை மாடிக்கு அனுப்பி வைக்கப் பார்த்தார்.

''உங்களுக்கு ஏதாச்சும் சமையலில் உதவி செய்யவா அத்தை?''

''சமையல் வேலை... பொம்பளைக்கு அது ஆயுசுக்கும் இருக்கும்மா. நீ புது பொண்ணு. ஒரு வாரமாச்சும் சமையல் வேலை எதுவும் செய்யாமல் ஃப்ரீயா இரு. போய் கொஞ்ச நேரம் தூங்கு.''

''இல்லைங்க அத்தை. எனக்கு பகலிலே படுத்துப் பழக்கம் இல்லை.''

''அப்படின்னா டி.வி. பாரு.''

''டிவியா? டிவியிலே சீரியலா ஓடும். நான் கயல் அண்ணி கூடப் பேசிக்கிட்டு இருக்கட்டுமா?''

''ஏம்மா இதுக்கெல்லாமா அனுமதி கேட்பாங்க? நல்ல பொண்ணும்மா நீ!'' என்று தேவகி வியந்தார்.

''அண்ணி ஒரு வேளை ரெஸ்ட் எடுப்பாங்களோன்னு தான் தயங்கினேன்.''

''இல்லை ராதிகா. அவ ஓய்வா உட்கார்ந்து தான் இருப்பாள். தூங்க மாட்டாள். சாதாரணமா இந்நேரம் என்கூட சமையலறையில் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருப்பாள். கல்யாண அலைச்சலில் கொஞ்சம் சோர்வா தெரியுறா. அதான் இன்னைக்கு படுக்கையிலே சாஞ்சு உட்கார்ந்து இருக்காள்.''

''அப்படின்னா அவங்க ரெஸ்ட் எடுக்கட்டும் அத்தை.''

''இல்லைம்மா நீ போய் பாரு. அவ தூங்குறான்னா திரும்பி வந்திடு. நிகில் உள்ள தான் இருக்கான். அதனால அவ கண்டிப்பா தூங்கி இருக்க மாட்டாள்.''

''சரிங்க அத்தை'' என்று சொல்லிய ராதிகா கயல் விழியின் அறைக்குள்ளே சென்று பார்த்தாள்.

அங்கே கயல் தன் மகனை திட்டிக் கொண்டிருந்தாள்.

''நிகில் எப்பப் பார்த்தாலும் செல்போனிலே கேம் விளையாடக் கூடாது. கண்ணு கெட்டிடும். சொன்னாக் கேளு.''

''அம்மா ப்ளீஸ் ஒரே ஒரு கேம்'' என்று நிகில் கெஞ்ச,

''இப்படியே தான் அரை மணி நேரமா சொல்லிக் கிட்டு இருக்கே. முடியாது'' என்று திட்டிக் கொண்டிருந் தவள் ராதிகா உள்ளே நுழைவதை கவனித்துவிட்டு,

''வாங்க அண்ணி'' என்று வரவேற்றாள்.

''நான் உங்களைவிட சின்னவ தானே. என்னை பேர் சொல்லிக் கூப்பிடுங்களேன். ப்ளீஸ்'' என்று ராதிகா கேட்டவுடன்,



கயல் சிரித்துக் கொண்டே, ''அவ்வளவு தானே. கூப்பிட்டால் போச்சு. அதுக்கு எதுக்கு ப்ளீஸ் சொல் லிக்கிட்டு இருக்கே'' என்று உடனே ஒருமைக்கு தாவினாள்.

''ஹாய் நிகில்! என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?'' என்று அவனைப் பார்த்து ராதிகா கேட்க,

''பார்த்தால் தெரியலையா? கேம் விளையாடிக்கிட்டு இருக்கேன்'' என்று தன் கண்களை அந்தக் கைப்பேசியில் இருந்து அகற்றாமலே நிகில் பதில் சொன்னான்.

''நிகில் அத்தைகிட்டே இப்படியா பேசுவாங்க?'' என்று கயல் கண்டித்துக் கொண்டே அவனிடம் இருந்து தனது கைப்பேசியைப் பறித்துவிட்டு,

''அத்தை உன்னை பார்க்க தானே வந்து இருக்காங்க. அவங்ககூடப் பேசிக்கிட்டு இரு'' என்றாள்.

'கைப்பேசியை தர மாட்டாயா?' என்பது போல் பரிதாபமாக தாயைப் பார்த்த நிகில் தாயின் முகத்தில் இளகுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை என்றதும் ராதிகாவின் புறம் திரும்பி,

''அத்தை நாம ரெண்டு பேரும் விளையாடுவோமா?'' என்று கேட்டான்.

''ஓ விளையாடலாமே!'' என்று ராதிகா மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்ததும்,

எழுந்து அவளருகே வந்து அவளது கையைப் பிடித்துக் கொண்டு, ''வாங்க. நாம வெளியே போய் விளையாடுவோம். அம்மா ரெஸ்ட் எடுக்கட்டும்'' என்று பெரிய மனித தோரணையில் சொல்லவும், ராதிகாவிற்கு சிரிப்பு வந்தது.

"இதப் பாருடா!'' என்று போலி வியப்புக் காட்டி கயல்விழி வியக்க,

"பை...'' என்று சொல்லி அத்தையும் மருமகனும் அறையை விட்டு வெளியேறினார்கள்.

"நாமா மாமா ரூமுக்குப் போவோம்'' என்று அவளை மாடிக்கு அழைத்து வந்தவனிடம்,

"நீ எந்த போர்டும் எடுத்திட்டு வரலையே? என்ன கேம் விளையாடுறது?'' என்று ராதிகா கேட்டாள்.

அவள் பரமபதம், தாயக்கட்டம் போன்ற விளையாட்டுக்களை தன் மனதில் வைத்துக் கொண்டு அவ்வாறு கேட்க,

அவர்களது அறைக்குள் நுழைந்த அவளது மருமகனோ சற்றும் முற்றும் யாராவது வருகிறார்களா என்பது போல் கள்ளப் பார்வை பார்த்தான்.

அவனது பாவனையில் வந்து சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் உயரத்திற்கு குனிந்து கொண்டு "என்ன பார்க்கிறே?'' என்று மெதுவான குரலில் விசாரித்தாள்.

"நாம மாமா லேப்டாப்பிலே விளையாடுவோமா?'' என்று நிகில் தன் சின்ன கண்ணை உருட்டிக் கொண்டு கேட்க,

'இதானா விஷயம்?' என நினைத்துக் கொண்ட ராதிகா, "இப்போ தானே அம்மா கேம் விளையாடக் கூடாதுன்னு திட்டினாங்க. அதுக்குள்ள மறந்துட்டியா?'' என்றாள்.

"நா ஒண்ணும் மறக்கலை. நீங்க தான் மறந்துட்டீங்க. அம்மா செல்போனிலே தான் கேம் விளையாடக்



கூடாதுன்னு சொன்னாங்க. லேப்டாப் பெருசா இருக்குமா... அதனால கண்ணு கெட்டுப் போகாது. அத்தை ப்ளீஸ்...'' என்று அவன் கெஞ்சவும் ராதிகாவிற்கு உருகிப் போயிற்று.

ஆனால் கணவனது பொருளை அவனது அனுமதியின்றி தொடுவதற்கும் பயமாக இருந்தது.

அவனுக்கு அவனது பொருளை அடுத்தவர் கையாள்வது பிடிக்குமா பிடிக்காதா என்று எதுவும் தெரியாமல் எப்படி எடுப்பது? அதுவும் இல்லாமல் அதில் முக்கியமான குறிப்பு ஏதாவது இருந்து அது அழிந்து விட்டால் என்று அவள் யோசித்துக் கொண்டு இருக்க...

"அத்தை'' என்று அழைத்த நிகில் அவளது புடவையைப் பிடித்து இழுத்தான்.

"எடுத்துத் தாங்க அத்தை'' என்று அவன் வலியுறுத்த,

"மாமா திட்டுவார் நிகில்'' என்றாள்.

"உங்களை எப்படி மாமா திட்டுவார்?'' என்று கேட்டவனிடம்,

'உங்க மாமாவுக்கு என்னைப் பிடிக்காது. அதனால அவர் திட்ட மட்டும் தான் செய்வார்' என நினைத்ததை வெளியே சொல்ல முடியாமல் அவள் விழிக்க...

"எங்க அப்பா எங்க அம்மாவை திட்ட மாட்டார். நான் சின்ன பையனா... அதனால என்னை மட்டும்தான் திட்டுவார்'' என்று அவன் விவரிக்க,

இவனிடம் என்ன சொல்லி சமாளிப்பது என்று புரியாமல் விழித்தவள் வாய்க்கு வந்த பொய்யாய், "அத்தைக்கு அதை யூஸ் பண்ணத் தெரியாது நிகில் குட்டி'' என்றாள்.

''எனக்கே தெரியும்! உங்களுக்குத் தெரியாதா?'' என்று சந்தேகமாகக் கேட்டவன், ''ஓ! உங்களுக்கு பாஸ்வேர்ட் தெரியாதா?'' என்று கேட்கவும் தான்,

'அடச் சே! இப்படி ஒரு காரணம் சொல்லித் தப்பிக்கணும் என்று எனக்குத் தோணாமல் போச்சே!' என்று ராதிகா தன்னைத் தானே மனதில் திட்டிக் கொண்டு,

''ஆமாடா நிகில் கண்ணா. அத்தைக்குத் தெரியாது. நாம வேற ஏதாச்சும் விளையாடுவோம்'' என்றாள்.

சரி என்றவன் சற்று நேர சிந்தனைக்குப் பிறகு,

''கண்ணாமூச்சி விளையாடுவோமா?'' என்றான்.

''சரி விளையாடுவோம்'' என்று அவள் சம்மதித்ததும்,

''நீங்க தான் முதல்ல கண்ணைக் கட்டிக்கணும்'' என்று நிபந்தனை விதித்தான்.

அதற்கும் தனது சம்மதத்தை தெரிவித்தவள் தனது துப்பட்டா ஒன்றால் கண்ணைக் கட்டும் முன், ''ஆனா நீ இடுக்குக்குள்ளே போய் ஒளியக் கூடாது!'' என்று உத்தரவிட்டாள்.

''அதெல்லாம் சேஃபான இடத்திலே ஒளிவேன். எங்கப்பா சொல்லிக் கொடுத்திருக்கார்'' என்றதும்,

''சரி நிகில் கண்ணா'' என்றாள்.

''ஏன் அத்தை என் பேர் கூட மாமா பேரையும் சேர்த்து சொல்லுறீங்க? உங்களுக்கு மாமான்னா ரொம்பப் பிடிக்குமா?''

'உங்க மாமாவைப் பிடிச்சிட்டாலும்...' என்று மனதுக்குள் நொடித்துக் கொண்டவள்,

''உன்னை செல்லமாக் கூப்பிடலாம் என்று நினைச்சேன். அது உங்க மாமா பேர் என்று தோணாமல் போச்சுடா'' என்றதும்,



''என்னை நிகில் குட்டின்னு கூப்பிடுங்க'' என்று தன் அத்தைக்கு அவனே ஒரு செல்லப் பெயரை பரிந்துரை செய்தான்.

''ஆகட்டும் சார். எங்க பக்கத்து வீட்டுப் பையனுக்குக் கூட உன் வயசு தானடா. ஆனா அவனை விட உனக்கு வாய் ரொம்பப் பெரிசுடா'' என்று சொல்லியவள்,

அருகில் இருந்து படுக்கையில் அமர்ந்து கொண்டு தனது துப்பட்டாவினால் கண்ணைக் கட்ட ஆரம்பித்தாள்.

அவளது அருகில் வந்தவன் அவளது மடி மீது கை வைத்து, ''அத்தை...'' என்று சோகமாக அழைத்தான்.

கண்ணைக் கட்டும் வேலையை விட்டுவிட்டு அவனது முகம் பார்த்தவள், ''என்னடா குட்டி, திடீர்னு சோகமாகிட்டே?'' என்று விசாரித்தாள்.

''என்னை டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போவீங்களா?''

''டாக்டர்கிட்டவா? எதுக்குக் கேட்கிறே?'' என்று விழித்துக் கொண்டே அவள் கேட்க,

''எனக்கு வாய் பெருசா இருக்குன்னு சொன்னீங்களே? அப்படின்னா ஏதாச்சும் ஊசி இல்லைன்னா மாத்திரை தருவாங்களா? வேண்டாம் அத்தை. எனக்கு மாத்திரை பிடிக்காது. கசக்கும். ஊசின்னா பயம்'' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு அவன் சொல்லவும்,

''அச்சோ நிகில் குட்டி அத்தை உன்னை...'' என்று தொடங்கியவள் எப்படி விளக்குவது என்று சில நொடிகள் யோசித்துவிட்டு,

''நிகில் ஸ்மார்ட் பாய்ன்னு சொன்னேன்'' என்றதும்,

அவனது முகம் மலர்ந்தது.

''அப்படின்னா டாக்டரிடம் போக வேணாமா?'' என்று குதூகலித்தவன், ''இப்ப கண்ணைக் கட்டுங்க'' என்று உத்தரவிட்டான்.

கூடவே, ''எங்கப்பா மாதிரி சீட்டிங் பண்ணக் கூடாது'' என்று வேறு சொன்னான்.

''அது என்னடா சீட்டிங்?''

''விளையாடிக்கிட்டு இருக்கும்போதே கட்டை எடுத்துட்டுப் பார்ப்பார். அப்படில்லாம் செய்யக் கூடாது'' என்று ஒரு விரல் நீட்டி எச்சரித்தான்.

'பெரிய மனுஷன் மாதிரி ஆர்டரா போடுறே!' என்று தனது விமர்சனத்தை மனதிற்குள்ளே நினைத்துக் கொண்டாள்.

வெளியே சொல்லப் போய் அவனுக்கு திரும்பவும் விளக்கம் அளிக்க வேண்டி வருமோ என்ற அச்சமே அதற்குக் காரணம்.

சரி என்று ஒத்துக் கொண்டு தனது கண்களை இறுக மூடிக் கொண்டு அவள் அவனை தேட ஆரம்பிக்க... அவன் பம்மிக் கொண்டு அங்கும் இங்கும் நகர்ந்து அவளது கைகளுக்கு அகப்படாமல் அவளை அலைக் கழித்தான்.

இரு நிமிடங்களுக்கு பின் மெதுவாக அறையை விட்டு வெளியேறி மாடிப் படிகளில் கீழே இறங்கிச் செல்ல ஆரம்பித்தான்.

தனது கைப்பேசியை நோண்டிக் கொண்டே படியேறிய கண்ணன் தன் வாய் மூடி சிரித்துக் கொண்டே செல்லும் நிகிலை கவனிக்கவில்லை.



தனது கைப்பேசியைப் பார்த்துக் கொண்டே தனது அறைக்குள் நுழைந்தவன் மீது ராதிகா மோதினாள்.

இதுவே சினிமா என்றால் கதாநாயகன் கதாநாயகி மேல் மோதியதற்கு ஹாரிஸ் ஜெயராஜ் பிரத்யேக இசையை பின்னணியில் ஒலிக்கவிட்டிருப்பார். ஒளிப்பதிவாளர் இருவரின் முக மாறுதல்களை டைட் க்ளோசப்பில் படம் பிடித்திருப்பார்.

ஆனால் இவர்கள் நிஜ கதாபாத்திரங்கள். அதுவும் ஒருவரை ஒருவர் தாக்கும் எண்ணத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் சண்டைக் கோழியும் சேவலும்.

அதனால் இருவரும் வார்த்தையால் மோதிக் கொள்ளவே செய்தார்கள்.

''எதுக்கு இப்படி நங்குன்னு என் மேலே வந்து மோதுறே? என்னை ஹாஸ்பிட்டலில் சேர்த்திட ஏதாவது ப்ளான் பண்ணுறியா?'' என்று எரிச்சலுடன் கண்ணன் கேட்க,

ராதிகா தன் கண் கட்டை அவிழ்த்துவிட்டு கணவனை முறைத்தாள்.

''ஆமா நான் கருங்கல் பாறை. இவர் பூ மாதிரி மென்மையா இருக்காரு. நான் இவர் மேலே மோதினதும் இவருக்கு அடிபட்டிடுச்சு. நல்லா இரும்பு மாதிரி உடம்பை வைச்சுக்கிட்டு இருக்கீங்க. உங்க மேலே மோதினதிலே நான் தான் புத்தூருக்குப் போய் கட்டு போடணுமான்னு பார்க்கணும்'' என்று சிலிர்த்துக் கொண்டாள்.

''அது சரி எதுக்கு இப்போ காந்தாரி மாதிரி கண்ணைக் கட்டிக்கிட்டு உலாத்திக்கிட்டு இருக்கே? எனக்கு

கணணு நல்லா தானே தெரியுது?'' என்று அவ
சந்தேகம் கேட்கவும்,

''உங்களுக்கு அப்படி ஒரு நினைப்பு இருக்க
அதாவது உங்களுக்கு திருதராஷ்டிரன் நிலைமை வந்த
உங்களுக்காக நானும் கண்ணைக் கட்டிக்குவேன் என்
நோ. நெவர்.'' என்று வேகமாக மொழிந்தாள்.

'நிகில் எங்கே?' என்ற எண்ணம் தோன்றவு
அறையைச் சுற்றி தன் பார்வையை சுழல விட்டாள்.

''என்ன தேடுறே? என்னை அடிக்க ஏதாச்சும் கிடை
குதான்னு பார்க்கிறியா?''

''உங்களை அடிக்க ஆயுதம் வேற வேண்டுமா என்ன
என் கை போதாது?'' என்றதும்,

''என்னது என்னை அடிக்கப் போறியா?'' என்
கேட்டுக் கொண்டே ஒரு எட்டு பின்னால் சென்றான்.

''ஓ ஆயுதத்தால தாக்கினா பரவாயில்லையா
அதைக் கூட சாதாரணமா கேட்டீங்க. கையால அடிக்க
போறேன் என்று நினைச்சு இப்படி ஜெர்க் ஆகுறீங்க
உங்களை அடிக்கிறதுக்காக எதையும் தேடலை. நிகிலு
நானும் கண்ணாமூச்சி விளையாடிக்கிட்டு இருந்தோம்
அவன் எங்கேன்னு தெரியலை'' என்று அவள் சொல்லி
கொண்டு இருக்கும்போதே,

கண்ணன் மாடியில் இருந்து கீழே எட்டிப் பார்த்தான்
நிகில் தேவகியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

''அவன் எங்கம்மா கூட உட்கார்ந்து பேசிக்கிட்டு
இருக்கான். அது தெரியாமல் நீ தனியா விளையாடிக்
கிட்டு இருக்கே'' என்று கண்ணன் கேலி பண்ணிச்
சிரித்தான்.



''டேய் நிகில் குட்டி!'' என்று முணுமுணுத்துக்
கொண்டே அவள் பல்லைக் கடித்துக் கொண்டாள்.

''பரவாயில்லை. உனக்கு என்னைத் தவிர என்
வீட்டிலே உள்ள எல்லோரையும் பிடிச்சிருக்கு போல.''

''எனக்கு எப்பவுமே நல்லவங்களைப் பிடிக்கும்.''

''அப்போ நான் தான் கெட்டவனா? அப்படி ஒரு
கெட்டவன்கிட்டே எப்படி இவ்வளவு தைரியமா
பேசுறே?'' என்று அவன் போலியாக வியப்பு காட்டிக்
கேட்கவும்,

**''நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு**

**எல்லார்க்கும் பெய்யும் மழை**

என்று அவ்வையார் சொன்ன பாட்டிலே உள்ள
நல்லவரு நீங்க தான் என்று எங்கப்பா சொன்னார்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உங்க அம்மா நீங்க
நல்லவன்னு சொன்னாங்க. அந்த தைரியத்திலே தான்
இப்படி எதிர்த்துப் பேசுறேன்'' என்றாள்.

''வசமா மாட்டிக்கிட்டியே. உன் பேச்சுப்படி பார்த்தா
நான் நல்லவன் என்கிற பட்சத்தில் உனக்கு என்னைப்
பிடிக்கணுமே?''

''நீங்க நல்லவர்ன்னு எங்க அப்பாவும் உங்க அம்
மாவும் சொன்னதா தானே சொன்னேன். நான் சொன்
னேனா? சொல்லலையே...'' என்று கேலியுடன் கூறிக்
கொண்டே கீழிறங்கிச் சென்றாள்.

மனைவி மீது மனதிற்குள் கோபம் இருந்தாலும்
அவளுடன் வார்த்தையாடுவதில் ஒரு தனி சுகம் இருப்ப
தாக கண்ணனுக்குத் தோன்றியது.

ஒரு வேளை அவனின் மனதில் இருப்பது கோபத்தினால் உண்டான வெறுப்பு அன்றி விருப்போ?

# 4

கணவனுடன் பதிலுக்கு பதில் கிண்டலாகப் பேசிவிட்டு ராதிகா கீழே இறங்கி வந்தாள். அவளைப் பார்த்த தேவகி,

"கண்ணனும் நீயும் சாப்பிடுங்கம்மா. நானும் நிகிலும் தூங்கப் போறோம்" என்று கூறிவிட்டு படுக்கை அறைக்குள் சென்றுவிட்டார்.

கண்ணன் மதிய சாப்பாட்டிற்கு பிறகு வெளியேறி சென்று விட்டான். மாலை தான் வீடு திரும்பினான். தேவகி அவர்கள் இருவரையும் வெளியே அனுப்பி வைக்க முடிவு செய்தார்.

அதனால் தேவகி கண்ணனையும் ராதிகாவையும் சினிமாவிற்கு சென்று வருமாறு கூறினார்.

"அண்ணி டயர்டா இருக்குன்னு சொன்னாங்களே அத்தை" என்று ராதிகா இழுக்கவும்,

"அவ டயர்டா இருக்கிறதுக்கும் நீ சினிமா போறதுக்கும் என்ன சம்பந்தம்?" என்று தேவகி கேட்டதும்,

"அப்புறம் அவங்க தியேட்டரிலே எப்படி உட்கார்ந்து இருப்பாங்க?" என்று ராதிகா சந்தேகமாய் கேட்டாள்.



"புதுசா கல்யாணம் ஆனது அவளுக்கா இல்ல உனக்கா? உன் புருஷன் கூட வெளியே போயிட்டு வான்னு சொல்லுறேன். இவ என்னடான்னா வீட்டிலே உள்ளவங்களை எல்லாம் படை திரட்டுறாள். போய் கிளம்புற வேலையைப் பாரு!" என்று தேவகி ஒரு அதட்டல் போட,

ராதிகா விட்டால் போதும் என்பது போல் அங்கிருந்து அகன்று மாடி ஏற ஆரம்பித்தாள்.

'சீரியல் மாமியார் போல ரொம்ப கடுமையா இருப்பாங்களோ?' என்று மனதில் தோன்றிய கேள்விக்கு,

'அப்படின்னு சொல்லிட முடியாது. உன் புருஷன் கூட நீ மட்டும் தனியா போயிட்டு வான்னு தானே சொல்லுறாங்க. என்ன அதைக் கொஞ்சம் அதட்டலா சொல்லுறாங்க' என்று அவளே பதிலும் சொல்லிக் கொண்டு தன் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

எந்தப் புடவையை உடுத்துவது என்று ஆராய்ந்து அதன் பின் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அணிந்தாள். தன் முக அலங்காரத்தை முடித்தபோது கண்ணன் அங்கு வந்தான்.

"ரெடியாகிட்டியா? நான் டிரஸ் மாத்திட்டு வரேன்" என்று சொன்னவன் அடுத்த ஐந்து நிமிடத்தில் தயாராகி வந்தான்.

"போகலாமா?" என்று அவன் ராதிகாவைப் பார்த்துக் கேட்க,

அவளோ, "ஆட்டோ வரச் சொல்லிட்டீங்களா?" என்று கேட்டாள்.

"ஆட்டோவா? எதுக்கு? நாம என்னோட பைக்கிலே போகப் போறோம்."

"பைக்கா? அது சரி வராதுங்க. ஆட்டோ கூப்பிடுங்க."

"உனக்கு என் பக்கத்திலே உட்கார்ந்து வரக் கசக்குதா என்ன?"

"ஏதாச்சும் தத்துப் பித்துன்னு பேசாதீங்க. ஆட்டோவிலே உங்க பக்கத்திலே உட்கார்ந்து வராமல் ஆட்டோக்காரன் பக்கத்திலேவா உட்கார்ந்து வரப் போறேன்.

ஒரு வாரத்துக்காச்சும் புடவை மட்டுமே கட்டணும் என்று எங்கம்மா உத்தரவு போட்டு அனுப்பினாங்க. புடவை கட்டினால் இங்கே அங்கேன்னு ஏழெட்டு இடத்திலே பின் குத்தி வைப்பேன்.

அப்பவும் நடை தயங்கி தயங்கி தான் வரும். வீட்டுக்குள்ளே நடக்க சொன்னாலே புதையல் எடுப்பேன். புடவை கட்டிட்டு இதுவரைக்கும் பைக்கிலே போனதில்லை. நான் புடவையை கவனிப்பேனா இல்ல என்னையா? அதான் ஆட்டோவிலே போகலாம் என்று பார்த்தேன்" என்று அவள் விளக்கியதும்,

"சரி வா. ஆட்டோவிலே போகலாம்" என்று உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டு கீழே இறங்கினான். அவர்கள் இருவரும் தேவகியிடமும் கயலிடமும் விடைபெற்று வெளியேறினர்.

நிகில் தூங்கிக் கொண்டிருந்ததால் நானும் வருவேன் என்று அடம் பிடிக்கும் காட்சி ஒன்று அரங்கேறாமலே போனது.

தியேட்டரில் இறங்கி உள்ளே நடந்து செல்லும் போது எதிரே வந்த இரு இளைஞர்கள் இவர்கள் இருவரையும்



பார்த்து, "மச்சி செம கான்ட்ராஸ்ட் இல்ல?" என்று விமர்சித்துவிட்டுச் சென்றார்கள்.

அவர்கள் கண்ணனின் கருமை நிறத்தையும் ராதிகாவின் வெளுப்பு நிறத்தையுமே அவ்வாறு விமர்சித்தார்கள்.

அதைக் கேட்ட கண்ணனின் மனம் சுருங்கியது. ஆனால் தன் மனவாட்டம் முகத்தில் தெரியாதவாறு மறைத்தான்.

மனதில் உள்ளதை மறைப்பது அவனுக்குக் கை வந்த கலை ஆயிற்றே! எப்பொழுதும் செய்வது தானே!

முன்னெல்லாம் நிறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சில பெண்கள் அவனின் கரிய நிறத்தைக் கண்டதும் முகம் திருப்பிச் செல்வார்கள். ஆனால் கண்ணன் பெரிதாக ஆண்களின் விமர்சனத்திற்கு ஆளானதில்லை.

இப்பொழுது அழகே உருவான ராதிகாவுடன் வெளியே வரும் பொழுது ஆண்களும் விமர்சித்தது கண்ணனின் மனதை வெகுவாக பாதித்தது.

'கடவுளே! இத்தனை நாளாக அனுபவித்த துன்பம் இன்னமும் அதிகமாகப் போகிறதா? இது எப்பொழுது தீரும்?' என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு சினிமாவில் கவனம் செல்லவில்லை. சினிமா எப்படி அவனது கவனத்தில் பதியும்?

பொதுவாக எல்லா இளைஞர்களும் பெண்களைக் கவர்வதற்காக ஊரில் இருக்கும் வித்தை எல்லாம் காட்டுவார்கள். தொலைக்காட்சியின் விளம்பரத்தில் காட்டப்படும் வாசனை திரவியம், பவுடர், முக அழகு க்ரீம் என்று எல்லாவற்றிலும் காசை வீணாக்கிப் பெண்களை கவர நினைப்பார்கள்.

ஆனால் கண்ணன் அது மாதிரி எந்த சலனத்திற்கு ஆளானதில்லை. எந்தப் பெண்ணும் தன்னை திரும்பி பார்க்க மாட்டாள் என்ற எண்ணத்தை அவன் தன் ஆழ் மனதில் பதிய வைத்துள்ளான்.

பெண்களிடம் சற்று ஒதுங்கியே பழகுவான். இவனின் நல்ல குணம் தெரிந்து வலிய வந்து பேசும் பெண்களிடம் மட்டுமே பேச்சு வைத்துக் கொள்வான்.

கல்லூரியில் பயிலும் போது உடன் படிக்கும் சக தோழர்கள் கண்ணனால் நமக்கு பெண்களை கவர்வதில் போட்டி வராது என்று சொல்லி அவனை எல்லா இடங்களுக்கும் கூட்டிச் செல்லும் போது மனதில் ஏற்படும் வலியை மறைக்கப் பழகியவன்.

ஆண்கள் அவனைப் போட்டியில் இருந்து விலக்கி வைக்க... பெண்க்ள் அவனை திரும்பிப் பார்க்காமல் இருக்க... என்ற இந்த இரு வலிகளும் நாட்கள் செல்லச் செல்ல கண்ணனுக்கு பழகிப் போயிற்று.

எப்படி ஒரு மனிதனுக்கு சுவாசிப்பது, உண்பது, உறங்குவது என்பது இயற்கையான செயலோ அது போல் கண்ணனுக்கு ஒதுக்கி வைக்கப்படுவதும் வாழ்வோடு ஒன்றிப் போன செயலாக மாறிற்று.

ஆனால் ஒரு பெண்ணோடு இணைத்து கேலி பண்ணிச் சிரிப்பது என்பது முதல் முறையாக நடந்ததால் அது கண்ணனின் மனதை அதிகமாகத் தாக்கியது என்று தான் சொல்ல வேண்டும்.

அந்த இளைஞர்களின் கேலி மனதில் முள்ளாக உறுத்திக் கொண்டிருக்கும் பொழுது அவனால் எப்படி சினிமாவில் கவனம் செலுத்த முடியும்?



அவனுக்கு வீட்டிற்குச் சென்று தனிமையில் அமர வேண்டும் போல் இருந்தது. ஆனால் மனைவியை முதல் முறையாக அழைத்து வந்துவிட்டு பாதியில் செல்லவும் மனம் வரவில்லை.

ஏன் பாதியில் எழுந்து வந்தாய் என்று மனைவி மற்றும் தாய் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் சொல்ல வேண்டி இருக்கும்.

அது மட்டுமன்றி இது போன்ற கேலிகள் இனி வரும் காலத்தில் தொடர்ந்து வரத் தான் செய்யும். அதற்காக வீட்டிலேயே முடங்கிக் கிடக்கவா முடியும்?

இந்தக் கேலியையும் இலகுவாக எடுத்துக் கொள்ள மனதைப் பக்குவப் படுத்த வேண்டியது தான் என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டு சற்றே அமைதியடைய முயன்றான்.

ஆனால் அந்த அமைதிக்கும் ஆயுள் சொற்ப வினாடிகளே. அந்த இளைஞனின் வார்த்தை என்னைக் காயப் படுத்திய அதே சமயம் ராதிகாவையும் காயப்படுத்தி இருந்தால் என்ற எண்ணம் தோன்றவும் முன்னிலும் அதிக மன உளைச்சலுக்கு ஆளானான்.

'இருந்திருந்து இந்தக் கறுப்பனை கல்யாணம் செய்தோமே என்று மனம் வருத்தப்படுவாளோ? அந்த இளைஞனின் கேலியை கவனித்தாளா? எங்கள் இருவரைப் பார்த்து தான் கேலி செய்தார்கள் என்பது அவளுக்கு புரிந்ததா?

புரிந்தும் அதைப் பொருட்படுத்தாது அமைதியாக இருக்கிறாளா? இல்லை கவனிக்கவே இல்லையா?' என்று குழப்பித் தவித்தான்.

படம் முடிந்து வெளியே வரும்பொழுது தான் ராதிகா கணவனின் வாடிய முகத்தை கவனித்தாள்.

''ஏன் என்னவோ போல இருக்கீங்க?''

''ஒண்ணுமில்லை'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னான்.

''ஒண்ணுமில்லாமலா உங்க முகம் இப்படி வாடிப் போய் இருக்கு?'' என்று சந்தேகமாக ராதிகா இழுக்கவும்,

''தலைவலி. அவ்வளவுதான்'' என்றான்.

''ஏ.சி.யிலே இருந்ததினால தலைவலி வந்திடுச்சா?'' என்று அவள் கேட்கவும் அவளை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான்.

''இப்படிப் பார்த்தீங்கன்னா என்ன அர்த்தம்? ஏதாச்சும் சொல்லுங்க'' என்றாள்.

அவன் அமைதியாக நடந்தான். அவன் பதில் சொல்லப் போவதில்லை என்று தெரிந்ததும் தனது பேச்சினை மாற்ற எண்ணினாள்.

''இப்போ வீட்டுக்காங்க போறோம்?'' என்று அவள் கேட்க,

''ஏன் அடுத்த ஷோ சினிமாவை இருந்து பார்த்திட்டு வரும் ஐடியா ஏதாச்சும் இருக்கா?'' என்று அவன் நக்கலாக திருப்பிக் கேட்க,

''க்கும். தலைவலியோ, திருகு வலியோ எனக்கு கவுன்டர் கொடுக்கிற வேலையை மட்டும் நல்லா செய்யுறார்'' என்று மெல்லிய குரலில் நொடித்துக் கொண்டாள்.

ராதிகாவின் வீட்டில் நால்வரும் ஒன்றாக சினிமாவிற்கு செல்வார்கள். திரும்பும் பொழுது சில



நேரங்களில் ஓட்டலில் சாப்பிட்டு விட்டுத் திரும்புவார்கள்.

அதே மாதிரி வெளியே சாப்பிடப் போகிறோமா எனத் தெரிந்து கொள்ள நினைத்தே அவள் 'வீட்டுக்கா போகிறோம்?' எனக் கேட்டாள். அவன் இடக்காக பதில் சொல்லவும் வாயை மூடிக் கொண்டாள்.

'பொது இடத்தில் இருக்கிறோம். அது மட்டுமன்றி உடன் இருப்பவனோ தனக்கு புதிதானவன். அதனால் வாக்குவாதம் வேண்டாம்' என நினைத்தாள்.

'வீட்டிலே மாமியார் சமைத்து வைத்திருப்பார்களோ? சிறியவள் நான் வெளியே சினிமாப் பார்த்துவிட்டு வர... நிறைமாத கர்ப்பிணியான நாத்தனாரும் வயதில் பெரியவரான மாமியாரும் சமைத்து வைத்திருப்பதை நோகாமல் சாப்பிடுவதா?' என்ற எண்ணம் தோன்றியது.

'காலையிலும் மதியமும் நீ என்ன சமையல் செய்தாய் ராதிகா?' என்று மனசாட்சி கேள்வி கேட்க,

'இன்னும் ஒரு வாரம் எதைப் பத்தியும் யோசிக்காமல் ஜாலியா இருக்க வேண்டியது தான்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

ஆட்டோவில் வரும் பொழுது அவன் எதுவும் பேசவில்லை. அவளும் பேச முயற்சிக்கவில்லை.

வீட்டின் கதவைத் திறந்துவிட்ட தேவகி, ''சாப்பிட்டு விட்டு தூங்கப் போங்க'' என்று சொன்னதோடு தனது அறைக்குள் சென்று மறைந்தார்.

சாப்பாட்டு மேஜையில் இருப்பதை கண்ணனுக்கும் தனக்கும் பரிமாறிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தவள்

கண்ணனைப் பார்த்து, ''படம் படு மொக்கையா இருந் தால கடுப்பாகிட்டீங்களா?'' என்று கேட்டாள்.

ச்சு என்று எரிச்சலுடன் மொழிந்தவன் அடுத்த இ நிமிடங்களில் தட்டில் உள்ளதை காலி செய்துவிட் விருட்டென்று எழுந்து மாடியேறினான்.

''இப்ப எதுக்கு இவ்வளவு கோபம், எரிச்சல்?'' என் வாய்விட்டு புலம்பினாள்.

'ஒருவேளை வேறு யாருடனும் சினிமா சென் நினைப்பு வந்திடுச்சோ?' என்ற எண்ணம் தோன்றவு ராதிகாவிற்கு சாப்பாடு தொண்டையில் இறங் மறுத்தது.

அவள் மேலே சென்று பார்த்த பொழுது அவ அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருந்தான்.

ராதிகாவிற்கு முதல் இரவில் கணவனிடம் பேசு துணிவு இருக்கவில்லை. அதனால் அவன் ஒரு ஓரமா படுத்துத் தூங்கவும் அவளும் அவனுக்கு முதுகு காட் படுத்துக் கொண்டாள்.

ஆனால் இரண்டாம் நாளான இன்று காலையில் இருந்து அவர்களுக்குள் சாதாரண பேச்சு வார்த் இருந்ததால் அவனை எழுப்பி எதற்கு இந்தக் கோபமு எரிச்சலும் என்று கேட்க வேண்டும் போல் இருந்தது.

காலையில் இருந்து அவனிடம் பதிலுக்கு பதி வாயாடினதை கண்ணன் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை என்ற துணிச்சலில் அவன் அருகில் சென்று அவனை உலுக்கி,

''என்னாச்சுங்க? நிஜமாவே தலைவலியா?'' என்று கேட்டாள்.



கண்ணன் அவள் புறம் திரும்பிக் கொண்டே, ''அதென்ன நிஜமாவே தலைவலியான்னு கேட்கிறே? பொய்யான தலைவலின்னு ஒண்ணு இருக்கா என்ன?'' என்று சந்தேகம் கேட்கவும்,

அவன் அருகே படுக்கையின் ஓரத்தில் அமர்ந்தவள், ''இருக்குங்க. எனக்கு யார் கூடவாச்சும் பேசப் பிடிக் கலைன்னா தலைவலின்னு பொய் சொல்லுவேன். அதான் பொய் தலைவலி'' என்று மிகவும் உற்சாகத் துடனே கூறிக் கொண்டு வந்தவள்,

தன் குட்டு வெளிப்பட்டு விட்டதே என நினைத்து தன் நாக்கை கடித்துக் கொண்டே பேச்சை நிறுத்த கண்ணன் புன்னகைத்தான். புன்னகைத்த முகத்துடனே,

''எனக்கு நிஜமாகவே தலை வலிக்குது. தைலம் கூட தடவி இருக்கேன். நீ போய் தூங்கு ராதிகா. குட் நைட்'' என்றதும் ராதிகாவிற்கு நிம்மதியாக இருந்தது.

பதிலுக்கு அவளும், ''குட்நைட்டுங்க'' என்றாள்.

கண்ணன் கூறிய தலைவலி என்ற காரணத்தின் மீது ராதிகாவிற்கு நம்பிக்கை வரவில்லை. தன்னை சமாளிக் கவே அவனும் தன்னை போன்று பொய் உரைக்கிறான் என்பதில் அவளுக்கு எள் அளவும் சந்தேகம் இல்லை.

ஆனாலும் அவன் தன்னிடம் தன்மையாகப் பேசி சமாதானப்படுத்த முயற்சிப்பதே அவன் தங்கள் இருவருக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை குறைக்க முயல்கிறான் என்பது தெளிவாகியதால் அவள் நிம்மதியாக உணர்ந்தாள்.

முதல் நாளை விட இரண்டாம் நாள் அவர்கள் இந்த அளவிற்கு முன்னேறியது குறித்த நிம்மதியோடு

அவளும் உடை மாற்றி அவனைப் பின்பற்றி முந்தை
இரவு போல் வேறுபுறம் திரும்பி படுத்துக் கொண்டா

'பகலெல்லாம் நல்லா இருக்கார். ராத்திரி ஆனதை
உர்ன்னு முகத்தை தூக்கி வைச்சிக்கிறார். எந்த மோகி
அடிக்குதோ தெரியலை' என்று நினைத்துக் கொண்
டாள்.

'இன்னைக்கு தலைவலின்னு பொய் சொல்லியாச்
இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி பொய் சொல்
முடியும்? அதிலும் அவளும் இதே தில்லாலங்க
வேலை செய்யுறவளா இருக்காள். கஷ்டம் தான்ட
கண்ணா!' என்று கண்ணன் தன் மனதிற்குள் எண்ணி
கொண்டு இருந்தான்.

இருவரும் தங்கள் சிந்தனையில் உழன்ற போது
விரைவிலேயே தூங்கிப் போனார்கள்.

ராதிகா காலையில் கண் விழித்ததும் இன்று தா
வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற நினைப்பு முதலி
வந்து அவளை உற்சாகப்படுத்தியது.

சிரிப்புடனே அவள் எழ முந்தைய நாளைப் போலவே
அன்றும் கண்ணன் குளித்து முடித்து செய்தித் தாள்
வாசித்துக் கொண்டு இருந்தான்.

அவள் எழுந்ததை கவனித்தவன் அவள் பல் துலக்கி
வரும் வரை காத்திருந்தான்.

குளியலறையில் இருந்து வெளியே வந்தவளிடம், ''ராதிகா இன்னைக்கு எனக்கு கடையிலே கொஞ்சம் வேலை இருக்கு. உங்க வீட்டிலே கொஞ்ச நேரம் இருந்திட்டு கடைக்குப் போயிடுவேன். அதனால பைக் இருந்தால் எனக்கு வசதியா இருக்கும். இன்னைக்கு புடவை கட்டாமல் சுரிதார் போட்டுக்கிறியா?'' என்றான்.



''சரிங்க'' என்று சந்தோஷமாக தலை ஆட்ட ஆரம்பித்தவள், ''ஆனா அத்தை...'' என்று இழுத்தாள்.

''அம்மாகிட்டே நான் பேசிக்கிறேன்'' என்றான்.

சரி என்று சொல்லி நான்கு எட்டு வைத்தவள், ''எங்க அத்தையைச் சமாளிக்கிறது இருக்கட்டும். உங்க அத்தையை யார் சமாளிப்பா?'' என்று பரிதாபமாக விழித்துக் கொண்டு கேட்டாள்.

''உங்க அம்மாவை தானே கேட்கிறே? அவங்க கிட்டவும் நான் சொல்லிக்கிறேன்'' என்றதும்,

''நிஜமா தானே சொல்லுறீங்க? அப்புறமா எங்கம்மா கிட்டே மாட்டிவிட்டுட மாட்டீங்க தானே?'' என்று கேட்டாள்.

''நிஜமா தான் சொல்லுறேன். மாட்டிவிட மாட்டேன். உங்கம்மான்னா உனக்கு அவ்வளவு பயமா?'' என்று கண்ணன் கேலியாகக் கேட்க,

''சே! சே! நான் எங்க அம்மாவுக்குப் பயப்பட மாட்டேன்'' என்று கெத்தாக மொழிந்துவிட்டு நகர்ந்தாள்.

அவள் குளித்து முடித்து ஒரு சுரிதாரை அணிந்து கொண்டு கீழே இறங்கிச் செல்ல தேவகி நான்கு முழம் பூவோடு காத்திருந்தார்.

'நான் போட்டு இருக்கும் உடைக்கு நான்கு முழம் பூ வைத்தால்... பட்டிக்காடுன்னு பார்க்கிறவங்க எல்லாம் சிரிப்பாங்களே. இப்போ என்ன சொல்லித் தப்பிப்பது?' என்று அவள் விழித்துக் கொண்டே தேவகியின் அருகில் செல்ல,

''என்னம்மா சேலை கட்டலையா? நீ சேலை கட்டிட்டு வருவேன்னு நினைச்சு நாலு முழம் பூவோட நின்னுக்கிட்டு இருக்கேன். இந்த டிரஸுக்கு இவ்வளவு

பூ வைக்க முடியாதே!'' என்று ராதிகாவின் வயிற்றி... தேவகி பால் வார்த்தார்.

'ப்ச்' என்று எரிச்சலுடன் ஒலி எழுப்பியவர், ''க... சுரிதார் போட்டால் நகையும் போட்டுக்க மாட்டா... பூவும் வைச்சுக்க மாட்டாள். நீயும் அப்படி தானா?'' என்... சந்தேகம் கேட்டார்.

''ஆமா அ..த்..தை..'' என்று ராதிகா தயங்கி இழுக்க...

''ஏம்மா உங்களுக்குக் கல்யாணம் ஆகி ரெண்டு நா... தான் ஆகுது. முதன் முதலா பொண்ணும் மாப்பிள்ளை யுமா சேர்ந்து உங்க வீட்டுக்குப் போறீங்க. நகை நட்... போட்டு, தலை நிறைய பூவை வைச்சுக்கிட்டுப் போ... வேண்டாமா? இப்படியா போவாங்க?

அடுத்த தடவை போகும்போது எப்படி வேணா போ... ஆனா இன்னைக்கு சேலையை... அதுவும் பட்டு மாதி... யான புடவையை கட்டி, நகை போட்டு, இந்தப் பூவை யும் வைச்சுக்கிட்டு வா'' என்று சொல்லி பூவை அவ... கையில் திணித்து அவளை மாடிக்கு அனுப்பி வைத்தார்.

அவரிடம் ஒன்றும் சொல்ல முடியாமல் அவ... கொடுத்த பூவை வாங்கிக் கொண்டு மேலே தங்களது அறைக்குள் சென்றள்.

## 5

அறைக்குள் யாரோ நுழையும் சப்தம் கேட்டுத் திரும்பிய கண்ணன் ராதிகாவைக் கண்டதும், ''என்ன கிளம்பலாமா?'' என்று கேட்டான்.



அவள் பதில் கூறும் முன் அவள் கையில் இருந்த பூவை பார்த்தவன், ''இவ்வளவு பூவையும் தலையிலே வைச்சுக்கப் போறியா?'' என்று பயந்து போன குரலில் கேட்கவும், ராதிகா அவனை முறைத்தாள்.

''எங்கம்மாகிட்டே நான் பேசுறேன் என்று சொல்லிட்டு நீங்க பாட்டுக்கு இங்கேயே உட்கார்ந்துக்கிட்டு என்னைப் பழி வாங்குறீங்களா?'' என்று எரிச்சலுடன் கேட்கவும்,

''அம்மா திட்டினாங்களா?'' என்று அவன் வேகமாகக் கேட்டான்.

''திட்டலை. ஆனா புடவை கட்டிட்டு வான்னு சொல்லி அனுப்பிட்டாங்க.''

''இரு. நான் போய் அம்மாகிட்டே பேசுறேன்'' என்று அவன் கீழே செல்ல முயல,

''வேண்டாம்'' என்று வேகமாக மறுத்தவள்,

''அத்தையே இப்படிச் சொன்னாங்கன்னா... எங்கம்மா இதைவிட அஞ்சு மடங்கு சொல்லுவாங்க. நீங்க வேற கடைக்குப் போயிடுவேன்னு சொல்லுறீங்க. தனியா சிக்கிட்டேன் என்று என்னை எங்கம்மா சிக்கன்-65ஆ பொறிச்சு எடுத்திடுவாங்க. வேண்டாம் சாமி. நான் எப்படியாச்சும் புடவையோடு பைக்கிலே உட்கார்ந்து வரேன்'' என்று ஒருவித பயத்தோடு கூறினாள்.

'யாரோ அவங்க அம்மாவைப் பார்த்துப் பயப்பட மாட்டேன் என்று சொன்னாங்க!'' என்று கூறிப் புன்னகைத்தவன் ஒரு பையை எடுத்து ராதிகாவின் கையில் கொடுத்து,

"இது என்னோட கிஃப்ட்..." என்று சொல் கொண்டு இருக்கும்போதே,

ராதிகா அதில் என்ன இருக்கிறது என்று ஆர்வமா பிரித்துப் பார்த்தாள். அதனுள்ளே ஒரு சுரிதார் இருக்க அவனை மேலே பேச விடாமல்,

"இவ்வளவு நேரம் நான் உங்ககிட்டே கதை சொன்னேன். அத்தையும் எங்கம்மாவும் நான் புட கட்டணும் என்று சொல்லிட்டாங்கன்னு சொல்லி கிட்டு இருக்கிறதை காதிலேயே வாங்கலையா?" என் கடுப்புடன் கேட்கவும்,

"இது உனக்குன்னு நான் சொன்னேனா? இது உ தங்கச்சி சந்தியாவுக்கு" என்றான்.

"அவளுக்கு எதுக்கு?" என்று அவள் கேட்கவு கண்ணனுக்கு பத்து நாட்கள் முன்பு நடந்தது மனதி படம் போல் விரிந்தது.

* * *

திருமணத்திற்குப் பத்து நாட்கள் இருந்த பொழுது...

கண்ணன் தன்னுடைய டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் வேலையில் ஆழ்ந்து இருந்தான்.

அப்பொழுது அவனது அருகில் இருந்து, "ஹாய் மாமா!" என்ற குரல் ஒலித்தது.

'யாரோ யாரையோ கூப்பிடுறாங்க' என நினைத்தவன் திரும்பிப் பார்க்காமல் தன் வேலையைத் தொடர, "மாமா" என்ற அழைப்பு இம்முறை அழுத்தமாகக் கேட்கவும் நிமிர்ந்து பார்த்தான்.

அங்கே கல்லூரி செல்லும் வயதில் ஒரு இளம் பெண் நின்றிருந்தாள்.



இன்றைய மாணவிகள் போல் முதுகில் ஒரு பையை மாட்டி இருந்தாள். அதைப் பார்த்த உடனே கல்லூரி சென்று திரும்பும் மாணவி என்பது அவனுக்குத் தெரிந்தது.

வந்திருப்பவள், தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் ராதிகாவின் தங்கை சந்தியா என்பது கண்ணணுக்குத் தெரியவில்லை.

அவர்களின் நிச்சயதார்த்தத்தை திருமணத்திற்கு முதல் நாள் நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள். அதனால் பெண் பார்க்கும் வைபவத்திற்கு மட்டுமே கண்ணன் ராதிகா வீட்டிற்குச் சென்றான்.

முஹூர்த்த புடவை எடுப்பதற்கும் கண்ணன் செல்ல வில்லை. அதனால் ராதிகாவின் குடும்ப உறுப்பினர் களை அவனுக்கு சரியாக அடையாளம் தெரியவில்லை.

அவள் அழைத்த மாமா என்ற உறவு முறையும் வேலையில் கவனமாக இருந்ததால் அவனது மூளையை எட்டவில்லை. யாரோ அழைக்கிறார்கள் என்ற அளவில் தான் மூளையில் பதிந்திருந்தது.

"உங்களுக்கு என்ன வேணும்?" என்று அவன் விசாரிக்க,

யாரைப் பார்த்துக் கேட்கிறான் என்று புரியாத சந்தியா தனக்குப் பின்னால் திரும்பிப் பார்க்க... அங்கே ஒருவரும் இல்லாததால், தன்னைப் பார்த்தே அவன் அவ்வாறு கேட்கிறான் என்று புரிந்த வினாடி விழித்தாள்.

தன்னை அவனுக்கு அடையாளம் தெரியவில்லை என்பதை உடனே கணக்கெடுத்தாள். அடுத்த நொடி அவளின் இயல்பான துடுக்குத்தனம் வெளிப்பட ஆரம்பித்தது.

''சார் எங்க காலேஜிலே கல்சுரல்ஸ் ப்ரோகிராம் நடத்தப் போறோம். அதுக்கு ஸ்பான்சர் பிடிக்கிறோம். உங்க டிபார்ட்மெண்டல் ஸ்டோர்க்கு விளம்பரம் கொடுத்தீங்கன்னா அதை எங்க மேகஸினிலே போடுவோம். உங்க கடையை விளம்பரப்படுத்தலாம். அது மூலமா உங்களுக்கு வாடிக்கையாளர் நிறைய பேர் கிடைப்பாங்க. உங்க பிசினஸ் சூடு பிடிக்கும்'' என்று அவள் அடுக்கிக் கொண்டே போக,

''உங்க காலேஜ் எங்கே இருக்கு?'' என்று கேட்டான்.

அவள் நகரின் ஒரு கோடியில் இருக்கும் தனது கல்லூரி இருக்கும் ஏரியாவின் பெயரைச் சொன்னதும்,

''அங்கே இருக்கிறவங்க என் கடைக்கா மளிகை சாமான் வாங்க வரப் போறாங்க?'' என்று கேலியாக கேட்க ஆரம்பித்தவன், இடையிலே பேச வந்தவளை ஒரு கை காட்டி தடுத்து நிறுத்தி,

''இந்த மேகஸினை எல்லா ஸ்டூடண்ட்ஸுக்கும் ஒரு காப்பி குடுப்பாங்கன்னு தானே சொல்ல வரீங்க. எங்க ஏரியாவிலே ஒரு ரெண்டு ஸ்டூடண்ட் இருப்பாங்களா? அந்த ரெண்டு வாடிக்கையாளரைப் பிடிக்கிறதுக்காக நான் ஆயிரக் கணக்கிலே செலவு பண்ணணுமா?'' என்று கேட்டான்.

''நீங்க கொடுக்கிற விளம்பரம் எங்களுக்கு யூஸ்புல்லா இருக்குமே!'' என்று சந்தியா சொன்னதும்,

''இப்ப சொன்னீங்க பாருங்க... இது சரி. எங்களுக்கு ஹெல்ப் பண்ணுங்கன்னு கேட்கிறதை விட்டுட்டு உங்க மேகஸின்லே விளம்பரம் பண்ணினா நான் அம்பானியாகிடலாம் என்ற ரேஞ்சுக்கு பில்டப் பண்ணுறதெல்லாம் ஓவர்'' என்று கிண்டல் அடித்தவன்,



''பொதுவா இது மாதிரி ஸ்பான்சர் கேட்கிறதுக்கு கும்பலா தானே போவீங்க. ஆனா நீங்க மட்டும் தனியா வந்து இருக்கீங்க. உங்க பிரண்ட்ஸ் யாரும் கூட வரலையா? தெரியாத இடங்களுக்கு இப்படி தனியா போகலாமா? காலம் கெட்டுக் கிடக்குது. உங்க வீட்டிலே சொல்லிட்டு வந்தீங்களா?'' என்று அறிவுரையை அவிழ்த்து விட ஆரம்பித்தான்.

இது மாதிரி தனியாக தன் தங்கை கயல் சென்றிருந்தால் எந்த அளவிற்கு கவலைப்பட்டு அறிவுரை வழங்குவானோ அதையே சந்தியாவிடம் சொல்லிக் கொண்டு இருந்தான்.

'ஆகா! எங்கம்மாவை விட மாமா அட்வைஸுங்கிற பேரிலே மொக்கை போடுறாரே! அக்கா, அம்மாகிட்டே இருந்து தப்பிச்சு மாமாகிட்டே மாட்டிக்கப் போகிறாய் போல!' என்று சந்தியா மனதிற்குள் புலம்பினாள்.

அதே சமயம் யாரென்று தெரியாத போதும் தன் மீது அவன் அக்கறை எடுத்துப் பேசியது மனதிற்கு இதத்தைத் தந்து ஒரு புன்முறுவலை அவளது முகத்தில் தோற்றுவித்தது.

ஆனாலும் தன் கேலியைவிட மனமில்லாது, ''எங்க வீட்டிலே சொல்லிட்டு தான் சார் வந்தேன். இன்னும் சொல்லப் போனால் எங்கப்பா தான் நீங்க நல்லவர்ன்னு சொல்லி அனுப்பி வைச்சார். அவ்வளவு சொன்னவர் நீங்க அட்வைஸ் மழை பொழிவீங்கன்னு சொல்லாமல் போயிட்டார்'' என்றாள்.

''உங்க அப்பாவா? அவருக்கு என்னைத் தெரியுமா? அவர் பேர் என்ன?'' என்று கேட்டான்.

அவள் தன் தந்தையின் பெயரைக் கூறியதும் அவன் அப்பெயரில் தனக்குத் தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று யோசிக்க ஆரம்பித்தான்.

சந்தியா தன் விளையாட்டைக் கைவிட எண்ணிய வளாய், "எங்க அப்பா பேர் மட்டும் போதுமா? எங்க அம்மா, அக்கா பேரெல்லாம் வேண்டாமா?" என்று கேட்டவள் அவர்களின் பெயரையும் சொன்னதும்,

கண்ணனுக்கு அவள் யார் என்று புரிந்து போயிற்று. அவனது முகம் மலர்ந்தது.

"ஹேய் சந்தியா! நீ முதல்லயே சொல்லி இருக்கலா மில்ல. எதுக்கு இந்த டிராமா?" என்று அவன் விசாரிக்க,

"நானா சொல்லலை? வந்த உடனே உங்களை மாமான்னு கூப்பிட்டேன். நீங்க எங்க அக்காவை பொண்ணு பார்க்க வந்த அன்னைக்கு எத்தனை தடவை அங்கேயே சுத்திக்கிட்டு இருந்தேன். அன்னைக்கு நீங்க என்னைப் பார்க்கலை போல! இப்போ மாமான்னு கூப்பிட்டதையும் கேட்கலை.

ஆக மொத்தம் உங்களுக்கு கண்ணும் அவுட்டு. காதும் டமாரம். இப்படி ஒரு மாப்பிள்ளையவா எங்கப்பா தேர்ந்தெடுத்தார். டூ பேட் டூ பேட்" என்று அவள் கேலி யில் இறங்க அவனது புன்னகை அதிகமாகிக் கொண்டே போனது.

"உங்களை நான் மாமான்னு உறவுக்காகச் சொல்லு வேன். ஆனா நீங்க எனக்கு ஒரு அண்ணனா இருந்து எல்லாம் செய்யணும் பார்த்துக்கோங்க.

என்னடா இவ பாட்டுக்கு பொசுக்குன்னு நம்மளை அண்ணன்னு சொல்லிட்டாளே. இவ கல்யாணச்



செலவு நம்ம தலையிலே விடிஞ்சிடுமோன்னு பயப்படா தீங்க. அதெல்லாம் எங்கப்பா பக்காவா ப்ளான் பண்ணி ரெண்டு பொண்ணுங்களுக்கும் சேர்த்து வைச்சிட்டார்.

நாளைக்கே எனக்கு ஏதாச்சும் ஒரு பிரச்சனை வந்தா, நான் தனி ஆள் இல்ல. எனக்கு பின்னாடி எம்.குமரன் S/o மஹாலஷ்மி படத்திலே வரும் ஜெயம் ரவியா எங்க மாமா இருக்கார்ன்னு நான் பில்டப் கொடுப்பேன். அப்ப சரியா என்ட்ரி கொடுத்து என்னை எதிர்க்கிறவங்களை நாலு தட்டிட்டுப் போகணும்" என்று அவள் சொன்னதும்,

"நானு... ஜெயம் ரவி?" என்று சொல்லிக் கொண்டே கண்ணன் குனிந்து தன் நிறத்தை பார்வையிட்டு உதட்டைப் பிதுக்க,

"மாமா கலரைப் பார்க்காதீங்க. ரொம்ப வெளுப்பா இருந்தா அது வியாதி. எங்க அக்கா மாதிரி ஆளுங்களை எல்லாம் நாம ஒரு பொருட்டா மதிக்கக் கூடாது. இப்ப நீங்க, நான், எங்கப்பா எல்லாம் ஒரே கூட்டணி" என்று சொன்ன சந்தியா சற்றே மாநிறமாக இருந்தாள்.

ராதிகா அளவிற்கு வெளுப்பாக இல்லையென்றாலும் கண்ணன் அளவிற்கு நிறம் கம்மியும் கிடையாது.

ஆனால் சந்தியா கண்ணனின் நிறத்தைப் பொருட் படுத்தாது தன்னுடன் கூட்டணி சேர்த்துக் கொண்டு பேசியதும், அவளை அவனுக்கு ரொம்பப் பிடித்துப் போயிற்று.

தேவகியையும் கயலையும் தவிர பெண்கள் யாரும் அவனிடம் நெருங்கி வந்து பேச மாட்டார்கள். அதற்கு அவனது கரிய நிறமே முக்கிய காரணம்.

ஆனால் சந்தியாவும் கயல் போன்று இயல்பா
பேசவும் அவனுக்கும் அவளை தங்கையாகவே ஏற்க
தோன்றியது. சந்தியா தன் பேச்சினைத் தொடர்ந்தாள்.

"அந்தப் படத்திலே ஜெயம் ரவியோட ரோலைப்
பாருங்க. அதே மாதிரி நீங்களும் சும்மா பாக்ஸர் மாதி
இருக்கீங்க இல்ல. அது போதும்" என்றவள்,

"சும்மா விளையாடுறேன் மாமா. பயப்படாதீங்க. நான்
எந்த வம்பு தும்புக்கும் போக மாட்டேன். எனக்கு அண்
ணன் இல்லையேன்னு ரொம்ப வருத்தமா இருந்துச்சா...
உங்களைப் பார்த்த உடனே எங்கப்பாவைப் பார்க்கிற
மாதிரி தோணுச்சு. எங்க குடும்பத்திலே ஒரு ஆளா டக்
குன்னு என் மனசிலே புகுந்துட்டீங்க. அதான் உங்
களையே அண்ணனா ஆக்கிக்கலாம் என்று பார்த்தேன்"
என்று உணர்ந்து கூறினாள்.

அவனும் அவளது கூற்றை தன் தலையை அசைத்து
ஆமோதித்தான்.

"சந்தியா ஏதாச்சும் குடிக்கிறியா? என்ன வேணும்?"
என்று அவன் உபசரிக்க முயலவும், அவள் கேலியாக
ஏதோ சொல்ல வாயைத் திறக்க,

"இரு. நானே சொல்லிடுறேன். நான் டிபார்ட்மெண்டல்
ஸ்டோர் தான் வைச்சிருக்கேன். ஹோட்டல் நடத்தலை.
ஆனா என் கடையிலே ஜூஸ், கூல்டிரிங்க்ஸ், கோல்ட்
காபி கிடைக்குமில்லையா. அதைக் கேட்க வந்தேன்"
என்று அவளை முந்திக் கொண்டு வேக வேகமாக
விளக்கினான்.

"பரவாயில்லை மாமா. உஷாரா தான் இருக்கீங்க"
என்றவள், "எனக்கு எதுவும் வேண்டாம்" என்று மறுத்தாள்.



கண்ணனை மேலும் சீண்டும் பொருட்டு, "ஆனாலும்
நீங்க இன்னும் கொஞ்ச உஷாரா இருக்கணும். நான் ஒரு
காலேஜ் ஸ்டுடண்ட் என்று சொல்லி உங்ககிட்டே
பேசிக்கிட்டு இருக்கேன். நீங்க என் ஐ.டி. கார்டை வாங்கி
சரி பார்க்க வேண்டாமா?" என்றாள்.

அவன் உடனே தன் முகத்தை தீவிரமாக வைத்துக்
கொண்டு, "நீ முதல்ல ராதிகா தங்கச்சி சந்தியா என்ப
தற்கு ஏதாச்சும் ஆதாரம் காட்டு" என்றான்.

ஆ! என்று வாயை பிளந்து கொண்டு அவள் விழிக்
கவும்,

"என் மச்சினிச்சி என்னை எப்பவும் உஷாரா இருக்
கணும் என்று சொல்லி இருக்காம்மா" என்று கேலி
செய்தான்.

"என் டயலாக்கை வைச்சு எனக்கே ஆப்பு அடிக்கப்
பார்க்கிறீங்களா? இருந்தாலும் உங்க சந்தேகத்தைத்
தீர்த்து வைக்கிறேன்" என்றவள் தன்னுடைய கைப்பேசி
யில் உள்ள புகைப்படம் ஒன்றை எடுத்துக் காட்டினாள்.

அந்தப் புகைப்படத்தில் அவளும் ராதிகாவும் இருந்
தார்கள்.

"மாமா ஆதாரம் கேட்கிற சாக்கிலே அக்காவை
பார்க்கத் தானே போட்டோ கேட்டீங்க?" என்று கேலி
செய்தவள், தன் தலையில் தானே அடித்துக் கொண்
டாள்.

"மட்டி! மடச்சி!" என்று தன்னைத் தானே திட்டிக்
கொண்டவள்,

"மாமா உங்க செல்போனை தாங்க" என்று உரிமை
யுடன் கேட்டு அவனிடம் கை நீட்ட,

அவனும் ஏன் எதற்கென்று எதுவும் கேட்காமல் கைப்பேசியை எடுத்து அவளிடம் ஒப்படைத்தான்.

அவள் அதை வாங்கி தன் அக்காவின் புகைப்படம் இருக்கிறதா என்று ஆராய்ந்தாள்.

''என்ன மாமா என்னை இப்படி ஏமாத்திட்டீங்க. அக்கா போட்டோவை வால் பேப்பரா வைச்சு இருப்பீங்கன்னு நினைச்சேன். இதுக்கு என்னை மடச்சின்னு வேறு திட்டிக்கிட்டேன். நீங்க வேஸ்ட் மாமா.'' என்றவள்,

''உங்களுக்கு எங்க அக்காவைப் பிடிச்சு இருக்கு தானே?'' என்று சந்தேகமாய் கேட்டாள்.

அதற்கான பதிலை அவள் கேட்டுப் பெற்று இருந்தால் அதற்கு அடுத்து நடக்கவிருந்த நிகழ்வுகளை தடுத்து நிறுத்தி இருக்கலாம்.

சந்தியா கண்ணனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது கண்ணன் கடையின் வாயிலில் நுழைந்து கொண்டிருந்த ராதிகாவின் தந்தை ஏகாம்பரத்தை கண்ணுற்றான்.

''ஹேய்! உங்க அப்பா வந்திருக்கார் என்று சொல்லவே இல்லையே. வா'' என்று சொல்லிக் கொண்டே அவரை நோக்கி நகர்ந்தான்.

''எங்கப்பா உங்களை நல்லவர்ன்னு சர்ட்டிபிகேட் கொடுத்தது சரி தான் மாமா. உங்களுக்கு மச்சினிச்சியை அடையாளம் தெரியலை. ஆனா மாமனாரை மட்டும் அடையாளம் தெரிஞ்சு வைச்சிருக்கீங்க. அங்க நிக்கிறீங்க மாமா நீங்க'' என்று கிண்டல் அடித்துக் கொண்டே அவனை பின் தொடர்ந்தாள்.



''வாங்க மாமா'' என்று வரவேற்றவனிடம்,

''நல்லா இருக்கீங்களா மாப்பிள்ளை? சந்தியா எதுவும் கலாட்டா பண்ணாளா? நானும் கடைக்கு வருவேன். மாமாவைப் பார்த்து அவர்கிட்டே தனியா பேசணும் என்று அடம் பிடித்தாள்'' என்று ஏகாம்பரம் விளக்கவும்,

''கலாட்டா எதுவும் பண்ணலை மாமா. தங்கச்சி கயல் மாதிரியே இருக்காள்'' என்று சந்தியாவிற்கு கண்ணன் நற்சான்றிதழ் வழங்க சந்தியா தன் சுரிதாரின் காலரை தூக்கிவிட்டுக் கொண்டாள். ஏகாம்பரம் தான் கண்ணனை தேடி வந்த விஷயம் குறித்து அவனிடம் பேச ஆரம்பித்தார்.

* * *

''கேட்கிறேன் இல்ல. சந்தியாவுக்கு எதுக்கு புது டிரஸ்?'' என்று ராதிகா அவனை பிடித்து உலுக்க கண்ணன் நிகழ்காலத்திற்கு வந்தான்.

''ம்ம்ம் உங்க வீட்டுக்கு முதன் முறையா போறோம் இல்ல. அதான்...''

''அதுக்கு அவளுக்கு எதுக்கு புதுசு?'' என்று அப்பொழுதும் அவள் விடாமல் கேட்க,

''அவ என் தங்கச்சி அதனால வாங்கினேன்'' என்றான்.

''அவ உங்களுக்கு தங்கச்சியா? அப்போ நான் உங்களுக்கு அக்காவா?'' என்று ராதிகா இடக்காகக் கேட்க,

''அடிப்பாவி! உங்க வீட்டிலே என்னை ஏமாத்திட்டீங்களா? என்னை விட வயசிலே பெரிய பொண்ணையா நான் கல்யாணம் பண்ணி இருக்கேன்'' என்று அவன் நக்கலாகக் கேட்க,

''உங்களை...'' என்று ராதிகா பல்லைக் கடித்தா

''முதன் முதலா உங்க வீட்டுக்கு போறோம். வெ
கையோடு போக வேண்டாமேன்னு டிரஸ் வா
வைச்சிருக்கேன். இதுக்கு நீ எனக்கு தாங்க்ஸ் செ
லணும் ராதிகா.''

''கண்ணுக்கு முன்னாடி உட்கார்ந்து இருக்கிறவ
பத்தி நினைச்சி பார்க்க மாட்டாராம். இவரு தன் மச்சி
சிக்கு வாங்கினதை பார்த்து உச்சி குளிர்ந்து போய் நா
தாங்க்ஸ் சொல்லணுமாம். தடியால அடிக்காமல் வி
வைச்சிருக்கேனே என்று சந்தோஷப்பட்டுக்கோங்
என்றாள்.

கடைசி வரியை மட்டும் வாய்க்குள்ளே முணுமு
தாள்.

அவள் முணுமுணுத்தது என்னவென்று தெரி
கொள்ள அக்கறை காட்டாமல் அவன் தன் அலமாரி
சென்று மிகுந்த தயக்கத்திற்கு பின் ஒரு கவரை எடுத்
கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்.

''இது என்ன புடவையும் வேஷ்டியுமா? எங்க அம்
அப்பாவுக்கா?'' என்று நக்கலாகக் கேட்டவள்.

''நல்ல வேளை எங்க வீட்டிலே நாங்க நாய் வள
கலை. இல்லைன்னா அதுக்கு கூட பிஸ்கட் வாங்கிட்
போவீங்க போல'' என்று பொரிந்தாள்.

''அம்மாடி! உனக்கு என்னமா கோபம் வருது. உள்
பிரிச்சுப் பாரு. உனக்கு பொறுமையும் பொறாமையு
அதிகமா இருக்கு ராதிகா. பார்த்து கொஞ்சம் கண்ட்ரோ
பண்ணிக்கோ!'' என்று சொல்லிக் கொண்டிருக்கு
போதே அவள் அதை பிரித்துப் பார்த்தாள்.



ஆரஞ்சு நிற சாமுத்ரிகா பட்டுப் புடவை தக தக வென்று மின்னியது. அதன் நிறத்திலும் ஜொலிப்பிலும் தன்னை மறந்து அதை தடவிக் கொடுத்துக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

''அம்மா பட்டுப் புடவை தானே கட்டச் சொன்னாங்க. இதை கட்டிக்கிறியா?'' என்று அவன் ஆவலாகக் கேட்க.

''இதையே கட்டிக்கிறேன்'' என்ற சந்தோஷமாக ஆரம்பித்தவள், ''ஆனா பிளவுஸ்...'' என்று இழுத்தாள்.

''உன் முஹூர்த்த பிளவுஸை தைக்கக் கொடுத்த போது இந்தச் சேலையோட பிளவுஸையும் கொடுத்து தைச்சு வைச்சிருக்கேன். உள்ளே இருக்கு.'' என்று கூறியவன் கீழே சென்று விட்டான்.

## 6

ராதிகா அந்தப் புடவையின் அழகில் அப்படியே மெய் மறந்து போய் அமர்ந்திருந்தாள்.

'புடவையை எனக்காக வாங்கினாரா? இல்லை வேறு யாருக்கோ வாங்கியதை அவங்ககிட்டே கொடுக்க முடியாததால் என்னிடம் கொடுத்திருக்காரா?' என்று முதலில் தன்னைத் தானே குழப்பிக் கொண்டவள்.

'எது எப்படியோ என் அளவிற்கு தான் பிளவுஸ் தைக்கப்பட்டிருக்கு. அதனால இதை கட்டுற உரிமையும் எனக்கே' என்று எண்ணிக் கொண்டு அதை உடுத்தினாள்.

காதில் ஜிமிக்கி மற்றும் கழுத்தில் நெக்லஸ் அணி... தேவகி கொடுத்த பூவை வைத்து கண்ணாடி முன் வ... நின்றவள் தானே தன் பிம்பத்தை கண்டு ரசித்தாள்.

'என் நிறத்துக்கு இந்த சேலை எடுப்பா இருக்கில்ல... அவர் என்ன சொல்லுவார்?' என்று எண்ணிக் கொண்... இருக்கும் போதே தனது கைப்பேசியை ஆராய்... கொண்டே கண்ணன் அறைக்குள் நுழைந்தான்.

டிரஸிங் டேபிளில் இருந்த சீப்பை எடுத்து தலை... வாரிக் கொள்வோம் என்று நினைத்து மேஜை... நோக்கி நகர்ந்தான்.

அதன் அருகே வந்ததும் குனிந்து கொண்டே த... கையை முன்னால் நீட்ட சரியாக அந்த நேரம் ராதி... திரும்ப கண்ணனின் கை அவளது இடுப்பில் பதிந்த...

அவன் தனது கைப்பேசியில் இருந்து தலை... நிமிர்த்தி பார்க்க தகதகவென்று மின்னிக் கொண்டிரு... மனைவியை கண்டவன் இமைக்க மறந்து அவளை... பார்த்தான்.

தனது கையை அவன் உருவிக் கொள்ள முயலவில்லை... அது வந்து வழவழப்பான இடத்தை விட்டு நகர்வே... என்று அடம் பிடித்தது. முதன் முதலாக பெண்ணி... ஸ்பரிசத்தை உணர்ந்தவன் கிறங்கிப் போய் நின்றான்.

அவளது மேனி கூசிச் சிலிர்ப்பதை கண்ணனால் உண... முடிந்தது. அவன் தன் பெருவிரலால் அவளது இடுப்பி... முன்னும் பின்னும் கோலம் போட அவள் வெட்கத்துட...

"இந்த சேலை நல்லா இருக்கா?" என்ற கேட்டாள்.

"நல்லா இருக்குன்னு நினைச்சதனால தானே எடு...தேன். உனக்கு பிடிச்சிருக்கா?" என்று கிறங்கிப் போ... குரலில் கேட்க.



அவனது குரலிலும் செய்கையிலும் மயங்கியவளாய், "அதில்லை. எனக்கு நல்லா இருக்கா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"ரொம்ப சூப்பரா இருக்கு மைமா" என்றதும் அவளுக்கு சற்று முன் தோன்றிய உணர்வு அறுந்து போனது.

அவனை தனது கைகளால் ஒரு பக்கமாக இழுத்து நகர்த்தவும் அவனும் இயல்பு நிலைக்கு திரும்பினான். அவனை நகர்த்திவிட்டு அந்த அறையை சுற்றிப் பார்வையை சுழல விட்டாள்.

அவன் சீப்பை எடுத்து தலையை வாரிக் கொண்டே, "யாரைத் தேடுறே?" என்று கேட்டான்.

"மைமான்னு கூப்பிட்டீங்களே. யாரை அப்படி கூப்பிட்டீங்கன்னு பார்த்தேன்."

"இங்கே உன்னையும் என்னையும் தவிர கண்ணுக்கு தெரியாமல் யாராச்சும் இருக்காங்களா என்ன? உனக்கு எக்ஸ்-ரே கண்ணா? அப்படின்னா இந்த ரூமிலே வேற யாராச்சும் இருக்காங்களான்னு பார்த்துச் சொல்லு" என்று கிண்டலாக ஆரம்பித்தவன்,

"நான் உன்னை தான் அப்படிக் கூப்பிட்டேன்" என்று முடித்தான்.

"என்னையா மைமான்னு கூப்பிட்டீங்க? அப்படின்னா என்ன?"

"எனக்கு பசிக்குது. டைம் ஆச்சு. உங்க வீட்டுக்கு கிளம்புவோமா?" என்று கேட்டு வெளியேறினான்.

"சொல்லாட்டிப் போங்க" என்று சொல்லிக் கொண்டே அவனை பின் தொடர்ந்தாள்.

அவர்கள் கிளம்பி கீழே வந்த பொழுது தேவகி சமை யலறையில் எதையோ கிண்டிக் கொண்டு இருந்தா

“இப்போ எப்படி இருக்கேன்னு பாரு! இதுக்கு த பட்டுப் புடவை கட்டச் சொன்னேன்” என்று தே கூறினார்.

“என்ன அத்தை நீங்க இன்னும் கிளம்பலையா என்று ராதிகா கேட்க,

“இல்லை ராதிகா. நானும் கயலும் மதியச் சாப் டிற்கு வருவோம். காலையிலே கிளம்பணும் என்று கயலையும் நிகிலையும் அவசர அவசரமா கிளப்பணு அதனால நாங்க மதியம் மட்டும் வரோம் என்று கனவே உங்க அம்மா அப்பாகிட்டே சொல்லிட்டே நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்க” என்றார்.

“சரிங்க அத்தை” என்று அவள் விடைபெற,

“கயலை பார்த்து பத்திரமா கூட்டிட்டு வாங்கம்ம கால் டாக்ஸி சரியான நேரத்துக்கு வந்திடும்” என் சொல்லி கண்ணனும் விடைபெற்றான்.

வெளியே வந்தவன் தனது வண்டியை உதைத்து கிளப்பி அவளை ஏறச் சொன்னான். சரி என்று கூ ஏறியவன், ஏறிய வேகத்திலேயே இறங்கினாள்.

என்ன விஷயம் என்பது போல் கண்ணன் அவளை பார்க்க, “பிடிக்க கம்பி கிடையாதா?” என்று கேட்டாள்

“க...ம்...பி...யா? என்ன கம்பி?” என்று புரியாம அவன் விழிக்க,

“கீழே விழாமல் இருக்கிறதுக்காக பிடிச்சிக்கிறதுக் சைடிலே ஒரு கம்பி இருக்குமே. எங்கப்பா வண்டியிலே



இருக்கும். எங்கம்மா அதைப் பிடிச்சிக்கிட்டு தான் போவாங்க” என்று விளக்கினாள்.

“என் வண்டியிலே அப்படி எந்தக் கம்பியும் கிடையாது. நாளைக்கு மெக்கானிக் ஷாப்பிலே சொல்லி மாட்டச் சொல்லுறேன். இப்போ ஏறு” என்றதும்,

“முருகா காப்பாத்துப்பா” என்ற கோரிக்கையோடு ஏறி அமர்ந்தாள்.

அவன் வண்டியை விருட்டென்று கிளப்பியதும் தடுமாறியவள் அவனது தோளில் கை வைத்து தன்னை நிலைபடுத்திக் கொண்டாள்.

அவனது தோளை தொடுவதற்கு அவளுக்கு கூச்சமாக இருந்தது. அதனால் பட்டும் படாமலும் அவனது தோளைப் பற்றியவளால் வசதியாக அமர்ந்து செல்ல முடியவில்லை.

தோளில் இருந்த கைப்பை ஒரு புறம் வழுக்கிக் கொண்டு போனதென்றால் காற்றில் சேலையின் தலைப்பு ஒரு புறம் பறந்தது. அதை பிடித்து இழுத்து செருகுவதற்குள் வண்டி ஸ்பீட் பிரேக்கரில் ஏறி இறங்கியது. கணவனை சரியாகப் பற்றாததால் அவள் நிலை தடுமாறினாள். மொத்தத்தில் அவளது நிலைமை பரிதாபமாக இருந்தது.

“ஏங்க கொஞ்சம் மெதுவாக போங்க” என்றாள்.

“ஏன் நாமளும் மதியச் சாப்பாட்டுக்கு போனால் போதும் என்று சொல்லுறியா? எங்க மாமியார் சாப்பிடாத காலைச் சாப்பாடு எனக்கும் வேண்டாம் என்று வீர சபதம் எதுவும் எடுத்து இருக்கியா என்ன?” என்று வழக்கம் போல் அவன் கிண்டல் அடிக்க,

''உங்களை...'' என்று பல்லைக் கடித்தவள் அ
இடுப்பில் கிள்ளி வைத்து விட்டாள்.

இதை எதிர்பார்க்காத கண்ணன் சற்றே நி
தடுமாறினான். ஒருவாறு சமாளித்தவன் வண்டி
சாலையின் ஓரமாக நிறுத்தினான்.

''இறங்கு!'' என்று அவளைப் பார்த்துச் சொ
அவள் புரியாது விழித்துக் கொண்டே அமர்ந்திருந்
''முதல்ல இறங்கு சொல்லுறேன்'' என்று சொ
அவளை இறங்க வைத்தான்.

''எதுக்குங்க?'' என்று அவள் விழித்துக் கொண்
கேட்க,

''ம்ம்ம் ஒண்ணு என் தோள்பட்டையை அழுத்
பிடிக்குறே. நீ அழுத்துற அழுத்திலே என்னை ஆர்த்
டாக்டரை பார்க்க வைச்சிடுவாய் போல! இல்லைன்னா
என்று தொடங்கியதும்,

''நான் எப்போ உங்க தோளை அழுத்திப் பிடிச்சே
லேசா தானே பிடிச்சேன்'' என்று அவள் முறைத்
கொண்டே சொல்ல,

''நானும் அதை தான் சொல்லுறேன். தோளை நல்ல
பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்தால் சமாளிக்கலாம். அதுக்
உனக்கு மனசில்லை. பட்டும் படாமலும் தொட்டு
தொடாமலும் பிடிச்சிக்கிட்டு என்னை மெதுவா ஓ
டுன்னு சொல்லுறே.

நான் ஏதாச்சும் பேசினா பதிலுக்கு வாயால பதில் சொ
லாமல் கையால கிள்ளி வைக்கிறே. நான் நிலை தடுமா
ரெண்டு பேரும் சேர்ந்து விழுந்து அடிபடணுமா?



பேசாமல் நீ ஆட்டோவிலே வா. நான் உன் பின்னாடியே வரேன். உங்க ஏரியா வந்தும் என் பைக்கிலே ஏறிக்கோ. உங்க ஏரியாவிலே மட்டும் மாப்பிள்ளை ஊர்வலத்திலே கார் ஓட்டுறவனைப் போல நானும் வண்டியை உருட்டிக்கிட்டே வரேன்'' என்று சொன்னவன்.

அவளது பதிலைக் கூட எதிர்பார்க்காமல் சாலையில் செல்லும் ஆட்டோ ஒன்றை கை காட்டி நிறுத்தினான்.

அவன் முகவரியை கூறி, ஆட்டோ வருமா என்று கேட்டு, அந்த ஓட்டுநரிடம் கட்டண விபரம் பேசி முடித்த பின் அவளை அதில் ஏறுமாறு கூறினான்.

அவள் ஒன்றும் சொல்லாமல் அதில் ஏறி அமர்ந்ததும் ஆட்டோ கிளம்பியது. பின்னோடு அவனது இரு சக்கர வாகனமும் கிளம்பியது.

நிஜமாவே பின்னோடு வருகிறானா இல்லை ஜூட் விட்டானா என்று ராதிகா திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

'ஒரு வேளை என்னை பைக்கிலே கூட்டிச் செல்லப் பிடிக்காததால் ஏதேதோ காரணம் சொல்லி கழட்டி விடுறாரோ?' என ஒரு எண்ணம் தோன்றவும் ராதிகாவின் முகம் வாட ஆரம்பித்தது.

பின் அவளே 'இருக்காது. நேற்று இன்றும் பைக்கிலே போகலாம் என்று சொன்னதே அவர் தானே!' என்று சமாதானம் கூறிக் கொண்டாள்.

கண்ணன் ராதிகா அமர்ந்து செல்லும் ஆட்டோவை ஒட்டியே தன் வாகனத்தை செலுத்திக் கொண்டு வந்தான். அதைக் கண்டவளின் மனம் நிம்மதி அடைந்தது.

# 7

கண்ணன் ராதிகாவிடம் சொன்னது போல் அவ வீடு இருக்கும் ஏரியா வந்ததும் அவளை தனது பைக்கி ஏற்றிக் கொண்டு அவளது வீட்டை சென்று அடைந்தா

அவளது வீடு ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பி அமைந்துள்ளது. அது இரு படுக்கை அறைக கொண்ட சிறிய வீடு.

அவர்கள் இருவரும் முதல் தளத்தில் உள்ள அவள வீட்டை அடைந்த போது ஏகாம்பரம் வெளியே செ றிருந்தார். ராதிகாவின் தாய் துர்காவும் சந்தியாவு அவர்களை வரவேற்றனர்.

அவர்கள் வரவேற்பறையில் இருந்த சோபாவி அமர்ந்ததும், "நீங்க பேசிக்கிட்டு இருங்க" என்று சொல் துர்கா சமையலறை நோக்கி நகர்ந்து விட்டார்.

கண்ணன் சந்தியாவிற்காக தான் வாங்கி வந் உடையை அவளிடம் நீட்ட,

"இது என்ன மாமா?" என்று கேட்டுக் கொண்டே வாங்கிப் பிரித்தவள் உள்ளே இருந்த அழகிய உடையில் மயங்கியவளாய், "எனக்கா மாமா? நிஜமாகவே எனக்கா?" என்ற சந்தேகமாய் கேட்கவும்,

கண்ணன் தன் முகத்தை சீரியசாக மாற்றிக் கொண்டு "உன் பேரு சந்தியா தானே? இல்லையா? அச்சோ!



நாங்க வீடு மாறி வந்திட்டோம் போல. வா ராதிகா..." என்று கூறிக் கொண்டே சந்தியாவின் கையிலிருந்த உடையை பறித்துக் கொண்டு திரும்பினான்.

"என்ன மாமா குடுக்கிற மாதிரி குடுத்திட்டு வாங்கிக் கலாம் என்று பார்த்தீங்களா? அது நடக்காது" என்று வேகமாக அவன் கையில் இருந்து அந்த உடையை பறித்துக் கொண்ட சந்தியா.

"தாங்க்ஸ் மாமா" என்று நன்றி உரைத்துவிட்டு தன் அக்காவைப் பார்த்து,

"இந்த மாதிரி நல்ல விஷயங்களெல்லாம் மாமாவை பார்த்து கத்துக்கோ!" என்று கெத்தாக கூறினாள்.

"நான் எதுக்கு உனக்கு புது டிரஸ் வாங்கித் தரணும்? யார் நீ?" என்று ராதிகா கேட்டதும்,

"அடிப்பாவி! ஒரு டிரஸ் கேட்டேங்கிறதுக்காக கூடப் பொறந்தவளையே யார் நீ என்றா கேட்கிறா!" என்று அலறிய சந்தியா கண்ணனைப் பார்த்து,

"மாமா எதுக்கும் இவகிட்டே இருந்து கொஞ்சம் விலகியே இருங்க. இல்லைன்னா இவ காத்து உங்க மேலே வீசி நீங்க மாறிடப் போறீங்க" என்று எச்சரித்தாள்.

"அட! எனக்கு இப்ப தான் விஷயமே புரியுது சந்தியா. முதல்ல நான் உனக்கு தங்கத்திலே கம்மல் தான் வாங் கிறதா இருந்தேன். ஆனா என்னமோ நேத்து திடீர்னு கம்மல் வாங்கக் கூடாது டிரஸ் மட்டும் போதும் என்று தோணுச்சு. அதனால டிரஸ் மட்டும் வாங்கிட்டு வந்துட் டேன். அப்படி திடீர்னு தோணினதுக்கு உங்க அக்கா தான் காரணமா?" என்று அவனும் சேர்ந்து மனைவியை வம்புக்கு இழுக்க,

''வீட்டுக்கு வாங்க வச்சுக்கிறேன்'' என்று ராதி முணுமுணுத்தாள்.

''மைமா எது சொல்லுறதா இருந்தாலும் சத்த சொல்லு'' என்று அவளது காதில் கிசுகிசுத்தான்.

ராதிகா அவனை நிமிர்ந்து பார்க்க கண்ணன் அ ளையே இமைக்காமல் பார்க்க... பார்வைகள் ஒன் ஒன்று கவ்விக் கொண்டன.

சந்தியா தனது தொண்டையை செருமி அவர்கள மோன நிலையை கலைத்தாள். இருவரும் தங்களை மீட்டுக் கொண்டனர்.

''அக்கா நீ கட்டியிருப்பது மாமா வாங்கிக் கொடுத்த சேலையா? சூப்பரா இருக்கு. சும்மா தகதகன்னு மின்னுறே!'' என்றதும் ராதிகா சந்தோஷமாய் புன்னகைத்தாள்.

சமையலறையில் இருந்து அவர்களது உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த துர்காவிற்கு மனநிறைவாக இருந்தது. கண்ணனின் இயல்பான பேச்சும் கல்யாணம் ஆன அடுத்த நாளே ராதிகாவிற்கு மட்டுமல்லாது சந்தியாவிற்கும் அவன் பரிசு கொடுத்தது அவரது முகத்தில் புன்னகையை வரவழைத்தது.

தன் தாயிடம் தன் சேலையை காட்டுவோம் என்று எண்ணிக் கொண்டு ராதிகா சமையலறையை நோக்கிச் சென்றாள். கண்ணன் தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டே சந்தியாவிடம் பேசிக் கொண்டிருந்தான்.

'இந்த சேலை நல்லா இருக்காம்மா?' என்று ராதிகா கேட்பதற்குள், ''நல்லா இருக்கியா ராது? ஒண்ணும் பிரச்சனை இல்லையே?'' என்று துர்கா தன் மகளின் கண்களை உற்றுப் பார்த்தவாறே கேட்க,



அவளும் தன் தாயை கூர்ந்து பார்த்த வண்ணம், ''என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது?'' என்று கேட்டாள்.

''இப்படிச் சொன்னா நான் எப்படி எடுத்துக்கிறது ராது?'' என்று துர்கா பரிதாபமாக கேட்க,

ராதிகா பதில் ஒன்றும் சொல்லாமல் அங்கிருந்து வெளியேறி கண்ணனின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்.

தாயின் கேள்வியில் இருந்து தப்பிக்க வேண்டுமென்றால் கணவனின் அருகில் அமர்வதே உத்தமம் என்று நினைத்தே அவன் அருகே சென்று அமர்ந்தாள்.

தனது கேள்விக்கு பதில் சொல்லாது போகும் மகளையே துர்கா கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

'மாப்பிள்ளை குணசாலியா இருக்கார். இவளுக்கு மட்டுமில்லாமல் இவ தங்கச்சிக்கும் கூட புதுத் துணி வாங்கி தந்திருக்கார். அவரோடு இவ அனுசரிச்சுப் போகணும். இந்தப் பொண்ணு கொஞ்சம் புத்தியோடு பிழைக்க நீ தான் அருள் புரியணும் ஆண்டவா!' என்ற வேண்டிக் கொண்டார்.

சமையலறையில் இருந்து வெளியே வந்த துர்கா, ''சந்தியா!'' என்று சின்ன மகளை அழைத்து,

''சாப்பாடை டைனிங் டேபிளில் எடுத்து வைக்கலாம் வா'' என்று கூப்பிட்டார்.

அவர்கள் இருவரும் சேர்ந்து சமைத்த உணவுகளை சாப்பாட்டு மேஜையில் கொண்டு வந்து வைத்தனர்.

அதன் பின் துர்கா கண்ணனைப் பார்த்து, ''சாப்பிட வாங்க மாப்பிள்ளை'' என்று அழைத்தார்.

''மாமா வரட்டும் அத்தை. அவர் எங்கே போய் இரு கார்?'' என்று கேட்டான்.

''அவர் சிக்கன் வாங்கப் போய் இருக்கார் மா பிள்ளை'' என்றதும்,

''சிக்கனா? ஏன் அத்தை என்னைப் பார்த்தா மலை முழுங்கி மன்னார்சாமி மாதிரி இருக்கா?'' என்று கண் ணன் கேலிச் சிரிப்புடன் கேட்க,

''அது யாரு மாப்பிள்ளை மன்னார்சாமி?'' என்று துர்கா புரியாமல் விழித்தார்.

அருகில் இருந்த ராதிகாவிற்கும் சந்தியாவிற்கும் தங்கள் அம்மாவின் அப்பாவித்தனமான கேள்வி சிரிப்பை வரவழைத்த போதும், அவர்களுக்குமே அவன் சொல்ல வருவது புரியவில்லை என்பதால் விழித்தனர்.

''எனக்கு கால் கிலோ சிக்கன் போதும் அத்தை'' என்று சொன்னவன் தன் மனைவியை சுட்டிக் காட்டி,

''ஏற்கனவே ஐம்பது கிலோ சிக்கனை வீட்டில் வைச்சுக் கிட்டு இன்னும் எதுக்கு மாமா சிக்கன் வாங்க கடைக்கு போய் இருக்கார்?'' என்று நக்கலடித்தான்.

சந்தியா சிரித்துக் கொண்டே, ''அக்கா வெள்ள வெளேருன்னு உரிச்சு வைச்ச கோழி மாதிரி இருக்காள் என்று சொல்லுறீங்களா மாமா?'' என்று தனது கண்டு பிடிப்பை முன் வைக்க,

''அட அதில்லை சந்தியா, காலையிலே உங்க அக்கா தான் சொன்னாள். என்னை எங்கம்மா சிக்கன்-65ஆ பொறிச்சிடுவாங்கன்னு. அப்படின்னா உங்க அக்கா கோழி தானே? ஒரு ஐம்பது கிலோ எடை இருக்க மாட்டாள்?'' என்றதும்,



துர்கா வந்த சிரிப்பை சேலை முந்தானையால் மறைத் தார். சந்தியா வாய்விட்டு நகைத்தாள். ராதிகா வழக்கம் போல் கணவனை முறைத்தாள்.

சந்தியா கண்ணனிடம், ''மாமா அன்னைக்கு உங்க டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் வைத்து நான் கலாய்த்த போது இந்த பூனையும் மில்க் ஷேக் குடிக்குமா ரேஞ்சுக்கு சிரிச்சுக்கிட்டே இருந்ததைப் பார்த்து நான் உங்களை தப்பா எடை போட்டுட்டேன். சும்மா கலக்குறீங்க போங்க'' என்று அவனுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கினாள்.

''தாங்க் யூ! தாங்க் யூ!'' என்று அவனும் அதை ஏற்றுக் கொண்டான்.

அப்பொழுது ஏகாம்பரம் கோழிக்கறியை வாங்கி விட்டு வீட்டுக்கு திரும்பினார்.

''வாங்க மாப்பிள்ளை, வந்து ரொம்ப நேரம் ஆச்சா? நீங்க வரதுக்கு முன்னாடி வந்திடலாம் என்று போனேன். கடையிலே ரொம்பக் கூட்டம். அதான் லேட் ஆகிடுச்சு'' என்று கண்ணனை வரவேற்றார்.

''அதனால என்ன மாமா. அத்தையும் சந்தியாவும் வீட்டிலே தானே இருந்தாங்க. ஒண்ணும் பிரச்சனை யில்லை'' என்று கண்ணன் கூறியதும்.

''என்னப்பா ராதிகா வாங்கிட்டு வந்துட்டீங்களா?'' என்று சந்தியா கிண்டலாகக் கேட்டதும்,

''சந்தியா....'' என்ற கண்டனக் குரல் துர்காவிடம் இருந்தும் ராதிகாவிடம் இருந்தும் கிளம்பியது.

''என்ன சொல்லுறே?'' என்று ஏகாம்பரம் புரியாமல் கேட்க,

"ஒண்ணுமில்லைப்பா" என்ற சொல்லோடு சந்தி அடங்கிப் போனாள்.

அக்காவின் திட்டுக்கு அடங்கவில்லை என்றாலு தாயின் குரலுக்கு அடங்கி தானே ஆக வேண்டும்.

அது மட்டுமின்றி இத்தனை நேரமும் தன்னுடை கேலிப் பேச்சுக்கு ஒத்துழைப்பு கொடுத்தே கண்ணனே அமைதியாக இருக்கும் போது வேறு என்ன செய்ய முடியும்?

கண்ணன் மனைவியின் மிரட்டல் குரலுக்கு பணிந்தானோ அல்லது மாமியாரின் குரலுக்கு மரியாதை கொடுத்தானோ? யாருக்கு தெரியும்.

மாப்பிள்ளையின் முன்னால் என்ன ஏதென்று ஏகாம் பரமும் அதற்கு மேல் விசாரிக்கவில்லை. அவர் தன் மாப்பிள்ளை சாப்பிடச் சொல்லி உபசரிப்பதில் ஈடுபட் டார். அவர்கள் அனைவரும் காலை உணவை சாப்பிட்டு முடித்தார்கள்.

பத்து நிமிடங்கள் மாமானாரிடம் பேசிக் கொண் டிருந்த கண்ணன், "மாமா எனக்கு கடையிலே கொஞ்சம் வேலை இருக்கு. நான் போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சு வரேன். நீங்க தப்பா எடுத்துக்காதீங்க" என்றான்.

"அச்சோ! மாப்பிள்ளை இதுல தப்பா எடுத்துக்க என்ன இருக்கு. நீங்க போயிட்டு வாங்க" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

கண்ணன் வெளியேறிச் சென்று ஐந்து நிமிடங்கள் கழிந்த பின் ஏகாம்பரம் பெரிய மகளை தன்னருகே அமர வைத்துக் கொண்டு,

"எப்படிம்மா இருக்கே?" என்று கேள்வி கேட்டார்.



'உஷ்' என்று ஒலி எழுப்பியவள், "கொஞ்ச நேரத் துக்கு முன்னாடி அம்மா கேட்டாங்க. இப்போ நீங்களா? நான் எப்படி இருப்பேன் என்று நினைச்சு கட்டிக் கொடுத்தீங்களோ அப்படித் தான் இருக்கேன்" என்று சுள்ளென்ற குரலில் பதில் அளித்தாள்.

"இப்படிப் பேசினா எப்படிம்மா? எங்ககிட்டே பேசுற மாதிரியேவா மாப்பிள்ளையிடமும் பேசுறே?"

"ம்ம்ம் அவர் என்கிட்டே எப்படிப் பேசுறாரோ அப்படித் தான் நானும் அவர்கிட்டே பேசுறேன்."

"மாப்பிள்ளை ரொம்ப நல்லவர்மா."

"நான் இல்லைன்னு சொல்லலையே!"

"அவர் உன்னை நல்லா வைச்சுக்குவார்."

"ஜோசியக்காரன் சொன்னானா? இல்லை நீங்களே ஜோசியம் கத்துக்கிட்டீங்களா?"

"இப்படி எடக்கு முடக்கா பேசினா எப்படிம்மா? நீயும் குழம்பி மாப்பிள்ளை வாழ்க்கையும் கெடுத்திடாதே."

"உங்க மாப்பிள்ளை மேல அவ்வளவு அக்கறை இருக்கிறவரு என்னை விட்டுட்டு வேற பொண்ணை அவருக்கு கட்டி வைச்சிருக்கணும்?"

"இப்படி இன்னொரு தடவை பேசிடாதே ராதிகா. மாப் பிள்ளை காதிலே விழுந்திடப் போகுது. உன் வாழ்க் கைக்கு நீயே குழி பறிச்சுக்காதே" என்று ஏகாம்பரம் பதற,

"இல்லைன்னா மட்டும் என் வாழ்க்கை நேஷனல் ஹை-வே மாதிரி குண்டு குழி இல்லாம சூப்பரா இருக்காக்கும்" என்று முணுமுணுத்தவள்.

"இது பத்தி பேசி என்னை வருத்தப்பட வைக்க தான் மறுவீட்டுக்கு வரச் சொன்னீங்களா? இது பத்தி

இன்னொரு தடவை பேசுனீங்கன்னா நான் இப்ப கிளம்பி எங்க வீட்டுக்கு போயிடுவேன். அம்மா டுக்கு போறோமேன்னு சந்தோஷமா கிளம்பி என்னை சங்கடப்பட வைச்சிடாதீங்க'' என்று செ னவள் தன் அறைக்குள் சென்று மறைந்தாள்.

''என்னங்க இப்படிப் பேசுறாள்? எனக்கு இவ வா கையை நினைச்சா பயமா இருக்குங்க'' என்று து புலம்ப,

''எனக்கு நம்பிக்கை இருக்கு துர்கா. இப்ப அவ என் சொன்னான்னு கவனிச்சியா? ஏதாச்சும் பேசுனீங்கன் நான் எங்க வீட்டுக்கு போயிடுவேன் என்று சொன்னா அவர் வீடு என்றோ மாமியார் வீடு என்றோ சொல்லலை கவலைப்படாதே துர்கா'' என்று ஏகாம்பரம் மனைவியை தேற்ற,

அருகில் இருந்த சந்தியாவும் தந்தையின் கருத்தை ஆதரித்தாள்.

சற்று முன் இருக்கும் இடம் மறந்து ராதிகாவும், க ணனும் பார்வையை அகற்றாமல் பார்த்துக் கொண்டிரு ததை சந்தியா பார்த்ததால்,

''அவங்களுக்குள்ளே கெமிஸ்ட்ரி நல்லா வொர் அவுட் ஆகுதுப்பா'' என்று கூறிவிட்டாள்.

''என்னம்மா சொல்லுறே?'' என்று தந்தை கேட்க சுதாரித்துக் கொண்டாள்.

'ஆகா! டி.வி ஷோ பார்த்து பார்த்து நான் பாட்டுக் இப்படிச் சொல்லிட்டேனே! பெத்தவங்ககிட்டே பே வேண்டிய டயலாக்கா இது?' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டவள், தந்தை தன்னிடம் இருந்து பதி எதிர்பார்ப்பதை உணர்ந்தவளாக,



''இல்லைப்பா அக்கா முதல்ல கெமிஸ்ட்ரி படிக்க மாட்டேன் என்று சொன்னாள். அப்புறமா மாஸ்டர் டிகிரி கூட அதிலே தானே பண்ணினாள். அது வொர்க் அவுட் ஆன மாதிரி அவ வாழ்க்கையிலும் ஜெயிப்பாள் என்று சொல்ல வந்தேன்'' என்று கூறி சமாளித்தாள்.

''நல்லது நடக்கும் என்று நானும் நம்புறேன்'' என்று ஏகாம்பரம் பெருமூச்சு விட,

''கொஞ்ச நாள் பொறுங்கப்பா. எல்லாம் சரி ஆகும்'' என்று சந்தியா தந்தையை சமாதானப்படுத்தினாள்.

# 8

அன்று மதியம் பன்னிரெண்டு மணிக்கு தேவகி மகள் மற்றும் பேரனுடன் வாடகைக் காரில் ராதிகாவின் வீட்டில் வந்து இறங்கினார். துர்காவும் ஏகாம்பரமும் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

''துர்கா முதல்ல குடிக்கிறதுக்கு ஏதாச்சும் கொண்டு வாம்மா'' என்று ஏகாம்பரம் சொல்லிக் கொண்டு இருக் கும் போதே, சந்தியா பழச்சாறோடு வந்தாள்.

''அம்மா உங்களுக்காக அப்பவே தயார் பண்ணி வைச்சாங்க'' என்று சொல்லி அவர்கள் முன் நீட்டினாள்.

பழச்சாறை பருகிக் கொண்டே, ''அண்ணன் இன்னும் வரலையா? இன்னைக்கு கூட கடைக்கு போகணுமா என்ன?'' என்று கயல் கேட்க,

''மாமா ஏதோ முக்கியமான வேலையா போய் இ
காங்க. இப்போ வந்துடுவார்'' என்று சந்தியா கண்
னுக்குப் பரிந்து பேச,

''நீ எங்க அண்ணனுக்கு சப்போர்ட்டா? தலை
ஜால்ரா தட்ட உன்னை ரெடி பண்ணிட்டாரா?'' என்
கயல் கிண்டல் அடித்தாள்.

''எங்க மாமா ரொம்ப நல்லவர். அப்படின்னா நா
ஜால்ரா தட்டித் தானே ஆகணும்? எனக்கு புது டிரஸ்
என்று தொடங்கியள்.

இவர்களிடம் கண்ணன் தனக்கு வாங்கிக் கொடு
புதுத் துணி பற்றிச் சொல்லலாமா வேண்டாமா என்
போல் சொல்லாமல் நிறுத்த...

''ஹேய்! கேட்க மறந்துட்டேன் பாரு. உனக்கு அ
சுரிதார் பிடிச்சதா சந்தியா? அதை நான் தான் செலக்
பண்ணினேன்'' என்று கயல் இயல்பாய் கேட்க.

சந்தியாவிற்கு நிம்மதி பெருமூச்சு வந்தது. கூடவே
கயலின் பொறாமையில்லா தன்மையை பார்த்
சந்தோஷமாகவும் உணர்ந்தாள்.

''உங்க செலக்ஷனா அண்ணி? ரொம்ப சூப்பர்!''

''அண்ணனுக்கு பொண்ணுங்க டிரஸ் பத்தி எதுவ
தெரியாததால உனக்கு ஒரு சுரிதார் வாங்கித் த
சொல்லி என்கிட்டே சொன்னார். கல்யாண பர்சே
பண்ணப் போன போது இதை வாங்கினேன். க
உனக்கு பிடிக்குமோ பிடிக்காதோன்னு ஒரு சந்தேக
அதான்...''

''என்ன கலரா இருந்தாலும் போட்டுக்குவே
அண்ணி. ஏன்னா எங்க மாமா எனக்காக பாசமா வாங்கி



கொடுத்ததாச்சே!'' என்று சந்தியா உணர்ந்து உணர்ச்சிப் பெருக்குடன் சொல்ல,

அருகில் இருந்த தேவகி, ''நீ டிபார்ட்மெண்டல் ஸ்டோர்க்கு வந்து போன அன்னைக்கு கண்ணன் எங்ககிட்டே வந்து சந்தியாவும் எனக்கு கயல் மாதிரி ஒரு தங்கச்சிம்மான்னு ஏன் சொன்னான்னு எனக்கு இப்போ நல்லாப் புரியுது'' என்று வாஞ்சையுடன் சொன்னார்.

ராதிகா கயலிடம், ''அண்ணி அப்படின்னா இந்தப் புடவையையும் நீங்க தான் வாங்கினீங்களா?'' என்று தன் புடவையை சுட்டிக் காட்டிக் கேட்க.

''நீ கட்டி இருக்கிற புடவையா? இது அண்ணன் கொடுத்த புடவையா?'' என்று ஆச்சரியமாகக் கேட்ட கயல்.

ராதிகா ஆம் என்பது போல் தலை ஆட்டியதும் சந்தியா புறம் திரும்பி,

''பார்த்தியா சந்தியா உன் மாமா... அதான் அந்த நல்லவரு பண்ணி இருக்கிற காரியத்தை. உனக்கும் எனக்கும் டிரஸ் வாங்கணும் என்றால் பொம்பளைங்க டிரஸ் பத்தி எதுவும் தெரியாதுன்னு சொல்லிட்டு இப்போ ராதிகாக்கு மட்டும் தானே போய் செலக்ட் பண்ணி இருக்கார். இது தெரியாமல் நீ அவருக்கு ஜால்ரா வேற தட்டிக்கிட்டு இருக்கே.'' என்றாள்.

''இது தெரியாமல் போச்சே அண்ணி!'' என்று அங்கலாய்த்த சந்தியா,

''ஏன் அண்ணி ஒரு வேளை இப்போ புடவையை ஆம்பிளைங்க போடுற டிரஸிலே சேர்த்துட்டாங்களோ?'' என்று கிண்டல் அடிக்க,

"இருக்கும் இருக்கும்" என்று கயல் கூற, இரு
நகைத்தனர். என்ன சொல்வதென்று தெரியாமல் ரா
விழித்தாள்.

குனிந்து சேலையை பார்த்தவள் 'எனக்காக
அவரே பார்த்து பார்த்து தேர்ந்தெடுத்தாரா? இல்
வேறு யாருக்காகவோ முன்பே வாங்கி வைத்திருந்த
என்னிடம் தள்ளிவிட்டாரா?' என்று சிந்தித்துக் கொ
டிருந்தாள்.

'சந்தியாவுக்கு வாங்கின சுரிதாரை வீட்டிலே கா
இருக்கார். அப்படின்னா எனக்கு வாங்கியதை ஏ
மறைத்து வைக்கணும்?' என நினைத்துக் குழம்பின

சற்று நேரத்தில் கண்ணனும் வந்துவிட அவர்க
அனைவரையும் உட்கார வைத்து சந்தியாவும் துர்கா
மதிய உணவை பரிமாற ஆரம்பித்தார்கள்.

"நானும் ஹெல்ப் பண்ணுறேன்" என்று ராதிகா மு
வர,

"இல்லை ராது. நீ மாப்பிள்ளை பக்கத்திலே உட்கா
என்று சொல்லி அவளை துர்கா கண்ணன் அருகே அம
வைத்தார்.

அப்பொழுது கயல் தன் அண்ணனிடம், "அண்ண
உங்களுக்கு பொண்ணுங்க டிரஸ் செலக்ட் பண்ண
தெரியுமா?" என்று கேட்டாள்.

அவன் பதிலளிக்கும் முன் சந்தியா இடையிட்டு
"அண்ணி நான் தான் சொன்னேன் இல்ல... புடவை
அதுவும் ராதிகா கட்டுற புடவையை மட்டும் ஆண்கள்
டிரஸ் லிஸ்ட்டில் சேர்த்துட்டாங்கன்னு. என்ன மாமா
நான் சொல்றது சரி தானே?" என்று தன் பங்கிற்கு
கண்ணனின் காலை வாரினாள்.



கண்ணன் ராதிகா புறம் குனிந்து, "மைமா இவங்க கிட்டே உன் புடவையை பத்தி சொன்னியா?" என்று கேட்டான்.

"நீங்க சொல்லலையா?" என்று அவள் எதிர்கேள்வி கேட்டாள்.

"என் வைஃப்புக்கு வாங்கினதை நான் ஏன் ஊருக்கெல்லாம் அறிவிக்கணும்?"

"ஊருக்கெல்லாம் சொல்ல வேண்டாம். வீட்டிலே உள்ளவங்ககிட்டே சொல்ல வேண்டாமா?" என்று இவர்கள் இருவரும் தங்கள் தர்க்கத்தில் இறங்கினர்.

கயல் தன் அண்ணனிடம், "கேள்வி கேட்டது நாங்க. எங்களுக்கு பதில் சொல்லாமல் அங்கே என்ன தனியா ரீல் ஓட்டுறீங்க?" என்று கேட்டாள்.

"உனக்கு இப்போ என்ன கயல் தெரியணும்? ஆமா... நான் என் வைஃப்புக்கு புடவை வாங்கினேன். நானே தனியா போய் செலக்ட் பண்ணினேன். அதுக்கு என்ன இப்போ?"

"அதுக்கு ஒண்ணுமில்லை. நீங்க ராதிகாவுக்கு ஏன் வாங்கினீங்கன்னு நான் கேட்கலை. எங்களுக்கு ஏன் வாங்கலைன்னு தான் என் கேள்வி" என்று கயல் சிரித்துக் கொண்டே அழுத்தம் திருத்தமாக வினவினாள்.

"உனக்கு வாங்கிக் கொடுத்தா நீ பிடிக்கலைன்னு சொல்லுவே!"

"எப்போ சொன்னேன்?" என்று அண்ணனை பார்த்துக் கேட்டவள்,

"அம்மா நீங்க தான் சாட்சி. எப்போம்மா நான் அப்படிச் சொன்னேன்?" என்று தேவகியை பார்த்துக் கேட்டாள்.

தேவகிக்கு கயல் சம்பந்தி வீட்டில் வைத்து
மகனை இவ்வாறு கேள்வி கேட்டது பிடிக்கவில்
என்பதால் அவர், "கயல் சும்மா இரு!" என்று அதட்டின

கண்ணன் கயலிடம், "இப்பவே மச்சானுக்கு போ
பண்ணுறேன். நீ டிரஸ் வாங்கிக் கொடுத்தால்
சொல்லாம போட்டுக்குவேன்னு அவர் சொல்லட்டு
என்றதும்,

கயல், "அது...அது..." என்று கூறி விழித்தாள்.

"ம்ம்ம் ஆயிரம் குறை சொல்லுவ இல்ல? ஆனா
வைஃப் அப்படியில்லை. நான் குடுத்த உடனே கட்
கிட்டாள்" என்று கூறி தங்கையின் வாயை அடைத்தா

அடுத்ததாக கண்ணன் சந்தியாவின் புறம் திரும்
"உனக்கு என்ன விளக்கம் சொல்லணும்? உன் கேள்
என்ன?" என்று கேட்டதும்,

"நீங்க ராதிகாவுக்கு புடவை வாங்கிக் கொடுத்தீங்க
என்ன?" என்று சந்தியா அந்தர் பல்டி அடித்தாள்.

"அடிப்பாவி!" என்று கயல் வியக்க,

"ஓசியா கிடைக்கிறதை ஆராயக் கூடாது அண்ணி
என்று கண் சிமிட்டிக் கொண்டே கூற, அனைவரு
நகைத்தனர்.

காலையில் இருந்து தனது புதிய சேலை குறித்த
ராதிகாவிற்கு இருந்த வருத்தமும் சந்தேகமும் மறைந்தத
அவள் சந்தோஷமாக உணவருந்த ஆரம்பித்தாள்.

சாப்பிட்டு முடித்த பின் பெரியவர்கள் மூவரு
கண்ணனுடன் வரவேற்பறையில் உட்கார்ந்து பேசிக்
கொண்டிருந்தனர்.



கயல் தன் கணவனிடம் இருந்து கைப்பேசியில் அழைப்பு வந்ததால் பால்கனியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

சந்தியாவும் ராதிகாவும் தங்கள் படுக்கை அறையில் நிகிலுடன் அமர்ந்து அவனை பேசவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நிகில் ராதிகாவிடம், "அத்தை நாம ஏதாச்சும் விளையாடுவோமா?" என்றான்.

"போடா! இனிமே நான் உன் கூட விளையாட வர மாட்டேன். நேத்து என்னை சீட்டிங் பண்ணக் கூடாதுன்னு சொல்லிட்டு, நீ ஏன்டா சீட்டிங் பண்ணினே?" என்று ராதிகா பொய்யாய் வருத்தம் காட்டி விசாரிக்க,

"சாரி அத்தை. இன்னைக்கு அப்படி செய்ய மாட் டேன்" என்று அப்பாவித்தனமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான்.

"அவ வராட்டி போகட்டும். நான் உன் கூட விளை யாட வரேன் நிகில். நாம ரெண்டு பேரும் விளையாடு வோமா?" என்று சந்தியா கேட்க,

நிகிலோ அவளை அந்நியப் பார்வை பார்த்துக் கொண்டு பதில் சொல்லாமல் நின்றான்.

"நானும் உனக்கொரு அத்தை தான்டா" என்று சந்தியா தன் உறவுமுறையை விளக்க முயல,

நிகில் தன் தலையை இட வலமாக ஆட்டிவிட்டு, "இல்லை நான் எங்க அத்தை கூடவே விளையாடிக் கிறேன்" என்று சொன்னதோடு இல்லாமல் ராதிகாவின் அருகில் சென்று அவளை ஒட்டி நின்று கொண்டான்.

"நீ தான்டா என் செல்லக் குட்டி" என்று ராதிகா அவனது கன்னத்தைப் பிடித்து கொஞ்சினாள்.

ராதிகாவை பார்த்து சிரித்த நிகில் திரும்பி சந்தியா பார்த்தான். இது தான் எங்க அத்தை என்று சொல்லா சொல்லியது அவனது பார்வை.

''உனக்கு உங்க அத்தையை தான் பிடிக்கும என்னை பிடிக்காதா?'' என்று சந்தியா கேட்டதும்,

''எங்க அத்தை தான் பிடிக்கும்'' என்ற பதில் உடனே வந்தது.

அப்பொழுது கண்ணன் அந்த அறைக்குள் நுழை தான். ராதிகா படுக்கையின் ஒரு ஓரத்தில் அமர்ந்திரு தாள்.

கண்ணன் மறு ஓரத்தில் அமர்ந்தான். சந்தியா அவ களுக்கு எதிரே ஒரு நாற்காலியில் அவர்களை பார்த் வாறு அமர்ந்திரந்தாள்.

கண்ணனைப் பார்த்ததும் சந்தியாவிற்கு நிகிலை வைத்த ராதிகாவை சீண்டும் ஆவல் வந்தது.

''நிகில் இங்கே வா!'' என்று சந்தியா அழைக்க, அவ போவதா வேண்டாமா என்பது போல் விழித்தான்.

கண்ணன், ''கூப்பிடுறாங்க இல்ல... போடா நிகில்!' என்று சொன்னதும் அவளருகே சென்று என்ன என்ப போல் பார்த்தான்.

சந்தியா அவனை தன் அருகே இழுத்துப் பிடித்து கொண்டு, ''உனக்கு உங்க அத்தையை பிடிக்குமா இல்லை உங்க மாமாவை பிடிக்குமா?'' என்று கேட்டாள்

கேள்வியை கேட்டு முடித்தவள் அவனை திருப்பி நிறுத்தினாள். அதாவது அவனது முகத்தை ராதிகா கண்ணன் இருவருமே பார்க்குமாறு நிற்க வைத்தாள்.



ராதிகா அதிக எதிர்பார்ப்போடு நிகிலையே பார்த்திருந் தாள்.

சந்தியாவை விட ராதிகா தான் பிடிக்கும் என்று யோசிக்காமல் பதில் சொன்ன நிகிலால் இந்தக் கேள் விக்கு விடையை உடனே சொல்ல இயலவில்லை.

அவன் கண்ணன் ராதிகா இருவர் முகத்தையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு இருந்தான்.

கண்ணன் ராதிகாவை திரும்பிப் பார்க்க... அவள் அதீத எதிர்பார்ப்போடு நிகிலை பார்த்துக் கொண்டிருப் பதை கண்டான்.

அதனால் கண்ணன் நிகிலிடம் ராதிகாவை பார்த்து கண் ஜாடை காட்ட அதைப் புரிந்து கொண்ட நிகில், ''எனக்கு எங்க அத்தை தான் பிடிக்கும்'' என்றான்.

அவனைத் தாவி அணைத்த ராதிகா, ''என் பட்டுக் குட்டி'' என்று கொஞ்சிக் கொண்டு அவனை மடியில் இருத்திக் கொண்டாள்.

''அத்தை நான் எப்பக் கூப்பிட்டாலும் என் கூட விளை யாட வரணும்'' என்று நிகில் உடனே தன் அத்தையிடம் ஒரு கோரிக்கையை முன் வைத்தான்.

''கண்டிப்பா நிகில்'' என்று ராதிகா உத்திரவாதம் அளித்தாள். அதைக் கண்ட கண்ணனும் சந்தியாவும் புன்னகைத்தனர்.

''கண்ணா நிகிலை கூட்டிட்டு வா!'' என்று வரவேற்பு அறையில் இருந்து தேவகி குரல் கொடுக்க,

''வாடா நிகில், பாட்டி கூப்பிடுறாங்க. உங்க டாடி உன்கிட்டே போனிலே பேசக் கூப்பிடுறார் போல!'' என்று சொல்லிக் கொண்டே கண்ணன் அவனை தூக்கிச் சென்றான்.

கண்ணன் அந்த அறையை விட்டு வெளியேறிய நிகில் அவனிடம், ''மாமா நீங்க சொன்ன மாதிரியே ந அத்தை பேரை கரெக்ட்டா சொன்னேன் தானே? அ னால இன்னைக்கு கடையிலே இருந்து எனக்கு ச லெட்... அதுவும் பெருசு எடுத்திட்டு வரணும்'' என்றா

''நீ புத்திசாலிடா. ஒரே கல்லிலே ரெண்டு மாங் அடிக்கிறே. நீ எதிர்காலத்திலே ரொம்ப பெரிய ஆ வருவாய்'' என்று மருமகனை பாராட்டிக் கொண்டான்

''நாங்க வீட்டுக்கு கிளம்புறோம் கண்ணா. அதுக் தான் கூப்பிட்டேன்'' என்று தேவகி சொன்னதும்,

''டாக்ஸி வந்திடுச்சாம்மா?'' என்று கண்ணன் கே டான்.

''ஆமாப்பா வந்திடுச்சு, வீட்டுக்கு போனால் கய கொஞ்சம் ரெஸ்ட் எடுப்பாள்'' என்றார்.

துர்கா சந்தியாவையும் ராதிகாவையும், அறையில் இருந்து வெளியே வரச் சொன்னார்.

அவர்கள் இருவரிடமும் விடைபெற்று தேவகியு கயல்விழியும் நிகிலுடன் கிளம்பினார்கள்.

அவர்கள் சென்ற பின் கண்ணன், ''மாமா எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு. அதனால கிளம்புறேன். சீக்கிரமா வரப் பார்க்கிறேன்'' என்று விடைபெற்று கிளம்பிவிட்டான்.

ராதிகாவிற்கு கோபம் வந்தது. அவள் விருட்டென்று தன் படுக்கை அறைக்குள் சென்று மறைந்தாள். அவள் பின்னோடு சந்தியாவும் அவர்களது அறைக்குள் நுழைந்தாள்.

கணவனுடன் நேரம் செலவளிக்க வேண்டும் என்று ராதிகா விரும்பினாள். அவர்களுக்கு திருமணம் ஆகி



இன்று தான் மூன்றாவது நாள் ஆகிறது எனும் போது அவளது எதிர்பார்ப்பு இயல்பான விஷயம் தானே?!

காலையில் அவன் வெளியே செல்வான் என்பது ஏற்கனவே முடிவான விஷயம். அதுவுமின்றி கண்ணன் தனக்காக அலைந்து திரிந்து சேலை வாங்கின விஷயம் சற்று முன் தெரிய வந்தவுடன் மனதிற்குள் கணவன் மீது அன்பும் பாசமும் பொங்கி வழிய ஆரம்பித்தது. அதனால் அவள் தன் கணவனின் அருகில் இருக்க வேண்டும் என்று மிகவும் விரும்பினாள்.

ஆனால் கண்ணனுக்கு இது போல் எண்ணம் இல்லை என்று அறிந்ததும் அவளது மனம் காற்றுப் போன பலூன் போலானது. அவளுக்கு கணவன் மீது கோபம் வந்தது.

''இப்போ எதுக்குக்கா உனக்கு இவ்வளவு கோபம்?'' என்று சந்தியா கேட்டவுடன் ராதிகா பொரிய ஆரம்பித்தாள்.

''இது என்ன வீடா? இல்ல சாப்பிடுற ஹோட்டலா?''

''ம்ம்ம் நம்ம வீட்டிலே டி.வி இருக்கு. இப்பெல்லாம் சாப்பிடுற ஹோட்டலிலும் டி.வி இருக்கு. அதனால அதை விட்டுடலாம். இங்கேயும் கிச்சன்... அங்கேயும் கிச்சன். சாப்பிடும் ஹோட்டலில் பெட் இருக்காது. இங்க இருக்கு. அப்படின்னா இது கண்டிப்பா வீடு தான் ராது'' என்று தீவிர ஆராய்ச்சி செய்து சொன்ன சந்தியா.

''ஆமா உனக்கு எதுக்கு அப்படி ஒரு சந்தேகம்?'' என்று கேட்க,

கணவன் மீது இருந்த கோபம் தங்கையின் புறம் பாய்ந்து விடுவேன் என்றது.

இருப்பினும் இப்போதைக்கு கணவனே தனது இ... என்பது போல் தங்கையை மன்னித்து விட்டு விட்டு,

"இல்ல உங்க மா...மா..." என்று அந்த மாமாவில் ஒ... அழுத்தம் கொடுத்தவள்,

"ஏதோ நாம ஹோட்டல் நடத்திற மாதிரி சாப்பிட மட்டும் வந்து வந்து போறாரே... அதான் அப்படி கேட்டேன்" என்றவள் மேலும்,

"மறுவீட்டு விருந்துக்கு வரப் பிடிக்கலைன்னா வராமல் இருக்க வேண்டியது தானே! எதுக்கு இப்படி வந்தேன் என்று பேர் பண்ணிட்டு ஓடி ஓடிப் போகணும். வேலை இருக்காம் வேலை. நம்மளை பிடிக்கலை. அதுக்கு வேலையை ஒரு காரணமா சொல்லிட்டுப் போறார்" என்றதும்,

"ராது உனக்கு எதுக்கு இவ்வளவு கோபம்? ஏற்கனவே கல்யாணத்துக்கு லீவு போட்டு இருக்கார். எத்தனை நாள் வேலையை பார்க்காமல் வீட்டிலே இருக்க முடியும்? கயல் அண்ணி பிரசவ சமயம் வேற நெருங்குது. அதுக்கு லீவு போடணும்!

அப்புறம் நீங்க ஹனி மூன் போவதா இருந்தால் அதுக்கு லீவு தேவைப்படும் தானே?" என்று வயதில் சின்னவளா சந்தியா எடுத்துச் சொல்லியும் கூட ராதிகாவின் மனம் சமாதானம் ஆக மறுத்தது.

"ஆமா என்னையே பிடிக்கலையாம். இதிலே ஹனி மூனாம்..." என்று ராதிகா அலுத்துக் கொள்ள,

"ராது என்னைப் பாரு!" என்று ராதிகாவின் முகவாயை தொட்டு நிமிர்த்தியவள்,



அவளது கண்களை பார்த்துக் கொண்டே, "உன்னை மாமாவுக்கு பிடிக்கலையா? உன்னை பிடிக்காமலா உன் தங்கச்சியான எனக்கு புதுத் துணி வாங்கிக் கொடுத்து இருக்கார். உனக்கும் புது சேலை வாங்கித் தந்திருக்கார்.

அந்த நிகில் மூன்றரை வயசு பையன். மாமா அவன் கிட்டே உன் பேரைச் சொல்லச் சொல்லி சைகை காட்டுறார். அவன் அதைப் புரிஞ்சுக்கிட்டு உன் பேரைச் சொல்லுறான். ஆனா இவ்வளவு வளர்ந்த உனக்கு புரியலையா?

மாமா மேலே உள்ள கோபத்தை ஒதுக்கி வைச்சு பாருக்கா. உண்மை புரியும். காலையிலே நல்லா தானே வந்தே. இப்ப என்ன திடீர்னு?" என்று கேட்கவும்,

ராதிகா தங்கையின் கையை நகர்த்திவிட்டு தன் தலையை குனிந்து கொண்டு, "இல்ல அம்மாவும் அப்பாவும் ஒரே விஷயத்தை திரும்ப திரும்ப பேசி என்னை குறை சொன்னாங்க. சரி இவர்கிட்டே நல்லாப் பேசிப் பழகலாம் என்று பார்த்தால்... இவர் ஓடி ஓடிப் போகிறார். அதான் கோபம் வந்துடுச்சு" என்று அலுத்துக் கொண்டாள்.

"சரிக்கா. நீ கொஞ்சம் நேரம் படுத்திரு!" என்று சொல்லவிட்டு சந்தியா அறையில் இருந்து வெளியேறினாள்.

இரவு சாப்பாட்டிற்கு அரை மணி முன்னதாக தான் கண்ணன் ராதிகாவின் வீட்டிற்கு வந்தான். சாப்பிட்டு முடித்த கண்ணன் வீட்டிற்கு கிளம்ப...

"மாப்பிள்ளை இன்னைக்கு ஒரு நாள் இங்கே தங்கிட்டுப் போறீங்களா?" என்று துர்கா தயக்கத்துடன் கேட்டார். அவன் அதை விட தயக்கமான குரலில்.

"இல்லை அத்தை. தப்பா நினைச்சுக்காதீங்க. என்னால இங்கே தங்க முடியாது. கயல் பிரசவத்துக்கு

இன்னும் ரெண்டு வாரம் இருக்கு. இருந்தாலும் ஏதாச்சும் எமர்ஜென்ஸின்னா ஆண் துணை இல்லாமல் நைட் நேரத்திலே சிரமப்படுவாங்க'' என்றான்.

''நீங்க சொல்லுறது சரி தான் மாப்பிள்ளை. அந்த பாயிண்டை நான் யோசிச்சுப் பார்க்காமல் கேட்டுட்டேன். கயல் பிரசவத்துக்கு அப்புறமா வந்து தங்குங்க. இப்போ கிளம்புங்க'' என்று துர்கா கூறினார்.

வேண்டுமானால் ராதிகா இங்கே இருக்கட்டும் என்று அவன் சொல்ல நினைத்தான்.

கல்யாணம் ஆன மூன்றாவது நாளே உங்க பொண்ணு மட்டும் உங்க வீட்டிலேயே இருக்கட்டும் என்று சொன்னால் 'எங்கப்பன் குதிருக்குள்ளே இல்லை' என்று சொல்வது போல் ஆகிவிடும் என்று நினைத்து சொல்லாமல் விட்டுவிட்டான்.

ராதிகா பட்டுப் புடவையில் இருந்து சுரிதாருக்கு மாறி இருந்ததால் அவர்கள் கண்ணனின் இரு சக்கர வாகனத்திலேயே கிளம்ப முடிவு செய்தார்கள்.

ராதிகாவை வழி அனுப்பி வைப்பதற்காக சந்தியாவும் ராதிகாவுடன் கீழே இறங்கி தரை தளத்திற்கு சென்றாள்.

வீட்டிலிருந்து வெளியேறப் போன கண்ணனை ஏகாம்பரம் நிறுத்தி வைத்து, ''மாப்பிள்ளை என் பொண்ணு கோபத்திலே சில சமயம் படபடன்னு பேசுவாள். ஆனா ரொம்ப நேரம் அந்தக் கோபத்தை இழுத்துப் பிடிச்சுக்க மாட்டாள். ஏன்னா அவளால அஞ்சு நிமிஷம் கூடப் பேசாமல் இருக்க முடியாது.

ஏதாச்சும் தப்புப் பண்ணினால் கூட கொஞ்சம் விட்டுப் பிடிங்க. அவளே தன் தப்பை உணர்ந்து உங்ககிட்டே மன்னிப்பு கேட்பாள்.



கல்யாண மண்டபத்திலே வைச்சு இதெல்லாம் சொல்லணும் என்று நினைச்சேன். ஆனா கூட்டமா இருந்ததால கூச்சமா இருந்துச்சு.

இப்போ கூட இதை என் திருப்திக்காக சொல்லுறேன். எனக்கு நல்லாத் தெரியும். ஒரு கணவன் மனைவிக்கு இடையே அடுத்தவங்களோட அறிவுரை எடுபடாதுன்னு. ஆனா இது ஒரு பொண்ணைப் பெத்தவனோட தவிப்பு... பயம். இப்படி என்ன வேண்ணா சொல்லலாம்...'' என்று அவர் உணர்ச்சிகரமாகப் பேசிக் கொண்டு போக,

''மாமா உங்க பொண்ணு படபடப்பானவள் என்று சொல்லுறீங்க. ஆனா நான் நிதானமானவன். அதனால எந்தப் பிரச்சனையும் வராது. அதுவுமில்லாம அவ இப்போ என்னோட வைஃப். அவளை நான் பார்த்துக்கிறேன்'' என்று கூறி ஏகாம்பரத்தை நிம்மதியாக உணர வைத்தான்.

அருகில் இருந்த துர்காவிற்கு மகளது எதிர்கால வாழ்க்கை குறித்து நம்பிக்கை வந்தது.

கண்ணனும் ராதிகாவும் அவர்கள் அனைவரிடமும் விடைபெற்று தங்கள் வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

# 9

**க**ண்ணனும் ராதிகாவும் வீட்டிற்கு திரும்பிய பொழுது கயல் வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீ இன்னும் தூங்கலையா கயல்?" என்று கண்ண... விசாரிக்க.

"இதோ தூங்கப் போறேண்ணா" என்றாள்.

"ராதிகா மாடிக்கு வரதுக்கு முன்னாடி குடிக்கிற... ஒரு பாட்டில் தண்ணி எடுத்துட்டு வா" என்று சொ... விட்டு கண்ணன் மாடி ஏறினான்.

ராதிகா தண்ணீரை ஒரு பாட்டிலில் பிடித்து... கொண்டு இருக்கும் போது கயல் அவளருகில் வ... தயங்கி நின்றாள். ராதிகா அவளை நிமிர்ந்து பார்த்து... புன்னகைத்தாள்.

கயல் தன்னிடம் ஏதோ சொல்ல வந்துவிட்டு சொ... லாமல் தயங்கி கொண்டு நிற்பது ராதிகாவிற்கு புரிந்த...

"என்ன அண்ணி? என்கிட்டே ஏதாச்சும் கேட்... ணுமா?" என்று ராதிகா எடுத்துக் கொடுத்ததும்,

"என்னால தானே நீங்க ரெண்டு பேரும் இன்னைக்... உங்க வீட்டிலே தங்க முடியாமல் போச்சு. அது உனக்... வருத்தமா இருக்கா ராதிகா?" என்று கயல் வருத்தமா... குரலில் கேட்டாள்.

"இதுக்கு எதுக்கு அண்ணி வருத்தப்படணும்... ரெண்டு நாளைக்கு முன்னாடி வரைக்கும் நான் அங்கே... தானே தங்கினேன்."

"என் பிரசவ சமயம் என்பதாலே உன்னால உன் வீட்... டிலே தங்க முடியலை. ஹனி மூன் போக முடியலை..." என்று கயல் இழுக்க,

"அண்ணி சொல்லப் போனால் நாங்க ரெண்டு... பேரும் தான் உங்ககிட்டே மன்னிப்பு கேட்கணும். எங்க... ஜாதகத்தால தானே இந்தத் தேதி முடிவு பண்ணும்படி...



ஆனது. இல்லைன்னா ஒரு நாலைஞ்சு மாசம் கழிச்சு தானே தேதி பார்த்திருப்போம். எங்களால தான் நிறை மாசமா இருக்கிற நீங்க அலையுற மாதிரி ஆகிப் போச்சு.

அதனால வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காமல் போய் தூங்குங்க" என்று சொன்னவள் அவளை கைப் பிடித்து அழைத்து சென்று அவளது அறை வாயிலில் விட்டுவிட்டே மாடி ஏறினாள்.

கயலுக்கும் ராதிகாவிற்கும் இடையே புரிதலும் நெருக்கமும் அதிகரித்துக் கொண்டே போனது. ராதிகா நெருங்க வேண்டியவனை விட்டுவிட்டு அவன் வீட்டு ஜனங்களிடம் நெருங்கிக் கொண்டிருந்தாள்.

'எல்லோரும் ஹனி மூன் பத்தியே பேசுறாங்க. நாங்க போடுற டாம் அன்ட் ஜெரி பைட்டை எங்கே போட்டால் என்ன?' என்று எண்ணிக் கொண்டே ராதிகா மாடியேறினாள்.

ராதிகா தங்கள் அறைக்குள் நுழைந்த போது கண்ணன் யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்தான். தன் தாய் வீட்டில் செலவழிக்காமல் வெளியே சென்ற கணவன் மீதிருந்த மெல்லிய கோபம் மறையாததால் அன்று இரவு அவள் முதலில் முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

கண்ணன் அலைபேசியில் பேசி முடித்து தனது மடிகணினியில் சிறிது நேரம் வேலை பார்த்துவிட்டு வந்து பார்த்த போது ராதிகா ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்றிருந்தாள்.

சுவர் பக்கம் திரும்பிப் படுத்திருந்தவள் நல்ல தூக்கத்தில் இருந்ததால் புரண்டு கண்ணன் பக்கமாக திரும்பி படுத்திருந்தாள்.

கண்ணனுக்கு காலையில் அவளது இடுப்
தொட்ட போது அவளை இறுக்கி அணைத்து முத்
கொடுக்க வேண்டும் என்று தோன்றிய எண்ணம் அவ
அவனை தள்ளிவிட்ட போது மறைந்தது. ஆனா
இப்பொழுது இவ்வளவு நெருக்கத்தில் அவளது மு
இருக்கவும் கண்ணனால் தன்னை கட்டுப்படுத்
கொள்ள இயவில்லை.

அவன் ராதிகாவை நெருங்கி அவளது கன்னத்தி
மென்மையாக முத்தமிட்டான். அவளது கன்னத்தி
மென்மையை உணர்ந்தவன், "மைமா!" என்று மு
முணுத்துக் கொண்டே இன்னொரு முத்தம் பதித்தான்.

அவளை இறுக்கி அணைக்க அவனது கைகள் எழுந்த
போது அவள் மீது அவனுக்கு இருந்த கோபம் நினை
விற்கு வர சட்டென்று அவனது ஆசை வடிந்தது. ப்ச்
என்று சலித்துக் கொண்டு திரும்பி படுத்துக் கொண்டான்.

மறுநாள் வழக்கம் போல் சென்றது. கண்ணன் நேரத்
தோடு கடைக்கு சென்றான். வேலை இல்லாத ராதி
காவும் நிகிலும் வீட்டைக் குடைந்து கொண்டிருந்தார்கள்.

மதியச் சாப்பாட்டிற்காக கண்ணன் வீட்டிற்கு
வந்தான். அனைவரும் சாப்பிட்டு முடித்ததும் கண்ணன்
சற்று நேரம் தொலைக்காட்சியை பார்த்துவிட்டு கடைக்கு
செல்லலாம் என முடிவெடுத்து செய்தி சேனலில்
மூழ்கினான்.

"தூங்கப் போறீங்களா அண்ணி?" என்று கயலை
பார்த்து ராதிகா கேட்க,

"ஏன் ராதிகா கேட்கிறே?" என்று கயல் கேட்டாள்.

"இல்லை நீங்க தூங்குறதா இருந்தால் நான் நிகிலை
மாடிக்கு கூட்டிட்டு போகலாம் என்று பார்த்தேன்."



"இல்லை ராதிகா. எனக்கு மதியம் தூங்கினால் நைட்
தூக்கம் வர மாட்டேங்குது. சும்மாவே டக்குன்னு திரும்பிப்
படுக்க முடியாததால ராத்திரியிலே ஆழ்ந்த தூக்கமே
கிடையாது. இதிலே மதியமும் தூங்கினால் அவ்வளவு
தான்" என்றவள்,

"நாம சீட்டு விளையாடுவோமா? உனக்கு சீட்டு விளை
யாடத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"எனக்கு தெரியும் அண்ணி. நாம ரம்மி விளை
யாடுவோமா?" என்று கேட்டுக் கொண்டே ராதிகா
கயலின் படுக்கை அறைக்குள் செல்ல,

"வேண்டாம் நாம ரூபா சீட்டு விளையாடுவோம்" என்று
கண்ணன் கூறிக் கொண்டே அவர்களை தொடர்ந்தான்.

"என்னது பணத்தை வைச்சு சீட்டு விளையாடப்
போறீங்களா?" என்று ராதிகா அதிர,

"ஷப்பா... நான் எப்போ அப்படிச் சொன்னேன்?
ரம்மிங்கிறது எப்படி சீட்டுக் கட்டை வைச்சு விளையாடக்
கூடிய ஒரு விளையாட்டோ அதே மாதிரி ரூபாச் சீட்டும்
ஒரு விளையாட்டு.

சீட்டுக் கட்டில் இருக்கிற ரெண்டு முதல் ஆறு வரை
இருக்கிற எல்லா சீட்டையும் எடுத்திடணும். மீதி முப்
பத்தி ரெண்டு சீட்டு வைச்சு தான் நாம விளையாடணும்.

இந்த 2+ 3+ 4+ 5+ 6+ = 20 வருதா? அது தான் ரூபா.
ஆளுக்கு 20 ரூபாய். இந்த விளையாட்டை விளையாட
நாலு பேர் தேவை. ரெண்டு ரெண்டு பேரா பார்ட்னரா
சேர்ந்துகிட்டு விளையாடணும்.

ஆளுக்கு எட்டு சீட்டு போடுவாங்க. துருப்பு சீட்டை
தேர்ந்தெடுக்கிற உரிமை ஒவ்வொருத்தருக்காக சுத்தி
வரும்.

இப்போ எனக்கு அந்த சான்ஸ் என்று வைச்சிக்... வோம். என் கையிலே இருக்கும் எட்டு சீட்டிலே கிளா... அதிகமா இருந்துச்சுன்னா நான் அதிலே ஒண்ணை கவுத்தி வைப்பேன். அதுக்கு பேர் துருப்பு சீட்டு.

ரம்மி விளையாட்டிலே ஜோக்கருக்கு இருக்கிற மாதிரி இந்த துருப்பு சீட்டுக்கும் மதிப்பு அதிகம். அந்த ஆட்ட... முடியுற வரைக்கும் கிளாவருக்கு அதிக மதிப்பு'' என்று கண்ணன் விளக்கிக் கொண்டு இருக்க,

''துருப்பு சீட்டா எதை கவுத்தி வைக்கிறோம் என்று பார்ட்னர்ஸுக்கு கூடச் சொல்லக் கூடாது'' என்று கயல் இடைபுகுந்தாள்.

மேலும் பத்து நிமிடங்களுக்கு மேல் அந்த விளையாட்டை எப்படி விளையாட வேண்டும் என்று கண்ணன் விளக்கினான்.

அவள் தலையை தலையை ஆட்டி கேட்டுக் கொண்டாள்.

''நாலு பேர் வேணும் என்று சொன்னீங்க. நாம மூணு பேர் தானே இருக்கோம். நாலாவது ஆளுக்கு எங்கே போறது?'' என்று ராதிகா கேட்க,

கண்ணனும் கயலும், ''எங்க அம்மா தான் அந்த நாலாவது ஆள்'' என்றதும்,

''ஹை! அத்தை சீட்டெல்லாம் விளையாடுவாங்களா?'' என்று கேட்டாள்.

''இந்த விளையாட்டை மாப்பிள்ளை இவங்க ரெண்டு பேருக்கும் சொல்லிக் கொடுத்தார். இங்கே விளையாட வேற ஆள் இல்லை என்று என்னையும் பிடிச்சு உள்ளே போட்டுட்டாங்க. நான் எவ்வளவோ சொன்னேன். கேட்கலை'' என்று தேவகி கூற,



''எங்க அப்பா இருக்கும் போது நாங்க நாலு பேரும் எப்போதும் ரம்மி விளையாடுவோம் ராதிகா. எங்கம்மா மாப்பிள்ளை முன்னாடி விளையாட மாட்டேன் என்று மறுத்துப் பார்த்தாங்க. ஆனா அவர் தான் மருமகன் மகன் மாதிரின்னு அடிச்சு பேசி உட்கார வைச்சார்'' என்று கயல் கூற,

''அப்போ நீங்களும் அண்ணனும் ஒரு டீம். இவரும் அத்தையும் ஒரு டீமா?'' என்று ராதிகா கேட்டாள்.

''இல்லை ராதிகா. எப்பவுமே நானும் அம்மாவும் ஒரு டீம். அவங்க ரெண்டு பேரும் ஒரு டீம். நாங்க ஜெயிச்சா அவங்க ரெண்டு பேரும் எங்களை வெளியே கூட்டிட்டு போகணும். அவங்க ஜெயிச்சால் அவங்க கேட்கிறதெல்லாம் சமைச்சுத் தரணும். அதான் டீல். ஆனா இது வரைக்கும் நாங்க ஜெயிச்சதில்லை. அதனால சீட்டுக் கட்டு விளையாட ஆரம்பிச்சால் சமைக்கணுமேன்னு நான் பயப்படுவேன்'' என்று சொல்லி சிரித்த கயல்.

''இன்னைக்கு எந்த கண்டிஷனும் இல்லை தானேண்ணா?'' என்று கண்ணனை பார்த்துக் கேட்டுக் கொண்டே படுக்கையில் சாய்ந்து அமர்ந்தாள்.

அனைவரும் படுக்கையில் வட்டமாக அமர்ந்து கொண்டனர். நிகில் கண்ணனின் மடியினில் அமர்ந்து கொண்டான்.

கண்ணனும் ராதிகாவும் ஒரு அணி என்றும் வழக்கம் போல் தேவகியும் கயலும் அடுத்த அணி என்றும் தீர்மானம் செய்தார்கள்.

சீட்டு கலைக்கப்பட்டு ஆட்டம் துவங்கப்பட்டது.

முதல் ஆட்டத்தில் கயல் துருப்புச் சீட்டை கவிழ்த்து வைத்தாள். அந்த முறை அவர்களே ஜெயித்தார்கள்.

அவர்கள் இரண்டு புள்ளிகள் அதிகமாக எடுத்ததால் கண்ணன் தங்கள் பணத்தில் இருந்து இரண்டு ரூபாய் கொடுக்கவும் படி ஆனது.

அடுத்த ஆட்டத்தில் ராதிகாவிற்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. ராதிகா துருப்பு சீட்டாக ஆர்ட்டினை கவுத்தி வைத்தாள்.

இந்த விளையாட்டில் கூட்டணி அமைத்தவர்களுக்குள் நல்ல புரிதல் இருந்தால் மட்டுமே ஜெயிக்க முடியும். கவுத்தி வைக்கப்பட்டு இருக்கும் சீட்டு என்னவென்று தெரியாத வரை ஜெயிப்பது கடினம்.

எதிரே அமர்ந்திருந்த கண்ணன் ராதிகா எதை கவுத்தி வைத்திருக்கிறாள் என்று தெரிந்தால் அந்த ஆட்டத்தில் அவர்கள் ஜெயித்து விடலாம் என நினைத்தான்.

கவுத்தி வைக்கப்பட்டிருக்கும் சீட்டு எது என்று சப்தம் எழுப்பாமல் வாய் அசைத்துச் சொல்வாள் என நினைத்து அவளைப் பார்த்து கண் ஜாடை காட்டினான்.

அவளுக்கு அது புரியவில்லை. புரியாவிட்டால் பேசாமலாவது இருந்து இருக்கலாம்.

''என்ன ஆச்சுங்க? எதுக்கு கண்ணை கண்ணை காட்டுறீங்க? கண்ணிலே தூசி ஏதாவது விழுந்திடுச்சா?'' என்று கேட்டு வைத்தாள்.

கயலும் தேவகியும் கண்ணன் தன் மனைவியை பார்த்து ஏதோ கண் ஜாடை காட்டுகிறான் என நினைத்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு அமைதியாய் இருந்து விட்டனர்.



தாயும் தங்கையும் அமைதியாக இருந்ததால் மீண்டும் ஒரு முறை முயற்சிக்கலாம் என நினைத்த கண்ணன் திரும்பவும் கண் ஜாடை காட்டியதும்,

''இன்னும் சரியா வரலையா? போய் கண்ணை நல்லா கழுவிட்டு வாங்க'' என்று அட்வைஸ் அம்புஜ மாக மாறி ராதிகா அறிவுரை வழங்க,

இம்முறை கயல் களுக்கென்று சிரித்து விட்டாள். தங்கை சிரிக்கவும் கண்ணன் நொந்து போனான்.

'மக்கு மக்கு! நான் எதுக்கு கண் ஜாடை செய்யு றேன்னு புரியலைன்னால் பேசாமலாவது இருந்து இருக்கலாம். தேவை இல்லாமல் பேசி நான் ஏதோ ரொமான்ஸ் பண்ணுறதா கயலை நினைக்க வைக்கிறாள். வாய் மட்டும் நல்லாப் பேசத் தெரியுது. அதுக்கு தான் இவ லாயக்கு. இவளை வைச்சுக்கிட்டு...' என்று பல்லை நறநறத்தான்.

## 10

அவர்கள் சீட்டாட்டத்தை தொடர்ந்து கொண்டிருந்த போது கண்ணனின் கைப்பேசி கிணுகிணுத்தது. அது படுக்கையில் ராதிகாவின் அருகில் இருந்தது.

அவள் அதை எடுத்துப் பார்க்க 'சங்கர் கயல்' என்ற பெயர் திரையில் மின்னவும்,

''சங்கர் அண்ணா பேசுறாங்க'' என்று சொல்லிக் கொண்டே அதை இயக்கி,

''ஹலோ அண்ணா எப்படி இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

அவள் இயல்பாய் சங்கருடன் பேசுவது கண்டு அவர்கள் மூவரும் புன்னகைத்தவாறு அவளை பார்த்து கொண்டிருந்தனர்.

''நான் நல்லா இருக்கேன் ராதிகா. நீ எப்படி இருக்கே?'' என்று அவனும் நலன் விசாரித்து விட்டு,

''கயல் தூங்குறாளா?'' என்று கேட்டான்.

''இல்லைண்ணா நாங்க எல்லோரும் நீங்க சொல்லி கொடுத்த ரூபா சீட்டு ஆட்டத்தை தான் விளையாடி கிட்டு இருக்கோம்.''

''கயல் நம்பருக்கு போட்டேன். போன் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்துச்சு.''

''அப்படியா?'' என்றவள், ''அண்ணி உங்க மொபைல் ஸ்விட்ச் ஆஃபிலே இருக்காம். என்னன்னு பாருங்க'' என்றாள்.

''மதியம் சாப்பிட்டீங்களாண்ணா? சாப்பாடு ஹோட்டலிலா சாப்பிடுறீங்க? இல்லைன்னா உங்களுக்கு சமைக்க தெரியுமா?''

''சாதம் மட்டும் வைக்கத் தெரியும் ராதிகா. இந்த தொக்கு, பருப்பு பொடி, புளிக்காய்ச்சல் இப்படி எதையாச்சும் கலந்து சாப்பிடுவேன். என்னைக்காவது ஹோட்டல் சாப்பாடு போர் அடிச்சால் வீட்டிலே இது மாதிரி செஞ்சு சாப்பிடுவேன்.

இன்னைக்கு நைட் சமைக்கலாம் என்று பார்க்கிறேன் வீட்டிலே அரிசி தீர்ந்து போச்சு. ஆபீஸ் முடிஞ்சு போகும் போது வாங்கணும். அதான் எந்தக் கடையிலே



வாங்கணும் என்று கயலை கேட்கலாம் என்று போன் பண்ணினேன்.''

''என்னது அரிசியை வாங்குவீங்களா?'' என்று ராதிகா அலற,

'இதுக்கு எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி?' என்று அருகில் இருந்த மூவரும் திகைத்தனர் என்றால்,

சங்கரோ, ''அம்மாடி தங்கச்சி! உங்க அண்ணன் இஞ்சினியரிங் படிச்சு இருக்கேன். நான் என்ன விவசாயியா? நானே அரிசியை பயிரிட்டு வளர்க்கிறதுக்கு? சாதம் வேணும் என்றால் கடையிலே போய் அரிசி வாங்கினால் தான் சமைக்க முடியும்'' என்று நக்கல் பண்ணினான்.

''அட அதில்லைங்கண்ணா'' என்று போனில் கூறியவள்,

''ஏங்க நீங்க டிபார்ட்மெண்டல் ஸ்டோர் தானே வைச்சு இருக்கீங்க?'' என்று கண்ணனை பார்த்து சந்தேகமாய் கேட்டாள்.

''ஏன் அதிலே உனக்கு என்ன சந்தேகம்?'' என்று கண்ணன் புரியாது கேட்கவும்,

''அப்படின்னா உங்க கடைக்காக அரிசியை மூடை மூடையா இறக்குவீங்க தானே?'' என்று கேட்டாள்.

''ஆமா மூடையா வாங்கித் தான் ஒரு கிலோ. அஞ்சு கிலோன்னு பாக்கெட் போடுவோம்.''

''அப்போ அதிலே ஒரு மூடையை உங்க தங்கச்சி வீட்டுக்கு அனுப்பி வைக்க மாட்டீங்களா?'' என்று கணவனை பார்த்துக் கேட்டவள்,

''ஏன் அண்ணி இப்படி ஏமாளியா இருக்கீங்க? எங்க அம்மாக்கெல்லாம் அவங்க பிறந்த வீட்டிலே இருந்து

அவங்களோட வயலில் விளையுற எல்லாமே வரு...
என்று கூறிவிட்டு,

தேவகியை பார்த்து, "ஏன் அத்தை இதெல்லா...
கேட்க மாட்டீங்களா?" என்றாள்.

அனைவரும் என்ன சொல்வது என்று தெரியாம...
விழித்துக் கொண்டு அமைதி காக்க...

"அண்ணா இனிமேலாவது விடாதீங்க!" என்று
போனில் சங்கரிடம் கூற,

"இத்தனை நாளா இப்படி எடுத்துச் சொல்றதுக்கு ஒரு
தங்கச்சி இல்லையேம்மா. அதான் ஏமாந்துட்டேன்.
இன்னும் ரெண்டு மாசத்திலே சென்னைக்கு வந்து
செட்டில் ஆகிடுவேன் இல்ல. அப்போ அரிசியை மாப்
பிள்ளை கடையிலே இருந்து அனுப்பச் சொல்லிடலாம்"
என்று சங்கர் கூறவும்,

"நீங்க சுத்த வேஸ்ட் அண்ணா" என்றாள்.

தன் கணவனை அவள் உரிமையுடன் திட்டுவதைக்
கேட்டு கயல் புன்னகைத்தாள்.

தன் வீட்டு மாப்பிள்ளையை மருமகள் அப்படிச்
சொல்வதை தாங்க முடியாத தேவகி, "ராதிகா!" என்று
ஒரு அதட்டல் போட்டார்.

"பின்ன என்ன அத்தை? சென்னை வந்ததும்
அரிசியை அனுப்பச் சொல்லுவாராம். சென்னை வந்த
பிறகு மொத்த மளிகை சாமானையும் அனுப்பச் சொல்
லுறதை விட்டுட்டு அரிசியை மட்டும் அனுப்பச்
சொன்னா... பிழைக்கத் தெரியாத ஆளா இருக்கார்" என்று
அங்கலாய்த்தாள்.



"ஆகா ராதிகா! நீ அப்படி வருகிறாயா? பேசாலம்
கடையை எழுதி வாங்கிடுறேன்" என்று சங்கர் கூற,

"அண்ணா உங்க தங்கச்சி அம்பூட்டு நல்லவ
கிடையாது. உங்களுக்கு கடையை எழுதி கொடுத்திட்டு
அத்தை, அவரு, நானு எல்லோரும் புவ்வாவுக்கு என்ன
பண்ணுறது? அதனால நீங்க கடையை எழுதி வாங்க
லாம் என்று கனவு காணக் கூடாது" என்றதும்,

"நான் நல்லவ தான். ஆனா ஏமாளி கிடையாது
டாங்கிறே!" என்று கேட்டுக் கொண்டே சங்கர் அடக்க
மாட்டாமல் சிரித்தான்.

"அதே அதே..." என்றவள் கைப்பேசியை கண்ண
னிடம் தந்தாள்.

அவள் பேசுவதை வைத்து சங்கரும் ராதிகாவும் இது
வரை என்ன பேசினார்கள் என்பது புரிந்ததினாலே
அனைவரும் புன்னகை முகமாய் காட்சி அளித்தனர்.

கைப்பேசி கை மாறும் போது ராதிகாவின் கைப்பட்டு
அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டது. அதனால் கண்ணன்
சங்கரின் எண்ணை அழுத்திக் கொண்டே,

"உனக்கு வாய் ரொம்பப் பெருசு ராதிகா" என்று
கூறினான்.

ராதிகா கணவனை செல்லமாக முறைத்ததை பார்த்த
நிகில், "ஏன் அத்தை மாமாவை முறைக்கிறீங்க? மாமா
உங்களை ஸ்மார்ட்ன்னு தானே சொன்னார்" என்றதும்,

கண்ணன் நிகிலிடம், "நான் எப்போடா உங்க அத்
தையை ஸ்மார்ட் என்று சொன்னேன்?" என்று கேட்
டான்.

"வாய் பெருசா இருக்குன்னா ஸ்மார்ட்ன்னு அத்தை தான் அன்னைக்கு சொன்னாங்க."

"உங்க அத்தை சொல்லிக் கொடுத்தாளா? அ... தனக்கு வாய் பெருசுங்கிறதால அதுக்கு ஸ்மார்ட்டுன்னு என்று பேர் வைச்சுட்டாளா? வெரி குட்" என்று ராதி காவை சீண்டவும்,

"நான் என்னங்க பண்ணுறது? எனக்கு இவன் வயசு பிள்ளைங்களை சமாளிச்சு பழக்கம் இல்லையா. அதான் டக்குன்னு வாய்க்கு வந்ததை சொல்லிட்டேன்" என்று ராதிகா அசடு வழிந்தாள்.

கயல் ராதிகாவிடம், "இப்பவே நல்லா டிரைனிங் எடுத் துக்கோ ராதிகா. பின்னாடி உதவும்" என்று ராதிகாவிற்கு தன் அண்ணனுக்கும் வருங்காலத்தில் பிறக்கப் போகும் குழந்தையை மனதில் வைத்துச் சொல்ல,

"ஆமாங்கண்ணி. இவனே இப்படி பேசினா இந்தக் குட்டி வந்து என்னென்ன கேள்வி கேட்கப் போகுதோ?" என்று ராதிகாவின் வயிற்றில் மேல் கை வைத்து ராதிகா கூற,

'இது தேறாத கேஸ்!' என்பது போல தேவகியும் கயலும் பார்வையை பரிமாறிக் கொண்டார்கள்.

'மக்கு! மக்கு!' என்று மனதிற்குள் மனைவியை திட்டிக் கொண்டே கண்ணன் சங்கருக்கு மீண்டும் முயற் சித்தான். மணி அடித்தது. சங்கர் எடுத்துப் பேசினான்.

"இவ்வளவு நேரமும் என்கேஜ்ட் டோன் கேட்டுச்சு மாப்பிள்ளை."

"ரெண்டு பேரும் மாறி மாறி முயற்சி பண்ணி இருக் கோம். அதான் லைன் பிசியா இருந்துச்சு. அப்புறம்



சொல்லுங்க மச்சான் எப்படி இருக்கீங்க?" என்று கண் ணன் கேட்டதும்.

"என் தங்கச்சி இருக்கிற வரைக்கும் எனக்கு என்ன மாப்பிள்ளை குறை" என்று சங்கர் கிண்டல் அடிக்கவும், இருவரும் நகைத்தனர்.

"என்ன மாப்பிள்ளை ராதிகாவோட கூட்டணி வைச்சு ஆட்டத்தை ஜெயிச்சுட்டீங்களா?" என்று சங்கர் கேட்க,

"அவளை வைச்சுக்கிட்டு விளையாடினால் தோற்கத் தான் செய்யணும். எதை கவுத்தி வைச்சிருக்கேன்னு கண் ஜாடை காட்டி கேட்கிறேன். கண்ணிலே தூசியான்னு கேட்கிறாள்" என்று கண்ணன் கூறவும்,

"ஆ! சீட்டிங் பண்ண டிரை பண்ணுனீங்களா?" என்று ராதிகா அலற,

"வீட்டுக்குள்ளே விளையாடுற விளையாட்டிலே சீட்டிங் எங்கே இருந்து வந்தது?" என்று கண்ணன் கேட்டான்.

"சே சே! விளையாடுற விளையாட்டிலே கூட ஒரு நேர்மை இருக்கணும்" என்று ராதிகா அழுத்திச் சொல்ல.

"கேட்டுச்சா மச்சான்? நேர்மையாம்... நீங்களும் நானும் கண் ஜாடையிலே எல்லாத்தையும் பேசி வைச்சிக்கிட்டு கயலையும் எங்க அம்மாவையும் எப்படி ஜெயிப்போம்!" என்று கண்ணன் பெருமைப்பட,

"அடப்பாவிங்களா! இத்தனை நாளா என்னையும் அம்மாவையும் ஏமாத்தி இருக்கீங்களா? அதான் கூட்டணியை மாத்தாமல் இருந்தீங்களா?" என்று கேட்ட கயல், அருகில் இருந்த தலையணையை எடுத்து தன் அண்ணனை மொத்தினாள்.

''நானு நானு'' என்று சொல்லிக் கொண்டே இ... னொரு தலையணையை எடுத்தி நிகில் தன் மாமனை அடிக்க,

''என் சார்பாவும் நாலு மொத்து சேர்த்து போடு நிகில் குட்டி'' என்று ராதிகா அவனை ஊக்கினாள்.

தேவகி அந்த சிறு பிள்ளை விளையாட்டை பார்த்து சிரித்துக் கொண்டார்.

''இந்தா கயல் பேசு'' என்று கைப்பேசி கண்ணனிடமிருந்து கயலிடம் கைமாறியது.

நிகில் ராதிகாவிடம் வந்து, ''அத்தை என் கூட கிச்சனுக்கு வாங்களேன்'' என்று அழைத்தான்.

''யார் ஒளிச்சி வைச்சதை எடுக்க என்னை கூட்டணி சேர்க்கிறேடா? சாக்லெட்டா? ஐஸ்க்ரீமா? எதை எடுக்கணும்?'' என்று கேட்டுக் கொண்டே அவனை தூக்கிக் கொண்டு சமையலறை நோக்கிச் சென்றாள்.

''அம்மா இத்தனை நாள் நமக்கு கயலுக்கு அரிசி அனுப்பணும் என்று தோணாமல் போச்சேம்மா'' என்று கண்ணன் வருத்தப்பட,

''அவ சென்னையிலே இருந்திருந்தால் நமக்கு தோணியிருக்கும் கண்ணா, மும்பையில் இருந்ததால் தோணலை'' என்ற தேவகி மகனுக்கு சமாதானம் கூற,

''எந்த ஊரா இருந்தாலும் அப்பா இருந்திருந்தா கண்டிப்பா அனுப்பி இருப்பார்'' என்று கண்ணன் வருத்தப்பட்டான்.

''அதான் இனி அனுப்பலாம் என்று முடிச்சாச்சு இல்ல. கவலையை விடுப்பா. உன் தங்கச்சியை பார்த்து பொறாமைப்படாத மனைவி கிடைச்சிருக்கான்னு சந்தோஷப்படு'' என்றார்.



கணவனிடம் பேசி முடித்த கயல் கண்ணனின் வாடிய முகத்தை பார்த்து, ''நீங்க எனக்கு எதிலே குறை வைச்சீங்கன்னு இப்படி ஃபீல் பண்ணுறீங்க? விடுங்கண்ணா. இன்னைக்கு நான் வாழுற வாழ்க்கையே நீங்க தானேண்ணா அமைச்சுக் கொடுத்தீங்க'' என்று ஒரு பாச மலர் காட்சியை அரங்கேற்றி அண்ணனை சமாதானம் செய்தாள்.

சமையல் அறையில் மேல் அலமாரியில் இருந்த சாக்லெட் ஒன்றை எடுத்துக் கொடுத்த ராதிகா. ''நிகில் குட்டி இப்படி தினமும் சாக்லேட் சாப்பிட்டீங்கன்னா வயித்திலே பூச்சி வளரும். அப்புறம் டாக்டர்கிட்டே போய் உனக்கு ஊசி போடணும்'' என்றாள், அவனோ,

''அத்தை அதுக்கு பூச்சி மருந்து குடிச்சிக்கலாம். அது கூட இனிக்கத் தான் செய்யும்'' என்று சொல்லிச் சிரித்தான்.

''அப்படியா? என் கூட வா'' என்று மாடிக்கு தங்களது அறைக்கு அழைத்துச் சென்றாள்.

தங்கையின் அறையில் இருந்து வெளியேறி கண்ணனும் மாடி ஏறி தங்கள் அறைக்குள் நுழையவும் ராதிகா அவனிடம்,

''உங்க லேப் டாப்பை கொஞ்சம் ஆன் பண்ணித் தாங்களேன்'' என்றாள்.

கண்ணன் அதை இயக்கியதும், சாக்லேட் சாப்பிட்டால் பற்கள் எப்படி பாதிக்கப்படும் என்பதை படத்துடன் நிகிலுக்கு விளக்கினாள்.

கலவரமான முகத்துடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்த நிகில், ''மாமா இனிமே எனக்கு டெய்லி சாக்லேட் வேண்டாம். பர்த்டேக்கு மட்டும் போதும்'' என்றான்.

"சமத்து குட்டிடா'' என்று கூறி நிகிலின் கன்னத்தில் ராதிகா முத்தம் பதித்தாள்.

கண்ணன் அதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கீழே அம்மாகிட்டே போய் தூங்கு'' என்று நிகிலை கீழே அனுப்பிய கண்ணன்,

"நாங்களும் சாக்லேட் சாப்பிடாதே. வயித்திலே பூச்சி வரும் என்று சொல்லிப் பார்த்தோம். பய புள்ளை கேட்கலை. இன்னைக்கு நீ சொன்னதும் கேட்டுக்கிட்டான் என்று ஆச்சரியப்பட்டான்.

"நிகில் ஓல்ட் ஸ்டைலில் சொல்லி இருக்கீங்க.''

"அதென்ன ஓல்ட் ஸ்டைல், நியூ ஸ்டைல்?''

"முன்னாடியெல்லாம் நிலாவைக் காண்பிச்சு சோறு ஊட்டினாங்க. அப்புறமா டிவியை காட்டி ஊட்ட ஆரம்பிச்சாங்க. இப்பெல்லாம் யூ-டியூப் போட்டுக் காண்பிக்க சாதம் ஊட்டுறாங்க. உலகம் எங்கேயோ போய்கிட்டு இருக்கு. நீங்க வயித்திலே பூச்சி வரும் என்று ஓல்ட் ஸ்டைலில் சொன்னால் எடுபடுமா?'' என்று கேட்டதும் கண்ணன் புன்னகைத்தான்.

"தாங்க்ஸ் ராதிகா'' என்று அவன் உணர்ந்து நன்றி உரைத்தான்.

"இதுக்கு எதுக்கு தாங்க்ஸ்? அப்படியே இருந்தாக் கூட கயல் அண்ணி சொல்லணும். நீங்க ஏன் சொல்லுறீங்க?''

"நிகில் விஷயத்துக்கு சொல்லலை. கீழே கயல் வீட்டுக்கு அரிசி அனுப்பச் சொல்லி ஐடியா கொடுத்தே இல்ல... அதுக்கு தாங்க்ஸ்.''



"இது கடை தேங்காயை எடுத்து வழி பிள்ளையாருக்கு உடைக்கிற மாதிரியான ஒரு விஷயம். என் கையிலே இருந்து நான் எதுவும் தரப் போவதில்லை. ஐடியா சொன்னதுக்கு தாங்க்ஸ் என்றாலும் இது என்னோட ஐடியா இல்லைங்க. எங்க தாத்தா பாட்டியோடது. அவங்க அனுப்புறதை பார்த்து பார்த்து வளர்ந்ததால நீங்க கயல் அண்ணிக்கு அனுப்பாதது எனக்கு வித்தியாசமா இருந்துச்சு. அதான் சொன்னேன்'' என்றவள்,

"அச்சச்சோ குழம்பை பிரிஜ்ஜினிலே வைக்க மறந்துட்டேன். நான் போய் வைச்சிட்டு வரேன்'' என்று கீழே இறங்கிச் சென்றாள்.

ராதிகாவை பார்த்து கண்ணனுக்கு பெருமையாக இருந்தது. அவளது வெகுளித்தனம், பாசமான அணுகுமுறை என்று அனைத்துமே அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

தன்னுடைய தயக்கத்தை உடைத்தெறிந்து அவளுடன் வெளிப்படையாக சில விஷயங்களை பற்றிப் பேசி தங்களுடைய வாழ்க்கையை சீக்கிரமே சரி பண்ண வேண்டும் என்று தீர்மானித்தான்.

# 11

ராதிகா கயலுக்கு மாதா மாதம் மளிகை சாமான் ரூபத்தில் சீர் அனுப்ப சொன்ன விஷயம் கண்ணனுக்கும்

அவனது குடும்பத்தினருக்கும் பெரிதாகத் தோன்றியது
அதனால் அவர்கள் அனைவரும் அவளை பற்றி ரொம்
உயர்வாக எண்ண ஆரம்பித்தார்கள்.

ஆனால் ராதிகாவிற்கோ தான் பேசிய விஷய
மிகவும் சாதாரணமானதாகப் பட்டது. ராதிகா கயலை த
தங்கை சந்தியா போல் ஒரு சகோதரியாக நினைத்தா
அதனால் கயலிடமும் அவள் கணவனிடமும் இய
பாய் பழகினாள்.

அவளுக்கு கயலைப் பார்க்கும் பொழுது பாச
வந்ததே தவிர பொறாமை வரவில்லை. தன்னுடை
இந்தக் குணத்தால் புகுந்த வீட்டினரின் மனதில் இட
பிடித்து விட்டோம் என்பதை உணராது குழம்பை எடுத்
வைப்பதற்காக மாடியில் இருந்து இறங்கிக் கொண்
டிருந்தாள்.

படி இறங்கி கீழே வந்து கொண்டிருக்கும் ராதிகாவை
கண்டதும் தேவகிக்கு அவளது யோசனைக்காக ஒரு
புறம் நன்றி சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

ஆனால் இன்னொரு புறம் 'அது என்ன அவ கடையா?
என் பையன் சம்பாதிக்கிறான். என் பெண்ணுக்கு
கொடுக்கப் போகிறோம். அதுக்கு இவளுக்கு எதுக்கு
நன்றி சொல்ல வேண்டும்?' என்ற எண்ணமும் வந்தது.

இது எல்லாத் தாய்மார்களுக்கும் உள்ள மனநிலை.
தன் மருமகள் மகனோட ஒற்றுமையாக குடும்பம் நடத்த
வேண்டும் என்ற ஆசைப்படுவார்கள்.

ஆனால் மகன் மீதோ, அவனது உடைமை மீதோ
மருமகள் அதிக உரிமை எடுத்துக் கொள்ளக் கூடாது
என்றும் நினைப்பார்கள்.



'இவள் நேற்று வந்தவள்' என்ற எண்ணம் அவர்
களுக்கு உண்டு. அந்த எண்ணத்தை மறைய வைப்பது
ஒரு மருமகளின் கையில் தான் இருக்கிறது.

வயதில் சிறியவளான அவளே விவேகமாக நடந்து
கொள்ள வேண்டும். கணவன் மீது தனக்குள்ள உரிமை
உணர்வை மாமியாரின் முன் வெளிப்படுத்தக் கூடாது.

ஏனென்றால் இருபத்தைந்து முப்பது வருடங்களாக
ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையே இருக்கும் உரி
மையை மாற்ற முனைந்தால் அது மாமியாரின் மனதில்
வெறுப்பை உண்டாக்கும்.

அதனால் சிறிது காலத்திற்கு... தன் மாமியாரின்
மனதில் தனக்கென்று ஒரு நிலையான இடம் கிடைக்கும்
வரைக்கும் பொறுத்துத் தான் போக வேண்டும்.

சமையலறையில் ராதிகா குழம்பை எடுத்து வைக்கும்
வேலையை பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேவகிக்கு ராதிகாவிடம் நேரடியாக நன்றி சொல்ல
வில்லை என்றாலும் அவளுக்கு ஏதாவது செய்ய வேண்
டும் அல்லது அவளை சந்தோஷப்படுத்த வேண்டும்
என்று தோன்றியது.

மருமகளை மகனுடன் வெளியே அனுப்பி வைப்போம்
என்று முடிவு செய்தார். இப்போதைக்கு தன்னால்
கொடுக்க முடிந்த சந்தோஷம் அதுவே என்று தீர்மானித்
தார்.

ஆனால் கண்ணன் கடைக்கு போகணும் என்று
சொல்வானே என யோசித்தார்.

'கண்ணனோடு சேர்ந்து கடையை பார்த்திட்டு வா
என்று சொல்லி அனுப்புவோம். அதுக்கு அப்புறம்

பார்க்கோ, பீச்சோ அவங்களா பார்த்து போய் கொள் ளட்டும்' என நினைத்தார்.

அதனால் ராதிகாவை அழைத்து, "நீ நம்ம டிபார்ட் மெண்டல் ஸ்டோரை பார்த்திருக்கியா ராதிகா?'' என்று கேட்டார்.

"நான் பார்த்ததில்லை அத்தை. சந்தியாவும் எங்க அப்பாவும் பார்த்து இருக்காங்க. என்னை எங்க அப்பா கல்யாணத்துக்கு பின்னாடி பார்த்துக்கோன்னு சொல் லிட்டார். எதுக்கு அத்தை கேட்கிறீங்க?''

"அதான் உங்க கல்யாணம் முடிஞ்சு போச்சே! உங்க அப்பா சொன்னபடி அதைப் பார்க்கணும் என்ற ஆசை உனக்கு இருக்கா இல்லையா?''

"பார்க்கணும்...'' என்று ராதிகா இழுக்க,

"அப்படின்னா இன்னைக்கு கண்ணனை கடைக்கு கூட்டிட்டு போகச் சொல்லு'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

'அப்பாடா வீட்டிலே இருந்தால் போர் அடிக்குமே என்று நினைச்சேன். அவர் கூட வெளியே போனால் பொழுதாவது போகும்' என எண்ணிக் கொண்டே ராதிகா மாடி ஏறினாள்.

"வந்துட்டியா? நான் கடைக்கு கிளம்புறேன்'' என்று கண்ணன் கூறியதும்.

"அத்தை என்னையும் உங்க கூட சேர்ந்து கடைக்கு போகச் சொன்னாங்க. நான் முகம் கழுவிட்டு வந்துடு றேன். அஞ்சே நிமிஷம்'' என்று கடகடவென கூறி விட்டு குளியலறைக்குள் சென்று மறைந்தாள்.



"எதுக்கு இந்த அவசரம்? உன்னை நான் கூட்டிட்டு போக மாட்டேன் என்றா சொல்லப் போறேன். எப்படியும் நீயும் கடையை பார்த்துத் தானே ஆகணும்'' என்று கூறி யவன் படுக்கையில் அமர்ந்து அவளுக்காகக் காத்திருக்க லானான்.

அவள் தயாராகி வந்ததும் அவளை தனது வண்டியில் அழைத்துக் கொண்டு தங்களது கடைக்கு வந்தான். வெளித் தோற்றத்தை பார்த்தே ராதிகா அசந்து போனாள்.

"அப்பாவும் சந்தியாவும் சொன்ன மாதிரி உங்க கடை பெருசா இருக்குங்க'' என்றவளை பார்த்து கண்ணன் முறைத்தான்.

"உள்ளே வந்து பார்க்கிறதுக்கு முன்னாடியே சொல்லு றேன் என்று முறைக்கிறீங்களா?''

"அதில்லை. என்ன சொன்னே? உங்க கடையா? அதாவது என் கடையா?'' என்று அவன் குறைபடவும்.

"ஓ! அதானா விஷயம் என் கடை. சரியா?'' என்றதும் அப்பொழுதும் ராதிகாவை பார்த்து கண்ணன் முறைக்க,

"முழுசா தர மாட்டீங்களா? பாதிப் பங்கு தானா? நான் உங்களுக்கு முழுப் பங்கு தந்து உங்க கடைன்னு சொன் னேன் இல்ல. அது மாதிரி நீங்களும் மொத்தமா எனக்கு விட்டுக் கொடுப்பீங்களோன்னு பார்த்தேன். நீங்க கஞ்சூஸா இருக்கீங்க. நம்ம கடை. இப்ப ஓ.கே வா?'' என்று கேட்டதும்,

அவன் இயல்பாய் புன்னகைத்துக் கொண்டே கடைக்குள் நுழைய, ராதிகா அவனை பின் தொடர்ந்தாள்.

கடை முழுவதும் வலம் வந்தாள். தரை தளம் முழு வதும் மளிகை பொருட்கள் இருந்தன. முதல் மாடியில்

பரிசுப் பொருட்களும் விளையாட்டுப் பொருட்களும் இருந்தன. ஒரு சின்ன அலுவலக அறையும் இருந்தது.

''சூப்பரா இருக்குங்க. எல்லா பொருளும் நல்லா அடுக்கி வைச்சிருக்கீங்க. எல்லா இடமும் ஏ.சி. அதனால குளுமையா இருக்கு...'' என்று சொல்லிக் கொண்டு வந்தவள்,

''அடடா! நீங்க கடையிலே ஏசியிலே தான் தினமும் இருக்கீங்க. இது தெரியாமல் நான் தியேட்டர் போயிட்டு வந்த அன்னைக்கு ஏசியினால தலைவலியான்னு கேட்டேன். அப்பவே சொல்ல வேண்டியது தானே! அதை விட்டுட்டு லுக்கு வேண்டி இருக்கு லுக்கு. இப்படி நாலு நாள் கழிச்சு நானே அதை கண்டுபிடிக்கணுமாக்கும்'' என்று அலுத்துக் கொண்டாள்.

பேசிக் கொண்டே அவர்கள் தரை தளத்திற்கு வந்து சேர்ந்தனர்.

''ஏதாச்சும் ஜூஸ் குடிக்கிறியா?'' என்று கண்ணன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே,

ராதிகா, ''அய்யய்யோ!'' என்று அலறினாள்.

''ஜூஸ் குடிக்கிறியான்னு தானே கேட்டேன். ஏதோ விஷம் குடிக்கிறியான்னு கேட்ட மாதிரி இப்படி பயப்படுறே! என்ன விஷயம்?'' என்று அவன் விசாரிக்க,

''நேரம் காலம் தெரியாமல் மொக்கை ஜோக் அடிக்காதீங்க. என் பிரண்டு ஒருத்தி கடைக்குள்ளே நுழையுறாள்.''

''பிரண்டு தானே? அதுக்கு ஏன் பயப்படுறே? அவ நம்மகிட்டே ஒண்ணு வாங்கினா ஒண்ணு ஃப்ரீ கொடுன்னு கேட்பாளா?''



''அதில்லை. அவ என்னைப் பார்க்கக் கூடாது. அவ என்னைப் பார்த்துட்டா எனக்கு கல்யாணம் ஆன விஷயம் தெரிஞ்சிடும். அதனால நான் மாடியிலே அந்த ஆபீஸ் ரூமிலே போய் மறைஞ்சுக்கிறேன். அந்த ரோஸ் சுரிதார் தான் என் பிரண்டு அவ போன உடனே என் கிட்டே வந்து சொல்லுங்க'' என்றவள்,

அவனது பதிலுக்காகக் கூடக் காத்திருக்காமல் மாடியை நோக்கி விரைந்தாள்.

செல்லும் மனைவியையே ஒரு வித அதிர்ச்சியுடன் கண்ணன் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றான்.

'இவள் என்ன சொல்ல வருகிறாள்? எங்களின் திருமண விஷயம் இவளது தோழிக்கு தெரியக் கூடாதென்றால்... தனக்கு திருமணமானதை மறைக்க நினைக்கிறாளா?

என்னை அவளது தோழியின் முன் அறிமுகப்படுத்த முடியாததால் மறைக்க முயல்கிறாளா?'' என்ற எண்ணம் எழுந்தவுடன் அவனது அதிர்ச்சி வலியாக மாறியது.

உன்னை எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லாமல் சொல்லிய அவளது செயலால் மனமொடிந்து போனான்.

அப்பொழுது அவனது அலைபேசி கிணுகிணுத்தது. அவனது நண்பன் பாலு அழைத்திருந்தான்.

''சொல்லுடா பாலு'' என்று உற்சாகம் சிறிதுமின்றி சொன்னதை கவனிக்காத பாலு,

''எங்கேடா இருக்கே? கடையிலா? கொஞ்ச நேரம் வெளியே வரமுடியுமா? நம்ம பீதாம்பரம் இந்தியா வந்து இருக்கானாம். நம்ம பிரண்ட்ஸ் எல்லாம் அவனை பார்க்க போகலாம் என்று முடிவு பண்ணி கேட்டாங்க. உன்னால வர முடியுமா?'' என்றதும்,

''வரேன்டா'' என்று சொன்னவன் இடத்தைக் கேட்டு அறிந்து கொண்டு அழைப்பை துண்டித்தான்.

மனைவியிடம் விடைபெறக் கூடப் பிடிக்காமல் வெளியேறினான்.

அவன் தனது வண்டியை கிளப்ப முயன்ற போது ராதிகாவின் தோழி கடையை விட்டு வெளியேறியதை கவனித்தவன் கடை ஊழியர் ஒருவரை அழைத்து,

''மேலே என் ரூமிலே என் வைஃப் இருப்பாள். அவ கிட்டே போய் எனக்கு அவசர வேலை வந்ததால் நான் வெளியே போறேன் என்று சொல்லுங்க. அவளை வீட்டுக்கு போகச் சொல்லுங்க'' என்று சொல்லிவிட்டு வண்டியை கிளப்பிக் கொண்டு சென்றான்.

கடை ஊழியர் வந்து கண்ணன் வெளியே சென்ற விஷயத்தை கூறியதும் ராதிகா கடுப்பானாள்.

'நான் வந்து அஞ்சு நிமிஷம் கூட ஆகலை. அதுக்குள்ளே அப்படி என்ன வெளி வேலை? அதை என் கிட்டே மேலே வந்து சொல்லக் கூட முடியாதா?

இப்போ நான் வீட்டுக்கு போவதா? வேற எங்கே யாவது போவதா? இல்லைன்னா இங்கேயே இருப்பதா?' என்று யோசித்தாள்.

கடையில் உள்ள இவர்கள் யாரையும் எனக்கு தெரியாது. அதனால் இங்கே இருக்க முடியாது.

இந்த நேரத்துக்கு யார் வீட்டுக்கும் போக முடியாது. பேசாமல் வீட்டிற்கே செல்லலாம் என்று முடிவெடுத்தாள்.

'அதுக்குள்ளே ஏன் வந்தாய்?' என்று அத்தை கேட்டால் என்ன சொல்வது?



உங்க பையன் இப்படி பாதியிலே என்னை விட்டுட்டு போயிட்டார். நீங்களே நியாயம் கேளுங்க என்று சொல்ல முடியுமா?

காலையில் அத்தைகிட்டே இதே வசனத்தை சொன்னேன். ஆனா அப்போ அநியாயம் நடந்தது. அவங்க பொண்ணுக்கு. அதனால நீங்க இதெல்லாம் கேட்க மாட்டீங்களா அத்தை என்று கேட்டதுக்கு சிரிச்சாங்க.

இப்ப எனக்காக உங்க பிள்ளைகிட்டே நியாயம் கேளுங்க என்று சொன்னால் சிரிப்பாங்களா?

எப்படியும் அவங்க பிள்ளைக்கு தான் சப்போர்ட் பண்ணி பேசுவாங்க'' என்று நினைத்த பொழுது உடனே வீட்டிற்கு செல்ல வேண்டாம் என்றும் அவளுக்கு தோன்றியது.

கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்தவள் வழியில் கோவில் ஒன்றைக் கண்டதும் அதற்குள் நுழைந்து கொண்டாள்.

## 12

நண்பர்கள் அனைவரும் ஒரு மாலில் சந்திப்பதாக பேசி வைத்திருந்ததால் கண்ணன் நேராக அங்குள்ள உணவுக் கூடத்திற்கு சென்றான்.

அவனது இரு நண்பர்கள் ஏற்கனவே வந்திருந்தார்கள்.

அவனது இரு நண்பர்கள் ஏற்கனவே வந்திருந்தார்கள். கண்ணன் நேரே அவர்களின் அருகே சென்று அமர்ந்தான்.

அவர்கள் இருவரும், ''வாடா புது மாப்பிள்ளை. எப்படி இருக்கே?'' என்று கண்ணனை வரவேற்றார்கள்.

''நான் நல்லா இருக்கேன்டா. எங்கேடா பாலு?'' என்று கேட்டான்.

''அவனையும் ஆளைக் காணோம். நம்ம பீதாம்பரம்...'' என்று தொடங்கியவன்,

''அவனுக்கு அவங்க வீட்டிலே வைச்ச பீதாம்பரம் என்ற பேரை விட பீத்தல்ஸ் என்று நாம வைச்ச பேர் தானே நல்லாவும் பொருத்தமாவும் இருக்கு'' என்று கூறியதும் அனைவரும் சிரித்தனர்.

''எதுக்குடா வரச் சொல்லி இருப்பான்?'' என்ற நண்பனின் கேள்விக்கு.

''நம்மளை பார்க்கணும் என்று தோணியிருக்கும்'' என்று கண்ணன் பதிலளித்தான்.

''அதான்டா ஆச்சரியமாக இருக்கு. இத்தனை வருஷத்திலே நம்மளை பார்க்கிறதுக்கு அவன் எப்பவாச்சும் ஆர்வம் காண்பிச்சு இருக்கானா? இப்ப மட்டும் நாம எப்படி அவன் கண்ணுக்கு தெரியுறோம்?'' என்று ஒருவன் கேட்க,

''வேற ஒண்ணுமில்லடா. இப்போ அவன் பாரினில் இருக்கான் இல்லையா. அந்த பெருமையை நம்மகிட்டே பீத்துறதுக்கு தான் வரச் சொல்லி இருப்பான்'' என்று மற்றொருவன் சொன்னான்.

''நீ வேணா பாரு... அவன் வந்ததும் நீங்களெல்லாம் எப்படிடா இந்த ஊரிலே இருக்கீங்கன்னு கேட்டு அமெரிக்கப் பெருமையை அள்ளி விடுவான். என்னவோ



இவன் வெளிநாட்டிலேயே பொறந்து வளர்ந்த மாதிரி பீலா விடுவான் பாரு!'' என்று பீதாம்பரத்தை கேலி பண்ணிச் சிரித்தனர்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே பாலுவும் பீதாம்பரமும் வந்தார்கள்.

''எப்படிடா இருக்கே மச்சான்?'' எனக் கேட்டு ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.

''கண்ணா உனக்கு நாலு நாளைக்கு முன்னாடி கல்யாணமாமே?'' என்று பீதாம்பரம் விசாரிக்க,

''ஆமாடா. நீ இந்தியா வருவது எனக்கு தெரியாது. தெரிஞ்சு இருந்தால் உனக்கும் இன்விடேஷன் கொடுத்திருப்பேன்'' என்று கண்ணன் தனது கல்யாணத்திற்கு அவனை அழைக்க முடியாமல் போனதற்கு விளக்கம் அளித்தான்.

''நானும் வந்தவுடனே சொந்தக்காரங்களை பார்க்கிறதிலே கொஞ்சம் பிசியா இருந்துட்டேன். உங்க யாருக்காவது போன் பண்ணி இருந்தால் உன் கல்யாண விஷயம் தெரிஞ்சு இருக்கும்'' என்று கண்ணனிடம் கூறியவன்,

''அப்புறம் எப்படிடா இருக்கீங்க? உங்க வேலை எப்படிப் போய்கிட்டு இருக்கு?'' என்று எல்லோரையும் பார்த்து பொதுவாகக் கேட்டான்.

அவர்கள் அனைவரும், ''நல்லா போய்கிட்டு இருக்கு'' என்று சொன்னதும்,

தனது வெளிநாட்டு வேலையை பற்றியும் வாழ்க்கையை பற்றியும் அள்ளி விட ஆரம்பித்தான்.

நண்பர்கள் அனைவரும் 'உன்னை எனக்கு தெரியாதா!' என்பது போல் நமட்டுச் சிரிப்புடன் அவன் பேசுவதை கேட்டு... இல்லையில்லை கேட்பது போல் நடித்துக் கொண்டிருந்தனர்.

"தூசி, டிராபிக் ஜாம், ரோடெல்லாம் குப்பை. எப்படி தான் இங்கே இருக்கீங்களோ?" என்று அவன் அலட்டிக் கொண்டு கேட்கவும்,

"மச்சான் நீ பொறந்ததில் இருந்து படிச்சு முடிக்கிற வரைக்கும் இந்த ஊரிலே எப்படி காலம் தள்ளுனியோ, அப்படியே தான் நாங்களும் காலத்தை ஓட்டுறோம்" என ஒருவனும்,

"என்ன மச்சி செய்யுறது? எவனாச்சும் ரூல்ஸ் படி நடத்துக்கிறானா? இப்ப உன்னையே எடுத்துக்கோ... இங்க இருக்கிற வரைக்கும் எந்த ரூல்ஸையாச்சும் மதிச்சியா? ஆனா இதுவே பாரின் போனதும் அந்த நாட்டுக்காரன் எள்ளுன்னு சொல்லும் முன்னாடி எண்ணெய்யா இருக்கே தானே?" என்று ஒருவன் பாராட்டுவது போல் அவனது காலை வாரினான்.

"பாரின் போய் ரூல்ஸை கத்துக்கிட்ட வந்த நீ இப்பவாச்சும் ரூல்ஸை மதிச்சு நடந்தாயா? கண்டிப்பா நடந்து இருக்க மாட்டே. உன்னை மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் இந்தியாவை பார்த்தா இளிச்சவாய் நாடா தெரியுது" என்ற ஆளுக்கொரு வனத்தைக் கூறி அவனை கிண்டலடித்தனர்.

அனைவரும் ஒன்று கூடி தன்னை நக்கலடிப்பதால் தனது பேச்சை மாற்ற எண்ணிய பீதாம்பரம்,



"அப்புறம் கண்ணா உன் வைஃப் பத்தி சொல்லு. என்ன பேரு? என்ன பண்ணுறாங்க?" என்று கேட்டான்.

"என் வைஃப் பேரு ராதிகா. என்னை மாதிரியே எம்.எஸ்,ஸி படிச்சிருக்காங்க. வேலைக்கு போகலை" என்று கண்ணன் கூறியதும்,

"போட்டோ ஏதாச்சும் வைச்சிருக்கியா?" என்று கேட்டான்.

பாலு தனது கைப்பேசியில் படம் பிடித்து வைத்திருந்த கண்ணனின் திருமணப் புகைப்படங்களை காட்டினான்.

"இந்தப் பொண்ணா கண்ணன் வைஃப்?" என்று அவன் அதிர்ச்சியுடன் கேட்க,

'எதற்காக இவன் இவ்வளவு அதிர்ச்சியுடன் கேட்கிறான்? ஒரு வேளை அவனுக்கு ராதிகா தெரிந்த பெண்ணா' என்பது போல் நண்பர்கள் அனைவரும் அவனை பார்த்திருக்க,

"கண்ணனுக்கு இவ்வளவு அழகான வைஃபா?" என்று அவன் மீண்டும் ஆச்சரியப்படவும், நண்பர்களுக்கு விஷயம் புரிந்தது.

பீதாம்பரம் மேலும், "பொண்ணுக்கு கை கால் எல்லாம் நல்லா இருக்கு தானே?" என்று கேட்டதும்,

'இப்படி ஒரு கேள்வி எதற்காகக் கேட்கிறான்?' என்று விழித்துக் கொண்டே பாலு, "நல்லா இருக்கும். ஏன் கேட்கிறே?" என்று கேட்டான்.

"அப்படின்னா வெளியே தெரியாத வியாதி ஏதாச்சும் இருக்குமோ? அதாவது காக்கா வலிப்பு. இதய நோய்

இல்லைன்னா குழந்தை பெத்துக்க முடியாது. இப்படி ஏதாச்சும் ஒண்ணு. ஏன் சொல்லுறேன்னா இவ்வளவு அழகான பொண்ணு கண்ணனை எப்படிடா கல்யாணம் பண்ணச் சம்மதிக்கும்?'' என்று கேட்டதும்.

கண்ணன் வெகுவாக பாதிக்கப்பட்டான். அவன் ஒன்றும் பேசாமல் அமைதியாய் இருந்தான்.

பீதாம்பரம் அவ்வாறு கேட்டதும் பாலு கண்ணன் அருகில் சென்று கைகளை அழுத்திப் பிடித்து சமாதானம் செய்ய முயன்றான் என்றால் மீதம் இருந்த அந்த இரு நண்பர்களும் பீதாம்பரத்தின் மீது பாய்ந்தனர்.

''அந்தப் பொண்ணு உன்னை மாதிரி இல்லைடா பீத்தல்ஸ். அதனால தான் உன்னை மாதிரி வெளியே தெரியுற கண்ணனோட கலரைப் பார்க்காமல் அவனோட மனசைப் பார்த்து கல்யாணத்திற்கு சம்மதம் சொல்லி இருக்கு'' என்று ஒருவனும்.

''ஏண்டா பீத்தல்ஸ், உனக்கு கல்யாணம் ஆகி மூணு வருஷம் ஆகுது இல்ல. இன்னும் குழந்தை பிறக்கலைன்னு சொன்னியே. டாக்டரை போய் பார்த்தியா? உனக்கு ஒரு பொண்ணை அம்மாவாக்கும் தகுதி இருக்கான்னு செக் பண்ணினாயா?'' என்று இன்னொருவன் கேட்கவும் பீதாம்பரம் எகிறினான்.

''டேய்! என்னடா கேட்டே?'' என்று அவன் கத்தவும்.

''உன்னைப் பார்த்து அப்படி ஒரு கேள்வி கேட்டதும் எரியுதோ? ஆனா நீ கேட்ட கேள்வி மட்டும் எங்களுக்கு குளு குளுன்னு இருந்துச்சோ!'' என்று எகத்தாளமாக ஒருவனும்,



''கூடப் படிச்ச நாங்க உன்னை கேள்வி கேட்டதுக்கே உனக்கு தாங்க முடியலையே.... யாருன்னு தெரியாத ஒரு பொண்ணை எதுக்குடா அவ்வளவு தரக் குறைவா பேசுறே?'' என்று மற்றொருவனும்.

''ராதிகாவை விடுங்கடா. இப்போ ராதிகா. சீனிலே இல்லை. கண்ணன் உனக்கு என்னடா தீங்கு செஞ்சான்? ஏதாச்சும் குறை இருக்கிற பொண்ணு தான் அவனை கட்டிக்கும் என்று எப்படிடா அவனை பார்த்து உன்னால சொல்ல முடிஞ்சது? அவன் மனசை எப்படிடா இப்படி காயப் படுத்துற மாதிரி பேசினே?'' என்று பாலு கோபப்படவும்.

பீதாம்பரம் தன் தலையை குனிந்து கொண்டு, ''சாரி'' என்றான்.

''நீ கிளம்பு. உன்கிட்டே நாங்க யாரும் பேசுற மூடிலே இல்லை'' என்று பாலு பீதாம்பரத்தை அங்கிருந்து கிளப்பினான்.

இதற்கு மேல் அங்கிருந்தால் அனைவரும் தன்னை வார்த்தையால் குதறுவது பத்தாது என்று கையால் பேசும் அபாயம் ஏற்படலாம் என்று பயந்து போன பீதாம்பரம் அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் சென்றதும் நண்பர்கள் அனைவரும் தங்கள் ஆதங்கத்தை கொட்டினர்.

''எப்படிடா இப்படி இருக்கான்? படிக்கிற காலத்தில் இப்படித் தான் இருந்தான். சரி அது அறியாத வயசுன்னு மன்னிச்சு விட்டோம். வளர்ந்த பிறகும் அப்படியேவா இருப்பான்?''

"பிறவிக் குணம். மாறாமல் அப்படியே இருக்கான் என்று வைச்சுக்கிட்டாலும் மனசிலே நினைக்கிறதை வெளியே சொல்லக் கூடாதுங்கிற அளவு கூடவா வளராது?"

"நல்லவேளை இவனை கல்யாணத்திற்கு கூப்பிடலை" என்று ஆளுக்கொரு வசனமாய் கூறி தங்களது மனக் கொதிப்பை வெளியிட்டனர்.

ஆனால் கண்ணனோ அமைதியாய் இருந்தான். உள்ளுக்குள் உடைந்து போனான்.

'கடையில் வைத்து மனைவி தன்னை அவமதித்தாள் என்றால், இங்கே தன்னுடன் பழகியவன் அவமதிக் கிறான்.

எதற்காக திருமணம் என்ற ஒன்று என் வாழ்வில் நடந்தது? மேலும் மேலும் அவமானப்பட்டு கூனிக் குறுகி போவதற்காக?

எங்களது திருமணத்தினால் ராதிகாவிற்கு சந்தோஷ மில்லை. எனக்கும் அவமானத்துக்கு மேல அவமானமா வந்து சேருது.

யாருக்காக இந்தத் திருமணம் நடந்தது? யாரை திருப்திப்படுத்த நான் திருமணம் செய்து கொண்டேன்? என் குடும்ப உறுப்பினர்களையா?

இன்றைக்கு வேண்டுமானால் அவர்கள் சந்தோஷப் படலாம். ஆனால் இன்னும் சிறிது நாட்கள் கழித்து உண்மை தெரிய வந்தால்? அப்பொழுது அவர்களும் தானே வருந்துவார்கள்' என்று நினைத்துப் பார்த்தவ னுக்கு அடுத்து தான் என்ன செய்ய வேண்டும் என்று ஒன்றும் புரியவில்லை.



கண்ணன் நண்பர்களின் புறம் பார்வையை திருப்பாது அந்த உணவகக் கூடத்தில் வந்து சென்று கொண்டிருந் தவர்களை வேடிக்கை பார்ப்பதாக பாவனை செய்து கொண்டிருந்தான்.

"கண்ணா!" என்று அவனது நண்பர்கள் அழைத்தும் அவன் அவர்கள் புறம் திரும்பவில்லை.

அவனைச் சமாதானப்படுத்துவதற்கு பாலு தான் ஏற்ற ஆள் என்று உணர்ந்த மற்ற இரு நண்பர்களும் அவர்களிடம் விடைபெற்று சென்றனர். பாலுவும் கண்ணனும் மட்டுமே தனித்திருந்தனர்.

"வாடா கண்ணா காபி குடிக்கலாம்" என்று அவனை அந்த உணவகக் கூடத்தில் காபி கிடைக்கும் இடத்தின் அருகே பாலு கூட்டிச் சென்றான்.

அங்கே சென்றதும் கண்ணன் தன் உள்ளக் குமுறல் களை வெளியிட ஆரம்பித்தான்.

"நான் என்னோட ஆயுசுக்கும் அவமானப்படணு மாடா? இந்த பீத்தல்ஸ் வெளியே சொன்னான். மத்தவங்க மனசிலே இப்படித் தானே நினைச்சிருப் பாங்க?" என்று கேட்டதும்.

"அவன் ஏதோ உளறினாங்கிறதுக்காக ஏன்டா எல் லோரையும் சந்தேகப்படுறே?" என்று பாலு அவனை கோபமாகக் கேட்க,

"கண்டிப்பா எல்லோரும் மனசிலே அப்படித் தான் நினைச்சிருப்பாங்க" என்று கண்ணன் உறுதிபடக் கூறவும்,

"அப்படின்னா நீ என்னையும் சந்தேகப்படுறியாடா? நானும் அப்படி நினைப்பதாகவா நினைக்கிறே?" என்று

பாலு கடுப்புடன் கேட்க, கண்ணன் அமைதியாக இருந்தான்.

"சொல்லுடா? கேட்கிறேன் இல்ல..." என்று பாலு கண்ணனை வற்புறுத்தவும்,

"உனக்கு உண்மை தெரிஞ்சதால நீ அப்படி நினைக்க மாட்டே" என்று கண்ணன் பதில் கூறினான்.

"என் மேல ரொம்ப நல்ல அபிப்ராயம் வைச்சிருக்கேடா! எப்போல இருந்துடா உன் மனசு கருப்படிக்க ஆரம்பிச்சது?" என்று பாலு உஷ்ணமாகக் கேட்டதும்,

"வெளியிலே இருக்கிற கருப்பு கொஞ்சம் கொஞ்சமா உள்ளேயும் பரவிடுச்சு" என்று சொன்ன கண்ணன் விருட்டென்று அந்த இடம் விட்டு நகர்ந்தான்.

அவன் சென்றதும் பாலு அந்த காபி கடைக்கு சென்று இரண்டு காபி வேண்டுமெனக் கூறி பணம் செலுத்தி விட்டு வந்து அதே இருக்கையில் அமர்ந்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து காபி வந்தது. அதை கொண்டு வந்து வைத்த அந்த ஊழியன், 'ஒருத்தனுக்கு இரண்டு காபியா? இல்லை வேறு யாரும் வருவார்களா?' என்பது போல் பார்த்துவிட்டு அகன்றான்.

கண்ணன் திரும்பவும் அந்த இடத்திற்கு வருவான் என்ற நம்பிக்கையில், பாலு இரு காபி வரவழைத்தான். அவன் வருவானா மாட்டானா என்ற சந்தேகப்படாமல் அவன் வருவான் என்று உறுதியாக நம்பியதால் பாலு அவனை பார்வையால் தேடும் வேலையை செய்ய வில்லை.



அவன் தன் கைப்பேசியை ஆராய்ந்து கொண்டு அமர்ந்திருந்தான். காபி வந்த உடன் நிமிர்ந்து கூடப் பார்க்காமல் அதை எடுத்து பருகுவதற்கு தன் வாய் அருகே கொண்டு போக அதை ஒரு கை பறித்தது.

'வந்துட்டான்!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட பாலு அப்பொழுதும் நிமிராமல் அடுத்த டம்ளரை எடுத்துப் பருக ஆரம்பித்தான்.

அந்தக் காபியை பருகி முடிக்கும் வரை கண்ணனும் பாலுவும் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை.

"சாரிடா மச்சான்" என்று கண்ணன் மன்னிப்பு கேட்டும் கூட பாலு ஒன்றும் பேசாது அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அவனை நெருங்கி அமர்ந்த கண்ணன், "நான் தான் சாரி கேட்கிறேன் இல்ல" என்று அவனது தோள் மேல் கை போட்டு அவனது முகத்ததை தன் புறம் திரும்ப,

"சீ சீ! மேல இருந்து கையை எடு. பார்க்கிறவனுங்க நம்மளை! தப்பா நினைச்சுக்கப் போறாங்க. காதலியை கொஞ்சுற மாதிரி கொஞ்சுறே. எனக்கு இப்போ தான் வீட்டிலே பொண்ணு பார்த்துக்கிட்டு இருக்காங்க.

பொண்ணு வீட்டுக்காரன் எவனாச்சும் இதைப் பார்த்தான்... அவ்வளவு தான். மாப்பிள்ளை ஒரு மாதிரி என்று ஊருக்குள்ளே கதை பரப்பிடுவானுங்க. உனக்கு பரவாயில்லை. கல்யாணம் ஆகிடுச்சு. எதுக்கு நீ நாலு அடி தள்ளியே உட்காரு!" என்று சொன்னதும்,

கண்ணன் சிரித்துக் கொண்டே சற்று நகர்ந்து அமர்ந் தான்.

"இப்ப சொல்லுடா. என்னடா உன் பிரச்சனை?" என்று பாலு கேட்டதும்,

"ஒண்ணுமில்லையே" என்று கண்ணன் மறுத்தான்.

"டேய்! உன்னை எனக்கு தெரியாதா? உன்னை நல்லாப் புரிஞ்சு வைச்சிருக்கிறதால தான் நீ கோபமா எழுந்து போனாலும் உனக்கும் சேர்த்து காபி வாங்கி வைச்சிருந்தேன்" என்று பாலு அவனை வற்புறுத்தினான்.

"ம்ம்ம்..." என்று இழுத்தவன் சிறிது தயக்கத்திற்கு பின்பு தனது கடையில் வைத்து ராதிகா நடந்து கொண்ட முறையை விளக்கினான்.

"அவ பிரண்ட்ஸுக்கு எங்க கல்யாணம் தெரியக் கூடாதுன்னு நினைக்கிறாடா. அப்படின்னா அவ என்னை எந்த அளவுக்கு வெறுக்கிறாள் என்று பாரு" என்று கவலையுடன் மொழிந்தவன் நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினான்.

"என்ன செய்யுறதுன்னு தெரியலை. வருங்காலத்தை நினைச்சா கவலையா இருக்கு. கல்யாணம் முடிஞ்ச அடுத்த நாள் என்கிட்டே கல்யாணத்திலே உச்சரிச்ச மந்திரங்களை உணர்ந்து உச்சரிச்சேன். என்னோட இன்ப துன்பத்திலே பங்கெடுத்துக்குவேன் என்று சொன்னாள். நானும் சந்தோஷப்பட்டேன். ஆனா இன்னைக்கு இப்படி..." என்று கண்ணன் வருத்தப்பட,

"சரியாகிடும்டா கண்ணா" என்று பாலு நண்பனை தேற்றினான்.



ஐந்து நிமிடங்கள் கடந்த போது கண்ணன் பாலுவிடம், "நம்ம பீத்தல்ஸ் நம்பர் தாடா. அவன்கிட்டே ஒரு சாரி சொல்லணும்" என்றான்.

"சாரியா? அவன்கிட்டவா?"

"ஆமாடா பாலு. அவன் பேசினது தப்புன்னாலும் நம்ம பிரண்ட்ஸ் பதிலுக்கு கேட்ட கேள்வியும் தப்பு தானே?"

"அவனுங்க கோபத்திலே கேட்டுட்டாங்கடா, இல்லைன்னா இப்படிப் பேசக் கூடியவங்களா என்ன?"

"காரணம் ஆயிரம் இருக்கலாம்டா பாலு. அதுக்காக தப்பு சரி ஆகிடாது. நான் ஒரு சாரி சொல்லிடுறேன்."

"எனக்கு தெரிஞ்ச கண்ணன் இப்படி தான்டா யோசிப்பான்" என்று கண்ணனை பாராட்டிய பாலு. "பீத்தல்ஸ்கிட்டே சாரி சொல்லிப் பாரு. அப்பவாச்சும் செஞ்ச தப்பு அவனுக்கு உறைக்கட்டும்" என்று கூறி பீதாம்பரத்தின் கைப்பேசி எண்ணிற்கு அழைப்பு வித்தான்.

கண்ணனும் பீதாம்பரமும் போனில் மாறி மாறி சாரி என்று சொல்லிக் கொண்டனர். அவனிடம் பேசிய பிறகு கண்ணனின் முகத்தில் ஒரு தெளிவு வந்தது.

"என்னடா கண்ணா இப்ப கொஞ்சம் பெட்டரா ஃபீல் பண்ணுறியா? மனசை போட்டு அலட்டிக்காதே. எல்லாமே சீக்கிரத்தில் சரியாகிடும்" என்று பாலு கூறியதும் கண்ணன் அகலமாக புன்னகைத்தான்.

நண்பர்கள் இருவரும் அந்த ஷாப்பிங் மாலை விட்டு வெளியேறி அவரவர் வேலையை பார்க்க விடை பெற்றுச் சென்றனர்.

# 13

பாலுவிடம் இருந்து விடைபெற்ற கண்ணன் நேராக தன்னுடைய சொந்தக் கடையின் கட்டிட வேலை நடக்கும் இடத்திற்கு சென்று அதைப் பார்வையிட்டான்.

அங்கிருந்து கடைக்கு செல்லும் வழியில் பசிக்கிறது என்று ஹோட்டல் ஒன்றின் முன் வண்டியை நிறுத்தினான். வடை சாப்பிட்டுவிட்டுச் செல்லலாம் என நினைத்தான்.

அதே காரணத்துக்காக ராதிகாவும் அதே ஹோட்டலில் ஏற்கனவே அமர்ந்திருந்தாள்.

அவள் பசிக்காக அங்கே செல்லவில்லை. தாகத்திற்கு பழச்சாறு அருந்துவதற்கும், வீட்டிற்கு திரும்பிச் செல்வதற்கு நேரம் கடத்த வேண்டும் என்பதற்காகவும் அங்கே சென்றாள்.

கண்ணன் வடை கேட்க சர்வர் அது இல்லை என்றதும், ஒரு தோசை கொண்டு வரச் சொன்னான்.

அவன் ராதிகாவை கவனிக்கவில்லை. ஆனால் ராதிகா அவனை கவனித்து விட்டாள்.

ராதிகாவிற்கு தன்னை கணவன் கடையில் பாதியில் விட்டுச் சென்ற போது ஏற்பட்ட கோபம் கோயிலின் அமைதியில் சிறிது கரைந்திருந்தது. அதனால் கணவன் அருகில் சென்று அமர்வோமா என்று எண்ணினாள்.



எழுந்து அவனை நோக்கி நடக்க இருந்த சமயம், அவன் எதிரே காலியாய் இருந்த இருக்கையில் ஒரு பெண் வந்து அமரவும் ராதிகா மீண்டும் தன் இடத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

கண்ணன் சுற்றும் முற்றும் வேடிக்கை பார்க்காமல் அந்த ஹோட்டலின் சாப்பாட்டிற்கான விலைப்பட்டியலை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டு இருந்தான். அதனால் அவன் ராதிகாவை கவனிக்கத் தவறினான்.

சர்வர் தோசையை கொண்டு வந்து தந்ததும் கண்ணன் கடமையாய் தன் தோசையை சாப்பிட்டான். ராதிகா அவனை மென்று கொண்டு இருந்தாள். அதாவது திட்டிக் கொண்டிருந்தாள்.

'நிமிர்ந்து பார்த்தால் என்ன குறைஞ்சா போயிடுவார். மெனு கார்டில் இருந்து இப்போ யாராச்சும் கேள்வி கேட்டு பரிசு கொடுக்கப் போறாங்களா என்ன? அதை எதுக்கு உத்து உத்து பார்க்கணும்? ஒரு போன் போட்டுப் பார்ப்போம்' என்று எண்ணிக் கொண்டே தனது பர்ஸில் இருந்த போனனை வெளியே எடுத்தாள்.

கணவனது எண்ணை தேடி எடுத்து அழைக்கப் போகும் நேரம், 'இவ்வளவு நேரம் ஆகியும் இவருக்கு என்னை கூப்பிட்டுப் பேசணும் என்று தோணுச்சா? நாம மட்டும் ஏன் பேசணும்?' என்ற எண்ணம் எழுந்ததும் அழைக்கும் எண்ணத்தை கைவிட்டாள்.

அவனை பார்த்துக் கொண்டே அந்தப் பழச்சாறை அருந்தினாள். பழச்சாற்றின் மீது கவனம் வைக்காது கணவனின் மீதே பார்வையை வைத்ததில் பழச்சாறு அவளது கையில் சிந்தியது. அதனால் கை கழுவச் சென்றாள்.

கை கழுவி வந்தவளின் முன் சர்வர் பில்லை நீட்டினான்.

எவ்வளவு என்று பார்த்து விட்டு பணம் கொடுப்ப தற்காக பர்ஸை தேட... அது மேஜையில் இல்லை. கீழே குனிந்து தேடினாள். அங்கேயும் இல்லை. அவளை பதட்டம் சூழ்ந்தது.

'நாம பர்ஸ் கொண்டு வந்தோமா இல்லையா?' என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

அவளது கையில் இருந்த அலைபேசி 'நீ பர்ஸ் கொண்டு வந்தாய்!' என்பதை அவளுக்கு உணர்த்தியது.

'அச்சோ! கை கழுவப் போகும் போது டேபிளில் விட் டுட்டுப் போயிட்டேனோ? அல்லது அவரை பார்த்துக் கிட்டே பர்ஸை கோட்டை விட்டுட்டேனா? அதில் பணம் எவ்வளவு வைச்சிருந்தேன்? அவர் கூடப் போகிற தாலே அதிகமா பணம் தேவையில்லைன்னு நினைச்சு இருநூறு ரூபாய் எடுத்துட்டு வந்தேன்.

அதனால பர்ஸ் தொலைஞ்சதால பெருசா நஷ்டம் இல்லை. ஆனா இப்போ ஜூஸுக்கு பணம் கொடுக் கணுமே? எப்படிக் கொடுக்கிறது?' என்று அவள் விழித்துக் கொண்டு நிற்க...

''என்னம்மா பேந்த பேந்த முழிக்கிறே?'' என்று அந்த சர்வர் கேட்டான்.

''பணம் இ...ல்...லை'' என்று அவள் திக்க,

''ஆளைப் பார்த்தால் டீசன்டா இருக்கே? சாப்பிட வரும் போது காசு கொண்டு வர மாட்டியா?'' என்றான்.

''நான் பர்ஸ் எடுத்திட்டு வந்தேன். கை கழுவப் போயிட்டு வந்து பார்க்கிறேன். பர்ஸை காணோம்.''



''என்னது பர்ஸை காணோமா? ஏம்மா யாராச்சும் பர்ஸை அனாதையா டேபிளில் வைச்சிட்டுப் போவாங்களா? இப்போ நீ குடிச்ச ஜூஸுக்கு எப்படி பணம் கொடுப்பே?''

'எங்க வீட்டுக்காரர் அங்கே உட்கார்ந்து இருக்கிறார் என்று சொன்னால், ரெண்டு பேருக்குள்ளே அப்படி என்ன தகராறு? தனித் தனியா உட்கார்ந்து இருக்கீங்க என்ற கேள்வி வரும்' என நினைத்து.

''எனக்கு தெரிஞ்சவரு அங்கே இருக்கார்.'' என்று மூன்று வரிசை தள்ளி இருந்த கண்ணனை சுட்டிக் காட்டியவள்,

''அவர்கிட்டே பணம் வாங்கித் தரேன்'' என்றாள்.

அவள் சுட்டிக்காட்டிய திசையில் அந்த சர்வர் பார்க் கும் பொழுது கண்ணன் வெளியே செல்ல ஆரம்பித்தான்.

''அச்சச்சோ! அவர் போகிறாருங்க. நான் போய் அவரை நிறுத்துறேன்'' என்று ராதிகா நகர முயல,

''இரும்மா. நீ அப்படியே போயிட்டேன்னா முத லாளிக்கு நான் தானே பதில் சொல்லணும்'' என்ற சர்வர்.

இன்னொரு சர்வரிடம், ''அந்த சாரை நிறுத்து, இந்த அம்மாக்கு தெரிஞ்சவராம். பில்லுக்கு பணம் கொடுக் கிறாரான்னு கேளு'' என்றான்.

அந்த சர்வர் கண்ணனின் பின்னே விரைந்து, ''சார் அந்த அம்மா உங்களுக்கு தெரிஞ்சவங்களா? அவங்க பீல்லை நீங்க கட்டுறீங்களா?'' என்றதும்,

கண்ணன் யாரென்று கூட திரும்பிப் பார்க்காமல், ''எனக்கு அந்த அம்மாவை தெரியாது. நீங்க அவங்க கிட்டேயே பில்லை வாங்கிக்கோங்க'' என்று கூறிவிட்டு வெளியேறினான்.

அவன் தன் முன்னே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பெண்ணின் பில்லை பற்றி அந்த சர்வர் கேட்பதாக எண்ணிக் கொண்டான்.

அவன் திரும்பிப் பார்க்காமலேயே வெளியேறவும் ராதிகாவிற்கு பயம் வந்தது.

"என்ன சொன்னார்?" என்று அங்க வந்த சர்வரிடம் ராதிகா விசாரிக்க.

"உங்களை தெரியாதுன்னு சொல்லிட்டார்" என்று கூறி விட்டு அவன் அகன்றான்.

அவளுக்கு ஜூஸ் கொண்டு வந்து தந்த சர்வர், "ஏம்மா? பணம் இல்லாமல் ஜூஸை குடிச்சிட்டு பில்லுக்கு பணம் கேட்டா பக்கத்து டேபிள் ஆளை கை காட்டுறியா? உன்னை மாதிரி எத்தனை பேரை பார்த்திருப்பேன். நீ ஓசி கிராக்கியா?" என்று திட்ட ராதிகாவிற்கு அவமானமாக இருந்தது.

ராதிகாவிற்கு வியர்த்து வழிய ஆரம்பித்தது. இதற்கு முன் இது மாதிரி யாரிடமும் தலை குனிந்து நிற்க வில்லை என்பதால் உடல் நடுங்க ஆரம்பித்தது.

'தன் தந்தைக்கு அழைத்து விஷயம் சொல்லி உதவி கேட்போமா?' என நினைத்தாள்.

'ஆனால் அவரால் உடனே இங்கு வந்து சேர முடியாது. அதற்குள் இந்த சர்வர் எத்தனை பேரிடம் தன்னை காட்டி என்னென்ன பேச்சு பேசுவானோ?' என்று தோன்றவும்,

வேறு வழியில்லாமல் கண் முன் சென்று கொண்டிருப்பவனை தனது கைப்பேசியின் மூலம் அழைத்தான்.



கண்ணன் தனது கைப்பேசி சிணுங்கவும் எடுத்துப் பார்த்தான். அழைப்பு ராதிகாவிடம் இருந்து வந்திருக்கிறது என்று பார்த்ததும், "ப்ச், இவகிட்டே இப்போ பேசுற மூடு எனக்கு இல்லை" என்று சொல்லிக் கொண்டு தனது வண்டியை நோக்கிப் போனான்.

அவன் எடுக்கவில்லை என்றதும் கவனிக்கவில்லையோ என நினைத்து ராதிகா மீண்டும் ஒரு முறை அழைத்தாள். இம்முறை அவன் அவளது அழைப்பை துண்டிக்கவும் ராதிகா நொந்து போனாள். கூடவே கணவன் மீது ஆத்திரமும் அதிகரித்தது.

ஆனாலும் வேறு வழியின்றி மூன்றாவது முறையாக அழைத்தாள்.

வண்டியை உதைத்து அதில் ஏறி அவன் நூறடி கூடச் சென்று இருக்க மாட்டான். அவன் கைப்பேசி சிணுங்கவும், வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு கைப்பேசியை எடுத்துப் பார்த்தான்.

மூன்றாவது முறையாக ராதிகாவிடம் இருந்து அழைப்பு வரவும், 'ஒரு வேளை கயலுக்கு ஏதாவது... அதான் ராதிகா திரும்ப திரும்ப அழைக்கிறாளா?' என நினைத்துக் கொண்டே,

கண்ணன் அலைபேசியை இயக்கி காதில் வைத்து, "ஹலோ ராதிகா!" என்க,

"எனக்காக பீல் பே பண்ண மாட்டீங்களா?" என்று அழுகுரலில் கேட்டாள்.

அவள் தன் தங்கை கயலை பற்றி ஏதோ சொல்லுவாள் என்று எதிர்பார்த்தவனுக்கு அவள் ஏதோ பில்லை பற்றி பேசவும் ஒன்றும் புரியவில்லை.

"என்ன பீல்? என்ன சொல்லுறே?"

"பர்ஸ் தொலைஞ்சிடுச்சு. நீங்க ஏன் என்னை தெரியாதுன்னு சொல்லீட்டீங்க?" என்று அவள் அழுகுரலில் கேட்க,

அப்பொழுதும் அவனுக்கு அவள் சொல்ல வருவது புரியவில்லை.

'இவளை எப்போ நான் தெரியாதுன்னு சொன்னேன்? பர்ஸ் தொலைஞ்சிடுச்சுன்னு சொல்லுறாள். எங்கே இருக்கிறாள்?' என்று எண்ணிக் கொண்டே,

"நீ இப்போ எங்கே இருக்கே?" என்று கேட்டான்.

"ஹோட்டலில்..." என்று அவள் அழுகையுடன் கேவியதும்,

அவனுக்கு புரிய ஆரம்பித்தது. அவள் இதுவரை பேசிய அனைத்தையும் கோர்த்துப் பார்த்தான்.

"நான் சாப்பிட வந்த அதே ஹோட்டலுக்கு நீயும் வந்து இருக்கியா? பில்லுக்கு கொடுக்க பணம் இல்லாலம் என்கிட்டே வாங்கிக்கச் சொன்னியா?" என்று கேட்டதும்,

"ஆ...மா..." என்று அழுகையுடனே திக்கினாள்.

"ஓ காட்! நீ அங்கேயே இரு. நான் வரேன்" என்றவன் தனது வண்டியை அப்படியே ஓரங்கட்டி பூட்டிவிட்ட அந்த ஹோட்டலை நோக்கி ஓடினான்.

அவன் உள்ளே நுழைவதற்கு எடுத்துக் கொண்ட இரு நிமிடங்கள் கூட ராதிகாவிற்கு நெடிய காலமாக இருந்தது.



அவன் உள்ளே நுழைந்து அவளை தேடி வந்து அந்த சர்வரிடம் பணம் கொடுக்கவும்,

அந்த சர்வர், "ஏன் சார் அப்பவே இந்தம்மா கேட்டுச்சு. தெரியாதுன்னு சொல்லிட்டுப் போயிட்டியே. நான் வேற விஷயம் தெரியாமல் இந்தம்மாவை திட்டிட்டேன்" என்றதும்,

"எனக்கு எதிரே ஒரு பொண்ணு சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. அவங்களுக்கான பில்லை என்கிட்டே கேட்கிறார் என்று நினைச்சிட்டேன்" என்று கண்ணன் விளக்கினான்.

"சரி சார்" என்று கூறிக் கொண்டே அந்த சர்வர் நகர்ந்தார்.

'வா ராதிகா போகலாம்' என்று அவளைப் பார்த்துக் கூற வேண்டிய தேவையின்றி அவள் வெளியே சென்று கொண்டிருந்தாள்.

பில்லுக்கான தொகையை செலுத்திவிட்டதால் கண்ணனும் அவளை பின் தொடர்ந்தான்.

"நீ இப்போ வீட்டுக்கு போறியா? இல்லை என் கூட கடைக்கு..." என்று அவன் தொடங்கவும்.

"வீட்டுக்கு போறேன்" என்றாள்.

அவளது கண்களில் இருந்து வழியும் நீரைப் பார்த்தவன் தனது கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்டி, "பொது இடம் ராதிகா, அழாதே!" என்று சொல்லிக் கொண்டே,

தனது பர்ஸை எடுத்து அப்படியே அவள் கையில் கொடுத்து, "ஆட்டோவில் போ!" என்றான்.

அவன் தன் பர்ஸை அப்படியே தூக்கிக் கொடுத்துவிட்டதால், "உங்களுக்கு பணம் வேண்டாமா?" என்று கேட்டாள்.

கணவன் மீது கோபம் இருந்த போதும் சற்று முன் தனக்கு நேர்ந்த அவமானம் அவனுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற அக்கறையில் கேட்டாள்.

"என்கிட்டே வேற பணம் இருக்கு" என்றவன்,

சாலையில் சென்று கொண்டிருந்த ஆட்டோவை நிறுத்தி அவளை அதில் ஏற்றி அனுப்பி வைத்தான். அவள் அவனை பார்த்து ஒரு தலை அசைப்பு கூட இல்லாமல் ஆட்டோ ஏறிச் சென்றதும்.

"கண்ணா இன்னைக்கு நீ வீட்டுக்கு போனதும் செத்தடா மகனே!" என்று வாய்விட்டுப் புலம்பினான்.

'இவ்வளவு நேரம் வீட்டுக்கு போகாமல் கடையிலா இருந்தாள்? என்ன செஞ்சுக்கிட்டு இருந்தாள்?' என்று குழம்பியவன் தனது கடைக்கு சென்றான்.

## 14

ராதிகா வீடு சென்று இறங்கிய போது கயல் மட்டுமே தனித்திருந்தாள். தேவகி அதே தெருவில் இருக்கும் கோவிலுக்கு சென்றிருந்தார்.

தனியாக வந்து இறங்கிய ராதிகாவை பார்த்த கயல், "என்ன ராதிகா நீ மட்டும் தனியா வந்து இறங்கிறே? அண்ணன் வரலியா?" என்று கேட்டாள்.



"அவருக்கு வேலை இருக்காம்." என்று தலையை குனிந்து கொண்டே அவள் பதில் அளிக்க,

கயல் தன்னை தாண்டிச் செல்ல முயன்ற ராதிகாவின் கைப்பிடித்து தடுத்து அவளது முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். அதில் தெரிந்த வாட்டமும் அழுததற்கான அடையாளமும் கண்டு குழம்பிய கயல்.

"என்ன ஆச்சு ராதிகா?" என்று பதட்டத்துடன் வினவ,

"ஒண்ணுமில்லை அண்ணி" என்றாள்.

"நீங்க வெளியே எங்கெல்லாம் போனீங்க?"

"கடைக்கு போனோம்."

"கடையிலா இவ்வளவு நேரம் இருந்தீங்க?"

"இல்லை நாங்க போன அஞ்சு நிமிஷத்திலேயே அவருக்கு வேலை வந்திடுச்சுன்னு அவர் வெளியே போயிட்டார்."

"அஞ்சே நிமிஷத்திலே விட்டுட்டு போறதுக்கு எதுக்கு கூட்டிட்டுப் போகணும்? அப்படின்னா இவ்வளவு நேரம் நீ எங்கே இருந்தே?"

"கோவிலில்" என்று மட்டும் ராதிகா சுருக்கமாக பதில் அளிக்க...

அதற்கு மேல் கேட்பது அநாகரிகம் என நினைத்த கயல், "சரி நீ போய் உங்க ரூமிலே ரெஸ்ட் எடு. அம்மா கிட்டே நான் சமாளிச்சுக்கிறேன்" என்று சொல்லவும்.

"தாங்க்ஸ் அண்ணி" என்று கூறிய ராதிகா மாடியேறினாள்.

அவள் மேலே சென்று மறைந்ததும் கயல் தன் அண்ணனின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

"எங்கேண்ணா இருக்கீங்க?"

"கடையிலே இருக்கேன் கயல்."

'ராதிகா வந்துட்டாளா?' என்று அவன் கேட்க வாய் திறப்பதற்குள், "நீங்க கடையவே கட்டிக்கிட்டு அழ வேண்டியது தானே?" என்று கயல் பொரிந்தாள்.

"என்ன கயல் இவ்வளவு சூடா இருக்கே?"

"உங்களுக்கு கல்யாணம் ஆகி வருஷக் கணக்கு... ஏன் மாசக் கணக்கு கூட ஆகலை. வெறும் நாலு நாள் தான் ஆகி இருக்கு. உங்களுக்கு அது ஞாபகம் இருக்கா? வெளியே போகிற வேலை இருந்தால் ராதிகாவை எதுக்கு கூட்டிக்கிட்டு போனீங்க? பாவம் அவள், இவ்வளவு நேரமும் கோவிலில் உட்கார்ந்துக்கிட்டு சோர்ந்து போய் வந்தாள்."

"பத்திரமா வந்திட்டாளா?" என்று அவன் பதட்டம் நீங்கியவனாகக் கேட்க,

"வந்திட்டாள். அழுதிருப்பா போல! என் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கலை."

"ஏதாச்சும் சொன்னாளா?"

"கோவிலுக்கு போனதா மட்டும் சொன்னாள். நான் அதுக்கு மேலே கேட்டுக்கலை. இப்போ உங்ககிட்டேயும் கேட்கப் போறதில்லை. சீக்கிரமா வீட்டுக்கு வந்து அவளை சமாதானம் பண்ணுங்க" என்று சொல்லி அழைப்பை துண்டித்தாள்.

'இவ்வளவு நேரமும் எங்கே போயிருந்தாள்? பத்திரமா வீடு போய் சேர்ந்தாளா?' என்ற இரண்டு கேள்விகளுக்கும் கயல் மூலம் விடை தெரிந்து விட்டதால் கண்ணன் நிம்மதியாக உணர்ந்தான்.



அதே சமயம் தங்களுக்கு இடையே நடந்த எதையும் ராதிகா வெளியே சொல்ல விரும்பவில்லை என்கிற விஷயம் அவனுக்கு சந்தோஷத்தை கொடுத்தது.

அவன் அன்று இரவு வீடு திரும்பிய போது வீடே நிசப்தமாக இருந்தது. தன்னிடம் இருந்த இன்னொரு சாவி கொண்டு கதவைத் திறந்து அவன் சப்தம் எழுப்பாமல் மாடி ஏறினான்.

படுத்துத் தூங்கி இருப்பாளோ என்று எண்ணிக் கொண்டே தங்களது அறைக்குள் வர... அவள் படுக்கையில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் தன் பக்கம் பார்வையை திருப்பாததில் இருந்தே அவளது கோபத்தின் அளவு அவனுக்கு புரிந்தது.

உடை மாற்றிவிட்டு குளியலறைக்கு சென்று கை, கால், முகம் கழுவிவிட்டு வந்தான்.

"சாப்பிட்டியா ராதிகா?" என்று கேட்டான்.

பதில் மட்டும் அல்ல. ம்ம் என்றோ ம்ஹூம் என்றோ சிறு ஒலி கூட அவளிடமிருந்து கிளம்பவில்லை.

'பொண்டாட்டியை சமாளிக்கிறது ரொம்பப் பெரிய வேலையோ?' என்று எண்ணிக் கொண்டே அவளது அருகில் சென்று அமர, அவள் விருட்டென்று எழுந்து போய் தொலைக்காட்சியை அணைத்தாள்.

அவனும் எழுந்து போய் தொலைக்காட்சியை மீண்டும் இயக்கினான். அவளது கையை பிடித்துக் கொண்டு,

''நாம பேசுறது வெளியே கேட்க வேண்டாம் ராதிகா. அதனால டிவி ஓடட்டும்'' என்றான்.

''தெரியாமல் நடந்துடுச்சு. சாரி. நான் கொஞ்சம் திரும்பிப் பார்த்திருந்தால் தப்பு நடந்து இருக்காது. பூ பார்க்காமல் போயிட்டேன்'' என்று அவன் வருந்தி மன்னிப்புக் கேட்க.

அவள் அமைதியாக குனிந்து கொண்டு நின்றாள்.

அவன் அவளது முகவாயை நிமிர்த்தி, ''அதான் சாரி கேட்கிறேன் இல்ல!'' என்று கூறினான்.

அவன் அவளது முகத்தை நிமிர்த்தினாலும் அவளது கண்கள் கணவனைப் பாராது தரையை பார்த்துக் கொண்டு இருந்தன.

அவளை தன் அருகே இழுத்து, ''மைமா ப்ளீஸ்'' என்று அவன் கெஞ்சவும், அவனது மார்பு மேல் சாய்ந்து கொண்டு உடைந்து அழுதாள்.

''அந்த சர்வர் என்னை பார்த்து ஓசி கிராக்கியான்னு கேட்டான் தெரியுமா? பணம் கொண்டு வராமல் பக்கத்து டேபிள் ஆளை பார்த்து கை காட்டுவியான்னு கேட்டான்'' என்று அவள் விக்கிக் கொண்டே கூறினாள்.

அவள் அந்த நேரம் எந்த அளவிற்கு அவமானப்பட்டு இருப்பாள் என்று நினைத்துப் பார்த்தவனுக்கு அளவிட முடியாத வருத்தம் உண்டானது. அவளை இறுக்கி அணைத்து ஆறுதல் அளிக்க முயன்றான்.

''சாரிம்மா. சாரி மைமா'' என்பதையே திரும்ப திரும்பக் கூறவும்,

சரி என்பது போல் தலை அசைத்து விட்டு அவனிடம் இருந்து பிரிந்து நடந்தாள்.



ஏன் அதுக்குள்ளே போகிறாய் என்பது போல் அவன் தன் கைகளை நீட்டிக் கொண்டு நின்றான். அவள் அதைக் கவனிக்கவில்லை.

'ஏன்டா அவளை போக விட்டாய் மடையா?' என்று அவனது மனம் அவனை கேள்வி கேட்டது. அவன் மனதுக்குள் பாட ஆரம்பித்தான்.

இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் தான் என்ன?

ஏன் அவசரம்? என்ன அவசரம்? நில்லு பொண்ணே!

இன்னும் பேசக் கூடத் தொடங்கலை

என் நெஞ்சமும் கொஞ்சமும் நிறையலை

இப்போ என்னை விட்டுப் போகாதே என்னை விட்டுப் போகாதே

இப்போ மழை போல நீ வந்தா கடல் போல நான் இருப்பேன்.

இவன் அவளை நினைத்து உருகிக் கொண்டு நின்றான். ஆனால் அவளுக்கு இது போல் எதுவும் தோன்றவில்லை போல. அவள் நேராக படுக்கைக்கு சென்று ஒரு ஓரமாய் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

கண்ணன் தன் மனதிற்குள் 'இனிமேல் யார் மீது என்ன கோபம் இருந்தாலும் போனை எடுக்காமல் மட்டும் இருக்கக் கூடாது. எடுத்து நாம பேசாது போனாலும் பரவாயில்லை. எதிர்பக்கத்தில் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதை காது கொடுத்து கேட்க வேண்டும்' என்று தீர்மானித்தான்.

நான் முதல்ல நினைத்தது போல் இன்னைக்கு கயலுக்கு ஏதாச்சும் வலி வந்து எமர்ஜென்ஸி ஏற்பட்டு

இருந்தால்... கண்ணனுக்கு நினைக்கவே பயமாக இருந்தது.

தொலைக்காட்சியை அணைத்து விட்டு வந்தான். 'சாப்பிட்டாளான்னு தெரியலையே. அப்ப கேட்டப்போ பதில் சொல்லலை' என்று நினைத்துக் கொண்டு அவள் அருகில் சென்று பார்க்க, அவள் தூங்கி இருந்தாள்.

கண்ணன் கடையில் சொல்லாமல் கொள்ளாமல் போன கோபத்தில் அவள் கடையை விட்டு வெளியேறி நடந்தது ஒரு தெருவோ இரண்டு தெருவோ அல்ல, சில கிலோமீட்டர்.

பழக்கமில்லாத நடை அவளை சோர்வுறச் செய்தது. மணியும் இரவு பத்தரைக்கு மேல் என்ற போது தூக்கம் வருவது இயல்பு தானே!

கண்ணனுக்கும் சாப்பிடும் மனநிலை இல்லை என்பதால் அவனும் படுத்து தூங்க ஆரம்பித்தான்.

ஹோட்டலில் ஏற்பட்ட பிரச்சனையால் கடையில் கண்ணனுக்கு ஏற்பட்ட அவமானமும் ராதிகாவுக்கு கண்ணன் மீது வந்த கோபமும் ஒத்தி வைக்கப்பட்டது. அது அவர்களது மனதில் மறையவில்லை. தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

## 15

இரவு ஒரு மணிக்கு ஏதோ சப்தம் கேட்பது போல் இருக்க... கண்ணன் கண்விழித்துப் பார்த்தான். விளக்கு



எரிந்து கொண்டிருந்தது. ராதிகா அறையை உருட்டிக் கொண்டிருந்தாள்.

''என்ன ராதிகா பண்ணுறே?'' என்று எழுந்து கொண்டே அவன் கேட்டதும்.

கண்ணன் விழித்து விட்டான் என்று தெரிந்து கொண்டவள் அவன் அருகில் வந்து, ''நீங்க டிபார்ட்மெண்டல் ஸ்டோர் தானே வைச்சு இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''உனக்கு எதுக்கு அப்பப்போ இந்த சந்தேகம் வருது?'' என்று அவன் கேட்டதும்,

''உங்க ரூமை பார்த்தால் அப்படித் தெரியலை. அதான் கேட்டேன்'' என்றாள்.

''ஏன் மளிகை கடை வைச்சிருக்கிறவன் ரூம் எப்படி இருக்கணும்? அது போகட்டும். நடு ராத்திரியிலே உனக்கு எதுக்கு இந்த ஆராய்ச்சி?'' என்று கேட்டவன், நிமிர்ந்து சுவர் கடிகாரத்தில் மணியை பார்த்து விட்டு, ''ராத்திரி ஒரு மணிக்கு எதுக்கு எலி மாதிரி உருட்டிக்கிட்டு இருக்கே?'' என்று கேட்டான்.

''எலி மாதிரி உருட்டி என்ன பிரயோஜனம்? ஒரு பிஸ்கட் பாக்கெட்... ஒரே ஒரு பிஸ்கட் பாக்கெட் கிடைக்கலையே!'' என்று அவள் பரிதாபமாகச் சொல்லவும்.

அவனுக்கு விஷயம் புரிந்து சிரிக்க ஆரம்பித்தான்.

''உனக்கு பசிக்குதா? அதான் பிஸ்கட் தேடுறியா? நாளைக்கே ஒரு பெட்டி பிஸ்கட்டை வீட்டிலே கொண்டு வந்து இறக்கச் சொல்லுறேன். ஒரு பெட்டி போதுமா?'' என்று கிண்டலாகக் கேட்க,

"அது நாளைக்கு. இப்போ எனக்கு பசிக்குதே! அதுக்கு என்ன செய்யுறது?" என்று பரிதாபமாகக் கேட்டாள்.

அவன் சிரிப்பை நிறுத்திவிட்டு, "கீழே போய் பிரிஜ்ஜிலே ஏதாச்சும் இருக்கான்னு பாரு. நிகிலுக்கு வாங்கி வைச்சது ஏதாவது இருக்கும்" என்றதும்,

கீழே செல்வதற்காக நான்கு எட்டு வைத்தவள், "நீங்களும் வாங்களேன்" என்று கண்ணையும் மூக்கையும் சுருக்கிக் கொண்டு கெஞ்சவும், கண்ணன் சிரித்துக் கொண்டே அவளுடன் கீழே சென்றான்.

ஃப்ரிஜ்ஜை திறந்து பார்த்தவள், அங்கே இருந்த சாம்பாரை பார்த்ததும் பேசாமல் இரண்டு தோசை வார்த்துச் சாப்பிடலாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

அதனால் அவள் தோசை மாவையும் சாம்பாரையும் வெளியே எடுக்கவும், "என்னாச்சு பிஸ்கட் சாப்பிடுற ஐடியாவை கைவிட்டுட்டியா? தோசை சுடப் போறியா? அப்படின்னா எனக்கும் ரெண்டு தோசை சுடு" என்றான்.

"ஏன் உங்களுக்கும் பசிக்குதா?"

"உனக்கும் பசிக்கும் போது எனக்கு பசிக்காதா?"

"நான் ஜூஸ் மட்டும் தானே குடிச்சேன். நீங்க தோசை சாப்பிட்டீங்க தானே?"

"ஏய்! கண்ணு போடாதே. என் பசிக்கு ஒரு தோசை எந்த மூலைக்கு? எனக்கு செம பசி. அதனால எனக்கும் ரெண்டு தோசை வேணும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே.

பின்னாடி யாரோ நடந்து வரும் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். கயல் நடந்து வருவதைக் கண்டவன்.



"என்னாச்சு கயல்?" என்று பதட்டமாய் விசாரித்தான்.

"ஒண்ணுமில்லண்ணா. தண்ணி குடிக்க வந்தேன்."

தண்ணீரை அவளுக்கு எடுத்துக் கொடுத்துக் கொண்டே, "நைட்டே எடுத்து வைச்சுக்கலியா? லைட்டை போட்டுட்டு வர வேண்டியது தானே? இருட்டுக்குள்ளே ஏன் நடந்து வரே?" என்று அக்கறையுடன் அவன் கடிந்து கொள்ள,

"எப்பவும் எடுத்து வைப்பேண்ணா. நேத்து மறந்துட்டேன்" என்று கூறிய கயல்,

"இந்நேரம் நீங்க ரெண்டு பேரும் இங்க என்ன பண்ணுறீங்க?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

கண்ணன் தன் மனைவியின் காலை வாரும் நோக்கோடு, "அது ஒண்ணுமில்லை கயல். என் ரூமை நடு ராத்திரியிலே யாரோ உருட்டுற சத்தம் கேட்டுச்சு. நான் கூட திருடன் ஏதோ புகுந்திட்டானோன்னு பயந்துட்டேன்.

நல்லா கண்ணை முழிச்சுப் பார்த்தால் ஒரு ரெண்டு கால் எலி எங்க ரூமை உருட்டிக்கிட்டு இருந்துச்சு, நம்ம கோடவுன் என்றாலும் அரிசி, பருப்புன்னு இருக்கும். அதுக்கு எலி வர சான்ஸ் இருக்கு.

எங்க ரூமிலே என்னடா இருக்குன்னு நான் யோசிச்சேன். இது மார்டன் எலி போல! அதனால அது பிஸ்கட் தேடி வந்திருக்கு. நான் என்ன சின்ன புள்ளையா பிஸ்கட் எல்லாம் வைச்சு சாப்பிடுறதுக்கு?

பாவம். அந்த எலிக்கு ஒண்ணும் சிக்கலை என்றதும் நம்ம வீட்டு கிச்சனை உருட்ட வந்திடுச்சு" என்று கூறி கண் அடிக்க,

அவர்கள் இருவருக்குள்ளும் பிரச்சனை தீர்ந்து விட்டது என்பதை புரிந்ததால் கயல் சந்தோஷமாக நகைத்தாள்.

ராதிகா இடுப்பில் கை ஊன்றிக் கொண்டு கணவனை முறைத்தவாறே, ''நான் கிச்சனை உருட்டுறேனா? அப்படின்னா நீங்க என்ன சார் பண்ணறீங்க?'' என்று இடக்காகக் கேட்க,

''எனக்கு கீழே போக பயமா இருக்குன்னு கெஞ்சிக் கேட்டாள் கயல். போனாப் போகுதுன்னு துணைக்கு வந்தேன். இப்போ வீராவேசமா என்ன கேள்வி கேட்கிறாள் பாரு?'' என்று கண்ணன் வியக்க.

''அப்போ நீங்க எனக்கு துணைக்கு வந்தீங்க. உங்களுக்கு தோசை வேண்டாம். அப்படித் தானே? ஆனா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி யாரோ ரெண்டு தோசை கேட்டாங்களே? அது யாரு?'' என்று ராதிகா வினவினாள்.

''நீ என்னை பார்க்க வைச்சு சாப்பிட்டால் உனக்கு வயிறு வலி வரும் என்று பயந்து போய் என்னை கம்பெல் பண்ணியதால எனக்கும் ரெண்டு தோசை போடுன்னு சொன்னேன். உனக்கு வயிறு வலி வராதுன்னா எனக்கு தோசை வேண்டாம்'' என்று அப்பொழுதும் அவன் மனைவியை கிண்டல் அடிக்க.

கயல் இதற்கு மேல் தான் அங்கே இருக்க வேண்டாம் என்று தீர்மானித்து சிரித்துக் கொண்டே நகரவும், கண்ணன் வரவேற்பறையின் விளக்கை போட்டு வெளிச்சம் உண்டாக்கினான்.



கயல் அறைக்குள் சென்று மறைந்ததும் விளக்கை அணைத்தவன் சமையலறைக்கு வந்து, ''தோசை ரெடியா?'' என்று கேட்டான்.

''மாத்தி மாத்தி பேசுற இந்த வாயை...'' என்று ராதிகா பல்லைக் கடிக்க,

''கூல் மைமா...'' என்று கூறியவன் இரு தட்டுகளையும் இரு டம்ளர்களில் தண்ணீரையும் எடுத்து வைத்தான். அவர்கள் சாப்பிட்டு முடித்து மாடியேறினர்.

''இனிமேல் நிம்மதியா தூக்கம் வரும்'' என்று சொல்லிக் கொண்டே ராதிகா படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

சாப்பிட்ட உடனே படுக்க முடியாததால் கண்ணன் சாய்ந்து அமர்ந்து தன் எதிர்கால வாழ்க்கையை எண்ணி யோசிக்க ஆரம்பித்தான்.

'இவளை நான் எந்த வகையில் சேர்ப்பது? என் வீட்டு மனிதர்களை தன் வீட்டு ஆட்களாக நினைத்து இயல்பாகப் பழகுகிறாள். என்னுடன் ஒரு பிரண்டு மாதிரி வார்த்தைக்கு வார்த்தை மல்லுக்கு நிற்கிறாள்.

ஆனால் கடையில் வைச்சு ஏன் அப்படிச் செய்தாள் என்று தெரியவில்லை. இவள் ஒரு புரியாத புதிரா?

அவளிடம் உட்கார்ந்து வெளிப்படையா பேசணும். அதுக்கான மனதைரியம் வர மாட்டேங்குதே' என்று நினைத்து பெருமூச்சு விட்டான்.

படுத்திருந்தாலும் ராதிகாவும் தூங்காமல் தங்கள் வாழ்க்கையை பற்றி தான் யோசித்துக் கொண்டிருந்தாள்.

'இவருக்கு என்னை பிடிக்குமா? மைமான்னு செல்லப் பேரெல்லாம் வைச்சுக் கூப்பிடுறார். அது செல்லப் பேரா? இல்லை விவகாரமான பேரா? ஒரு வேளை மை மான்ஸ்டர் என்பதை சுருக்கி மைமான்னு வச்சிட்டாரா? (monster என்றால் அசிங்கமான பயப்படுத்த கூடிய ஒரு பெரிய கற்பனையான உருவம்)

கல்யாணமான அடுத்த நாளே நான் உணர்ந்து மந்திரம் சொல்லி உனக்கு தாலி கட்டினேன் என்று சொன்னார். அதனால எப்படியும் என்னை வெளியே போகச் சொல்லப் போறதில்லை என்ற துணிச்சலில் நானும் அவருடன் நல்லா வாயாடிக்கிட்டு இருக்கேன்.

ஆனா வாழ்க்கை முழுசும் இப்படியே ஓட்டிவிட முடியாதே! அவர்கிட்டே உட்கார்ந்து பேசணும். ஆனா அதுக்கான மனதைரியம் இருக்கா? இல்லையே!

கடவுளே சீக்கிரமா நல்ல வழி காட்டுப்பா!' என்று வேண்டிக் கொண்டாள்.

மொத்தத்தில் இருவருமே அடுத்தவரிடம் பேசுவதற்கு தங்களுக்கு மனதைரியம் தேவை என்று புலம்பிக் கொண்டிருந்தனர். நான்காம் நாள் இரவு இவ்வாறு கழிந்தது.

மறுநாள் காலை கண்ணன் எழுந்து தயாராகி சென்றபின் ராதிகா தேவகியிடம் வந்து, ''அத்தை நானும் சந்தியாவும் போத்தீஸ் போகலாம் என்று முடிவு பண்ணினோம். போகட்டுமா?'' என்று கேட்டாள்.

''நீ எனக்கு தகவல் சொல்லுறியா? இல்லை அனுமதி கேட்கிறியா?'' என்று தேவகி கேட்டதும்,



ராதிகா பயந்து போய், ''அனுமதி கேட்கிறேன் அத்தை'' என்றாள்.

''அனுமதி கேட்கிறதா இருந்தால் உன் தங்கச்சிக் கிட்டே பேசும் முன்னாடி என்கிட்டே கேட்டு இருக்கணும். போகணும் என்று முடிவு எடுத்த பின்னாடி சொன்னால் அது தகவல்'' என்று வார்த்தையால் குட்டிவிட்டு.

''போயிட்டு வா'' என்று அனுமதியும் வழங்கினார்.

அப்பாடா என்ற நிம்மதி உணர்வுடன், ''ஓ.கே. அத்தை'' என்று கூறி நகரப் போனவளை அவரது அடுத்த கேள்வி தடுத்து நிறுத்தியது.

''இப்போ எதுக்கு துணிக் கடைக்கு போகப் போறீங்க? கல்யாண ஜவுளி இப்போ தானே ரெண்டு வீட்டிலும் வாங்கி இருக்கோம்.''

''அது வந்து அத்தை... அவருக்கு சட்டை வாங்கலாம் என்று...'' என அவள் தயங்கவும்.

இது புது மணத் தம்பதியின் விஷயம். இதில் தலையிட வேண்டாம் என்று முடிவு செய்த தேவகி, ''சரி போ'' என்று கூறினார்.

''நீங்க அவர்கிட்டே ஒண்ணும் சொல்லாதீங்க. ப்ளீஸ் அத்தை'' என்று அவள் கெஞ்ச,

''கண்டிப்பா நான் சொல்ல மாட்டேன்'' என்று தேவகி வாக்குறுதி அளித்தார்.

''தாங்க்ஸ் அத்தை'' என்று சொல்லிய ராதிகா தி.நகருக்கு உற்சாகத்துடன் கிளம்பினாள்.

# 16

சந்தியா கல்லூரிக்கு கூடச் செல்லாமல் போத்தீஸ் வாசலில் வந்து காத்திருந்தாள். ராதிகா வந்ததும்,

''ஏன் ராது நான் ஃப்ரீயா இருக்கிற அன்னைக்கு டிரஸ் வாங்கலாம் இல்ல. இன்னைக்கே வாங்கணும் என்று என்ன கட்டாயம்?''

''இதுவே லேட் சந்தியா, உங்க மாமா நமக்கு முதல் நாளே டிரஸ் கொடுத்து அசத்தினார் இல்ல. நான் இன்னைக்காவது கொடுக்க வேண்டாமா? நானும் கல்யாணத்துக்கு முன்னாடியே வாங்கி வைச்சிருக்கணும். கோட்டை விட்டுட்டேன்'' என்று சலித்துக் கொண்டாள்.

அவர்கள் ரெடிமேட் சட்டை வாங்குவதற்கு நான்காவது மாடிக்கு சென்றார்கள்.

கடை ஊழியர், ''என்ன சட்டை மேடம் வேணும்? புல் ஹேண்டா ஆஃப் ஹேண்டா?'' என்று கேட்டார்.

சந்தியா ராதிகாவை கேள்வியாய் பார்த்தாள்.

ராதிகா சந்தியாவின் காதில், ''மாமா புல் ஹேண்ட் ஷர்ட் போடுறாரா? இல்லை ஹாஃப் ஹாண்டா?'' என்று கேட்டாள்.

'இதுக் கூடத் தெரியாமல் நீயெல்லாம்...' என்பது போல் மேலிருந்து கீழ் வரை சந்தியா தன் அக்காவை பார்வையிட...



ராதிகா கணவனை மனக்கண்ணில் கொண்டு வந்து பார்த்து, ''முழுக்கை சட்டை வேணும்'' என்றாள்.

''என்ன சைஸ் வேணும்?'' என்று அவர் அடுத்த கேள்வியை கேட்க,

''சைஸா? அச்சோ தெரியாதே!'' என்று ராதிகா புலம்ப,

சந்தியா எரிச்சலுடன், ''அக்கா அது கூடத் தெரிஞ்சுக்காமல் எதுக்கு வந்தே?'' என்று கேட்டாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் ராதிகா விழித்துக் கொண்டு நிற்க...

''அக்கா நம்ம அப்பாவுக்கு போன் பண்ணுவோம். கல்யாணத்துக்கு அப்பா தானே டிரஸ் வாங்கினார். அதனால அவருக்கு தெரிஞ்சிருக்கும்'' என்று கூறிய சந்தியா அவர்களது தந்தையின் கைப்பேசிக்கு அழைப்பு விடுத்தாள்.

''ஹலோ அப்பா!''

''சந்தியா நீ காலேஜில் இருந்தா போன் பண்ணுறே? என்ன விஷயம்?'' என்று ஏகாம்பரம் குழப்பத்துடன் கேட்க.

''இல்லைப்பா நான் காலேஜ் போகலை. காலேஜ் போகிற வழியிலே உங்க சீமந்த புத்திரி போன் பண்ணி வரச் சொல்லிட்டாள்.''

''ராதிகாவா? ஏன் என்னாச்சு?'' என்று அவர் பதைக்க,

''விஷயம் பெருசா இல்லைப்பா. உங்க செல்லப் பொண்ணு அவ வீட்டுக்காரருக்கு டிரஸ் வாங்க போத்தீஸுக்கு வந்திருக்காள். கூடவே என்னையும் இழுத்தடிக்கிறாள்'' என்றாள்.

பெரிய மகள் தன் கணவனுக்கு துணி வாங்க வந்திருக்கிறாள் என்ற விஷயத்தை கேள்விப்பட்ட ஏகாம்பரம் நிம்மதியாக உணர்ந்தார்.

''எங்களுக்கு மாமா சட்டையோட அளவு தெரியலை. கல்யாணத்துக்கு டிரஸ் வாங்கினீங்க இல்ல... உங்களுக்கு மாமாவோட ஷர்ட் சைஸ் தெரியுமா?''

''இல்லையேம்மா. நான் பணமா கொடுத்தேன். மாப்பிள்ளையே டிரஸை வாங்கி கொடுத்தனுப்பினார். நான் அதை அப்படியே சபையிலே கொடுத்திட்டேன்.''

''நல்ல அப்பா! நல்ல பொண்ணு! நான் போனை வைக்கிறேன்'' என்று சலித்துக் கொண்டே சந்தியா அழைப்பை துண்டித்தாள்.

''இப்போ என்ன செய்யலாம் ராது?''

''நாம பேசாமல் துணி எடுத்து கொடுத்திடுவோம். எக்ஸ்ட்ராவா இருபது பாயிண்ட் இருக்கிற மாதிரி வாங்கிக்கலாம்'' என்று கூறிய ராதிகா தங்கையை இழுத்துக் கொண்டு ஐந்தாவது மாடிக்கு சென்றாள்.

துணிகளை அலசி ஆராய்ந்து எடுத்து முடித்து கடையை விட்டு அவர்கள் வெளியேறும் போது சில மணி நேரங்கள் கடந்திருந்தன. சந்தியா அங்கிருந்தே கல்லூரிக்கு சென்று விட்டாள்.

கண்ணன் மதியச் சாப்பாட்டிற்கு வரும் போது அவனுக்கு வாங்கிய புதுத் துணியை கொடுக்கலாம் என்று ராதிகா காத்துக் கொண்டு இருந்தாள். அன்றைக்கு அவன் மிகத் தாமதமாகவே வந்தான்.



அவன் சாப்பிட்டு முடித்து மாடிக்கு வந்ததும் படுக்கையில் சாய்ந்து அமர்ந்தவாறே தொலைக்காட்சியில் செய்தி சேனலை பார்த்துக் கொண்டு இருந்தான்.

''என்னங்க!''

''ம்ம்ம்.''

''எ...ன்ன்..னன...ங்ங்..கக'' என்று இம்முறை ராதிகா அழுத்திக் கூற,

தொலைக்காட்சியில் இருந்து பார்வையை திருப்பாமலே, ''சொல்லு மைமா'' என்றான்.

''அப்படி அந்த நியூஸ் சேனலில் என்ன இருக்கோ? எல்லா ஆம்பிளைங்களும் விழுந்து விழுந்து அதையே பார்க்கிறீங்க...'' என்று அவள் சலித்துக் கொண்டாள்.

''பொம்பளைங்க சீரியல் பார்க்கிறீங்க இல்ல...''

''நான் ஒண்ணும் சீரியல் பார்க்கிறது கிடையாது.''

''அப்ப நீ பொம்பளை இல்லை'' என்று அவன் சட்டென்று கூறி விட,

''என்னது?'' என்ன அவள் காளி அவதாரம் எடுத்தாள்.

''இல்லை மைமா நீ சின்ன பொண்ணுன்னு சொல்ல வந்தேன்'' என்று சமாளித்தான்.

சில வினாடிகளுக்கு பின். ''நான் உங்களுக்கு என்ன கொடுத்தாலும் வாங்கிக்குவீங்களா?'' என்று கேட்டாள்.

''அடி ஒண்ணைத் தவிர என்ன கொடுத்தாலும் வாங்கிக்குவேன்.''

அவனை முறைத்துக் கொண்டே அவள் தன் அலமாரியில் இருந்த பார்சலை எடுத்து வந்து நீட்டி, ''நான் உங்களுக்காக இதை வாங்கினேன்'' என்றாள்.

அவன் கவரில் இருந்து வெளியே எடுக்காமல் உள்ளே பார்த்து உதட்டைப் பிதுக்க,

''உங்களுக்கு பிடிக்கலையா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டான்.

அவன் ''அது...'' என்று இழுக்க, அவளோ ஆற்றாமை யுடன் பொரிய ஆரம்பித்தாள்.

''நானெல்லாம் சட்டை எடுத்துக் கொடுத்தா உங்களுக்கு பிடிக்குமா? நான் இதை செலக்ட் பண்ண எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? செலக்ஷனை விடுங்க. அதை வாங்க என் பணம் கொடுத்தேன் இல்ல... அதை எப்படியெல்லாம் சேர்த்து வைச்சேன் தெரியுமா? எங்க அப்பா எனக்கு கொடுக்கிற பாக்கெட் மணியை கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வைச்சேன். ஐஸ்கிரீம், சாக்லேட் எல்லாம் வாங்கிச் சாப்பிடணும் என்று தோணும்.

இருந்தாலும் பிரண்ட்ஸ் யாருக்காச்சும் கிஃப்ட் கொடுக்கணும் என்றால் அப்பாகிட்டே போய் கேட்க முடியாதுன்னு நினைச்சு அதெல்லாம் சாப்பிடாம மனசை கட்டுப்படுத்தி கஷ்டப்பட்டு சேர்த்து வைச்ச காசு தெரியுமா?

அதிலே வாங்கின சட்டையை பார்த்து பிடிக்கலைன்னு சொல்லுறீங்க. இப்ப நீங்க போட்டிருக்க சட்டை மட்டும் ரொம்ப நல்லா இருக்கோ?

சர்க்கஸிலே பஃபூன் போடுற மாதிரி இருக்கு. இப்படி ஒரு கலரை மனுஷன் போடுவானா? ஆனா இவர் அதையே போடுவாராம். நான் எடுத்துக் கொடுத்ததை



போடுறதுக்கு கசக்குதாம்'' என்று அவள் இடைவிடாமல் பொரிந்து கொண்டிருந்தாள்.

அவன் தன் இரு கால்களையும் மடக்கி மடி மீது ஒரு தலையணையை வைத்து அதில் தன் வலது கையை ஊன்றி அதில் கன்னம் சாய்த்துக் கேட்டுக் கொண்டிருந் தான்.

அவள் பொரிவதை நிறுத்தியவுடன், ''அவ்வளவு தானா? ஹய்யோ! என்னம்மா பேசுறே? பேசாமல் உன்னை சீரியலுக்கு டயலாக் எழுதப் போகச் சொல்ல லாம் போல!'' என்று அவள் வம்பிழுக்க,

''நான் புலம்புறதை பார்த்தா உங்களுக்கு கிண்டலா இருக்கா?'' என்று வெகுண்டாள்.

''ஏய் லூசு!''

''என்னது லூசா?''

''பின்ன சுரிதாரை கொண்டு வந்து கொடுத்து என்னைப் போடுன்னு சொல்லுறே. அதை சொல்ல வரதுக்குள்ளே முழு பக்க டயலாக் பேசுற உன்னை புத்திசாலின்னா கூப்பிடுவாங்க?'' என்று சொல்லி,

அவள் தந்த பார்சலை அவளிடமே நீட்ட, அவள் வேகமாக அதை வாங்கிப் பார்த்தாள்.

உள்ளே சந்தியாவிற்கென்று வாங்கிய சுரிதார் இருந்தது. ஐயோ! என்று அவள் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

''உண்மையை சொல்லு மைமா. நீ உனக்கு டிரஸ் வாங்கிட்டு எனக்கு வாங்கினதா பிலிம் காட்டுறியா?''

"ப்ச் இல்லைங்க. இது சந்தியா அவளுக்கு வாங்கின டிரஸ். நான் உங்களுக்கு வாங்கினது அவகிட்டே போயிடுச்சு போல!" என்று சொல்லிக் கொண்டே தங்கையை அழைப்பதற்காக தனது கைப்பேசியை ஹேண்ட் பேகில் இருந்து எடுத்தாள்.

சந்தியாவிடம் இருந்து பத்து அழைப்புகள் வந்ததாக அதில் பதிவு செய்யப்பட்டு இருந்தது.

"அச்சச்சோ! அங்கேயே பார்சல் மாறிடுச்சுன்னு பார்த்திட்டு கூப்பிட்டு இருப்பா போல. நான் கவனிக்கலை" என்று கூறிக் கொண்டே தங்கைக்கு அழைக்க, அவள் ராதிகாவின் அழைப்பை ஏற்கவில்லை.

"போனை எடுக்க மாட்டேங்கிறாள். கிளாஸ் நடக்குது போல! நான் அப்புறமா பேசிக்கிறேன்" என்றாள்.

"அக்காவும் தங்கச்சியும் என்னமோ செய்யுங்க. எனக்கு டிரஸ் வாங்கினதுக்கு தாங்க்ஸ்" என்றான்.

"அச்சச்சோ!" என்று அவள் அலறவும்,

"என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

"நீங்க அன்னைக்கு எனக்கு புடவை கொடுத்த போது நான் தாங்க்ஸ் சொல்லலையே."

"அவ்வளவு தானே! இப்போ சொல்லு."

"தாங்க்ஸ்!" என்று அவள் கூறவும்,

'இப்படிச் சொல்லிக்கிறதுக்கு நீயும் நானும் சொல்லாமலே இருந்து இருக்கலாம்' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

"எனக்கு உன் பேங்க் அக்கவுண்ட் நம்பர் எழுதித் தா."



"என் நம்பர் உங்களுக்கு எதுக்குங்க?"

"உங்க அப்பா தந்த மாதிரி உனக்கு நான் பாக்கெட் மணி தர வேண்டாமா?"

"ஹை ஜாலி!" என்று உற்சாகமாகக் கூவியவள் முகத்தை பரிதாபமாக வைத்துக் கொண்டு,

"முன்னாடியெல்லாம் பத்து ரூபாய்க்கு ஐஸ்க்ரீம் கிடைச்சது. இப்பெல்லாம் என்னென்னவோ எசன்ஸ், நட், கேரமல் என்று போட்டு ஐஸ்க்ரீம் விலையை நூத்துக் கணக்கிலே ஏத்திட்டாங்க தெரியுமா? அதனால நீங்களாச்சும் ஐஸ்கிரீம் சாப்பிட தனியா பாக்கெட் மணி தருவீங்களா?" என்று கேட்டாள்.

'அல்பமே!' என்பது போல் பார்த்தவன், "ஆயிரக் கணக்கிலே பணம் போடுறேன். உனக்கு எவ்வளவு வேணுமோ அவ்வளவு ஐஸ்க்ரீம் வாங்கிக்கோ" என்றான்.

"ஹைய்யா! அப்படின்னா நானும் நிகிலும் நாளைக்கே ஐஸ்க்ரீம் வாங்கிச் சாப்பிடுவோம்" என்று உற்சாகமானாள்.

'கூட செட்டு சேர்த்து இருக்கும் ஆளைப் பாரு!' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே கீழே இறங்கிச் சென்றான்.

## 17

மறுநாள் காலையில் அவள் ஐஸ்க்ரீம் கடைக்கு போக திட்டம் போட தேவகி அவர்கள் இருவரையும் அருகில் இருக்கும் கோவிலுக்கு சென்று வருமாறு கூறினார்.

''அது ரொம்பப் பெரிய கோவில் ராதிகா. உங்க கல்யாணத்தன்னைக்கு அந்தக் கோயிலில் கும்பாபிஷேகம் நடந்தது. அதனால் நம்மால போக முடியலை. அதான் நீங்க ரெண்டு பேரும் இன்னைக்கு போயிட்டு வாங்க. நேத்தே கண்ணன்கிட்டே சொன்னேன். ஆனா அவன் மறந்தாலும் மறந்திருப்பான். நீ ஞாபகப்படுத்து'' என்றார்.

சரி என்று கூறி மேலே வந்தவள் கண்ணனின் உடையை பார்த்ததும் 'ஆ!' என்று வாயை பிளந்து கொண்டு நின்றாள்.

''என்னாச்சு? எதுக்கு இப்படி வாயை பிளக்கிறே? வாய்க்குள்ளே கால் கிலோ பருப்பை போடலாம் போல. ஒரு டப்பா ஐஸ்க்ரீமை திணிக்கலாம் என்று சொன்னால் சந்தோஷப்படுவியோ?'' என்ற அவனின் கிண்டலுக்கு கூட பதில் வராது போகவும், அவன் அவள் கண் முன்னே சொடக்கு போட்டான்.

''என்னங்க இப்படி ஆகிடுச்சு?'' என்று அழுகுரலில் அவள் இழுக்க,

''எப்படி ஆகிடுச்சு?'' என்று கேட்டான்.

''ப்ச்சு நான் நேத்து உங்களுக்கு ஒரு சட்டை வாங்கினேன் இல்ல... அதுவும் இதே கலர். கட்டம் கூட இப்படி இருந்த மாதிரி தான் ஞாபகம் பேண்ட் கலர் கூட இதே! உங்களை யார் முன்னாடியே இதை வாங்கிப் போடச் சொன்னது?'' என்று எகிறினாள்.

''இது நல்ல கதையா இருக்கே! நீ வந்து வாங்கிக் கொடுக்கிற வரைக்கும் நான் சட்டை வாங்காமல் இருக்க முடியுமா என்ன?''



ஏமாற்றத்தில் சுருங்கிப் போன முகத்துடன் அமர்ந்திருந்தவளிடம், ''இது நீ வாங்கின டிரஸ் தான்'' என்றான்.

''என்னது??!!'' என்று வேகமாகத் திரும்பியவள், ''ஆனா நான் துணி இல்ல வாங்கினேன்'' என்று குழப்பத்துடன் கேட்க,

''நீ வாங்கின துணி என் மச்சினிச்சி உதவியுடனும் டெய்லர் உதவியுடனும் ஓவர் நைட்டிலே சட்டையா மாறிடுச்சு'' என்று அவன் கண்ணடித்துக் கொண்டே கூற,

''முந்திரிக் கொட்டை சந்தியா. அதை எதுக்கு உங்ககிட்டே கொடுத்தாள்?'' என்று தங்கையை திட்டியவள்,

''நான் இதை எப்படி எல்லாம் கொடுக்கணும் என்று பிளான் பண்ணி இருந்தேன் தெரியுமா? அப்படியே ரொமான்டிக்கா கொடுக்கணும் என்று நினைச்சேன். கல்யாணம் ஆகாத சின்ன பொண்ணு கூட கூட்டணி வைச்சுக்கிட்டா இப்படித் தான் நடக்கும்'' என்று நக்கல் பண்ணினாள்.

''என்னது ரொமான்டிக்கா கொடுக்கணும் என்று நினைச்சியா? எது? நேத்து சாக்லேட், ஐஸ்க்ரீம் சாப்பிடாமல் சேர்த்து வைச்சேன் என்று மூக்கை உறிஞ்சுக்கிட்டு நூத்துக் கிழவி மாதிரி ஒப்பாரி வைச்சியே! அதுக்கு பேரு தான் ரொமான்டிக்கா கொடுக்கிறதா? உனக்கு இது தெரியாமல் போச்சேடா கண்ணா!'' என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போதே அவனது கைப்பேசி சிணுங்கியது.

அதை எடுத்துப் பேசியவன். ''ராதிகா எனக்கு அவசர வேலை வந்தி[illegible]சு. நான் கிளம்பறேன்'' என்றான்.

''அத்தை நம்ம ரெண்டு பேரையும் பக்கத்திலே கும்பாபிஷேகம் நடந்த கோவில் ஒண்ணு இருக்காமே? அதுக்கு போகச் சொன்னாங்க.''

''கோவிலுக்கா? நான் பதினொன்றரை மணிக்கு வரேன். வந்து கூட்டிட்டு போகிறேன்'' என்றவன் அவசரமாக கிளம்பிச் சென்றான்.

கோவிலுக்கு என்பதால் தேவகி ராதிகாவை புடவை காட்டச் சொன்னார். சொன்னபடியே கண்ணன் பதினொன்றரை மணிக்கு வந்தான். அவர்கள் இருவரும் ஆட்டோ ஒன்றை பிடித்து கோவிலுக்கு சென்றனர்.

கண்ணனும் ராதிகாவும் சாமியை தரிசித்து விட்டு பிராகாரத்தை சுற்ற ஆரம்பித்தார்கள்.

அதுவும் முடிந்த பின் அங்கே இருந்த மண்டபத்தில் ஒரு ஓரமாய் அமர நினைத்து அங்கே சென்றார்கள்.

''ஹாய் அத்தான்!'' என்ற குரல் பின்னாலிருந்து ஒலித்தது.

யாரென்று திரும்பிப் பார்க்காமலே கண்ணனுக்கு புரிந்து போயிற்று. அது அவனது அத்தை பெண் மகிளா என்று.

ராதிகா அந்தப் பெண் யாரென்பது போல் தன் கணவனை நிமிர்ந்து பார்க்க,

''என் அத்தை பொண்ணு மகிளா'' என்று கண்ணன் அறிமுகம் செய்து வைத்தான்.

'நீ தானா என் மாமியார் சொன்ன மகிளா' என்று நினைத்த ராதிகா புன்னகை என்ற பெயரில் தன் உதடுகளை இழுத்துப் பிடித்து காண்பித்தாள்.



ராதிகா தன்னை பார்த்து முகமலர்ச்சியுடன் சிரிக்கவில்லை என்பது மகிளாவிற்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

'உனக்கு அவ்வளவு திமிரா?' என்று எண்ணமிட்டாள் ராதிகாவை மட்டம் தட்ட முடிவு செய்தாள்.

ஏற்கனவே கண்ணன் தன்னைத் திருமணம் செய்ய மறுத்ததால் அவன் மீதும் கோபமாக இருந்தவள் அவர்கள் இருவரையும் காயப்படுத்த முடிவு செய்தாள்.

மகிளா திமிராக ராதிகாவை பார்த்து, ''உன் பேர் என்ன?'' என்று கேட்டாள்.

''என் பேர் உங்களுக்கு தெரியாதா? நீங்க என் கல்யாணத்துக்கு வரலியா? இல்ல என் கல்யாணப் பத்திரிகையை பார்க்கலையா?'' என்று ராதிகா இடக்காகக் கேட்க,

''ஊரிலே ஆயிரம் கல்யாணம் நடக்குது. அத்தனை பொண்ணு மாப்பிள்ளை பேரையும் நாம ஞாபகம் வைச்சுக்க முடியுமா என்ன?'' என்றாள்.

நீ எனக்கு அவ்வளவு முக்கியமானவள் இல்லை என்று மகிளா சொல்ல வருவது ராதிகாவிற்கு நன்றாகப் புரிந்தது.

அதனால் ராதிகா மகிளாவிடம், ''அப்படி ஆயிரத்திலே ஒண்ணா நடந்த எங்க கல்யாணத்திலே மாப்பிள்ளையோட பேர் உங்களுக்கு தெரிஞ்சு இருக்குமே? இல்லை அதுவும் தெரியாதா? ஒரு வேளை செலக்டிவ் அம்னீசியாவா?'' என்று கேட்டவள்.

தன் கணவனைச் சுட்டிக் காட்டி, ''இவர் பேர் கண்ணன், நான் மிசஸ். கண்ணன்'' என்று அந்த மிசஸில் ஒரு அழுத்தம் கொடுத்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அதில் மகிளாவின் கோபம் இன்னும் அதிகமாகியது.

'இந்த ராதிகாவுக்கு தான் அழகா இருக்கோம் என்கிற கர்வம் போல! அதான் திமிராப் பேசுறாள். அவ திமிரை இன்னைக்கு அடக்கலை... என் பேர் மகிளா இல்லை' என்று மனதுக்குள் சபதம் எடுத்துக் கொண்டாள்.

''எங்கே இப்படி ஒண்ணா...'' என்று இழுத்தாள்.

''ஒண்ணான்னா என்ன சொல்ல வரே? எனக்கு புரியலை'' என்று ராதிகா சந்தேகம் கேட்க,

''இவர் கூட ஒண்ணா எப்படிக் கிளம்பி வந்தே?'' என்று தனது முந்தைய கேள்வியை விளக்க முயற்சித்தாள்.

''ஏன்? இவர் தானே என் புருஷன்? அவர் கூட வராமல் வேற யார் கூட வரணுங்கிறே?''

''இல்லை. நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா நடந்து வந்தால் செஸ் போர்டு மாதிரி கருப்பு வெள்ளை கட்டமாத் தெரிவீங்களே! அதான் எப்படி இவர் கூட வரச் சம்மதிச்சேன்னு கேட்டேன்.''

''வாயை மூடு. அது உனக்கு தேவை இல்லாத விஷயம்'' என்று ராதிகா பொங்க,

''ஒரு விஷயம் சொல்லியே ஆகணும் ராதிகா. நீ அத்தான் கடையிலே இருந்து எல்லாத்தையும் ஃப்ரீயா வாங்கிக்கலாம். ஆனா உன் கண்ணுக்கு நீ கண் மை போடுறே இல்ல... அது மட்டும் வாங்கத் தேவை



இல்லை. அதான் மொத்த ஸ்டாக்கும் உன் வீட்டிலேயே இருக்கே!'' என்று கண்ணனை சுட்டிக்காட்டி அவள் கேலி பேச,

ராதிகா படு நக்கலாக, ''ஓ! இந்தக் கண் மை டப்பா வாங்க முடியாமல் தான் உங்கம்மா இவருக்கு உன்னை கட்டி வைக்க பிரியப்பட்டாங்களா? நீயும் ஆசைப் பட்டதா கேள்விப்பட்டேன்'' என்று கூறினாள்.

மகிளா கடுப்புடன் ராதிகாவை முறைத்தாள். அதை அலட்சியம் செய்த ராதிகா, ''அவ்வளவு வசதி இல்லாமலா இருக்கீங்க? நான் வேணா எங்க கடையிலே இருந்து மாசா மாசம் உனக்கு ப்ரீயா கண் மை சப்ளை பண்ணச் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள்.

''நீயும் உன் அம்மாவும் எப்படிப் பட்டவங்கன்னு எனக்கு ரொம்ப நல்லாவே தெரியும். இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசினே... மரியாதை கெட்டுவிடும் ஜாக்கிரதை. என் புருஷனைப் பத்திப் பேசுறதுக்கு நீ யாரு? அவர் நிறம் கருப்பா இருக்கலாம். ஆனா அவரு மனசு வெள்ளை. எங்க வீட்டுக்காரர் எனக்கு உசத்தி. அவரைப் பத்தி என் முன்னாடியோ பின்னாடியோ தப்பாப் பேசினதா தெரிஞ்சது...'' என்று ஒரு விரல் காட்டி எச்சரித்தவள், கண்ணனின் கைப்பிடித்து கோவிலுக்கு வெளியே இழுத்துச் சென்றாள்.

நடந்த அத்தனை வாக்குவாதத்திலும் கண்ணன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அவனுக்கு மகிளாவை எப்பொழுதுமே பிடிக்காது. அவளது அலட்டல் தெரிந்ததால் அவளிடம் அதிகமாய் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டான்.

அதனால் அவளிடம் பேச்சுக் கொடுக்க வேண்டாம் என்று எண்ணியே முதலில் அவன் அமைதி காத்தான். ஆனால் அடுத்தடுத்த அவன் பேச வழி இல்லாமல் ராதிகாவே பதிலடி கொடுக்க ஆரம்பித்துவிட்டாள்.

ராதிகா தன்னை உயர்த்திப் பேசியதை கண்ணனால் நம்பக் கூட முடியவில்லை.

'இவளா? இவளா எனக்கு ஆதரவாகப் பேசுவது?' என்று ஆச்சரியப்பட்டுப் போனான். அந்த ஆச்சரியத்தில் வாயடைத்தும் போனான்.

அவனுக்கு ராதிகாவிடம் கேட்டுத் தெரிந்த கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று இருந்தது. வீட்டிற்கு சென்றதும் முதல் வேலையாக அவளிடம் அது விஷயமாக பேசித் தெளிவுபடுத்திக் கொள்ள முடிவு செய்தான்.

அதனால் அவன் அமைதியாகவே ஆட்டோவில் பயணித்தான்.

ராதிகாவிற்கு தன் கணவனை கேவலப்படுத்திய மகிளாவின் மீது இருந்த கோபம், இப்பொழுது கண்ணனின் மீது திரும்பியது.

'என்னைப் பார்த்து என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள் என்பது மாதிரி எதுக்கு இவர் அமைதியாக இருந்தார்? இவர் இப்படிப் பணிஞ்சு போனால் அது அவளுக்கு வசதியாகிடாதா? அதான் அவளும் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுகிறாள்.

வீட்டுக்கு போனதும் முதல்ல இவரைத் திட்டணும்' என்று முடிவெடுத்த ராதிகாவும் ஆட்டோவில் அமைதியாகவே வந்தாள்.



# 18

ராதிகா வீட்டிற்கு சென்று நடக்க வேண்டியதை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள். கண்ணனோ திருமணத்திற்கு முன் தினம் நடந்ததை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான்.

* * *

திருமணத்திற்கு முதல் நாள்...

''அம்மா மண்டபத்துக்கு கிளம்ப எல்லாம் தயாரா எடுத்து வைச்சிட்டீங்களா?'' என்று கயல்விழி கேட்டதும்;

''ஆமா தேவகி. எல்லாத்தையும் ஒரு முறை சரி பார்த்துவிடுவோம். சாயங்காலம் நிச்சயதார்த்தம். காலையிலே கல்யாணம். எதையாச்சும் விட்டுட்டுப் போயிட்டால் வீட்டுக்கு வந்து எடுக்கிறது கஷ்டம்'' என்று ஒரு உறவுக்காரப் பெண்மணி அறிவுரை கூற,

தேவகி அவர் சொல்லியபடி அனைத்தும் எடுத்து வைத்தாயிற்றா என்று சரி பார்க்க ஆரம்பித்தார்.

''கண்ணன் கல்யாணத்தை பத்தி ரொம்ப கவலைப் பட்டியே தேவகி. இப்போ பாரு ஜாம் ஜாம் என்று நடக்கப் போகுது'' என்று அந்த உறவுக்காரப் பொண்ணு சொன்னதும்,

''ஆமாக்கா, நான் வேண்டாத தெய்வமில்லை. கடைசியிலே திருவிடந்தை நித்யகல்யாணப் பெருமாள்

கோயிலுக்கு அவனை கூட்டிட்டுப் போய் வேண்டிட்டு வந்தேன். நல்ல சேதி கிடைச்சிடுச்சு'' என்று தேவகி பூரித்தார்.

''நித்யகல்யாணப் பெருமாளா? அந்தக் கோயில் எங்க இருக்கு? அப்படி என்ன விசேஷம்?'' என்று அந்த உறவினர் கேட்டதும்,

''அம்மா பிரசங்கம் பண்ணப் போறாங்கண்ணா'' என்று கண்ணனின் காதில் கயல் கிசுகிசுத்தாள்.

''உன்கிட்டவா சொல்லுறாங்க. ஏன் அலுத்துக்கிறே. உனக்கு பிடிக்கலை என்றால் உள்ளே போய் ரெஸ்ட் எடு'' என்று தங்கையை அறைக்கு அனுப்பியவன் தாயின் பேச்சை கேட்க ஆரம்பித்தான்.

தேவகி அந்தக் கோயிலின் தல வரலாறை சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு முறை குனி என்ற முனிவரும் அவரது மகளும் சொர்க்கம் செல்ல தவம் இருந்தாங்க. குனி மட்டும் சொர்க்கம் சென்றார். நாரதர் அந்தப் பெண்ணிடம், நீ திருமணமாகாதவள், அதனால் தான் உன்னால சொர்க்கத்துக்கு போக முடியலைன்னு சொல்லி இருக்கார்.

நாரதர் அங்கே இருந்த பிற முனிவர்கள்கிட்டே இந்தப் பொண்ணை யாராவது கல்யாணம் செஞ்சுக்கோங்கன்னு கேட்டாராம்.

காலவரிஷி என்பவர் அவளை திருமணம் செய்து கொண்டு 360 பெண் குழந்தைகளைப் பெற்றாராம்.

காலவரிஷி தன் பொண்ணுங்களை ஏற்றுக் கொள்ளணும் என்று நாராயணனை வேண்டித் தவமிருந்திருக்கார். நாராயணன் வரலை.



ஒரு நாள் ஒரு பிரம்மச்சாரி வந்தானாம். திவ்ய தேச யாத்திரைக்காக வந்ததாக சொல்லி இருக்கான். அவனது தெய்வீக அழகு பெருமாளைப் போலவே இருக்கவே, காலவரிஷி தன் பெண்களை திருமணம் செய்து கொள்ளுமாறு அந்த இளைஞனை கேட்டிருக்கார்.

அவனும் சம்மதம் சொல்லி தினம் ஒரு பெண் வீதம் திருமணம் செய்து கொண்டானாம். கடைசி நாளில் அந்த இளைஞன் தன் சுயரூபம் காட்டி இருக்கான்.

அது வேறு யாருமல்ல. வராஹமூர்த்தி வடிவில் வந்த நாராயணன். அவர் 360 கன்னியர்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பெண்ணாக்கி தனது இடப்பக்கத்தில் வைத்துக் கொண்டு காட்சி தந்தார்.

திருவாகிய லட்சுமியை இடப்புறம் ஏற்றுக் கொண்ட எம்பெருமான் ஆனதால அந்தத் தலம் திருவிடவெந்தை ஆனது. இது அப்படியே காலப்போக்கில் மருவி திருவிடந்தை ஆனது.

இது திருமணத் தடை உள்ளவர்களுக்கு பரிகாரம் பண்ணுற தலம். கிழக்கு கடற்கரை சாலையில் இருக்கு'' என்று சொல்லிக் கொண்டே வந்தவர்.

''கண்ணா கல்யாணத்துக்கு முன்னாடி உன்னை அந்தக் கோயிலுக்கு கூட்டிட்டு போகணும் என்று நினைச்சேன். கயல் வந்த உடனே அவளையும் நிகிலையும் கவனிச்சுகிறதிலே மறந்தே போயிட்டேன். நீ போயிட்டு வந்துடுறியா?'' என்று தயங்கியவாறு கேட்டார்.

''சாயங்காலம் நிச்சயதார்த்தத்தை வைச்சுக்கிட்டு அவனை இப்போ போகச் சொல்லுறியே தேவகி?'' என்ற உறவினரின் கேள்விக்கு.

''அந்தக் கோயில் மூணு மணிக்கு திறந்திடுவாங்க. போய் சாமியை கும்பிட்டு வந்திடலாம். கண்ணன் லேட்டா வந்தாலும் ஒண்ணும் பிரச்சனை இல்லையே. நிச்சயத்துக்கு பொண்ணு சம்பந்திகளும் தானே முக்கியம்'' என்று தேவகி கூறவும்.

''சரிம்மா நான் போயிட்டு வரேன். அப்புறமா உங்களுக்கு அது ஒரு குறையா உறுத்திக்கிட்டே இருக்கும்'' என்று கண்ணன் கூறியதும், தேவகியின் முகம் மலர்ந்தது.

''யார் கூடப் போகப் போறே?'' என்று தேவகி கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவனது நண்பன் பாலு உள்ளே வந்தான்.

''இதோ வந்துட்டானே...'' என்று நண்பனை சுட்டிக் காட்டிச் சொன்னாவன்,

''நான் பாலு கூடப் போயிட்டு வரேன்மா. நீங்க எனக்காக வெயிட் பண்ணாமல் மண்டபத்துக்கு கிளம்பிடுங்க. நாங்க நேரா அங்கேயே வந்துடுறோம்'' என்று கண்ணன் சொன்ன யோசனை.

தேவகிக்கு பிடித்து இருந்ததால் அவர் முக மலர்ச்சியுடன் தலை ஆட்டி தன் சம்மதத்தை தெரிவித்தார்.

''எதிலே கண்ணா போகப் போறே?'' என்று தேவகி கேட்க,

''கால் டாக்ஸி புக் பண்ணுறேன்மா'' என்றான். கயலின் கணவன் சங்கர் இடைமறித்து,

''வேண்டாம் மாப்பிள்ளை. கல்யாணத்துக்காக ஒரு காரும் வேனும் நாம ஏற்பாடு பண்ணியிருக்கோம்



இல்ல. அது வாசலில் நிக்குது. நீங்க காரிலே போங்க. எங்களுக்கு வேன் போதும்'' என்றான்.

''காரும் தேவைப்படும் என்று தானே அதையும் வரச் சொன்னோம்.''

''நாங்க சமாளிச்சுக்குவோம் மாப்பிள்ளை. நீங்க டைம்க்கு போயிட்டு வாங்க'' என்று சங்கர் யோசனை கூறவும், தேவகி கண்ணனை அவ்வாறே செய்யுமாறு கூறினார்.

அதன்படி பாலும் கண்ணனும் அந்த வாடகை காரில் ஏறிக் கிளம்பினார்கள்.

கோவளம் அருகில் உள்ள நித்யகல்யாணப் பெருமாள் கோவிலை அவர்கள் சென்று அடைந்த பொழுது கோவிலைத் திறந்திருந்தார்கள்.

''பெரிய கோவிலா இருக்குடா'' என்று பாலு விமர்சித்தான்.

''மில்க் உன்னை எதுக்கு இங்கே கூட்டி வந்தேன் தெரியுமா?''

''அய்யா ரொம்ப உற்சாகமா இருக்கீங்க போல!''

''கரெக்ட்டா சொல்லிட்டியே! எப்படி?''

''உன்னை எனக்கு தெரியாதாடா? உன் வாயிலே இருந்து என் பேர் 'மில்க்' என்று ஒலிச்சாலே நீ உற்சாகமா இருக்கேன்னு அர்த்தம்.''

அதைக் கேட்டு அகலமாக புன்னகைத்து கண்ணன், ''நான் சொல்ல வந்ததை சொல்லிடுறேன். உன்னை எதுக்கு இங்கே கூட்டி வந்தேன்னா, உனக்கும் சீக்கிரம்

கல்யாணம் நடக்கட்டும் என்று தான்'' என்று கண்ணன் சொன்னதும்,

''நண்பேன்டா!'' என்று நண்பனை சிலாகித்தவன்.

''ரெண்டு தங்கச்சிங்களுக்கு கல்யாணம் முடிஞ்சதும் தான் கல்யாணம் பண்ணனும் என்று நினைச்சதாலே என் கல்யாணமும் தள்ளி போயிடுச்சு. நீ சொல்லுற மாதிரி சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கணும்டா கண்ணா, முன்பக்க முடி கொட்டிப் போச்சுன்னா ஒரு பொண்ணும் என்னைக் கட்டிக்க சம்மதிக்க மாட்டாள்'' என்று சொல்லிக் கொண்டே அவர்கள் கோவிலுக்கு நுழைந்தனர்.

அவர்கள் பெருமாளை தரிசனம் பண்ணிவிட்டு பிரகாரத்தை வலம் வந்த பொழுது அங்கே பிரசாதம் வினியோகம் செய்து கொண்டிருந்ததை பார்த்த பாலு.

''டேய் மச்சான்! பிரசாதம் தராங்கடா. வா போய் லைனிலே நிக்கலாம்'' என்றான்.

''அலையாதேடா அல்பை'' என்று கண்ணன் தன் நண்பனை கேலி செய்ய,

''யாரு அல்பை? நாம மட்டும் இப்போ பிரசாதம் வாங்கிச் சாப்பிடாமல் போனோம்... நைட் நம்ம கனவிலே பெருமாள் வந்து. ஏன்டா நீங்கெல்லாம் சரவண பவனிலே தான் சாப்பிடுவீங்களா? என் சன்னதியிலே தரும் பிரசாதத்தை சாப்பிட மாட்டீங்களான்னு கேட்டு புதுசா ஏதாச்சும் அவதாரம் எடுத்து நம்மை அடி பின்னிடுவார். அந்தக் கஷ்டம் பெருமாளுக்கு நாம கொடுக்கணுமா?''



''எந்தக் கஷ்டத்தை சொல்லுறே?''

''அதான்டா நமக்காக ஒரு அவதாரம் எடுக்கிற கஷ்டத்தை தான் சொல்லுறேன். ஏற்கனவே பத்து அவதாரம் எடுத்து களைச்சுப் போய் இருக்கிறவரை மேலும் நாம கஷ்டப்படுத்தக் கூடாது. அவரை பக்தர்களுக்கு அருள் புரியும் வேலையை பண்ண விடுவோம் என்று நல்லெண்ணத்திலே சொன்னா...'' என்று அவன் இழுக்க,

''டேய் மில்க்! நீ ஓசியிலே பிரசாதம் சாப்பிடுறதுக்கு பின்னாடி இப்படி ஒரு விளக்கம்... இப்படி ஒரு பொதுச் சேவை... இல்லையில்லை இறைச் சேவை இருக்கும் என்று நான் நினைச்சுப் பார்க்கலைடா. என்னே ஒரு உயரிய சிந்தனை! என்னே ஒரு நல்லெண்ணம்!' என்று கண்ணன் கிண்டலடிக்க,

''ஓவரா புகழாதேடா மச்சான். புகழ்ச்சி எனக்கு தமிழிலே பிடிக்காத ஒரே வார்த்தை'' என்று சொல்லிக் கொண்டே அந்த வரிசையில் சென்று பாலு நின்று கொண்டான்.

அவனைப் பின்பற்றி கண்ணனும் பிரசாதம் வாங்குவதற்காக அந்த வரிசையின் நின்றான். அவர்கள் பிரசாதம் வாங்கிக் கொண்டு ஒரு ஓரமாக அமர்ந்தனர்.

''மச்சான் நீயும் நானும் ரொம்ப வருஷமா பிரண்டா இருக்கோமில்ல. உனக்கு இந்த பாலுவை ரொம்பப் பிடிக்கும் தானே?'' என்று பாலு ஆரம்பிக்க,

''நிறுத்துடா, என்கிட்டே இருக்கிற பிரசாதத்துக்கு தானே இப்படி பில்டப் கொடுக்கிறே, இந்தா நீயே சாப்பிடு'' என்று கண்ணன் தன் பங்கையும் அவனிடம் நீட்ட,

"தாங்க்ஸ்டா கண்ணா, ஆனா நான் நல்லவன்டா. உன்னோட பிரசாதத்தை முழுசா தர வேண்டாம். கொஞ்சூண்டு சாப்பிட்டுக்கோ" என்றவன்.

கண்ணன் அதில் கை வைக்கவும், "சாஸ்திரத்துக்கு தான்டா சாப்பிடச் சொல்லுறேன். அதனால ஒரு நாலைஞ்சு பருக்கை எடுத்து வாயிலே போட்டால் போதும்டா" என்றான்.

கண்ணன் அவனை நிமிர்ந்து பார்த்து முறைத்ததும், "சரி சரி முறைக்காதே. கொஞ்சத்தை எடுத்திட்டு மீதியை கொடு" என்று வாங்கிக் கொண்டவன் சாப்பிட ஆரம்பித்தான்.

அப்பொழுது பாலுவின் கைப்பேசி சிணுங்க ஆரம்பித்தது. அவனது தங்கை அழைத்திருந்தாள்.

"அண்ணா எங்கே இருக்கே?" என்று அவள் விசாரிக்க,

"நானும் கண்ணனும் கோவிலுக்கு வந்தோம். பிரசாதம் சாப்பிட்டுக்கிட்டே இருக்கேன்" என்று பாலு பதிலளித்ததும்.

"கண்ணா அண்ணா பக்கத்திலே இருக்காங்களா?" என்று அவள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே பாலுவின் கைப்பேசி நழுவி கீழே விழுந்தது.

அதனால் அவனது தங்கை அடுத்துப் பேசிய, "அப்படின்னா நான் சொல்லப் போறதுக்கு பதில் சொல்லாதே. வெறும் ம் மட்டும் சொல்லு" என்று சொன்னதை பாலு கேட்கத் தவறினான்.

கைப்பேசி கீழே விழுந்ததில் அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டது.



# 19

கீழே விழுந்த கைப்பேசியை கண்ணன் கையில் எடுக்கவும், "கண்ணா நான் போய் கை கழுவிட்டு வரேன். என் தங்கச்சி தான் கூப்பிட்டாள். திரும்பக் கூப்பிடுவாள். எடுத்துப் பேசு" என்று சொல்லவிட்டு பாலு அந்த இடம் விட்டு நகர்ந்தான்.

அவன் சொன்னது போல் அவனது தங்கை திரும்ப அழைக்க.... கண்ணன் அந்த அலைபேசியை இயக்கி காதில் வைத்தான்.

'நான் கண்ணன் பேசுறேன்' என்று அவன் சொல்ல வாய் திறந்த போது அந்தப் பக்கத்திலிருந்து பாலுவின் தங்கை பேசிய,

"கண்ணன் அண்ணன்கிட்ட சொல்லவா வேண்டாமான்னு நீங்களே முடிவு பண்ணிக்கோங்க..." என்ற வாசகம் அவனது வாயை மூட வைத்தது.

"நான் அப்போ சொன்ன மாதிரி வெறும் ம் மட்டும் சொல்லுங்க."

'ம்' என்று கண்ணன் தன்னையும் அறியாமல் முனங்க பாலுவின் தங்கை பேசுவது தன் அண்ணன் என்ற நினைப்போடு பேச ஆரம்பித்தாள்.

"நான் இன்னைக்கு புதுசா குடி வந்திருக்க அபார்ட்மெண்ட்ஸில் தான் நம்ம கண்ணா அண்ணா கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு ராதிகா வீடும் இருக்குன்னு சொன்னேன் இல்ல."

'ம்ம்' என்று சொன்ன கண்ணன் விஷயம் ராதிகாவை பற்றியா என நினைத்தான்.

"நான் இன்னும் ராதிகா வீட்டிலே போய் எனக்கு கண்ணா அண்ணாவை நல்லாத் தெரியும் என்று எதுவும் சொல்லவில்லை. ஏன்னா அவங்க வீட்டிலே உறவுக்காரங்க கும்பல் நிறைய பேர் இருக்காங்க.

அதுவும் இல்லாமல் நான் வீட்டை அடுக்கிறதிலே மும்முரமா இருந்துட்டேன். என் வீட்டு படுக்கை அறையும் அவங்க வீட்டு பால்கனியும் பக்கத்து பக்கத்திலே இருக்கு."

'இவள் என்ன விஷயம் என்னவென்று சொல்லாமல் ஏதேதோ கதை அடிச்சுக்கிட்டு இருக்காள்' என்று எண்ணிக் கொண்டே கண்ணன் ம்ம்ம் என்றான்.

"அவங்க பால்கனியிலே இருந்து என்ன பேசினாலும் என் வீட்டு ஜன்னல் பக்கத்திலே நின்னால் நல்லாக் கேட்குது."

"ம்ம்ம்."

"அவங்க வீட்டிலே உறவு ஜனங்கள் நிறைஞ்சு இருக்கிறதால அப்பாவும் பொண்ணும் பால்கனியிலே நின்று பேசினாங்க போல. பேசினது ராதிகா தங்கச்சி சந்தியாவும் அவ அப்பாவுங்கிறது அவங்க பேசின விஷயங்களை வைச்சுப் புரிஞ்சுக்கிட்டேன்."

"ம்ம்ம்."

பொதுவாக ஒருவர் கொட்டும் ம்ம்ம் என்கிற சத்தத்தை வைத்து பேசுவது யார் என்று தெரியாது போனாலும் மிக நெருங்கியவர்களின் ம்ம் என்ற ஓசையை நம்மால் இனம் கண்டு கொள்ள முடியும்.



ஆனால் தனக்கு இருந்த பதட்டத்தின் காரணமாகவோ அல்லது அண்ணன் சாப்பிட்டுக் கொண்டே 'ம்' என்று சொல்கிறான் என்று நினைத்தோ பாலுவின் தங்கை அந்த வேறுபாட்டை உணரவில்லை.

"அவங்க என்ன பேசிக்கிட்டாங்கன்னா... ராதிகாவை காணோம் என்று பேசிக்கிட்டாங்க" என்று போகிற போக்கில் தகவல் சொல்வது போல் அவள் சொன்ன வாசகம் கண்ணனின் தலையில் இடியை இறக்கியது.

"அவளை கண்டுபிடிக்க முடியாமல் போனால் நீ மணவறையிலே உட்காருவாயா என்று சந்தியாவை அவங்க அப்பா கேட்டார்.

அதுக்கு அவள் கண்ணா மாமாவை நான் என் அண்ணனா மனசிலே நினைக்க ஆரம்பிச்சு ரொம்ப நாள் ஆச்சுப்பா. அதனால கண்டிப்பா என்னால முடியாதுன்னு சொல்லிட்டாள்.

இந்தக் கல்யாணம் மட்டும் நடக்கலைன்னால நானும் உன் அம்மாவும் தூக்கிலே தொங்குவோம் என்று அவர் புலம்பினார்.

அதுக்கு சந்தியா இன்னும் நிறைய நேரம் இருக்குப்பா. ஏதாச்சும் தப்பான முடிவுக்கு வந்துடாதீங்க. அக்கா எப்படியும் கிடைச்சிடுவா என்று சொன்னாள்.

அதுக்கு அவங்க அப்பா ராதிகா இல்லாமல் உங்க அம்மா மட்டும் பார்லரில் எவ்வளவு நேரம் தனியா உட்கார்ந்து இருப்பாள் என்று நினைச்சு அவளை வீட்டுக்கு திரும்ப வரச் சொல்லிட்டேன். இப்போ கொஞ்ச நேரத்திலே அம்மா திரும்ப வருவாள். சொந்தக்காரங்க அம்மா கிட்டே ராதிகா எங்கேன்னு கேட்டா அம்மா

அவங்களுக்கு என்ன பதில் சொல்லுவாள்? என்று பரிதவித்தார்.

அதுக்கு சந்தியா, அப்பா நீங்க வீட்டை விட்டு வெளியே போய் திரும்பவும் அம்மாவுக்கு போன் பண்ணுங்க. யாராச்சும் ராதிகா பத்தி அம்மாகிட்டே கேட்டால் எனக்கு வேலை இருக்குன்னு நான் வீட்டுக்கு வந்துட்டேன். ராதிகா அவ பிரண்டு வசந்தி துணை இருக்காள் என்று சொல்லச் சொல்லுங்க என்று ஐடியா சொல்லிக் கொடுத்தாள்.

அதோட அவங்க பேச்சு நின்னுடுச்சு.

பேசினது நிஜமாவே ராதிகா அப்பாவும், தங்கையுமா என்று எனக்கு தெரியலை. ஏன்னா என் பெட்ரூமிலே இருந்து அவங்க முகத்தை என்னால் பார்க்க முடியாது.

இதை அப்பவே உங்ககிட்டே போனில் சொல்லுவோம் என்று நினைச்சேன். ஆனா விஷயம் உண்மையானதான்னு தெரியாமல் தப்பா தகவல் சொல்லிடக் கூடாதில்லையா?

இது ஒரு பொண்ணோட வாழ்க்கை பிரச்சனை. நானும் ஒரு பொண்ணு. அதான் விஷயம் உண்மைன்னு தெரிஞ்ச பின்பு உங்ககிட்டே சொல்லுவோம் என்று நினைச்சேன்.'' என்றாள்.

கண்ணனண் ம்ம் என்ற ஒலியை எழுப்பக் கூட மறந்து போய் கேட்டுக் கொண்டு இருந்தான்.

'விஷயம் உண்மை என்று தெரிந்த பின் தான், அதைத் தன் அண்ணனிடம் சொல்ல வேண்டும் என்று முடிவெடுத்தவள் இப்பொழுது சொல்லுகிறாள் என்றால்...



ராதிகாவை உண்மையிலேயே காணோமா?' என்று கண்ணன் அதிர்ந்து போய் சிலையாய் நின்றான்.

சொல்லப்பட்ட விஷயம் அதிர்ச்சிகரமானது. கண்ணன் தன் அண்ணனின் மிக நெருங்கிய தோழன் என்பதால் அவனுக்கு இது எப்பேற்பட்ட அதிர்ச்சியை தந்து இருக்கும் என்பது புரிந்ததால் பாலுவின் தங்கை அந்தப் பக்கம் நிலவிய அமைதியை பொருட்படுத்தவில்லை.

“இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் வாசலில் பிளாஸ்டிக் தோரணம் கட்டிக்கிட்டு இருந்தேன். அப்போ ஒரு பொண்ணு இவங்க வீட்டுக்கு வந்தாள். ராதிகா அப்பா அவளை வாம்மா வசந்தின்னு கூப்பிட்டார்.

என்னம்மா நீ மட்டும் வந்து இருக்கே? உன் பிரண்டை கூட்டிட்டு வரலையா என்று ராதிகா சொந்தக்காரங்க ஒருத்தங்க அந்த வசந்தியை கேட்டாங்க. அவங்க ராதிகாவை மனசிலே வைச்சுக் கேட்டாங்கன்னு நினைக்கிறேன்.

அதுக்கு அந்த வசந்தி இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்திடுவாள் என்று சொல்லிக்கிட்டு இருக்கும் போதே அவளுக்கு செல்போனில் போன் வரவும் பேசிக்கிட்டே கீழே இறங்கிப் போயிட்டாள். கூடவே சந்தியாவும் இறங்கிப் போனாள்.

அந்த வசந்திக்கு ராதிகாவின் விஷயம் தெரிஞ்சு அப்படி ஒரு பதில் சொன்னாளா? இல்லை பிரண்டு என்று பொதுவா கேட்டதால வேற எந்த பிரண்டையும் மனசிலே வைச்சு பதில் சொன்னாளான்னு தெரியலை.

சந்தியா வசந்திகிட்டே என்ன சொன்னாளோ அவ அதுக்கு அப்புறம் மேலே வரலை. ஒரு வேளை நிஜமாவே அந்தப் பொண்ணுக்கு வேலை வந்து போயிட்டாளோ என்னவோ அதுவும் எனக்குத் தெரியலை.

மாடிக்கு திரும்பி வந்த சந்தியாகிட்டே அந்த சொந்தக்கார அம்மா ராதிகா எப்போ வருவாள்? மணிக்கணக்கா அப்படி என்ன மேக்கப் அப் போடுறாங்க? என்று விசாரித்தார்.

அதுக்கு சந்தியா, மேக்கப் -அப் போடப் போகலை பாட்டி. முதல்ல கைக்கு மருதாணி போட்டாங்க. இப்போ பேஷியல் போட... அதாவது நாளைக்கு கல்யாணத்திலே நல்லாத் தெரியணுங்கிறதுக்காக முகத்திலே எதையாச்சும் பூசி ஊற வைச்சு அழிச்சுன்னு நேரம் கடத்துவாங்க.

இன்னைக்கு நிச்சயதார்த்தம் தானே! அதனால மேக்கப் அப் ஒண்ணும் பெருசா பண்ணப் போறதில்லை. சாதாரணமா தான் பண்ணப் போகிறோம் என்று சொல்லிட்டு உள்ளே போயிட்டாள்.

அவள் பின்னாடியே அவங்க அப்பா போனார். திரும்பவும் அப்பாவும் பொண்ணும் பால்கனியில் நின்னு பேச ஆரம்பிச்சாங்க.

யார் பேச்சையும் ஒட்டுக் கேட்கிறது தப்பு. ஆனா ஏற்கனவே ஒட்டுக் கேட்ட பேச்சை தெளிவுபடுத்தணும் என்றால் திரும்பவும் கேட்டுத் தான் ஆகணும் என்று நானும் என் படுக்கை அறைக்கு போய் அந்த ஜன்னல் பக்கத்திலே நின்னேன்.

ஏம்மா மேக்கப் போடப் போறதில்லைன்னு சொன்னே என்று சந்தியாவிடம் அவ அப்பா கேட்டார்.

அப்பா இப்போ அக்கா சாதாரணமா வந்து நிப்பாள். இவ்வளவு நேரமாகியும் மேக்கப் அப் போடலையான்னு எல்லோரும் கேட்பாங்க. அதான் மேக்-அப் போடப்



போகலை. பேஷியல்ன்னு மாத்தி சொன்னேன் என்றாள்.

அச்சோ நான் மேக்-அப்ன்னு சொல்லி வைச்சேனே என்று அவர் அலறவும்,

திரும்ப உங்களை யாராச்சும் கேட்டால் பொம்பளைங்க விஷயம் எனக்கு என்ன தெரியும் என்று சொல்லி சமாளிச்சிடுங்கப்பா என்று சந்தியா அவரை சமாதானம் செய்தாள்.

நல்ல வேளைம்மா நீ வயசிலே சின்னவள் என்றாலும் தெளிவா இருக்கே. அவளுக்கு எங்க அண்ணன் மகன் ரவி தான் உதவி செஞ்சு இருப்பான்னு கரெக்ட்டா கண்டுபிடிச்சதோட இல்லாமல் அவளை திரும்பி வர வைக்கவும் போனிலே பேசியே சரி கட்டிட்டே.

நானா இருந்தால் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி விஷயத்தை நாலு பேருக்கு சொல்லி என் பொண்ணும் அசிங்கப்படுற மாதிரி பண்ணி இருப்பேன். ஜனங்களும் அவ அண்ணன் கூடப் போனாங்கிறதை மறந்திட்டு ராதிகா வேற ஒருத்தனை காதலிச்சாளாம். அவன் கூட ஓடிப் போயிட்டாளாம் என்று தப்பான தகவலை பரப்பி என் பொண்ணை கேவலப்படுத்தி இருப்பாங்க.

இவகிட்டே கேட்டுத் தானே கல்யாணத்தை முடிவு பண்ணினேன். அப்பவே வேணும் வேண்டாம் என்று தெளிவாச் சொல்லலாம் இல்ல என்று ராதிகா அப்பா புலம்பினார்.

விடுங்கப்பா யாருக்கும் தெரியாமல் பிரச்சனை சுலபமா முடிஞ்சிடுச்சு தானே என்று சந்தியா அவரை சமாதானம் பண்ணிக் கூட்டிட்டு போயிட்டாள்.

இது தான் அண்ணா விஷயம். இப்போ ராதிகா திரும்ப வந்துக்கிட்டு இருக்காள். அதே மாதிரி அவ ளுக்கு எந்தக் காதலனும் கிடையாது. இந்த விஷயத்தை கண்ணன் அண்ணன்கிட்டே சொல்லணுமா வேணா மான்னு நீயே முடிவு பண்ணிக்கோ'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கண்ணன் அந்த அழைப்பைத் துண்டித்தான்.

கண்ணன் அருகில் இருப்பதால் பாலு எதுவும் பேசாமல் அழைப்பைத் துண்டித்து விட்டான் என்று அவன் தங்கை நினைத்துக் கொண்டாள்.

## 20

பாலுவின் தங்கை கூறியதை கேட்ட கண்ணனுக்கு ஒன்றும் புரிபடவில்லை. தான் யார் என்று கூடத் தெரியாத அளவிற்கு சில நொடிகள் மூளை ஸ்தம்பித்தது.

அவனருகே வந்த பாலு, ''என்னடா கண்ணா நாம சொல்லுற கதையை கேட்க அடிமை ஒருத்தன் சிக்கிட் டான்டா என்று என் தங்கச்சி அறுத்துத் தள்ளிட்டாளா? அவளுக்கு எப்பவுமே விஷயத்தை நறுக்குன்னு சொல்லத் தெரியாது'' என்று தன் தங்கையை பற்றி சொல்லிக் கொண்டே போக,

கண்ணன் ஒன்றும் சொல்லாமல் பாலுவிடம் அவனது கைப்பேசியை ஒப்படைத்து விட்டு பெருமாள் சன்னதியை நோக்கி நடந்தான்.



''என்னடா கோவிலை விட்டு வெளியே போக வேண்டிய நேரத்திலே உள்ளே போய்கிட்டு இருக்கே!'' என்று பாலுவின் கேள்விக்கு பதில் அளிக்கும் நிலையில் கண்ணன் இல்லை.

'இவனுக்கு என்ன ஆச்சு? கூப்பிடப் கூப்பிட ஒண்ணும் சொல்லாமல் போறான். கிளம்பும் முன்னாடி இன்னொரு முறை சாமியை பார்க்கணும் என்று நினைக் கிறான் போல' என்று நினைத்துக் கொண்டே பாலு அவன் பின்னே சென்றான்.

சன்னதிக்குள் சென்ற கண்ணன் பெருமாளை சில நொடிகள் உற்றுப் பார்த்தான். பின் பெருமாளை பார்த்த வண்ணம் ஒரு ஓரமாக நின்று கொண்டான்.

'பெருமாளே! இது மூலமா நீ எனக்கு என்ன சொல்ல வருகிறாய்?

அந்தப் பெண்ணிற்கு வேறு காதலன் இல்லை என்று பாலுவின் தங்கை உற்சாகமாகச் சொல்கிறாள். அப் படின்னா ராதிகா ஓடிப் போக நினைச்சது என்னுடனான கல்யாணத்தை வெறுத்துத் தானே?

இப்போ அவ திரும்பி வந்திட்டதால இந்த நிச்சயமும் கல்யாணமும் தடைபடாமல் நடக்கப் போகுதா?

என்னை வெறுக்கிற ஒரு பொண்ணுக்கு நான் தாலி கட்டணுமா? இல்லை நான் இந்தக் கல்யாணத்தை நிறுத்தணுமா?

அப்படி நிறுத்தினால் பொண்ணு வீட்டிலே என்ன நடக்கும்? ராதிகாவோட அம்மாவும் அப்பாவும் தற் கொலை பண்ணிக்குவாங்களா? என்னால ரெண்டு

உயிர் போகணுமா? ரெண்டு பொண்ணுங்க ஆதரவு இல்லாமல் தவிக்கணுமா?

ஒரு வேளை இந்தக் கல்யாணத்தை நான் நிறுத்துவதா இருந்தால், அதுக்கு நான் என்ன காரணம் சொல்ல முடியும்? பொண்ணு ஓடிப் போகப் பார்த்தாள் என்று சொல்ல முடியாதே. அதுக்கு ஆதாரம் கேட்டால்... என்னால நிரூபிக்க முடியாதே!

எதையோ சொல்லி நான் கல்யாணத்தை நிறுத்தினால் எங்க அம்மாவும் கயலும் வருத்தப்பட மாட்டாங்களா? சும்மாவே என்னை எந்தப் பொண்ணும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டாள். இப்போ கல்யாணத்தை நான் நிறுத்தினால் வேற யாரும் எனக்கு பொண்ணு தர யோசிப்பாங்க. காலத்துக்கும் எங்க அம்மா வருத்தப்படுற மாதிரி சூழ்நிலை உருவாகும்.

ஆனா அதுக்காக என்னை வெறுக்கிற ஒரு பொண்ணுக்கு எப்படித் தாலி கட்டுவேன்?

இத்தனை நாள் யார் யாரோ என்னிடம் முகம் திருப்பிக்கிட்டுப் போனாங்க. அதை தாங்கிக்கிட்டேன். இப்போ என் மனைவி காலத்துக்கும் என்னை பார்த்து முகம் திருப்புவதை சகிச்சுக்கணுமா?

என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இன்னைக்கு என்னை எதுக்காக உன் சன்னதிக்கு வரச் செய்தாய்?

இந்த விஷயம் எனக்கு தெரியாமலே போய் இருக்க வேண்டியது. ஆனா பாலு தங்கச்சி மூலமா ஏன் எனக்கு தெரியப்படுத்தினாய்? அதுவும் கோயிலில் நான் இருக்கும் போது இது என்னை வந்து சேருது என்றால்... அதற்கு அர்த்தம் தான் என்ன?



பெருமாளே! உன் கணக்கு வழக்கை புரிஞ்சுக்கிற அளவுக்கு எனக்கு புத்தி இல்லை. நான் இப்போ என்ன செய்யணும்? எதுவா இருந்தாலும் எனக்கு புரியும்படி சொல்லு.

எனக்கு ஒரு விடை கிடைக்கும் வரை இங்கே இருந்து நான் நகர்வதாய் இல்லை' என்று மனதுக்குள் பெருமாளுடன் பேசிக் கொண்டு நின்றிருந்தான்.

கண்ணன் ஏதோ வேண்டிக் கொண்டு இருக்கிறான் என்று முதலில் பாலு நினைத்தான்.

ஆனால் கண்ணனின் முகத்தில் தெரிந்த வேதனை பாலுவை சிந்திக்க வைத்தது.

'இவனுக்கு திடீர்னு என்ன ஆச்சு? நல்லா தானே இருந்தான். நான் கை கழுவிட்டு வரதுக்குள்ளே அப்படி என்ன நடந்து இருக்கும்?' என்று யோசித்த பொழுது தான் அவனுக்கு தங்கையின் அழைப்பு ஞாபகம் வந்தது.

அவ கூடப் பேசினதுக்கு இவன் ஏன் இவ்வளவு வருத்தப்படப் போகிறான் என்று முதலில் சிந்தித்தான். அன்று காலையில் தங்கை ராதிகா அபார்ட்மெண்டில் குடி போன செய்தி ஞாபகம் வந்ததும் எதற்கும் அவளிடம் விசாரிக்கலாம் என்று நினைத்தான்.

சன்னதியை விட்டு வெளியேறி தங்கையை அழைத்தான். அவளிடம் பேசி விவரமறிந்து கொண்டான்.

'என்ன செய்ய வேண்டும்? என்ன சொல்லி கண்ணனை தேற்ற வேண்டும்? எதைச் செய்தால் அவனது வருங்காலம் சிறக்கும்?' என்று பாலு குழம்பினான்.

மெதுவாக கண்ணனின் அருகில் சென்றான், மக்கள் கூட்டமாக சன்னதிக்குள் நுழைய...

''கண்ணா வெளியே போய் உட்காரலாம் வா'' என்று பாலு அவனை அழைத்துச் சென்றான்.

பாலுவின் இருள் படிந்த முகமே அவனுக்கும் விஷயம் தெரிந்துவிட்டது என்பதை கண்ணனுக்கு உணர்த்தியது.

கண்ணன் பிரகாரத்தில் ஒரு ஓரமாக அமர்ந்து வெறித்துக் கொண்டு இருந்தான். பாலு நண்பனிடம் பேச வேண்டிய வார்த்தைகளை தேடிக் கொண்டு இருந் தான்.

அப்பொழுது ஒரு பெரியவர் அவர்கள் அருகே வந்தார்.

அவர் நேராக கண்ணனிடம் சென்று ''கல்யாணத் தடை நீங்குறதுக்காக வேண்டிக்க வந்தீங்களா தம்பி?'' என்று கேட்டார்.

அவன் பதிலொன்றும் சொல்லும் முன், தன் கையில் இருந்த மஞ்சள் நிற சாமந்திப் பூவை கண்ணனிடம் தந்து கொண்டே,

''உங்க திருமணத் தடை கூடிய சீக்கிரமே அகலும். உன் கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடக்கும். உன் வருங்கால வாழ்க்கை ரொம்ப சந்தோஷமாய் இருக்கும்'' என்று வாழ்த்தினார்.

'பெருமாளே! இவர் மூலமாக எனக்கு என் திருமணம் நல்லபடியாக நடக்கும் என்று நீ உணர்த்த முயல் கிறாயா?' என்று கண்ணன் மனதிற்குள் கேட்டுக் கொண்டு இருக்கும் பொழுதே,

அவனது கை அவரின் புறம் நீண்டது. அவர் அவனது கையில் அந்தப் பூவை வைத்தார்.



மனதில் இருந்த அதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட உடல் தளர்ச்சியினால் அவனது கை நடுங்கி அந்தப் பூ தரையில் விழுந்தது. அவன் அதை எடுப்பதா வேண் டாமா என்பது போல் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அந்தப் பெரியவரே அதை எடுத்து அவனது கையில் மீண்டும் கொடுத்து, ''கீழே விழுந்த பூவை எடுக்கவா வேண்டாமான்னு யோசிக்கிறியா தம்பி. கீழே விழுந்த பூவில் எல்லாம் மண் ஒட்டி இருக்கும் என்று அர்த்தம் ஆகாது. விழுந்த இடம் சுத்தமானதா இருந்தால் அந்தப் பூவோட மதிப்பு எந்த விதத்திலும் குறைஞ்சிடாது'' என்றவர்.

அவனிடம் மேலும், ''நீ கை நடுங்கி அந்தப் பூவை கீழே நழுவ விட்டதும் எனக்கு ஒரு பாட்டு ஞாபகம் வருது. அது என்னன்னா...'' என்றவர் பாட ஆரம்பித்தார்.

**என்னை அறிந்தாய் எல்லா உயிரும் எனதென்றும் அறிந்து கொண்டாய்**

**கண்ணன் மனது கல்மனதென்றோ காண்டீபம் நழுவவிட்டாய்**

**மன்னரும் நானே! மக்களும் நானே! மரம் செடி கொடியும் நானே!**

**சொன்னவன் கண்ணன் சொல்பவன் கண்ணன் துணிந்து நில் தர்மம் வாழ!**

என்று கர்ணன் படப் பாடலை கணீரென்ற குரலில் பாடியவர் அவனை திரும்பியும் பாராது சென்று கொண்டே இருந்தார்.

கண்ணனுக்கு மேனியெல்லாம் சிலிர்த்தது. பெரு மாளே அவரின் ரூபத்தில் வந்து தனக்கு விளக்கம் அளித்த தாக உணர்ந்தான். பேச்சிழந்து போனான். கண்களில் கண்ணீர் குளம் கட்டி நின்றது.

இறைவனை நேரில் பார்க்க முடியாமல் போனாலும் நம்முடைய மோசமான சமயங்களில் நம்மால் இறைவனை உணர முடியும்.

என் பிரச்சனைக்கு உன் கோவிலை விட்டுச் செல்லும் முன் எனக்கு ஒரு பதிலைச் சொல் என்று கண்ணன் வேண்ட மட்டும் செய்யவில்லை. தனக்கு அந்தப் பெருமாள் ஏதாவது ஒரு ரூபத்தில் வந்து பதில் தருவார் என்று நம்பினான்.

அந்தப் பெரியவர் பூவிற்கு சொன்ன வசனங்களை கண்ணன் ராதிகாவிற்கு பொருத்திப் பார்த்தான்.

அதாவது அவள் ஓடிப் போய் தவறு செய்தாலும் அவள் வேறொரு ஆண் மகனை விரும்பி அவனுடன் ஓடவில்லை. அதனால் அவளது மதிப்பு குறைந்து விட்டது என்று பெ!ருமாள் தனக்கு விளக்கமளித்ததாக உணர்ந்தான்.

இவர் மூலமாக பெருமாளா என்னிடம் தகவல் கூறு கிறார் என்று கண்ணன் மனதிற்குள் சந்தேகப்பட்ட பொழுது, அவர் தன் பாடலின் மூலம் விளக்கம் அளித்த தாக நினைத்தான்.

அதாவது 'மன்னரும் நானே மக்களும் நானே மரம் செடி கொடிகளும் நானே சொன்னவன் கண்ணன் சொல்பவன் கண்ணன்' என்ற வரிகள் மூலம் உன் முன் நிற்பவன் நானே என்று பெருமாள் சொல்வதாகவே கண்ணனுக்கு பட்டது.

சாதாரணமாகப் பூ விழுந்ததற்கு எதற்காக அவர் இந்தப் பாடலைப் பாட வேண்டும்? எங்கிருந்தோ



வந்தவர் தன் மனதை தெளிய வைத்தாக உணர்ந் தான்.

''கண்ணா...'' என்று கலங்கிப் போய் அழைத்த பாலுவை பார்த்து ஓரளவிற்கு தெளிந்த முகத்தோடு புன்னகைத்தான்.

''இப்ப என்னடா கண்ணா செய்யுறது? இன்னும் கொஞ்சம் நேரத்திலே நிச்சயதார்த்தம்...'' என்று பாலு இழுக்கவும்,

கண்ணன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நண்பனிடம் பகிர்ந்தான்.

''பாலு நான் இந்த கல்யாணத்தை நிறுத்தப் போவதில்லை. பெருமாள் ராதிகா தான் என் மனைவி என்று தீர்மானித்து விட்டார். அதான் துணிந்து வாழ் என்று அந்தப் பெரியவர் மூலமாக சொல்லி இருக்கார். நான் வாழ்ந்து பார்க்கிறேன்'' என்று சொன்னதும்,

''கண்ணா அந்தப் பெரியவர்...'' என்று பாலு இழுக்க,

''நான் அவரை பெருமாள் அனுப்பி வைச்சதா நம்புறேன் பாலு. சிலருக்கு இது பைத்தியக்காரத்தனமா படும். ஆனால் அது அவங்கவங்க நம்பிக்கையை பொறுத்தது.

உனக்கு ஒரு குட்டி கதை சொல்லுறேன் கேளு. ஒரு நாட்டிலே மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டுச்சாம். மன்னரும் முனிவரும் கடவுளை வேண்டி யாகம் நடத்தலாம் என்று முடிவு பண்ணினாங்களாம்.

யாகம் நடந்த போது ஊரே திரண்டு வந்துச்சாம். யாகம் நடத்த தேவையான அனைத்தையும் மன்னன்

கொடுத்திருக்கான். முனிவர்களும் கர்மசிரத்தையாய் மந்திரங்கள் சொல்லி யாகத்தை நடத்தி இருக்காங்க.

அப்பொழுது மழையும் தூவ ஆரம்பிச்சதாம். மக்கள் எல்லோருமே சந்தோஷமாகிட்டாங்களாம். மன்னருக்கும் முனிவர்களுக்கும் நன்றி சொன்னாங்களாம், அப்பொழுது வானத்தில் ஒரு அசரீரி கேட்டுச்சாம்.

நான் உங்க யாகத்துக்காக மழையை வர வைக்கலை. கூட்டத்தில் இருந்த ஒரு குடியானவனை காட்டி அவனுக்காக தான் மழை பெய்ய வைத்தேன் என்று சொல்லுச்சாம்.

பெரிதாக அவன் அப்படி என்ன செய்தான் என்று மக்கள் குழம்பி போய் நின்னுகிட்டு இருக்கும் போது, நீங்களெல்லாம் மழை வேணும் என்று வேண்டிக்கிட்டீங்க.

ஆனா அவன் ஒருத்தன் தான் நான் மழை பொழிய வைப்பேன் என்று என்னை நம்பி குடையுடன் வந்திருக்கிறான். அவன் என் மீது கொண்ட நம்பிக்கைக்காக நான் மழை வர வைத்தேன் என்று அந்த அசரீரி சொன்னதாம்.

இதிலே இருந்து என்ன தெரியுது? நாம நம்பினால் அவர் கடவுள், இல்லைன்னா வெறும் கல்.

சினிமாவிலே காட்டுவது போல் நிறைய நகைகளை போட்டுக் கொண்டு சாமி நமக்கு காட்சி அளிக்க மாட்டார். சாதாரண மனுஷங்க ரூபத்தில் வந்து உணர்த்த வேண்டிய விஷயங்களை அவர் உணர்த்த தவற மாட்டார்.



ஆனா அதை சாதாரண மனுஷங்களால புரிஞ்சுக்க முடியுதா இல்லையாங்கிறதிலே தான் கடவுள் நம்பிக்கை இருக்கு.

அந்தப் பெரியவர் நேரா என்னிடம் வந்து ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? நான் ஒத்துக்கிறேன். இந்தக் கோவிலுக்கு கல்யாணத் தடை நீங்குவதுக்காக பரிகாரம் செய்ய தான் மக்கள் வருவாங்க.

ஆனா நாம ரெண்டு பேர் இருக்கோம். நமக்கு வயசு வித்தியாசம் அதிகமா இருந்தால் கூட எனக்காகத் தடை வேண்ட வந்தோம் என்று அவர் ஈஸியாக கண்டு பிடிச்சதா நினைச்சுக்கலாம். நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே வயசுங்கிற போது அவர் எப்படி நேரா என்கிட்டே வந்து இது மாதிரி பேசினார்?

அவர் கல்யாணத் தடை நீங்கும் என்று சொன்னதைக் கூட பொதுவான ஒரு வாழ்த்தா எடுத்துக்கிட்டாலும், பெருமாளே நீயா என் முன் நிற்பது என்று மனசிலே நான் கேட்ட கேள்விக்கு கரெக்ட்டா எப்படி பாட்டா பாடி பதில் சொன்னார்?

அவர் சொன்னதை பெருமாள் எனக்கு சொல்லிய தீர்ப்பா நான் நினைக்கிறேன். நான் இப்போ எடுக்கிற இந்த முடிவினாலே ஒரு நாளும் நான் வருத்தப்படுற நிலை வராது'' என்று சொன்னவன்.

எழுந்து கொண்டு மூன்றாவது முறையாக சன்னதிக்குள் நுழைந்தான். கண் மூடி பெருமாளை வணங்கினான்.

'பெருமாளே! நீ எனக்கு காட்டிய வழியில் நான் போவதென்று முடிவு செய்துவிட்டேன்.

நீ கடவுள். உனக்கு எல்லாம் தெரியும். ஆனால் நான் சாதாரண மனுஷன். நடக்கும் அனைத்துக்கும் அர்த்தம் புரியாது என்பது ஒரு புறம் இருக்க, நான் ஆசாபாசங்கள், கோபதாபங்கள் நிறைந்தவன். என்னை நம்பி வருபவ ளிடம் நான் கோபத்தைக் காட்டாது இருக்க நீயே அருள் புரிய வேண்டும்.

சின்ன வயதில் இருந்து பிறரால் அவமானப்படுத் தப்பட்டே பழக்கப்பட்டதால் என்னால் யார் மனசையும் புண்படுத்த முடியாது.

ஆனால் ராதிகா என்னை பிடிக்காமல் தான் ஓடி போனாள் என்கிற விஷயத்தை என்னால் அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியாது. அது மனதின் ஓரத்தில் இருந்து கொண்டே இருக்கும். அது என்னையும் அறியாமல் அவளை காயப்படுத்த முனையும். அந்த மாதிரி சமயங் களில் நீ தான் எனக்கு துணை புரியணும்.

இது வரைக்கும் எனக்கு இதைச் செய். அதைச் செய் என்று நான் கேட்டதில்லை. நான் எந்தக் கோவிலுக்கு போனாலும் என்னை நல்லவனாக வைத்திருன்னு தான் வேண்டுவேன்.

ராதிகா என் மீது வெறுப்பைக் காட்டினாலும் நான் நிலை குலையாமல் இருக்க உதவி செய். நான் உன்னை நம்புறேன்!' என்று மனமுருக வேண்டியவன் விறுவிறு வென சன்னதியை விட்டு வெளியேறினான்.

அவர்கள் காரில் ஏறி மண்டபத்திற்கு செல்லும் பொழுது இது குறித்து எந்தப் பேச்சும் பேசவில்லை. பொதுப்படையான விஷயங்களை பற்றி மட்டும் பேசிக் கொண்டார்கள்.



# 21

அவர்கள் சென்னைக்கு வந்து அந்த திருமண மண்டபத்தை அடைந்த பொழுது நிச்சயதார்த்தம் முடிந்து கயல் ராதிகாவிற்கு நலங்கு வைத்துக் கொண் டிருந்தாள்.

கண்ணன் மேடையில் அமர்ந்திருந்த ராதிகாவை பார்த்த பொழுது அவள் தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

அவள் தலை குனிந்து அமர்ந்திருப்பதற்கு காரணம் நாணமா அல்லது என்னை கல்யாணம் பண்ணுவதால் உண்டான ஏமாற்றத்தால் உற்பத்தியான கண்ணீரை மறைக்கவா என்ற கேள்வி கண்ணனுக்குள் எழுவதை என்ன முயன்றும் அவனால் தடுக்க முடியவில்லை.

கண்ணன் அவளையோ அவளது அலங்காரத் தையோ ரசிக்கும் மனநிலையில் இல்லை. கண்ணன் அந்த மண்டபத்தை சுற்றி தன் பார்வையை சுழல விட்டான்.

உறவினர் கூட்டமெல்லாம் மேடையிலே பார் வையை பதித்திருந்தார்கள். கயலும் தேவகியும் கூட கண்ணன் வந்ததை கவனிக்கவில்லை.

ஆனால் ஏகாம்பரம் கண்ணனை கவனித்தார். அவர் தானே அவனது வரவிற்காக வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தவர்.

நிச்சயதார்த்தம் நடக்கும் பொழுது உள்ளூரிலேயே இருக்கும் மாப்பிள்ளை ஏன் வரவில்லை என்று அந்தப் பெண்ணைப் பெற்ற தகப்பனிற்கு வருத்தமும் கவலையும் உண்டானது இயல்பு தானே!

கண்ணன் கோவிலுக்கு சென்றிருக்கிறான் என்பது ஏற்புடைய காரணமாக இருந்தாலும் கூட அவனை நேரில் பார்க்கும் வரைக்கும் அந்த தகப்பனின் மனதில் நிம்மதி துளியும் இல்லை.

கண்ணனை கண்டதும் அவரது மனம் நிம்மதி அடைந்தது. உடல் தொய்ந்தது. அருகில் இருந்த நாற்காலியை பற்றிக் கொண்டு சில நொடிகள் தன்னை நிலைப்படுத்திக் கொண்டவர் வருங்கால மாப்பிள்ளையின் அருகில் சென்றார்.

''வாங்க மாப்பிள்ளை!'' என்று அவனுக்கு கை கொடுத்து வரவேற்றார். அவரது கை நடுங்கிக் கொண்டிருப்பதை கண்ணனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவரது கண்களை பார்த்தால்... அதில் ஏதாவது கண்டுபிடிக்க நினைத்து உற்று நோக்கி விடுவோமா? நம்ம பார்வையின் வேற்றுமையை அவர் கண்டுபிடித்து விடுவாரோ என பயந்த கண்ணன் அவரை... முக்கியமாக அவரது கண்களை பார்ப்பதை தவிர்த்தான்.

அவரிடம் ஏதாவது கேட்க வேண்டும் என்பதற்காக, ''நிச்சயதார்த்தம் முடிஞ்சிடுச்சா மாமா?'' என்று கேட்டான்.

''நல்லபடியா முடிஞ்சிடுச்சு மாப்பிள்ளை'' என்று அவர் கூறியதும்.



''அம்மாவை பார்த்திட்டு வந்துடுறேன் மாமா'' என்று சொன்னவன், அவரிடம் விடைபெற்று தேவகியை நோக்கி நடந்தான்.

''கண்ணா வா வா'' என்று வரவேற்ற தேவகி, ''ஏன் கண்ணா லேட்? டிராஃபிக்கிலே மாட்டிக்கிட்டீங்களா?'' என்று விசாரித்தார்.

''ஆமாம்மா சாயங்கால டிராஃபிக் அதிகமா இருக்கும் தானே?''

''சாமி தரிசனம் நல்லபடியா நடந்துச்சா? அதிலே ஒண்ணும் குறை இல்லையே?''

''நல்லா சாமி கும்பிட்டேன். கோயில்ல ரொம்பக் கூட்டம் இல்லை. அதனால நிறுத்தி நிதானமா சாமி கும்பிட்டேன். இப்போ திருப்தியா?'' என்று கண்ணன் கேட்டதும்,

''அப்புறம் ஏன்டா உன் முகத்திலே ஒரு வாட்டம் தெரியுது?'' என்று தேவகி கேட்டதும், கண்ணன் அசந்து போனான்.

ஏனென்றால் அவன் முயன்று தன் முகத்தை இயல்பாய் வைத்துக் கொண்டிருந்தான்.

அவன் ஏகாம்பரத்திடம் இருந்து விடைபெற்று தேவகி நோக்கி செல்லும் வழியில் உள்ள உறவினர்களை எல்லாம் பார்த்து சிரித்தபடியோ அல்லது நலம் விசாரித்தபடியோ தான் நடந்தான்.

உறவினர்களுக்காக புன்னகைக்க ஆரம்பித்தவன் அதே புன்னகை முகத்தோடு தான் தேவகி முன்பும் வந்து நின்றான். ஆனாலும் தேவகி கண்டுபிடித்து விட்டார்.

அது தான் தாய். ஒரு தாய்க்கு தெரியாதா என்ன? தன் குழந்தை எவ்வளவு பெரியவனாக வளர்ந்தாலும் ஒரு தாயால் தன் பிள்ளையின் மனநிலையை எளிதாக கணிக்க முடியும்.

''ஒண்ணும் இல்லையேம்மா. நல்லா தான் இருக்கேன்'' என்று கண்ணன் மழுப்ப,

''இல்லை கண்ணா நீ வருத்தமா...'' என்று ஆரம்பித்தவர்.

''நிச்சயதார்த்தம் நடக்கும் போது நீ இங்கே இருக்கணும் என்று நினைச்சியா? சரியான டைம்க்கு வர முடியலைன்னு தான் வருத்தமா இருக்கியா?'' என்று தானாக ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து கேட்க.

கண்ணன் ஆம் என்றோ இல்லை என்றோ சொல்லாமல் மென்மையாகப் புன்னகைத்தான்.

''ராதிகாவை பார்த்தியா? சூப்பரா இருக்கா இல்ல?'' என்று தேவகி கேட்கவும், அவனையும் அறியாமல் அவனது பார்வை ராதிகாவின் மீது படிந்தது.

வயலட் நிறப் புடவை அவளது கலருக்கு மிக எடுப்பாக இருந்தது. அந்த நிச்சயப் புடவையை பார்த்த அன்று தான் அவளை அந்தப் புடவையில் கற்பனை பண்ணி பார்த்தது மாதிரியே இருந்தாள்.

''இந்தக் காலத்து பொண்ணுங்க மாதிரி பியூட்டி பார்லரிலே போய் தலை அலங்காரம் பண்ணிக்கிட்டு வருவான்னு நினைச்சேன். ஆனால் நெத்தி சுட்டி வங்கி ஒட்டியாணம் மட்டும் போட்டுக்கிட்டு தலையை எப்பவும் போல பின்னி தலை நிறைய பூ வைச்சுக்கிட்டு



அவ என் முன்னால வந்து நின்ன போது நானே சொக்கிட்டேன் என்றால் பார்த்துக்கோ.

என் மருமக கொள்ளை அழகுடா. என் கண்ணே பட்டுவிடும் போல! சுத்திப் போடச் சொல்லணும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தவர் யாரோ அழைக்கவும் அவர்களிடம் விரைந்தார்.

மேக் அப் இல்லாமல் அவள் வந்த காரணம் தெரிந்த கண்ணனால் அதை வெளியே சொல்ல முடியவில்லை.

பாலு அவருகில் வந்து, ''ஒரு ஓரமா போய் உட்காருவோமா கண்ணா?'' என்று கேட்டான்.

சரி என்று தன் சம்மதத்தை தெரிவித்தவன் பாலுவுடன் சென்று ஓர் ஓரமாகச் சென்று அமர்ந்து கொண்டான்.

கண்ணன் அமைதியாக இருக்கவும் பாலு அவனிடம் குனிந்து, ''கண்ணா ஒண்ணு மேடையிலே இருக்கும் ராதிகாவை பாரு. இல்லைன்னா பக்கத்தில் இருக்கிற என்னிடம் ஏதாவது சிரித்துப் பேசு. இந்த ரெண்டில் ஏதாச்சும் ஒண்ணை செய்தால் தான் யாருக்கும் எந்த சந்தேகமும் வராது'' என்றதும்.

கண்ணனுக்கு சற்று முன் தேவகி கேட்ட கேள்வி ஞாபகம் வந்ததால் அவன் பாலுவுடன் சிரித்துப் பேச ஆரம்பித்தான். பாலுவின் ஆணைப்படி அவ்வப்போது மேடையை நோட்டம் விடவும் மறக்கவில்லை.

* * *

அன்று நடந்ததை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணன் ஆட்டோ ஓட்டுநரின் வசை மொழியால் நிகழ் காலத்திற்கு திரும்பினான்.

"பொறம் போக்கு! சாவு கிராக்கி! கொஞ்சமாச்சும் அறிவு இருக்கா பாரு. வண்டியை எப்படி ஓட்டுறான்!" என்று சாலையில் சென்ற யாரையோ அந்த ஓட்டுநர் திட்டிக் கொண்டு இருந்தார்.

கண்ணன் மீண்டும் தனக்குள் பேசிக் கொள்ள ஆரம்பித்தான்.

'அன்று என்னை... என் நிறத்தைப் பிடிக்காமல் திருமணத்தை நிறுத்த வீட்டை விட்டு ஓடியவளா இன்று எனக்காக வக்காலத்து வாங்குகிறாள்? அதுவும் திருமணமாகி சில நாட்களிலே எப்படி எனக்கு இந்த அளவுக்கு ஆதரவாகப் பேசினாள்?

அன்று பிடிக்காத என் நிறம் இந்த நான்கே நாட்களில் இவளுக்கு பிடித்து விட்டதா? இல்லை இவ கழுத்திலே நான் தாலி கட்டியதும் அவளது வெளுப்பு நிறம் எனக்கு வந்துவிட்டதா?' என்று வியந்து கொண்டே ஆட்டோவில் பயணித்தான்.

அவர்கள் வீடு சென்று சேர்ந்து ஆட்டோவிற்கு பணம் செலுத்திவிட்டு வீட்டின் உள்ளே வந்ததும் ராதிகா பொரிய ஆரம்பித்தாள்.

"உங்க மனசிலே நீங்க என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க? மனுஷனா பொறந்தா கொஞ்சமாச்சும் ரோஷம் வேண்டாமா? நான் எவ்வளவு அடிச்சாலும் தாங்குவேன். ஏன்னா நான் ரொம்ப நல்லவன் என்ற நினைப்பா?

அவ அவ்வளவு கேவலப்படுத்துறாள். பதிலுக்கு ஒண்ணுமே பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?" என்று திட்டிக் கொண்டு இருக்க,



இவளது கத்தலைக் கேட்டு தேவகியும் கயல்விழியும் வெளியே எட்டிப் பார்த்தனர்.

"என்ன ராதிகா எதுக்கு என் பிள்ளையை திட்டிக்கிட்டு இருக்கே? எதுவா இருந்தாலும் அமைதியா கேளு. என் பிள்ளையை என் முன்னாடி திட்டாதே. உங்க பிரச்சனையை உங்க ரூமிலே வைச்சு பேசு" என்று தேவகி அதட்டல் போட்டார்.

"வாங்க அத்தை... வாங்க. நீங்களே இந்த அநியாயத்தை கேளுங்க" என்றவள் தேவகியை இழுத்து வந்து வரவேற்பறை சோபாவில் அமர வைத்து தானும் அவர் அருகில் அமர்ந்தாள்.

"நீங்க அன்னைக்கு உங்க நாத்தனாரை பத்தியும் அவங்க மகளை பத்தியும் என்கிட்டே கதை கதையா சொன்னீங்க இல்ல... இன்னைக்கு கோவில்ல என்ன நடந்துச்சு தெரியுமா?" என்று கேட்டவள் நடந்ததை அவரிடம் விவரித்தாள்.

"அவ அவ்வளவு பேசுறா அத்தை. இவர் வாயை மூடிக்கிட்டு எனக்கென்ன வந்துச்சுன்னு நின்னுக்கிட்டு இருந்தார்.

வாயிலே என்ன கொழுக்கட்டையா வைச்சிருக்கார்? போடி உன் வேலையை பார்த்துக்கிட்டுன்னு சொல்ல வேண்டாமா? அப்போ தானே அவளுக்கு இன்னொரு முறை இது மாதிரி பேச வாய் வராது.

கிண்டலடிச்ச வாயை இழுத்து வைச்சு தைக்கணும் போல எனக்கு கோபம் பொத்துக்கிட்டு வருது. இவருக்கு மனசிலே புத்தர் என்று நினைப்பு. சே! சே! இயேசுன்னு

நினைப்பு. அதான் ஒரு தடவை கிண்டல் அடிச்சா பத்தாது மேலும் மேலும் கிண்டல் அடிச்சிக்கோங்கிற மாதிரி கை கட்டிட்டு நின்னார்.

எனக்கு வந்த ஆத்திரத்துக்கு முதல்ல இவரைத் திட்டணும் போல இருந்துச்சு. அவ முன்னாடி திட்டக் கூடாதுன்னு தான் அடக்கிக்கிட்டேன்.

வாயிலே என்னத்தை வைச்சுக்கிட்டு அப்படி பிடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரி இருந்தார் என்று கேளுங்க அத்தை'' என கண்ணனை சுட்டிக் காட்டி அவள் ஆவேச மாகப் பேசினாள்.

சம்மந்தப்பட்டவனோ அவர்கள் இருவரையும் தன் பார்வையால் அளந்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் மாடி ஏறிச் சென்றான். கண்ணனது மௌனம் தேவகிக்கும் கயலுக்கும் வியப்பை தந்தது.

'ஏன் இவன் அமைதி காக்கிறான். ராதிகா சொல்வது போல் மகிளாவை உன் வேலையை மட்டும் பாரு என்றாவது எச்சரிக்கை விடுத்திருக்கலாமே!' என எண்ணினர்.

''இப்படித் தான் அத்தை அங்கேயும் அமைதியா இருந்தார். அத்தை உங்க நாத்தனார் பொண்ணை நான் மரியாதை இல்லாமல் பேசினதுக்காக நீங்க என்னை தப்பா நினைச்சாலும் பரவாயில்லை.

என்னால சில விஷயங்களை பொறுத்தப் போக முடி யாது. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லைன்னு சொல்லு வாங்க. அதுக்காக இப்படி அவமானப்படுத்தும் போது எப்படி சும்மா இருக்க முடியும்?



சொந்தக்காரங்கன்னு நாம மட்டும் நினைச்சா போதாது அத்தை. அந்த நினைப்பு அவங்களுக்கும் இருக்கணும். இந்த விஷயத்திலே நீங்க என்னை தப்பா நினைச்சாலும் பரவாயில்லை.

அவரை யாராச்சும்... அதுவும் முக்கியமா நிறத்தை கேலி பண்ணினாங்க... நான் உண்டு இல்லைன்னு பண்ணிடுவேன்'' என்று சொன்னவள் தன் மாமியாரின் பதிலுக்கு காத்திருக்காமல் மாடி ஏற ஆரம்பித்தாள்.

தேவகி மருமகள் தன் மகன் மீது வைத்திருக்கும் பாசத்தைப் பார்த்து வாய் அடைத்துப் போயிருந்தார்.

மாடிப்படியின் அருகே நின்று கொண்டு ராதிகா பேசிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த கயல் விழி ராதிகாவின் கரம் பிடித்து தடுத்து நிறுத்தினாள்.

என்னவென்று ராதிகா கயல்விழியை நிமிர்ந்து பார்த் தாள். ராதிகாவின் மிதமிஞ்சிய கோபமும் ஆற்றாமையும் அவளது கண்களில் நீரைத் துளிர்க்கச் செய்து இருந்தது. அது அவளது கன்னங்களில் உருண்டோடியது.

அந்தக் கண்ணீரை தன் கரங்களால் துடைத்து ஏறிந்த கயல்விழி அவளது உச்சியில் முத்தம் பதித்து தன் அண்ணன் மனைவியை பார்த்து அகலமாக புன்னகைத் தாள்.

''தாங்க்ஸ் அண்ணி. என்னை புரிஞ்சுக்கிட்டதுக்கு தாங்க்ஸ்'' என்ற ராதிகா பதிலுக்கு புன்னகைத்துவிட்டு மாடி ஏறிச் செல்ல ஆரம்பித்தாள்.

மருமகளின் வார்த்தைகள் தேவகியின் உள்ளத்தை குளிர்வித்தது. எந்த ஒரு தாயும் தன் மகனின் குறையை

அடுத்தவர் குறைத்துப் பேசுவதை தாங்கிக் கொள்ள மாட்டாள்.

தன் மகனின் கருமை நிறம் அவனது எதிர்காலத்தை கேள்வி குறி ஆக்குமோ என்ற பயம் தேவகிக்கு இருந்தது இயற்கையே! அதுவும் பெண் நல்ல வெளுப்பு என்ற போது அவரது பயம் பெரிதாகவே இருந்தது.

ஆனால் ஏகாம்பரம் பெண் பார்க்கும் படலத்திற்கு முன்பே தேவகியை கோவிலில் வைத்து சந்தித்து தனது பெண் வெளித் தோற்றத்திற்கு முக்கியத்துவம் தரக் கூடியவள் அல்ல என்று உறுதியாகக் கூறிய பின்பே ராதிகாவை கண்ணனுக்கு திருமணம் செய்து வைக்க தேவகி சம்மதம் சொன்னார்.

தேவகி ராதிகாவை வேண்டாம் என சொல்ல நினைத்த தற்கு அவள் நிறம் மட்டுமே காரணம். ஆனால் தன் மகனுக்கு கட்டி வைக்கலாம் என்று முடிவு செய்ததற்கு ஏகப்பட்ட காரணங்கள் இருந்தன.

ராதிகாவின் ஜாதகமும் கண்ணனின் ஜாதகமும் அமோகமாகப் பொருந்தி இருந்தது ஒரு காரணம். முப்பது வயது வரை தன் மகனுக்கு கல்யாண யோகம் கூடி வராமல் இருந்தது இரண்டாவது காரணம்.

வந்த வரன்கள் எல்லாம் அவனது நிறத்ததை காரணம் காட்டி விலகிய போது நிறம் ஒரு பொருட்டோ இல்லை என்று ராதிகா வீட்டினர் கூறியது மூன்றாவது காரணம்.

அதனால் ராதிகாவை தன் வீட்டு மருமகளாக ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தார்.

ஆனாலும் உள்ளுக்குள் ஒரு ஓரத்தில் சந்தேகமும் பயமும் இருந்து கொண்டே இருந்தது. அது இன்றைய நிகழ்ச்சிக்கு பின் அறவே அழிந்தது.



எந்த ஒரு நிகழ்ச்சியும் காரணமில்லாமல் நடப்ப தில்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள். இன்றைய நிகழ்ச்சி கூட தனக்கும் தன் மகனுக்கும் ராதிகாவின் குணம் பற்றி தெரிவதற்காக நடந்ததாகவே தேவகி நினைத்தார்.

தன்னுள் இருந்த இந்த சந்தேகமும் பயமும் கண் ணனின் மனதுக்குள்ளும் இருந்து இருக்கும். அது இன் றோடு மறைந்து விடும் என்று தேவகி நம்பினார்.

மகிளாவை தாக்கி தன் மகனை தாங்கி ராதிகா பேசப் பேச அவள் தேவகியின் மனதில் தனக்கென்று ஒரு இடத்தை பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள்.

எனக்கு பின் என் பிள்ளையை இவள் பார்த்துக் கொள்வாள் என்ற நினைப்பு எழும் போதே அவருக்கு மருமகளின் மீது அதீத பாசம் பிறந்தது. ராதிகாவை இந்த வீட்டிற்கு அனுப்பி வைத்ததற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தார்.

கயல்விழியின் மனநிலையும் தேவகியை ஒத்தே இருந்தது. அவளும் கடவுளுக்கு மனதார தன் நன்றியை தெரிவித்தாள்.

## 22

தன் கணவனை வறுத்து எடுக்கும் பொருட்டு மாடி ஏறிச் சென்ற ராதிகா அங்கே அவன் படுக்கையில்

அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்து கடுப்பானாள்.

அவள் வேகமாகச் சென்று அந்தத் தொலைக்காட்சியை அணைத்து விட்டு வந்தாள்.

''இங்க ஒருத்தி காட்டுக் கத்தலா கத்திக்கிட்டு இருக்கேன். அதை கொஞ்சமும் சட்டை செய்யாமல் டிவி பார்க்கிறீங்களா டிவி'' என்று பொருமியவள்.

அவன் அருகே சென்று அவனது வாயை பிளந்து பார்த்தாள். அவன் என்ன என்பது போல் பார்க்க...

''இல்லை வாயிலே ஏதாச்சும் அடைச்சு வைச்சிருக்கீங்களோன்னு பார்த்தேன்'' என்றவள்.

''இவ்வளவு கேட்கிறேன் இல்ல... ஏதாச்சும் பதில் பேசுறீங்களா? என்னைப் பார்த்தா லூசு மாதிரி தெரியுதா?'' என்று கேட்டதும்,

அவன் தன் வாய் திறந்து, ''இப்போ நான் என்ன பேசணும் என்று எதிர்பார்க்கிறே?'' என்று கேட்டான்.

''என்ன பேசணுமான்னா கேட்கிறீங்க? அவ உங்களை கிண்டல் அடிச்ச போது நீங்க ஏன் ஒண்ணுமே சொல்லலை?''

''அவ உண்மையை தானே சொன்னாள். நான் கருப்பா தானே இருக்கேன்.''

''ஓஹோ! உங்களுக்கே அப்படி ஒரு எண்ணம் மனசுக்குள்ளே ஓடிக்கிட்டு இருக்கா? இப்ப சொல்லுறேன் கேட்டுக்கோங்க. கண்ணன் என்கிற தனி மனுஷன் தன்னுடைய நிறம் கருப்பு. அப்படி இப்படின்னு என்ன வேணா நினைச்சிக்கிட்டு இருந்திருக்கலாம்.



ஆனா இப்போ இருப்பது ராதிகா புருஷன் கண்ணன். அவனுக்கு மனசிலே அப்படி ஒரு எண்ணம் இருக்கக் கூடாது'' என்று தன் வலது ஆள் காட்டி விரலை இடமும் வலமுமாக ஆட்டி எச்சரித்தவள்,

''அதே மாதிரி இந்தக் கண்ணனை தவிர என் கண்ணுக்கு வேற யாரும் அழகா தெரியமாட்டாங்க. இதையும் நல்லா உங்க மூளையிலும் மனசிலும் பதிய வைச்சுக்கோங்க'' என்று அவனது தலையையும் நெஞ்சையும் தொட்டுக் காட்டிச் சொல்ல.

''அது உன் மனசிலே பதிஞ்சு போய் இருக்கா ராதிகா?'' என்று கண்ணன் ஆழ்ந்த குரலில் கேட்டான்.

'என்ன சொல்ல வருகிறாய்?' என்பது போல் அவனை ஒரு ஊடுறுவும் பார்வை பார்த்தாள்.

''நான் அழகானவன் என்ற எண்ணத்தை உன் மனசிலே பதிய வைச்சிருக்கியான்னு கேட்டேன்.''

''அதிலே உங்களுக்கு என்ன சந்தேகம்?''

''எப்போ பதிய வைச்சே? நான் உன் கழுத்திலே தாலி கட்டிய பின்னாடியா? அதாவது நான் உன் கணவனா மாறினதுக்கு அப்புறமாவா?''

''என்னைக்கு நீங்க என்னை பொண்ணு பார்த்திட்டு கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லிட்டுப் போனீங்களோ அன்னைக்கு'' என்று அவள் அழுத்தம் திருத்தமாகக் கூற,

அவளை தீர்க்கமாக பார்த்துக் கொண்டே, ''அப்படின்னா ஏன் கல்யாணத்துக்கு முதல் நாள் இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று வீட்டை விட்டு ஓடிப் போனே?'' என்று கேட்டான்.

ராதிகாவிற்கு உலகம் தட்டாமலை சுற்றியது. அங்கிருந்த படுக்கையில் தொப்பென்று அமர்ந்தாள்.

'யாருக்கும் தெரியாமல் மறைத்துவிட்டதா நினைத்துக் கொண்டிருக்கும் விஷயம் எப்படி சம்பந்தப்பட்டவனுக்கு தெரிந்தது? இவனுக்கு மட்டும் தெரியுமா? இல்லை ஒட்டு மொத்த குடும்பத்துக்குமா? அவர்கள் எல்லோரும் என்னை பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று எண்ணிப் பார்த்த பொழுது,

அவளது வயிற்றுக்குள் ஒரு பய பந்து சுழன்றது. அவளுக்கு படபடவென வந்தது. அந்த ஏசி அறையிலும் வியர்க்க ஆரம்பித்தது.'

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று மெதுவான குரலில் கேட்டாள்.

"எப்படியோ தெரிஞ்சது. என்னை பிடிக்காமல் தானே கல்யாணத்தை நிறுத்தப் பார்த்திருக்கே!"

"நான் ஓடிப் போனதுக்கு காரணம் கண்டிப்பா உங்க நிறம் இல்லை. ஆனாலும் நீங்க தான் காரணம்" என்று அவள் புதிர் போட,

"என்ன குழப்புறே, சொல்லுறதை தெளிவா சொல்லு!" என்று அவன் அதட்டவும், அவள் வீறு கொண்டு எழுந்தாள்.

"யாரு குழப்புறா? ஊரு உலகத்திலே அவனவன் கல்யாணம் பேசி முடிச்சதும் நிச்சயம் பண்ண பொண்ணோட சினிமா டிராமான்னு சுத்துறாங்க. ஆனா என் விஷயத்திலே அதுக்கு தான் வழியில்லை.

பொண்ணு பார்த்திட்டு போன மனுஷன் ஒரு போனாச்சும் பண்ண மாட்டானா? இங்க அதுவும் கிடையாது.



நானும் இன்னைக்கு பேசுவார் நாளைக்கு பேசுவார் என்று நாளை கடத்தினது தான் மிச்சம்.

ஒரு வார்த்தை பேசினா குறைஞ்சா போயிடுவீங்க? சரி அவர் தான் பேச மாட்டேங்கிறார். நாமளாச்சும் அவரோட டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு நேரில் போவோம் என்று நினைச்சேன். அதுக்கும் எங்க அப்பா தடை போட்டுட்டார்.

போன் பண்ணி பேசலாம் என்றால் எனக்கு நம்பர் தெரியலை. என் தங்கச்சி உங்களை பார்க்க வந்த அன்னைக்கு அவளாச்சும் உங்க நம்பரை வாங்கிட்டு வந்து தருவாள் என்று நினைச்சேன்.

அந்த கேனை மறந்துட்டேன் அக்கான்னு வந்து நிக்குறா. இருடி நாளைக்கு உன் கல்யாண சமயத்திலே நான் உன்னை பழி வாங்குறேன் என்று சொல்லிட்டேங்கிறதுக்காக அதுக்கு அப்புறமா உங்களை பார்த்து நம்பர் வாங்கித் தர மாட்டேனுட்டாள்" என்று அவள் தன் ஏக்கத்தை விவரிக்க, கண்ணன் குழம்பிப் போனான்.

'இவள் எனக்காக இவ்வளவு ஏங்கினாளா? என்ன புதுசா கதை சொல்லுறாள். அப்புறம் எதுக்கு ஓடிப் போனாள்?' என்று மண்டையை பிய்த்துக் கொள்ளாத குறையாக அமர்ந்திருந்தான்.

"ஏன் உங்க அப்பாக்கிட்டே என் நம்பரை கேட்டு வாங்கிக்க வேண்டியது தானே? அவரிடம் இருக்குமே!"

"எங்கப்பா உங்ககிட்டே வந்து என் நம்பரை கொடுத்தார் இல்ல அப்ப போன் பண்ணாமல் கோட்டை விட்டுட்டு இப்போ வந்து வக்கீலுக்கு படிச்சவரு மாதிரி நல்லா பாயிண்ட் பாயிண்டா என்னை கேள்வி கேளுங்க.

எங்கப்பாகிட்டே உங்க நம்பரை கேட்டதுக்கு நான் மாப்பிள்ளைகிட்டே உன்னோட நம்பர் கொடுத்திருக்கேன் ராதிகா. அவரே பேசுவார். ஒரு வேளை அவர் கல்யாணத்துக்கு முன்னாடி உன்கிட்ட பேசப் பிரியப் படலையோ என்னவோன்னு சொல்லிட்டு நம்பர் தராமலே போயிட்டார்.

அப்பவும் நான் விடலையே. அவர் செல்போனை திருட்டுத்தனமா நோண்டிப் பார்த்தேன். கண்ணன் என்ற பேரிலே எந்த நம்பரும் இல்லை. அன்னைக்கு நம்ம மறுவீட்டு விருந்துக்கு போன அன்னைக்கு எங்க அப்பா செல்லுக்கு ஒரு போன் வந்துச்சு நான் அதை எடுத்து பார்க்கிறேன்.

ராதிகா (2) அப்படிங்கிற பேர் ஸ்கீரினிலே வந்துச்சு. அது யாரடா அப்பாவுக்கு தெரிஞ்ச இன்னொரு ராதிகான்னு நினைச்சுக்கிட்டே அவர்கிட்டே செல்லைக் கொண்டு போய் கொடுக்கிறேன்... சொல்லுங்க மாப்பிள்ளைன்னு உங்ககிட்டே பேசுறார்.

மனுஷன் இது மாதிரி தில்லாலங்கடி வேலை எல்லாம் பண்ணி இருப்பார் என்று எனக்கு தெரியாமல் போச்சே!'' என்று அங்கலாய்க்க கண்ணன் புன்னகைத் தான்.

''உங்ககிட்டே நான் பேசணும் எனறு நினைச்சேன். ஆனா நான் பொண்ணு என்பதால எனக்கு இயல்பான கூச்சம் இருந்ததால் என்னால் முழு மூச்சா முயற்சி பண்ண முடியலைன்னு தான் சொல்லணும். இல்லைன்னா அப்பாவுக்கு தெரியாமல் உங்க கடைக்கு வர எனக்கு எவ்வளவு நேரம் ஆகி இருக்கும்?'' என்று கூற



கண்ணனுக்கு அவளது கூற்றில் இருந்த நியாயம் நன்கு விளங்கியது.

ஒரே இடத்தில் அமர்ந்து இருக்க முடியாமல் கண்ணன் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக அந்த அறையில் நடை பயின்றான். அவள் தொடர்ந்து பேசிக் கொண்டே போனாள்.

''நம்ம நிச்சயதார்த்தத்திற்கு முதல் நாளே என் கையிலே மெஹந்தி போட வேண்டியது. ஆனா அந்த பார்லர் பொண்ணோட குழந்தைக்கு உடம்பு சரி இல்லை என்று சொல்லி மருதாணியை மறுநாள் போடட்டுமான்னு என்கிட்டே கேட்டாள். நானும் பரிதாபப்பட்டு சரின்னு சொன்னேன்.

அதனால நம்ம நிச்சயதார்த்தம் நடக்க இருந்த அன்னைக்கு காலையிலே நானும் எங்க அம்மாவும் பார்லருக்கு போனோம்.

மணிக்கணக்கா செலவு செஞ்சு அந்தப் பொண்ணு என் கையில் டிசைன் போட்டுவிட்டாள். நான் வெளியே வந்த போது நீங்க பக்கத்தில் இருந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்கு உள்ளே நுழையுறதை பார்த்தேன்.

உங்ககிட்டே எப்படியாச்சும் பேசணுங்கிற ஆசையிலே வேகமா உங்களை நோக்கி நடந்தேன். எங்கேடி போய்கிட்டு இருக்கே என்று எங்க அம்மா என் கை பிடிச்சு நிறுத்தினாங்க.

எங்க அம்மாகிட்டே உண்மையை சொல்ல எனக்கு வெட்கமா இருந்துச்சு. அதனால என் பிரண்டு ஒருத்தி அந்த ஷாப்பிங் சென்டருக்குள் போறதாயும் அவளுக்கு

கல்யாண பத்திரிகை கொடுக்கணும் என்றும், நான் அஞ்சு நிமிஷத்திலே வந்துடுறேன் என்றும், அது வரைக்கும் பார்லருக்குள்ளே போய் உட்காருங்கன்னும் ஒரு பொய்யை சொல்லி எங்க அம்மா கையிலே இருந்து என் ஹேண்ட பாகையும் பறிச்சிக்கிட்டு ஆசையா ஓடி வந்தேன்.

என் மெஹந்தி அழிஞ்சிடும் என்று கூட நான் கவலைப் படலை தெரியுமா?'' என்று குழந்தைத்தனமாய் கவலைப்பட்டவள் அவனிடம் மீண்டும் தன் கதையை தொடர்ந்தாள்.

''நான் ஆசை ஆசையாய் உங்களை நோக்கி வந்தேன். நீங்க யார் கிட்டவோ போனிலே பேசிக்கிட்டு இருந்தீங்க. அந்தப் பேச்சை கேட்டதுக்கு அப்புறமா தான் நான் ஓடிப்போகணும் என்று முடிவெடுத்தேன். எங்க ரவி அண்ணனும் உதவி செஞ்சான்'' என்றதும்,

''உன்னை ஊரை விட்டுத் துரத்துற அளவுக்கு நான் அப்படி என்ன பேசினேன்?'' என்று குழப்பமாய் கேட்டான்.

''நான் உங்க பக்கத்திலே ஆசை ஆசையா வந்தேன். அப்போ நீங்க போனில் எப்படிடா சந்தோஷப்பட முடியும்? நான் உயிருக்கு உயிரா காதலிச்ச பொண்ணு வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்டாள். இதுக்கு அப்புறம் நான் பொண்ணுங்களையும் கல்யாணத்தையும் வெறுக்கிறதிலே தப்பென்ன சொல்லு, நான் வாழ்க்கையை வெறுத்துப் போய்... என்று பேசிக்கிட்டு இருந்தீங்க.



அதைக் கேட்டதும் எனக்கு உலகமே சுத்துற மாதிரி இருந்துச்சு. அந்த இடத்தை விட்டு எவ்வளவு சீக்கிரம் ஓட முடியுமோ அவ்வளவு சீக்கிரமா ஓடிப் போனேன்'' என்று அவள் கூறவும் கண்ணனின் முகம் பிரகாசத்துக்கு மாறியது.

## 23

ராதிகாவின் விளக்கத்தை கேட்டதும் கண்ணனின் மனதில் முதலில் தோன்றிய எண்ணம் 'பெருமாளே நன்றி!' என்பதே.

அமர்ந்திருந்தவளை எழுப்பி நிறுத்தி அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு அவளது கூந்தலில் முகம் புதைத்தான்.

கணவனின் முதல் அணைப்பு எந்த ஒரு பெண்ணிற்கும் கிறக்கத்தை கொடுக்கும். ஆனால் ராதிகாவினால் அந்த உணர்வை அனுபவிக்க விடாமல் கண்ணனின் உடலில் தென்பட்ட மெல்லிய நடுக்கம் தடுத்தது.

அவனது முதுகை ஆதரவாக தடவிக் கொடுத்தவள், ''என்னாச்சுங்க? எதுக்கு உங்க உடம்பு இப்படி நடுங்குது?'' என்றாள்.

அவன் பதிலேதும் கூறாமல் மேலும் இறுக்கி அணைக்கவும் இம்முறை அவளது பெண்மை விழித்துக் கொண்டது. நாணமும் கிறக்கமும் போட்டி போட்டுக்

கொண்டு அவளுள் தோன்றினாலும், "என்னாச்சுங்க?" என்ற கேள்வியை விடாது கேட்டாள்.

இவளை என்று மனதிற்குள் திட்டியவன் தனது அணைப்பை கை விட்டு அவளது முகம் தாங்கி அவளது உதடுகளை தனது உதடுகளால் சிறை செய்தான்.

அவள் தனது கரங்களால் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள். அந்த நெடிய முத்தத்திற்கு பிறகு அவளை விடுவித்தவன். திரும்பவும் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டு "மைமா" என்று அழைக்கவும்,

அந்த அழைப்பினால் ராதிகாவிற்கு முன் எப்பொழுதும் ஏற்படாத சிலிர்ப்பு உண்டானது. கணவனுக்குள் புதைந்து விடுவதை போல் அவனை இறுகத் தழுவினாள்.

ஆனாலும் சில நொடிகளில் அவனது அன்றைய பேச்சிற்கான விளக்கத்தை கேட்டு அறிய வேண்டும் என்று ஆவலாக இருந்தது.

"ஏங்க அன்னைக்கு என்ன நடந்துச்சு?" என்று அவள் கேட்டதும் அவளது அணைப்பில் இருந்து விலகியவன்,

"உன்னை திட்ட வேண்டாமேன்னு நினைச்சேன். நீ விட மாட்டேங்கிற, திட்டு வாங்கித் தான் தீருவேன் என்று அடம் பிடிக்கிறே. உட்கார்" என்று சொல்லி, படுக்கையில் அவளை அமர வைத்தவன் தானும் அவளருகில் அமர்ந்தான்.

"அன்னைக்கு அவ்வளவு ஆவலா என் பக்கத்திலே வந்தேன்னு சொல்லுற இல்ல... என்ன ஏதுன்னு விளக்கம் கேட்காமல் ஏன் ஓடிப் போனே?" என்று கேட்டான்.



"அது எப்படி கேட்க முடியும்?"

"ஓ.கே. உன்னால விளக்கம் கேட்க முடியலைன்னே வைச்சுக்குவோம். நான் யாரையோ லவ் பண்ணி ஏமாந்து போனால் உனக்கு என்ன வந்துச்சு?"

"எனக்கு என்ன வந்துச்சா? நஷ்டம் எனக்கு தானே? நீங்க வேற ஒரு பொண்ணை லவ் பண்ணுறீங்கன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னால எப்படிங்க காலம் தள்ள முடியும்? உங்களை கல்யாணம் பண்ணி நீங்க அந்தப் பொண்ணு நினைப்பிலே இருந்துட்டா என் வாழ்க்கையே நஷ்டமாகிடாதா?"

"ஓ! அப்போ கல்யாணத்துக்கு முதல் நாள் ஓடிப் போனியே... அன்னைக்கு மட்டும் நம்ம கல்யாணம் நடக்காமல் போயிருந்தால் உன் வாழ்க்கை நஷ்டமாகாதா?

உங்க அம்மா அப்பாவை பார்த்த ஊரிலே உள்ளவங்களெல்லாம் ஏங்க உங்க பொண்ணு ஓடிப் போச்சு? யாரையாச்சும் லவ் பண்ணுச்சான்னு கேட்டால் அவங்க என்ன சொல்லுவாங்க?"

"லவ்வா?" என்று முகத்தை சுளித்துக் கொண்டு கேட்டவள், "ஆனா நான் தான் யாரையும் லவ் பண்ணலையே!" என்றாள்.

"அது உனக்கும் உங்க வீட்டிலே உள்ளவங்களுக்கும் தெரியும். ஆனா ஊருக்கு எப்படி தெரியும்? ஒருவேளை 'ராதிகா யாரையும் லவ் பண்ணலை' ன்னு போஸ்டர் அடிச்சு வீதியா நீயும், உனக்கு ஓடிப் போக உதவி செஞ்சானே உன் வீணாப் போன ரவி அண்ணனும்

ஒட்டுவீங்களோ?'' என்று அவன் படு நக்கலாக கேட்கவும்,

''இப்போ எதுக்கு எங்க அண்ணனை திட்டுறீங்க?'' என்று கேட்டாள்.

''உங்க அண்ணனை நான் கண்டிப்பா திட்டுவேன். நீ ஓடிப் போனால் பாதிக்கப்படப் போறது நீ மட்டுமா? நானும் தானே? அப்ப உன்னோட அந்த உதவாக்கரை ஐடியாவை செயல்படுத்த உதவியவனை ஆயுசுக்கும் திட்டுவேன்'' என்றதும்,

''அவன் என் பேச்சை கேட்டு கொஞ்ச நேரத்துக்கு என் வீட்டுக்கு போன் பண்ணாமல் இருந்தான். அப்பக் கூட வீட்டுக்கு போவோம் வான்னு தான் தொண தொணன்னு ஏதோ சொல்லிக்கிட்டு இருந்தான். என்னை விட ஒரு வயசு தான் பெரியவன். அதான் அவனுக்கும் விவரம் பத்தலை. இல்லைன்னா என்னை ஓங்கி கன்னத்திலே நாலு அறை அறைஞ்சு இழுத்திட்டுப் போயிருப்பான்'' என்றாள்.

''சரி கல்யாணம் நின்னு போயிடும். அதுக்கு அப்புறம் என்ன செய்யுறதா ஐடியா பண்ணினே?'' என்று கேட்டான்.

''கொஞ்ச நாள் கழிச்சு வேற ஒரு மாப்பிள்ளையை...'' என்று தொடங்கியவள்,

''அதாவது நம்ம கல்யாணம் நடக்காமல் இருந்தால் வேறு ஒருத்தரை...'' என்று முடிக்காமல் நிறுத்தினாள்.

அவன் தன் மீது வைத்திருக்கும் அன்பும் காதலும் அவள் முடிக்காமல் விட்ட வாக்கியத்தில் வெளிப்பட கண்ணன் புன்முறுவல் புரிந்தான்.



இருப்பினும் சொல்ல வந்ததை பாதியில் நிறுத்த மனமில்லாது, **''கல்யாணத்துக்கு முதல் நாள் ஓடிப் போன பொண்ணை எவன் கட்டிக்க முன் வருவான்?'' என்று கேட்டான்.**

''கண்டிப்பா யாராச்சும் வருவாங்க.''

''ம்ம்ம் வருவான். குடிகாரன், கேப்மாரி, மொள்ளமாரி இப்படி எவனாச்சும் வருவான். அவனை கல்யாணம் பண்ணிக்கிட்டு உன் வாழ்க்கையை வீணாக்குவதை விட லவ் பெயிலியர் ஆன என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டு நீ ஏன் ரிஸ்க் எடுத்து இருக்கக் கூடாது? நீ ஏன் அப்படி நினைச்சுப் பார்க்கலை?''

அவனது கேள்வி அவளது மூளையை சென்று அடையும் முன்னே 'லவ் பெயிலியர் ஆன என்னை' என்ற வார்த்தைகள் முதலில் சென்று அடைந்து அவளை வருந்தச் செய்தது.

''நான் கேட்டதுக்கு பதில் சொல்லு'' என்று அவன் வலியுறுத்தவும்,

''உண்மை தெரிஞ்ச நல்லவன் ஒருத்தன் கூடவா வரமாட்டான் என்று நினைச்சேன்'' என்றாள்.

''அந்த நல்லவன் எப்போ வருவான்? உனக்கு முடி எல்லாம் நரைச்சு போன பிறகா? அதுக்கு அப்புறம் உனக்கு நடக்கப் போகிற உன் கல்யாணத்தை விடு. உன் தங்கச்சி கல்யாணம்... அது பத்தி யோசிச்சுப் பார்த்தியா? உன் அப்பா அம்மா நிலைமையை யோசிச்சுப் பார்த்தியா? நீ தப்புப் பண்ணலை. அதனால இந்த ஊரும் உலகமும் உன்னையும் உன் குடும்பத்தையும் அப்படியே விட்டு விடுவாங்கன்னு நினைச்சியா?

இல்லை உனக்கு கோவில் கட்டுவாங்கன்னு நினைச்சியா?

துக்கம் விசாரிக்கிறேன் பேர்வழின்னு உங்களை நோகடிக்க மாட்டாங்க? இது எது பத்தியும் யோசிக்கலை. இவ நான் பேசுறதை கேட்டாளாம், அதனால வாழ்க்கையை காப்பாத்திக்க ஓடிப் போகப் பார்த்தாளாம். லூசு'' என்று திட்டினான்.

''இப்ப எதுக்கு என்னை லூசுன்னு திட்டுறீங்க?''

''நீ செஞ்ச காரியத்துக்கு உன்னை கொஞ்சவா செய்வாங்க.''

''தப்புப் பண்ணினேன். ஆனா போன சில மணி நேரத்திலேயே நான் செஞ்சது தப்புன்னு தெரிஞ்சதாலே தான் நானே என்னைக் கண்டுபிடிக்க ஹின்ட் கொடுத்தேன் தெரியுமா?''

''நான் கூட உன்னை முட்டாள் என்று நினைச்சேன். ஆனா இப்பத் தானே தெரியுது நீ வடிகட்டின முட்டாள் என்று திரும்பிப் போகிற எண்ணம் வந்துடுச்சுன்னா வீட்டிலே உள்ளவங்களுக்கு ஒரு போன் பண்ணிட்டு நேரா வீட்டைப் பார்த்துப் போக வேண்டியது தானே. அதை விட்டுட்டு ஹின்ட் கொடுத்தாளாம் ஹின்ட்'' என்று அவன் எகிறினான்.

''சும்மா சும்மா ஒரு சின்ன பொண்ணை திட்டாதீங்க.''

''ஆமா இவ வாயில விரலைக் கொடுத்தா கூட சப்பத் தெரியாத பச்ச புள்ளை... இவளை நாங்க திட்டுறோம். எதுக்கு வீட்டை பார்த்துப் போகாமல் குறிப்ப கொடுத்தே?''



''உங்க பேச்சை கேட்டதும் அலறி அடிச்சு வந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸை விட்டு வெளியேறி ரோட்டுக்கு வந்தேன். பார்லருக்கு போனால் அம்மா என்னை வீட்டுக்கு கூட்டிட்டு போயிடுவாங்கன்னு நினைச்சேன்.

அதனால அம்மா கண்ணிலே படக்கூடாதுன்னு ஆட்டோ பிடிச்சு வேற ஒரு ஷாப்பிங் மாலுக்கு போனேன்.

ஆட்டோவில் போகிற வழியிலே 'எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம். நான் வீட்டை விட்டுப் போகிறேன்' என்று எங்க அப்பா செல்லுக்கும் என் தங்கச்சி செல்லுக்கும் ஒரு எஸ்.எம்.எஸ் அனுப்பினேன்.

அந்த ஷாப்பிங் மாலுக்கு எப்படிப் போய் இறங்கினேன். அங்கே என்ன செஞ்சேன் என்று இப்ப கேட்டா கூட எதுவுமே எனக்கு சொல்லத் தெரியலை.

நீங்க தான் என் வருங்காலக் கணவன் என்று தெரிஞ்ச நாளில் இருந்து உங்களை நினைச்சு நான் கண்ட கனவு ஏராளம்.

அந்தக் கனவெல்லாம் தரை மட்டமா ஆகிடுச்சுன்னு தெரிஞ்சவுடனே எனக்கு உலகமே அஸ்தமிச்சதா தோணுச்சு. எங்க அப்பாவுக்கும் தங்கச்சிக்கும் எஸ்.எம்.எஸ் பண்ணுற வரைக்கும் என் மூளை வேலை செஞ்சது. அதுக்கு அப்புறம் அது எது பத்தியும் சிந்திக்கலை. வேலை நிறுத்தம் செஞ்சிடுச்சுன்னு நினைக்கிறேன்.

என்னை ரவி அண்ணன் அந்த மாலில் பார்த்திட்டு என்ன ராதிகா இந்நேரம் வீட்டிலே இல்லாமல் இங்கே எங்கே சுத்திக்கிட்டு இருக்கே? கல்யாணப் பொண்ணை எப்படி தனியே விட்டாங்கன்னு கேட்டு இருக்கான்.

நான் அதுக்கு பதிலே சொல்லாமல் 'யாரடா நீ?' என்பது போல் அவனைப் பார்த்து பேந்த பேந்த முழிச்சு இருக்கேன். அவன் என்னை உலுக்கின உலுக்கலில் தான் என் மூளை திரும்பவும் வேலை செய்ய ஆரம்பிச்சது. சுற்றுப்புறம் உறைச்சது. நான் யார், அவன் யார் என்று தெரிய வந்துச்சு.

அவன் வரதுக்கு முன்னாடி பைத்தியம் மாதிரி அந்த கட்டிடத்தை சுத்தி வந்திருக்கேன். என்னை யாராச்சும் அந்த நேரம் கடத்திட்டுப் போயிருந்தா கூட எனக்கு தெரிஞ்சிருக்காது'' என்று அவள் கூறியதும்,

அவளை நெருங்கி அமர்ந்த கண்ணன் அவளை தன் மீது சாய்த்துக் கொண்டு, ''ஏதாச்சும் தத்து பித்துன்னு உளராதே!'' என்று கூறி அணைத்துக் கொண்டான்.

அவளது மேனி இப்பொழுது கூட நடுங்கிக் கொண்டிருந்தது. அவளது முதுகை அவன் வருடிக் கொடுக்க அவன் மீது சாய்ந்து கொண்டு அவள் தன் கதையை தொடர்ந்தாள்.

''கிட்டதட்ட முக்கால் மணி நேரம் உலகம் மறந்து, இன்னும் சொல்லப் போனால் என்னையே மறந்து அந்த ஷாப்பிங் மாலில் சுத்தி இருக்கேன். அப்படின்னா உங்களை நான் எந்த அளவுக்கு மனசிலே நேசிச்சு இருக்கேன் என்று பார்த்துக்கோங்க'' என்றதும் அவளை இறுக அணைத்து அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.

'தாலி கட்டுவதற்கு முன்பே இவளுக்கு என்னை இந்த அளவிற்கு பிடித்து இருக்கு என்றால் என்னை விட அதிர்ஷ்டசாலி இந்த உலகத்தில் வேறு யாரும் இல்லை' என்று நினைத்துக் கொண்டான்.



''எனக்கு சுயநினைவு வந்ததும் ரவி அண்ணன் என் வீட்டுக்கு போன் போடப் பார்த்தான். நான் அவனை யாருக்கும் எந்த போனும் பண்ணக் கூடாதுன்னு சொல்லி அவன் போனை வாங்கி வைச்சுக்கிட்டேன்.

எனக்கு உதவி செய்யலைன்னா தற்கொலை பண்ணிக்குவேன் என்று மிரட்டினேன், அவன் பயந்துட்டான்.

என்ன செய்யலாம்? எங்கே போய் மறைஞ்சுக்கலாம்? எப்படி இந்தக் கல்யாணத்தில் இருந்து தப்பிக்கலாம்? என்று யோசிச்சுக்கிட்டே இருந்தேன்.

எங்க ரவி அண்ணன் பக்கத்திலே இருந்துக்கிட்டு அட்வைஸ் என்ற பேரிலே எதை எதையோ சொல்லிக்கிட்டே இருந்தான். அதிலே ஒண்ணு கூட என் மண்டையிலே ஏறலை.

முதல்ல ஏதாச்சும் ஜூஸ் குடி. ரொம்ப சோர்வா தெரியுறே என்று சொல்லி அந்த மாலில் உள்ள புட் கோர்ட்டுக்கு கூட்டிட்டுப் போய் ரவி அண்ணன் மாதுளை ஜூஸ் வாங்கிக் கொடுத்தான். அதைக் குடிச்சதும் எனக்கு தெம்பு வந்துச்சு. என் மூளை கொஞ்சம் வேலை செய்ய ஆரம்பிச்சது.

நாங்க அந்த புட் கோர்ட்டில் இருந்து வெளியேறி கீழே வந்துகிட்டு இருக்கும் போது சோனி ஷோ ரூமில் விற்பனைக்காக வைச்சிருந்த டிவியில் பாட்டு ஓடிக்கிட்டு இருந்தது. அதுவும் சிவாஜி கணேசன் பாட்டு.

எங்க அப்பா சிவாஜி ஃபேன். எப்பப் பார்த்தாலும் சிவாஜி பாட்டு பாடிக்கிட்டே இருப்பார். சிவாஜி பாட்டை பார்த்ததும் நான் ஆணி அடிச்ச மாதிரி அங்கேயே நின்னுட்டேன். அதிலே என்ன பாட்டு தெரியுமா ஓடிக்கிட்டு இருந்துச்சு?

மலரென்ற உறவு பறிக்கும் வரை
மகளென்ற உறவு கொடுக்கும் வரை
உறவொன்று வருவதில் மகிழ்ந்துவிட்டேன்
உறவொன்று பிரிவதில் அழுதுவிட்டேன்
எந்தன் வீட்டுக் கன்று இன்று எட்டி எட்டிப் போகிறது
கண்ணின் ஓரம் கண்ணீர் வந்து எட்டி எட்டிப் பார்க்கிறது
இமைகள் அதை மறைக்கிறது

அன்புள்ள அப்பா படத்திலே கல்யாணமாகிப் போகும் தன் பொண்ணைப் பார்த்து சிவாஜி பாடுற பாட்டு ஓடிக்கிட்டு இருந்துச்சு.

எனக்கு அந்த டிவியிலே சிவாஜி கண்ணுக்கு தெரியலை. எங்கப்பா தான் கண்ணுக்கு தெரிஞ்சார். என் கல்யாணத்தை பத்தி கனவு கண்ட எங்க அப்பா தான் தெரிஞ்சார்.

அது வரைக்கும் கல்யாணத்தை எப்படி நிறுத்தறதுன்னு புத்தி பேதலிச்சு போய் திரிஞ்ச நான் முதல் முறையா எங்க அப்பாவை பத்தி யோசிக்க ஆரம்பிச்சேன்.

இந்தக் கல்யாணத்திலே உனக்கு சம்மதம் தானேடான்னு ஆயிரம் தடவை கேட்ட எங்க அப்பா என் நினைவுக்கு வந்தார். என் கல்யாணம் நடந்தால் இப்படி ஆனந்தக் கண்ணீர் விட வேண்டிய எங்க அப்பா நான் ஓடிப் போனால் என்ன ஆவார் என்று நினைச்சுப் பார்த்தேன்.



ஆதாரமில்லை அம்மா ஆறுதல் சொல்ல
நான் அவதாரம் இல்லை அம்மா தத்துவம் சொல்ல
பரிகாரம் தேடி இனி எவ்விடம் செல்ல?
எனக்கு அதிகாரமில்லை அம்மா வானகம் செல்ல
ஒரு நாளும் நான் இது போல் அழுதவனல்ல
அந்த திருநாளை மக(ன்)ள் கொடுத்தா(ன்)ள் யாரிடம் சொல்ல?
சோதனை மேல் சோதனை போதுமடா சாமி!

என்று சோக சிவாஜியா மாறிடுவாரோன்னு நினைச்சதும் மனசு பதைபதைச்சது. உடம்பு நடுங்கிப் போனது. உடனே திரும்பிப் போகலாம் என்று முடிவு செஞ்சேன். கண்ணில் இருந்து தாரை தாரையா கண்ணீர் ஊத்துச்சு'' என்று சொல்லிக் கொண்டு வந்தவளின் கண்களில் இப்பொழுதும் கண்ணீர் வடிய கண்ணன் அதை துடைத்து விட்டான்.

ஒரு ஐந்து நிமிடங்கள் அன்று நடந்ததையே நினைத்து அமைதி காத்தாள். அவனும் அவளை வருடிக் கொடுத்து ஆறுதல் அளிக்க முயன்று கொண்டிருந்தான்.

## 24

தற்போது எல்லாம் நல்லபடியாகிவிட்டது. கண்ணன் தன்னுடைய கணவனாகக் கிடைத்து விட்டான். அப்பாவிற்கும் எந்த அவமானமும் ஏற்படவில்லை

என்ற நிதர்சனத்தை உணர்ந்தவள் விரைவிலேயே தன்னை மீட்டுக் கொண்டாள். அவனிடம் இருந்து விலகினாள்.

பழைய குறும்புத்தனம் தலை தூக்க புன்னகையுடனே அவனை பார்த்து, ''வீட்டுக்கு ரவி அண்ணன் கூடவே திரும்பிப் போகலாம் என்று முடிவு பண்ணினேன். ஆனாலும் வீட்டுக்கு வரேன் என்று எங்க அப்பாவுக்கு போன் பண்ணிச் சொல்றதுக்கு எப்படியோ இருந்துச்சு. அதான் ஹின்ட் கொடுத்தேன். மொத்தத்திலே சில மணி நேரத்திலே ஓடிப் போன ராதிகா வீட்டுக்கு போயிட்டாள்'' என்று அவள் கூறவும்,

அவளது தோற்றமும் அவளது விளக்கங்களும் அவனுக்கு அடக்க முடியாத சிரிப்பை வரவழைத்தன.

''சிரிக்காதீங்க...'' என்று அவள் சிணுங்க,

''நீ பண்ணின காரியத்துக்கு உன்னை ஒரு அறையாவது அறையணும். போனால் போகுதுன்னு உன்னை நான் விட்டு வைச்சுகிட்டு சிரிச்சுக்கிட்டு இருக்கேன். என்னை விடு. உங்கப்பா அறைஞ்சாரா?'' என்று கேட்டதும் அவளது முகம் பிரகாசத்திற்கு மாறியது.

''இல்லைங்க. அதுக்கு அவருக்கு சான்ஸே கிடைக்கலை. நானும் ரவி அண்ணனும் வீட்டுக்கு போன போது எல்லோரும் இவ்வளவு நேரமாவா பார்லரிலே உட்கார்ந்து இருப்பே? மண்டபத்துக்கு போக டைம் ஆச்சு, வா வந்து புடவையை கட்டிட்டு ரெடியாகு என்று சொல்லி என்னை கிளம்பச் சொல்லிட்டாங்க.

என்னை சுத்தி சொந்தக்காரங்க கூட்டம் இருந்ததால் எங்க அம்மா அப்பாவால என்கிட்டே தனியா பேச



முடியலை. மண்டபத்துக்கு வந்தப்புறம் எங்கே இருந்து பேசுறது?

திரும்பி வந்த பொண்ணுகிட்ட ஏதாச்சும் கேட்கப் போய் அவ திரும்பவும் ஓடிட்டான்னா என்று நினைச்சிருப்பாங்க. ஆனா அன்னைக்கு விடிய விடிய என் வீட்டு ஜீவன்கள் மூணு பேரும் காவல் காத்ததை பார்த்தப்போ எனக்கே பாவமா இருந்துச்சு. இவங்க மூணு பேரும் இப்படின்னா எங்க ரவி அண்ணன்...'' என்று சொன்னவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

''எங்கப்பா கையிலே சிக்கினா சின்னா பின்னமாகிடுவோம் என்று பயந்து இந்தப் பக்கம் தலை காட்டலையே!'' என்று கூறி மேலும் நகைத்தாள்.

''அப்புறம் தாலி கட்டி முடிச்ச உடனே உங்க கூட வந்துட்டேன். நான் கூட மறு வீட்டுக்கு போன போது ஏதாச்சும் திட்டுவாரோன்னு பயந்தேன். எங்க அப்பா அந்த டாபிக்கை ஆரம்பிச்சார்.

அவரை பேசவிட்டால் அறை கண்டிப்பா கிடைக்கும் என்று பயந்து போய் கோபமாய் பேசுற மாதிரி பேசி அவரை அந்த டாபிக்கை பேச விடாமல் தடுத்துட்டேன் இல்ல...'' என்று பெருமை பொங்கச் சொன்ன மனைவியை பார்த்து புன்னகைத்துக் கொண்டே,

''ரொம்பச் சாமர்த்தியம் தான் போ'' என்று கிண்டல் பண்ணியவன்,

''ஆனா உங்க அப்பாகிட்டே விளக்கிச் சொல்லி இருக்கலாம் தானே ராதிகா. நீ கோபமாய் பேசினதால அவர் வருத்தப்பட்டிருப்பார் இல்ல?'' என்று கேட்டான்.

''என்னன்னு சொல்லச் சொல்லுறீங்க. நீங்க பார்த்த மாப்பிள்ளை வேற ஒரு பொண்ணை காதலிச்சாராம். அதனால அவருக்கு பொண்ணுங்கன்னா பிடிக்காதாம் என்றா சொல்லச் சொல்லுறீங்க. அது அவரை எவ்வளவு சங்கடப்படுத்தும். அதை விட நான் திட்டினது அவரை எந்த வகையிலும் காயப்படுத்தாதுங்க.''

''இப்போ இவ்வளவு விரிவா பேசுறே இல்லை. இந்தச் சந்தேகத்தை நமக்கு கல்யாணம் ஆன பின்னாடியாச்சும் கேட்டு இருக்கலாம் இல்ல. நமக்கு கல்யாணம் ஆகி அஞ்சு நாளாச்சு. ஏன் கேட்கலை? தினமும் என் கூட வார்த்தைக்கு வார்த்தை மல்லுக்கு நின்னே தானே!'' என்றான்.

''கேட்கணும் என்று தான் நினைப்பேன். அப்புறம் தயக்கமா இருக்கும்.''

''உன் தயக்கத்திலே தீயை வைக்க... அப்போ காலத்துக்கும் என் கூட வாய் சண்டை போட்டுக்கிட்டே வாழ்ந்திடலாம் என்று பார்த்தியா?''

''அய்யாவுக்கு ரொம்ப தான் நினைப்பு. போனாப் போறீங்கன்னு உங்களுக்கு ஒரு வாரம் டைம் கொடுத்தேன். அதுக்குள்ளே இது விஷயமா நீங்களே பேசலைன்னா நானே உங்க சிண்டை பிடிச்சு ஆட்டி இருப்பேன்.''

''அது என்ன ஒரு வார கணக்கு?''

''உங்ககிட்டே சகஜமா பேசிப் பழக ஒரு வாரம் வேண்டாமா?'' என்று கேட்டவள் அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவளாக,



''என் தயக்கத்திலே தீயை வைக்கிறதை பிறகு பார்க்கலாம். நான் ஓடிப் போன விஷயம் தெரிஞ்சு கல்யாணத்தை நிறுத்தாமல் இருந்ததெல்லாம் ஓ.கே. ஆனா என்கிட்டே ஏன் இத்தனை நாளா நீங்க விளக்கம் கேட்கலை? ஏன் தயங்கினீங்க?'' என்று சரியான இடத்தில் தாக்கினாள்.

''அது... நீ என்னைப் பார்த்து உன்னை பிடிக்கலை டான்னு சொல்லிவிடுயோன்னு ஒரு பயம்.''

''அப்படின்னா அந்த பயம் எனக்கு இருக்காதா? என் லவர் என்று சொல்லி எவளையாச்சும் காட்டிடுவீங்கன்னு நான் பயப்படக் கூடாதா?'' என்று நியாயம் கேட்டவள்,

''இவ்வளவு தூரம் பேசுறீங்க... நீங்க யாரை லவ் பண்ணீங்கன்னு மட்டும் சொல்ல மாட்டேங்கிறீங்க. அவ யாரு?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவளின் மூளைக்குள் ஒரு மின்னல் அடிக்கவும்,

''அந்தப் பொண்ணு மகிளான்னு மட்டும் சொல்லிடாதீங்க!'' என்று அவசர அவசரமாக உரைத்தாள்.

''உனக்கு அவ மேல அப்படி என்ன காண்டு?'' என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்கவும்,

''அவ மேல எனக்கு என்ன தனிப்பட்ட விரோதம் இருக்கு? என் ஹஸ்பண்டை கிண்டல் அடிக்க இவ யாரு?'' என்று சிலிர்த்துக் கொண்டு கேட்டவள்.

முகத்தை பாவமாக வைத்துக் கொண்டு, ''அப்படின்னா அவ தானா?'' என்று பரிதாபமாக கேட்டாள்.

கண்ணன் அவளது மூக்கை பிடித்து ஆட்டிக் கொண்டே இல்லை என்பது போல் தனது தலையை இடமும்

வலமுமாக அசைக்க, ராதிகாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

''அப்போ யாரு?'' என்று அவள் மீண்டும் கேட்க,

''இப்போ உனக்கு யாருன்னு சொல்லணுமா? இரு காட்டுறேன்'' என்றான் தனது அலமாரியை திறந்து வாழ்த்து அட்டை ஒன்றை எடுத்து வந்தான்.

''என்னங்க போட்டோ காட்டுவீங்கன்னு பார்த்தால் கீரிடிங் கார்டு கொடுக்கிறீங்க. ஆனா ஏன் இது இவ்வளவு கனமா இருக்கு?''

''பிரிச்சு பாரு!'' என்று சொன்னவன் அவளது அருகில் அமர்ந்து அவளது தோளில் கை போட்டுக் கொண்டான்.

அவள் அந்த கவரில் இருந்து அந்த வாழ்த்து அட்டையை உருவ அதில் 'எனது காதலி' என்று பொருள் படும்படியான 'My Sweet Heart' என்ற ஆங்கில வாசகம் அச்சடிக்கப்பட்டிருந்தது.

எந்த ஒரு மனைவிக்கும் தனது கணவனின் முன்னால் காதலியை நேரிலோ அல்லது புகைப்படத்திலோ பார்ப்பது உவப்பானதாக இருக்குமா என்ன?

ராதிகாவின் மனம் தடக் தடக் என்று அடித்துக் கொண்டது. அவள் நிமிர்ந்து தன் கணவனை பார்த்தாள்.

''அதை திருப்பி பாரு!'' என்று ஊக்கினான்.

தனது நடுங்கும் கரங்களால் அவள் அந்தப் பக்கத்தை திறக்க உள்ளே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது.



அதன் மேல் ஒரு இதய வடிவ காகிதம் ஒட்டப்பட்டிருந்ததால் கண்ணாடியே இதய வடிவமாக காட்சி அளித்தது. உள்ளே கண்ணாடி பதிக்கப்பட்டிருந்ததால் தான் அந்த வாழ்த்து அட்டை கனமாக இருந்தது.

புகைப்படத்தை எதிர்பார்த்து திறந்தவளுக்கு உள்ளே இருந்த கண்ணாடி அதன் அர்த்தத்தை விளக்காமல் குழப்பத்தையே விளைவித்தது.

இதற்கு என்ன அர்த்தம் என்று புரியாமல் சில நொடிகள் தடுமாறி நின்றவளின் காதுகளில்,

''இதிலே தெரியுற பொண்ணை தான் மைமா நான் லவ் பண்ணுறேன்'' என்று சொன்னவன் அவளின் பிம்பம் அந்த கண்ணாடியில் தெரியும்படி அதை நிமிர்த்தி பிடித்தான்.

அவளது முகம் மலரும் என்று அவன் எதிர்பார்க்க அவளோ கோப முகத்தை காட்டினாள்.

''ப்ச் அது இப்போ. நான் உங்களை கேட்டது நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி நீங்க யாரை லவ் பண்ணீங்க?'' என்று கேட்கவும்,

''அப்படின்னா இப்போ நான் உன்னை லவ் பண்ணுறேங்கிற விஷயம் உனக்கு புரிஞ்சதா? உலக சாதனைடா கண்ணா! உன் பொண்டாட்டிக்கு ஒரு விஷயம் புரிஞ்சிடுச்சு'' என்று அவளை கேலி பண்ணினான்.

''கிண்டல் பண்ணாதீங்க. சொல்லுங்க'' என்று அவள் கெஞ்ச, அவன் தனது கைப்பேசியை எடுத்து நோண்ட ஆரம்பித்தான்.

''எனக்கு வரும் ஆத்திரத்துக்கு இந்த போனை பிடுங்கி சிதறு தேங்காய் மாதிரி உடைச்சிடுவேன்'' என்று அவள் கடுப்புடன் மொழியவும்,

அவன் தனது இரு கைகளையும் தனக்கு பின்னால் செலுத்தி கைப்பேசியை மறைத்துக் கொண்டே, ''ஆத்தா பரதேவதை! அப்படி ஏதாச்சும் செஞ்சிடாதே. உனக்கு கோபம் வரும் போதெல்லாம் வீட்டிலே உள்ள பொருளை உடைச்சிடாதே. நான் ஒண்ணும் கோடீஸ் வரன் கிடையாது.

பொறுமைக்கும் உனக்கும் ரொம்ப தூரமோ? நீ கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தான் இதை பார்த்துக்கிட்டு இருக்கேன். அவசரப்படாதே'' என்ற சொல்லி முடித்த பின்பே தனது கைகளை முன்னுக்கு இழுத்தான்.

ஏதோ ஒரு தொலைபேசி எண்ணை எடுத்து வைத்துக் கொண்டு அவளது முகத்தை பார்த்துக் கொண்டே விளக்க ஆரம்பித்தான்.

''எங்க கிளாஸிலே ரெண்டு நாராயணன் இருந்தாங்க. ஒருத்தன் Narayanan.N இன்னொருத்தன் NARAYANAN.K அவனுங்களை நாங்க அவங்க பேருக்கு உரிய முதல் இரண்டு எழுத்தையும் இனிஷியலையும் சேர்த்துச் சுருக்கி 'நான்' (Nan) 'நாக்' (NAK) என்று கூப்பிடு வோம்.

நான் அன்னைக்கு பேசினது இந்த நாராயணனை பத்தி. இப்போ உன் மனசிலே அந்த டயலாக்கை ஓட்டிப் பாரு. நான் சொல்லுறது நிஜமான்னு இந்த செல் போனில் அவன் பேரை ஸ்டோர் பண்ணி



வைச்சிருக்கிறதை பார்த்து தெரிஞ்சுக்கோ'' என்று தனது கைப்பேசியை அவளிடம் நீட்டினான்.

அவள் அந்த வசனத்தை மீண்டும் தன் நினைவிற்கு கொண்டு வந்தாள். அதில் இந்த நாராயணனின் பெயரை பொருத்திப் பார்த்தாள்.

'NaN உயிருக்கு உயிரா காதலிச்ச பொண்ணு வேறு பொண்ணு வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ணிக் கிட்டு போயிட்டாள். இதுக்கு அப்புறம் NaN பொண் ணுங்களையும் கல்யாணத்தையும் வெறுக்கிறதிலே தப்பென்ன சொல்லு? NaN வாழ்க்கையை வெறுத்துப் போய்...'

வசனம் கனகச்சிதமாகப் பொருந்தியது. அந்த கைப் பேசியை வாங்கிப் பார்த்தவளின் அகமும் முகமும் மலர்ந்தது.

கடந்த சில நாட்களாக தான் குழம்பிக் கொண்டிருந்த பிரச்சனைக்கு முற்றும் புள்ளி வைக்கப்பட்டது அவ ளுக்கு பேரானந்தத்தை தந்தது.

அந்த கைப்பேசியை மெத்தையில் தூக்கிப் போட் டவள் கணவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

''இப்ப நான் அப்படியே வானத்திலே பறக்கிறேன் தெரியுமா?'' என்று அவள் ஆர்ப்பரிக்க,

''ஹேய்! நகரு நகரு. டோண்ட் டச். என்னை இத்தனை நாள் காயவிட்டே இல்ல. அதனால நீயும் சில மணி நேரம் காத்திரு. நான் இப்போ கடைக்கு போகப் போகி றேன்'' என்றவன் அவளை தன்னிடம் இருந்து பிரிந்து விலக்கினான்.

அவள் தனது முகத்தை அஷ்டகோணலாக்கி அவனை கேலி செய்தாள். அதை சட்டை செய்யாமல் அவள் சற்று முன் பேசியதை கிண்டல் செய்ய விரும்பினான்.

''எத்தனை கிலோமீட்டர் ஸ்பீடு மைமா?''

''ஸ்பீடா? என்ன ஸ்பீடு?''

''வானத்திலே பறக்கிறேன் என்று சொன்னே இல்ல. அதான் உன் ஸ்பீடு பத்தி கேட்கிறேன்.''

''ம்ம்ம் எதுக்கு கேட்கிறீங்க?'' என்று அவள் முறைத்துக் கொண்டே கேட்க.

''இல்லை விமானத்தோட ஸ்பீடு வருமான்னு தெரிஞ்சுக்க தான். நம்ம ஹனி மூனுக்கு பிளைட்டிலே போகலாம் என்று பார்த்தேன். உன்னோட பறக்கிற ஸ்பீடு தெரிஞ்சுச்சன்னா... போய் சேரும் இடத்துக்கு நீயும் நானும் ஒரே டயத்துக்கு போய் சேருவது மாதிரி நானும் பிளைட் பிடிக்கணும் இல்ல. நான் மட்டும் விமானம் ஏறிட்டு நீ பறந்து வான்னு சொல்லிடலாம் இல்ல. ஒரு விமான டிக்கெட் மிச்சம் ஆகுமே!'' என்று சொன்னதும்,

அவள் அவனை அடிக்க ஆயுதம் தேட... அவன் வேகமாக பத்து அடி தள்ளி நின்று கொண்டான்.

''பேச்சு பேச்சா இருக்கணும் மைமா'' என்றவன் அப்போது தான் நினைவிற்கு வந்தவனாக,

''நான் யாரையோ லவ் பண்ணுறேன் என்று தெரிஞ்ச பின்னாடி சோக கீதம் வாசிக்காமல் நீ எப்படி என்கிட்டே அவ்வளவு கேஷுவலா பேசினே?'' என்று கேட்டான்.



''அதான் சொன்னீங்களே! மந்திரத்தை உணர்ந்து உச்சரித்தேன் என்று. எப்படியும் நான் தான் உங்க வைஃப் என்று தீர்மானம் ஆகிடுச்சு. அதுக்கு அப்புறமா ஒதுங்கி ஒதுங்கி போய் நானே என் வாழ்க்கைக்கு எதுக்கு ஆப்பு வைச்சுக்கணும்?

அதுவுமில்லாம என்னால நாலு நாளைக்கு பட்டினியா வேணாலும் இருக்க முடியும். ஆனா நாலு நிமிஷம் பேசாமல் மட்டும் இருக்க முடியாது.''

''பட்டினியா? நாலு நாள்? அதுவும் நீ? நடு ராத்திரியில் எழுந்து நீ ரூமை உருட்டின போதே எனக்கு அது ரொம்ப நல்லாப் புரிஞ்சது மைமா'' என்று கூறி நகைத்தான்.

''ஹேய்! கேட்க மறந்துட்டேன். இப்பவாச்சும் இந்த மைமாக்கு என்ன விளக்கம் என்று சொல்லுங்களேன். ப்ளீஸ் ப்ளீஸ்'' என்று அவள் கெஞ்ச,

அவன் பெரிதாக புன்னகைத்துக் கொண்டே, ''அன்னைக்கு நான் உன் இடுப்பை தொட்டேனா... அது அப்படியே வழ வழன்னு இருந்துச்சா... எனக்கு வெண்ணை ஞாபகம் வந்துச்சு. ஆனா அது பிசுபிசுன்னு இருக்குமே.

வேறு எதெல்லாம் மழுமழுன்னு இருக்கும் என்று யோசிச்சேன். மளிகை கடைக்காரன் புத்தி சமையல் சாமானை சுத்தியே வலம் வந்துச்சு. அப்ப எனக்கு சோளமாவு ஞாபகம் வந்துச்சு. அதை சுருக்கினா சோமா என்று வந்துச்சா. எனக்கு பிடிக்கலை.

அடுத்து எனக்கு ஞாபகம் வந்தது மைதா மாவு. அதை சுருக்கினேன் மைமா. சூப்பரா இருக்கு இல்ல?'' என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டு கேட்டான்.

அவள் ஒரு கையை தன் இடுப்பில் வைத்து கொண்டு, ''இத்தனை யோசனையும் என் இடுப்பை தொட்ட போது உங்களுக்கு தோணுச்சா? நம்புற மாதிரி இல்லையே!'' என்று கேட்கவும்,

அவன் அசட்டு சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு, ''பொண்ணு பார்த்திட்டு போன அன்னைக்கே உன்னை பத்தி இப்படி ஆராய்ச்சி பண்ணினேன். வெள்ளை வெளேருன்னு இருக்கிற உன்னை மைதா மாவுன்னு கூப்பிடணும் என்று அன்னைக்கே முடிவு பண்ணினேன். அப்புறமா அதையும் செல்லமாகச் சுருக்கி மையான்னு வைச்சிட்டேன்.

உன் இடுப்பை தொட்ட போது எனக்கு அப்படியே உச்சி முதல் உள்ளங்கால் வரை ஜிவ்வுன்னு ஏறுச்சு. அப்ப போய் இதை எல்லாம் யோசிக்கிறதுக்கு நான் என்ன சாமியாரா?'' என்று கேட்டான்.

''முதன் முதலா பார்த்த போதே செல்லப் பேர் வைச்ச வரு ஏன் எனக்கு ஒரு போன் பண்ணிக் கூடப் பேசலை?'' என்று கேட்கவும், அவனது முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து ஒரு தீவிரம் வந்தது.

''என்னை ரொம்ப நல்லா தெரிஞ்சவங்ககிட்டே... அதாவது என்னுடைய நிறத்தை பெருசா மதிக்காத வங்ககிட்டே மட்டுமே நான் ப்ரீயா பேசுவேன். நீ எப்படி என்னன்னு எனக்கு சரியா தெரியாத போது உன்கிட்டே பேசத் தயக்கமா இருந்துச்சு.''

அவள் வேகமாக அவன் அருகில் சென்று அவளது முகவாயை நிமிர்த்தி, ''நான் இப்போ சொல்லுறதை மனசிலே நல்லா பதிய வைச்சுக்கோங்க. ஒரு மனுஷனை



வெளித் தோற்றத்தை வைச்சு யாரும் எடை போட மாட்டாங்க. நீங்க செய்யுற செயல், பழகுற தன்மை... இதெல்லாம் தான் முக்கியம்.

நிறத்துக்கும் அழகுக்கும் எந்த சம்பந்தமும் கிடை யாது. அது பார்க்கிறவங்க கண்ணை பொறுத்த விஷயம்.

எனக்கு எந்தக் குறையும் கிடையாது அப்படின்னு முதல்ல நீங்க நம்பணும். அப்படி நீங்க அதை முழு மனசா நம்பினால் தான் நீங்க எந்த விஷயத்தையும் தெளிவாகவும் திறமையாகவும் செஞ்சு முடிக்க முடியும்.

நான் கருப்பா இருக்கேன் என்ற நினைப்பு உங்க மனசிலே இருந்துச்சுன்னா அது உங்க முன்னேற்றத்தை தடுக்கும். நாலு பேரிடம் உங்களை ஃப்ரீயா பேசவிடாது. முதல்ல உங்களை நீங்க மதிங்க. விரும்புங்க. அப்புறமா மத்தவங்களை பத்தி கவலைப்படுங்க.

நாளைக்கே நாம ரெண்டு பேரும் ரோட்டிலே நடந்து போகும்போது யாராச்சும் நம்மை கிண்டல் பண்ணினாங் கன்னா நீ என்ன வேணா சொல்லிட்டுப் போ. என் வைஃப் வெள்ளையா இருக்கா... நான் கருப்பா இருக் கேன். இதிலே என்ன வந்துச்சு அப்படின்னு உங்க மனசு நினைக்கணும்.

அவங்க கேலி உங்களை... உங்க மனசை காயப் படுத்தி நீங்க சோர்ந்து போனீங்கன்னா நானும் சோர்ந்து போவேன்.

என்னால தான் நீங்க வருத்தப்படுற மாதிரி ஆகிடுச் சோன்னு சங்கடப்படுவேன். என் நிறத்தை என்னால

கம்மியாக்கவும் முடியாது. உங்களை வெளுப்பாக்கவும் முடியாது'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள்,

''ஒரு வேளை தாரை எடுத்து என் மேலே பூசினா நான் கருப்பாகலாம். இல்லைன்னா உங்களுக்கு தினமும் பெவிகாலை மேலே பூசி விட்டுடலாம். இந்த பார்லரில் பேஸ் பாக் போட்டு காய்ஞ்சதும் அப்படியே உரிச்சு எடுப்பாங்களே அது மாதிரி காலையிலே பெவிகாலை தடவி அனுப்பிட்டு தினமும் ராத்திரி அந்த பெவிகால் லேயரை உரிச்சு எடுத்திடலாம். எப்படி என் ஐடியா?'' என் கண் சிமிட்டிக் காட்ட,

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பாட்டி மாதிரி டயலாக் பேசிக்கிட்டு இருந்தியேன்னு பார்த்தேன். ஆரம்பிச்சிட்டியா உன் நக்கலை...'' என்றவன்.

''உனக்கு இவ்வளவு கருப்பான கணவன் கிடைச்சதுக்கு வருத்தமா இல்லையா ராதிகா?'' என்று கேட்டான்.

அவளது தலை உடனே வேக வேகமாக இடமும் வலமும் ஆடியது.

''எங்க அப்பா உங்க போட்டோவை என்கிட்டே கொடுக்கிறதுக்கு முன்னாடி 'ஒரு வரன் வந்திருக்கும்மா. நான் மாப்பிள்ளையை பத்தி ரெண்டு மூணு இடத்திலே விசாரிச்சுட்டேன். எனக்கு ரொம்ப திருப்திகரமா இருக்கு. உனக்கு எல்லா விதத்திலும் பொருத்தமான மாப்பிள்ளை. ஒரே ஒரு விஷயம் மட்டும் இடிக்குது' என்று சொல்லி உங்க போட்டோவை காட்டினார்.

வாங்கிப் பார்த்திட்டு 'இவரோட நிறத்துக்காக இவரை வேண்டாம் என்று சொன்னால் எனக்கு எங்க அப்பாவை பிடிக்காதுன்னு சொல்லுற மாதிரி. நீங்க எப்படிப்பா நான்



றத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று னைச்சீங்கன்னு?' கேட்டேன். எங்க அப்பா கண் ணெல்லாம் கண்ணீரால நிறைஞ்சு போச்சு'' என்றாள்.

கேட்டுக் கொண்டிருந்த கண்ணனின் கண்களும் ஆனந்தக் கண்ணீரால் நிறைந்தன. இனித் தன் வாழ்வில் அவமானங்கள் இல்லை என்று நினைப்பினால் உற்பத்தியான ஆனந்தக் கண்ணீர்.

சந்தோஷத்தோடு அவளை தன்னருகே இழுத்து, ''உன் கன்னத்தை அப்படியே கடிக்கணும் போல இருக்கு'' என்று சொல்லி அவளது கன்னத்தை வலிக்காமல் கடித்தான்.

அவனை கைகளால் அணைத்துக் கொண்டவள், ''யாரோ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னை காயவிடப் போறதா சொன்னாங்க. அது யாரு?'' என்று கேட்டு சிரிக்கவும்,

''நான் தான் சொன்னேன். ஆனா நான் என்ன தப்பு பண்ணினேன்? நான் எதுக்காக காத்திருக்கணும்?'' என்று கேட்டவன் அவளது கன்னத்தில் முத்தமொன்றை பதித்தான்.

அவளிடமிருந்து விலகி, ''எனக்கு கடைக்கு போகணும் மைமா. நேரமாச்சு, நாளைக்கு கோவளம் பக்கத்தில் இருக்கிற நித்யகல்யாணப் பெருமாள் கோவிலுக்கு போவோமா?'' என்று கேட்டான்.

''போகலாங்க. எதுவும் விசேஷமா?'' என்று அவள் கேட்டதும், அவன் அன்றைய தன் அனுபவத்தை அவளிடம் எடுத்து உரைத்தான்.

''அப்படின்னா கண்டிப்பா போகலாங்க'' என்றாள்.

# 25

அவர்கள் இருவரும் மலர்ந்த முகத்துடன் கீழே இறங்கி வந்தனர். அவர்களின் முகத்தில் தென்பட்ட மலர்ச்சி தேவகிக்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் ஒருங்கே அளித்தது.

''அம்மா நாங்க நாளைக்கு நித்யகல்யாணப் பெருமாள் கோவிலுக்கு போயிட்டு வரட்டுமா?'' என்று கண்ணன் கேட்டதும்,

''தாராளமா போயிட்டு வாங்கப்பா'' என்று தேவகி அனுமதி அளித்தார்.

''அப்படின்னா நான் டாக்ஸி புக் பண்ணிடுறேன் மா.''

''ம்ம்ம் சரி'' என்று இழுத்தவர். ''கண்ணா கல்யாணம் முடிஞ்சு அந்த கோவிலுக்கு போறீங்க. நீங்க ரெண்டு பேர் மட்டும் போக வேண்டாம். பெரியவங்க யாராவது வந்தால் நல்லா இருக்கும். கயலை தனியா விட்டுட்டு என்னால வர முடியாது. அதனால ராதிகா வீட்டிலே அவங்க அம்மா அப்பா வராங்களான்னு கேளு'' என்றார்.

''சரிம்மா நான் கேட்கிறேன்'' என்றவனிடம்,

''இல்லை கண்ணா. நீ பேசுறதை விட நான் பேசுறது தான் முறையா இருக்கும். போன் போட்டுக் கொடு. நானே பேசுறேன்'' என்றவர், ராதிகா வீட்டினரிடம் பேச ஆரம்பித்தார்.



''அத்தை!'' என்று ஓடி வந்த நிகிலிடம் ராதிகா.

''நிகில் குட்டி நாம நாளைக்கு காரிலே கோவிலுக்கு போவோமா?'' என்று கேட்டதும்,

''யாரெல்லாம் போறோம்?'' என்று அவன் பதில் கேள்வி கேட்டான்.

''நீ, நான், மாமா, அப்புறமா நாம அன்னைக்கு பார்த்தோமே ஒரு பாட்டி, தாத்தா, அவங்க...'' என்று அவள் அடுக்க,

அவன் அதில் தனது தாயின் பெயர் இல்லாததைக் கண்டு, ''அம்மா வரலியா?'' என்று கேட்டான்.

''அம்மா இப்போ போகக் கூடாதுடா குட்டி.''

''கோவில் ரொம்ப தூரமா? நாம எப்போ வருவோம்?''

''ஏன்டா குட்டி கேட்கிறே?''

''அப்பா என்கிட்டே அம்மாவையும் பாப்பாவையும் பத்திரமா பார்த்துக்கச் சொல்லி இருக்கார். அதனால நான் அம்மாவை விட்டுட்டு வரமாட்டேன்'' என்றான்.

கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு உருகிப் போனது.

''இப்பவே இவ்வளவு பொறுப்பா இருக்கியேடா!'' என்று அவனை பாராட்டியவள் தேவகியிடம் வந்து,

''ஏன் அத்தை நாங்க கோவிலுக்கு அப்புறமா... அதாவது அண்ணிக்கு டெலிவரி முடிஞ்சப்புறம் பொறுமையா போகட்டுமா?'' என்று கேட்டாள்.

''அவன் தான் சின்னப் பையன். புரியாமல் பேசுறான். நீங்க என்ன வெளியூருக்கா போகப் போறீங்க.

பிரசவத்துக்கு இன்னும் நாள் இருக்கு. பிரசவம் ஆனதுக்கு அப்புறம் முப்பது நாள் தீட்டுன்னு சொல்லி கோயிலுக்கு போகக் கூடாது. அப்புறம் அப்படியே தள்ளிக்கிட்டே போகும். உங்க அம்மா அப்பா வரேன் என்று சொல்லிட்டாங்க. அதனால நீங்க நாளைக்கே போயிட்டு வந்திடுங்க'' என்று முடித்து விட்டார்.

''அத்தை நான் கொஞ்சம் எங்க வீடு வரைக்கும் போயிட்டு வரட்டுமா?'' என்று ராதிகா தயங்கிக் கொண்டே கேட்டாள்.

சாதாரணமான நேரமாக இருந்தால் 'அதான் நாளைக்கு அவங்க கூடச் சேர்ந்து தானே கோவிலுக்கு போகப் போகிறாய். அப்புறம் இன்னைக்கு ஒரு தடவை போகணுமா என்ன?' என்று தேவகி கேட்டிருப்பார்.

ஆனால் சற்று முன்பு மருமகள் மகன் மீது காட்டிய அக்கறையை பார்த்தவளுக்கு அவள் கேட்டு இல்லை என்று மறுக்கத் தோன்றவில்லை.

''தாராளமா போயிட்டு வா. கண்ணனை கொண்டு போய் விடச் சொல்லு'' என்றார்.

''இல்லை அத்தை அவருக்கு கடைக்கு நேரமாச்சுன்னு சொல்லிக்கிட்டு இருந்தார். நானே போயிடுவேன். ஒண்ணும் பிரச்சனையில்லை.''

''அப்படின்னா ராத்திரி வரும் போது கண்ணனை உங்க வீட்டுக்கு வரச் சொல்லி அவன் கூட திரும்பி வந்திடு'' என்று சொன்னதோடு இல்லாமல் கண்ணனிடம் அவ்வாறே செய்யுமாறு கூறியதும் ராதிகாவிற்கு சந்தோஷமாக இருந்தது.



கண்ணன் மதியச் சாப்பாடை சாப்பிட்டு முடித்து அவர்களிடம் விடைபெற்று கிளம்பினான். வழியில் கிருஷ்ணா ஸ்வீட்ஸில் ஒரு டப்பா மைசூர் பா வாங்கிக் கொண்டு நேராக பாலுவை பார்க்கச் சென்றான்.

பாலுவிற்கு தகவல் எதுவும் தெரிவிக்காமல் அவன் மதியச் சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வரும் நேரம் பார்த்து, நேரே அவனது வீட்டிற்கு சென்று அழைப்பு மணியை அடித்தான்.

கதவைத் திறந்த பாலு கண்ணனைக் கண்டவுடன், ''என்னடா கண்ணா சொல்லாமல் கொள்ளாமல் வந்து இருக்கே?'' என்று கேட்டான்.

அவனுக்கு பதில் ஏதும் சொல்லாத கண்ணன் நண்பனின் கன்னத்தை பிடித்துக் கொஞ்ச அவனை விலக்கிய பாலு தெருவை எட்டிப் பார்த்தான்.

'இப்போ எதுக்கு இவன் தெருவை எட்டிப் பார்க்கிறான்? ராதிகா வந்திருக்காளா என்று பார்க்கிறான் போல' என்று நினைத்த கண்ணன்.

''நான் மட்டும் தான்டா வந்தேன். ராதிகா வரலை'' என்றதும்,

''அதில்லைடா. நீ எனக்கு கல்யாணம் ஆகக் கூடாதுன்னு முடிவோட வேலை செய்யுற மாதிரி இருக்கு. நீ பாட்டுக்கு வீட்டு வாசல்ல வைச்சு கொஞ்சுறே. பொண்ணு வீட்டுக்காரன் எவனாச்சும் அதை பார்த்திட்டு, 'ஓ! அவனா நீ!' என்று பொண்ணு கொடுக்காமல் போயிட்டால்.... அதான் தெருவை எட்டிப் பார்த்தேன்'' என்று நண்பனை கிண்டல் செய்தான்.

கண்ணன் சிரித்துக் கொண்டே, ''அம்மா எங்கேடா? வீட்டிலே இல்லையா?'' என்று கேட்டான்.

"அம்மா ஒரு வேலையா வெளியே போயிருக்காங்க கண்ணா. வீட்டிலே யாரும் இல்லை" என்று பதில் கூறியவன் நண்பனின் மகிழ்ச்சிக்கான காரணத்தை அறிய விரும்பி,

"என்ன கண்ணா ரொம்ப சந்தோஷமா இருக்கே. என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"ம்ம்ம் நீயே கண்டுபிடி பார்ப்போம்" என்று கூறிக் கொண்டே கண்ணன் வரவேற்பறையில் இருந்த மேஜை மீது சாய்ந்து நின்று கொண்டான்.

"ம்ம்ம்... கொஞ்ச நாளா நீ ராதிகா பிரச்சனையில் தான் கவலையா இருந்தே. அது சரியாகிடுச்சா?" என்று பாலு சரியாக கணித்து கேட்க,

"சரியா சொல்லிட்டேடா மில்க். உனக்கு கூட அப்பப்போ மூளை வேலை செய்யுது" என்றான்.

"ஹேய்! அப்படின்னா அன்னைக்கு ராதிகா ஓடிப் போகலையா? என் தங்கச்சி தப்பா சொல்லிட்டாளா?" என்று பாலு ஆச்சரியத்தோடும் சந்தோஷத்தோடும் கேட்கவும்.

"உன் தங்கச்சி அன்னைக்கு நம்மகிட்டே சொன்னது நூத்துக்கு நூறு சரின்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தெளிவாகிடுச்சிடா" என்றதும்,

"அதுக்காடா இவ்வளவு சந்தோஷமா இருக்கே? இருக்காதே... டேய்! மரியாதையா விஷயம் என்னன்னு எனக்கு புரியும்படியா சொல்லு" என்று நண்பனை மிரட்டவும், கண்ணன் அவனுக்கு நடந்ததை விவரித்தான்.

நண்பனின் திருமண வாழ்வில் இருந்த தடை அகன்ற செய்தி அறிந்த பாலுவிற்கு சந்தோஷம் தாங்கவில்லை.



"ஹே...ய்..." என்று கூவிக் கொண்டே கண்ணனை கட்டி அணைத்துக் கொண்டான்.

"ஏன்டா இப்ப மட்டும் பொண்ணு வீட்டுக்காரன் பார்க்க மாட்டானா?" என்று கேலி செய்த கண்ணன்.

"நான் அன்னைக்கே சொன்னேன் இல்ல பாலு. நான் எடுக்கப் போகிற முடிவிற்காக ஒரு நாளும் நான் வருத்தப்பட மாட்டேன் என்று. என் நம்பிக்கை வீண் போகலை" என்று சந்தோஷமாகக் கூறினான்.

பாலுவும் அதை ஆமோதித்தான். கண்ணன் நண்பனிடமிருந்து விடைபெற்று தனது கடைக்கு கிளம்பினான்.

இங்கே கண்ணனின் வீட்டில் ராதிகா தேவகியிடம் விடைபெற்று தன் வீட்டிற்கு சென்றாள். மதிய வெயிலில் பேருந்தில் பயணித்து வியர்க்க விறுவிறுக்க தங்கள் வீட்டு அழைப்பு மணியை அழுத்தினாள்.

சொல்லாது கொள்ளாது திடுதிப்பென்று மகள் வந்து நிற்கவும் தேவகி பதறிப் போனார். மகளை வாசலிலேயே நிற்க வைத்துக் கொண்டு,

"என்ன ராதிகா?" என்று அவள் பதட்டத்துடன் வினவ,

மகளோ தாயின் பதட்டத்தை புரிந்து கொள்ளாது, "ம்ம்ம் முன்னாடி ஏ.ராதிகா, இப்போ க. ராதிகா" என்றாள்.

முதலில் தன் தந்தையின் முதல் எழுத்து என் பெயரோடு இணைந்திருந்தது. இப்போது என் கணவரின் முதல் எழுத்து இணைந்திருக்கிறது என்று கிண்டலாகக் கூறினாள்.

ஆனால் அவளது கிண்டல் கேலி பேச்சுகளை உணரும் நிலையில் துர்கா இல்லை.

"என்ன இந்த நேரத்திலே..." என்று அவர் இழுக்க,

"நேரத்துக்கு என்ன குறை? நல்ல நேரம் பார்த்து தான் வரணுமா என்ன?" என்று இடக்காக தாயிடம் கேட்டாள்.

"அப்பா எங்கேம்மா?" என்று தந்தையை பற்றி விசாரித்தாள்.

"சொல்லாமல் கொள்ளாமல் வந்து இருக்கே! வந்த உடனே அப்பா எங்கன்னு தேடிக்கிட்டு இருக்கே. அப்பா ஆபீஸ் போய் இருக்கார். அது கூட உனக்கு மறந்து போச்சா?" என்று துர்கா கேட்டதும்.

ராதிகா தன்னைத் தானே மானசீகமாகக் குட்டிக் கொண்டாள். 'ராதிகா மதியத்தில் இருந்தே ஒரு மார்க்கமா தான் இருக்கே!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

தன் தாய்க்கு எந்த பதிலும் கூறவில்லை என்பது அவளது புத்திக்கு உறைக்கவில்லை. அவள் அவளாகவே இல்லை. ஒரே பரபரப்பாக இருந்ததால் தாயின் பதட்டமும் அவளது புத்தியில் உறைக்கவில்லை.

தன் கைப்பேசியை எடுத்து தனது கணவனுக்கு அழைத்தாள். அவன் அவளது அழைப்பை ஏற்றவுடன்,

"ஹலோ நான் தாங்க ராதிகா. எங்க வீட்டுக்கு பத்திரமா வந்துட்டேன்" என்று அவள் தகவல் தெரிவிக்க,

"எந்த ராதிகா?" என்று அந்தப்புறம் அவன் கிண்டல் அடித்தான்.



"உங்களுக்கு எத்தனை ராதிகா தெரியும்?"

"எனக்கு ரெண்டு ராதிகா தெரியும்."

தான் ஒரு ராதிகா என்று எண்ணிக் கொண்டு, "ரெண்டு பேரா? யார் அந்த இன்னொரு ராதிகா?" என்று இவள் கேட்க,

அவனோ, "அந்த ரெண்டு பேர் யாருன்னா... ஒண்ணு ராதிகா சரத்குமார்... இன்னொண்ணு ராதிகா சௌத்ரி. ரெண்டு பேருமே சினிமா கதாநாயகிகள். அவங்களெல்லாம் தங்களோட அன்றாட நடவடிக்கையை என்கிட்டே வந்து சொல்லுற அளவுக்கு இந்த கண்ணன் பெரிய ஆளாகிட்டானா என்ன? சபாஷ்டா கண்ணா!" என்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டான்.

அவள் கோபத்தில் அமைதியாக இருக்க... அவன் சத்தமில்லாமல் சிரித்துக் கொண்டே.

"அச்சோ மறந்துட்டேன். எனக்கு இன்னொரு ராதிகாவையும் தெரியும். ராதிகா ராய்" என்றதும்.

மீண்டும் மீண்டும் கணவன் தன்னை சீண்ட மாட்டான் என்று தப்பாகக் கணக்கு போட்ட ராதிகா.

"உங்க பிரண்ட்ஸ் உங்களுக்கு ராய் என்று பட்டப் பெயர் வைச்சிருக்காங்களா?" என்று அப்பாவியாக கேட்டாள்.

'நான்', 'நாக்' என்பது போல் கணவனுக்கு ஏதோ ஒரு காரணத்துக்காக 'ராய்' என்று பட்டப்பேர் வைத்து இருப்பார்கள் என்று அவள் நினைத்தாள்.

அவனோ அவளது நினைப்பில் மண் அள்ளிக் கொட்டினான்.

''ராதிகா ராய் தெரியாதா? இவங்க தான் பிரணாய் ராய் கூடச் சேர்ந்து NDTV உருவாகக் காரணமானவங்க'' என்றதும்,

ராதிகா ஏகத்துக்கும் கடுப்பாகி, ''போடா லூசு'' என்று சொல்லி அழைப்பை துண்டித்தாள்.

அந்தப்புறம் வாய் விட்டு நகைத்த கண்ணன் மனைவியின் கைப்பேசிக்கு அழைத்தான். அவள் அதை இயக்கி காதில் வைத்து அமைதி காக்க...

''மைமா வீட்டுக்கு பத்திரமா போயிட்டியா? அத்தை வீட்டிலே இருக்காங்களா? இல்லை வெளியிலே எங்கேயும் போயிட்டாங்களா?'' என்று கேட்டான்.

சற்று முன் அவர்கள் இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை என்பது போல் அவன் சாதாரணமாகப் பேசி, 'அடப் பாவி! லொள்ளைப் பாரு!' என்று ராதிகா எண்ணும்படி செய்தான்.

அவள் பதில் சொல்லவில்லை என்றவுடன், ''மைமா இதுக்கெல்லாம் கோவிச்சுக்கக் கூடாது. அதுவும் இன்னைக்கு உனக்கு கோபம் வரவே கூடாது. அப்புறம் நம்ம ரெண்டு பேர் பாடும் திண்டாட்டம் தான்'' என்றதும்,

அவளது முகத்தில் தெரிந்த கோபம் மறைந்து அங்கே வெட்கம் குடி கொண்டது. ம்ம் என்று இழுத்தவள் தன்னை இயல்புக்கு மீட்டுக் கொண்டு,

''நான் கேட்க மறந்துட்டேன். நைட் நாம எங்கே சாப்பிடப் போறோம்?'' என்று கேட்டாள்.

''உங்க வீட்டிலேயே சாப்பிட்டுட்டு கிளம்பலாம் மைமா. நானே போன் பண்ணி அம்மாகிட்டே நம்ம



ரெண்டு பேருக்கும் சாப்பாடு செய்ய வேண்டாம் என்று சொல்லிடுறேன்'' என்று கூறினான்.

இவர்கள் இருவரும் ஒரு புறம் பேசிக் கொண்டே இருக்க... இன்னொரு புறம் துர்கா தங்களது அறைக்குள் சென்று தனது கணவரை பதட்டத்துடன் அழைத்தார்.

ஏகாம்பரம் கைப்பேசியை இயக்கி காதில் வைத்து, ''ஹலோ!'' என்றவுடன் துர்கா படபடவென பேச ஆரம்பித்தார்.

''என்னங்க ராதிகா வந்து இருக்காள். தனியா வந்து இருக்காள். வந்த உடனே உங்களை எங்கேன்னு கேட்டாள். எனக்கு ஒரே பயமா இருக்குங்க.''

''துர்கா பதட்டப்படாதே. அவ கையிலே பெட்டி எதுவும் எடுத்திட்டு வந்திருக்காளா என்ன?''

''இல்லைங்க. அப்படி ஒண்ணும் கொண்டு வந்த மாதிரி தெரியலை.''

''அப்படின்னா சும்மா வந்து இருப்பாள்.''

''நாளைக்கு கோவிலுக்கு போகணும் என்று சம்பந்தி அம்மா சொன்னதா நீங்க தானே சொன்னீங்க. எப்படியும் நாளைக்கு பார்க்கப் போறோம். அப்புறம் இன்னைக்கு எதுக்கு இவ வரணும்? அதுவும் தனியா... அவ முகமே வாடி இருக்கு.''

''என்ன விஷயம் என்று அவகிட்டே விசாரிச்சியா?''

''இல்லைங்க. அவ எப்போ என்னை பார்லரில் விட்டுட்டு ஓடிப் போக முடிவெடுத்தாளோ அப்போல இருந்தே அவகிட்டே பேச எனக்கு பயமா இருக்குங்க. நாம ஏதாச்சும் சொல்லி அவ பாட்டுக்கு ஓடுவாளோன்னு...''

"கவலைப்படாதே துர்கா." என்று ஏகாம்பரம் சொல்லிக் கொண்டு இருக்க,

"அம்மா எங்கே இருக்கீங்க?" என்று ராதிகாவின் குரல் கேட்டது.

"என்னங்க ராதிகா கூப்பிடுறாள். நீங்க போனை கட் பண்ணாதீங்க" என்று சொன்ன துர்கா.

கைப்பேசியை காதில இருந்து கைக்கு இடம் மாற்றிக் கொண்டு, "என்ன ராதிகா வேணும்?" என்று குரல் கொடுத்தார்.

"இங்கே இருக்கீங்களா?" என்று கேட்டுக் கொண்டே வந்தவள்,

"அம்மா அவர் நைட் நம்ம வீட்டிலே சாப்பிடுறேன் என்று சொல்லி இருக்கார். ஆனா அவரோட பொண்டாட்டி மேலே கை வைக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்கார்" என்றதும் தேவகி விழித்தார்.

மகள் தன் வீட்டிற்கு வந்ததில் இருந்து அவர் அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்.

"என்னம்மா புரியலையா? சிக்கன் வேண்டாமாம். அவர் நைட் பத்து மணிக்கு சாப்பிடப் போறதால லைட்டான சாப்பாடா செய்யச் சொன்னார். ஆனா நான் எட்டு மணிக்கே சாப்பிட்டு விடுவேன். அதனால எனக்கு இந்த பறப்பன, நடப்பன, மிதப்பன என்று எதையாச்சும் நல்லா செஞ்சு தாங்க.

என்ன அப்படிப் பார்க்கிறீங்க. அவர் சாப்பிடும் போது தான் எனக்கும் சாப்பாடு போடுவீங்களா? இல்லை மாப்பிள்ளைக்கு இல்லாத மட்டன் மகளுக்கும்



இல்லைன்னு சொல்லுறீங்களா? அட! 'ம ம'ன்னு ரைமிங்கா பேசுறேன் இல்ல?" என்று பெருமைப் பட்டுக் கொண்டவள்.

"சரி எதையோ ஒண்ணை சமைங்க" என்று சொல்லி விட்டு அகன்றாள்.

அவள் அறையை விட்டு வெளியேறியதும் துர்கா கைப்பேசியை காதில் வைத்து, "என்னங்க..." என்றதும்,

"எனக்கு எல்லாமே கேட்டுச்சு துர்கா. அவ சும்மா தான் நம்மளை பார்க்க வந்திருப்பாள். உற்சாகமா பேசுறாள். மாப்பிள்ளையும் வரப் போறதா சொல்லுறாள். எதுக்கும் நான் சீக்கிரமா வீட்டுக்கு வரேன்.

சந்தியாவுக்கும் தகவல் சொல்லி வீட்டுக்கு வரச் சொல்லுறேன். இல்லைன்னா பிரண்ட்ஸுகளோடு அரட்டை அடிச்சுக்கிட்டு லேட்டா வருவாள்" என்று சொல்லி அழைப்பை துண்டித்தார்.

மகள் சண்டை போட்டுவிட்டு வரவில்லை என்று தெரிந்த பிறகே துர்காவினால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

## 26

வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவை பார்த்த துர்காவிற்கு அவளது உ[illegible]பொழுது தான் கருத்தில் பதிந்தது.

சுரிதார் அணிந்து வந்தவளை கண்ட துர்கா, "நான் உன்கிட்டே என்ன சொன்னேன். கொஞ்ச நாளைக்கு மட்டும் புடவையை கட்டுன்னு சொன்னேனா இல் லையா?" என்று ஆரம்பிக்க,

"எங்க அத்தை தான் சுரிதார் போட்டுக்கிட்டு போகச் சொன்னாங்க" என்று கூசாமல் ஒரு பொய்யை அவிழ்த்து விட்டு தன் தாயின் வாயை அடைத்தாள்.

'எங்க அத்தையே என்னை ஒண்ணும் சொல்லலை. சும்மா நொய் நொய் என்று அட்வைஸா பண்ணித் தள்ளுறாங்க. இன்னும் கொஞ்ச நாளில் எங்க மாமியார் அம்மாவா மாறிடுவாங்க போல! ஆனா எங்க அம்மா மாமியாராவே இருந்து காலத்துக்கும் எனக்கு கண்டிஷன் போடுவாங்க' என்று தன் தாயை மனதில் செல்லமாக திட்டிக் கொண்டாள்.

துர்காவிடம் கூறி இருந்தபடியே ஏகாம்பரம் அலு வலகத்தில் இருந்து விரைவாக வீடு திரும்பினார். சந்தியாவிற்கு கடைசி இரு வகுப்புகள் ரத்தானதால் அவள் ஏகாம்பரம் வரும் முன்பே வீடு வந்து சேர்ந்து விட்டாள். அக்காவும் தங்கையும் சாதாரணமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஏகாம்பரம் வந்து காபி குடித்து முடித்ததும் ராதிகா அவரிடம் சென்று, "அப்பா நீங்க இங்கே வாங்க" என்று அவரை கைப்பிடித்து அழைத்துச் சென்று துர்காவின் அருகில் நிற்க வைத்ததோடு இல்லாமல் அவர்களது காலில் விழுந்து,

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க" என்றாள்.



இருவரும் என்னவென்று புரியாமல் விழித்துக் கொண்டு நின்றனர். அவர்கள் பதில் பேசாது இருக்கவும் ராதிகா தன் தலையை நிமிர்த்தி,

"நான் ஆசீர்வாதம் தானே கேட்டேன். உங்க சொத் தையா எழுதி கேட்டேன்?" என்று கேட்டாள். அவர்கள் பதில் கூறும் முன்,

"ரொம்ப நேரம் இந்த மாதிரி விழுந்து கிடக்க முடியாது. சீக்கிரம் ஏதாச்சும் சொல்லி என்னை கை தூக்கி விடுங்க" என்றாள்.

அவர்கள் இருவரும் "நல்லா இருக்கணும்மா" என்று பொதுப்படையாக ஆசீர்வதிக்க,

"இன்னைக்கு மாதிரியே சந்தோஷமா இருக்கணும் என்று சொல்லுங்க" என்று வசனத்தை எடுத்துக் கொடுத்தாள்.

அவர்களும் அதே மாதிரி கூற...

"அது மட்டும் பத்தாது. அந்த பதினாறு பெற்று பெரு வாழ்வு வாழ... அதை யாரு சொல்லுவா?" என்று அதிகாரம் பண்ணினாள்.

அவர்களும் அவ்வாறே கூறி... "அடுத்து..." என்று ராதிகா ஆரம்பிக்கவும், சந்தியா இடை புகுந்தாள்.

"அக்கா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இந்த போஸிலே ரொம்ப நேரம் இருக்க முடியாதுன்னு சொன்னே! இப்போ கீழேயே நல்லா செட்டில் ஆகிட் டியா? எழுந்திரு ராது" என்று சொன்னதோடு இல்லாமல் அவளை தூக்கியும் நிறுத்தினாள்.

அப்பொழுது அழைப்பு மணி அடிக்கவும், "நான் போய் கதவை திறக்கிறேன்" என்று சந்தியா சென்றாள்.

ஏகாம்பரத்தின் அண்ணன் மகன ரவி வீட்டிற்குள் தயங்கி தயங்கி வந்தான்.

''ரவி அண்ணா பயப்படாமல் வா. நான் பார்த்துக் கிறேன் என்று சொன்னேன் இல்ல'' என்று கூறிய ராதிகா அவனை இழுத்துக் கொண்டு தனது பெற்றோர்கள் அருகில் வந்தாள்.

குழப்பத்துடன் பார்வையிட்டுக் கொண்டிருந்த பெற்றோர்களிடம் ராதிகா திருமணத்திற்கு முதல் நாள் நடந்ததையும், இன்று கணவனுக்கும் தனக்குமான பேச்சையும் பகிர்ந்து கொண்டாள்.

''ஹேய்!'' என்று சந்தியா ஆர்ப்பரிக்க, 'அட லூசே!' என்பது போல் அவளது பெற்றோர்கள் பார்த்துக் கொண்டு நின்றனர்.

''அடிப்பாவி! இதுக்கா அன்னைக்கு ஓடிப் போகப் பார்த்தே? இதுக்கு என்னை வேற கூட்டு சேர்த்துக் கிட்டியா?'' என்று ரவி அலறினான்.

அவன் ஏகாம்பரத்தை பார்த்து, ''சித்தப்பா நல்லாக் கேட்டுக்கோங்கோ. என் மேல எந்தத் தப்பும் இல்லை. இவ தான் எல்லாத்துக்கும் காரணம்'' என்று வேகமாக கூற,

''ஒரு போன் பண்ணி எங்களுக்கு சொல்லி இருக் கலாமேடா?'' என்று ஏகாம்பரம் ரவியிடம் கேட்டதும்,

''சித்தப்பா யாருக்கும் போன் பண்ணக் கூடாதுன்னு மிரட்டி சத்தியம் வாங்கினாள். என் போனை பறிச்சு வைச்சிக்கிட்டாள். இது பத்தாதுன்னு வேற யார் போனில் இருந்தாவது உங்களுக்கு தகவல் சொல்லிடுவே



னோன்னு பயந்து என்னை பாத் ரூம் கூடப் போக விடலை தெரியுமா?'' என்று அவன் அழுகுரலில் புலம்பினான்.

''அப்பா ப்ளீஸ் மன்னிச்சிடுங்கப்பா. ப்ளீஸ் ப்ளீஸ்...'' என்று ராதிகா கெஞ்ச,

''உன்னை மாப்பிள்ளை அறையாமலா விட்டார்?'' என்று ஏகாம்பரம் கேட்டார்.

''என்ன இது மாமனாரும் மாப்பிள்ளையும் மாறி மாறி ஒரே மாதிரி கேட்கிறீங்க. அவர் என்னடான்னா உங்க அப்பா அறையாமலா விட்டார் என்று கேட்டார்'' என்று சிணுங்கிக் கொண்டே சொல்ல, அனைவரும் அவளை கேலி செய்தார்கள்.

அதன் பின் நிதானமாக முடிவு எடுக்க வேண்டும் என்ற அறிவுரையை ஆளாளுக்கு அள்ளி வழங்கினாகள். கிடைத்தது வாய்ப்பு என்று சந்தியாவும் தன் பங்கிற்கு அறிவுரை வழங்க,

'எல்லாம் என் நேரம்' என்று ராதிகா நொந்து போய் அமர்ந்திருந்தாள்.

அதன் பின் ''இதை வந்த உடனே சொல்லுறதுக் கென்ன? எதுக்கு என் வயித்திலே தேவை இல்லாமல் புளியை கரைச்சே?'' என்று துர்கா கோபப்படவும்,

''ஒவ்வொருத்தருக்கா சொல்லி என் எனர்ஜியை வேஸ்ட் பண்ணணுமான்னு யோசிச்சேன். நான் அவர் கூட சண்டை போட்டுட்டு வந்ததா நீங்க நினைச்சீங் களா? அதனால தான் பேந்த பேந்த முழிச்சீங்களா?'' என்று கேட்டு ராதிகா சிரிக்கவும், துர்கா அவளுக்கு செல்லமாக ஒரு அடி கொடுத்தார்.

''நான் கிளம்புறேன்'' என்று ரவி கிளம்பத் தயா ரானதும்,

''சாப்பிட்டுவிட்டுப் போடா'' என்று துர்கா கூறினார்.

''வேண்டாம் சித்தி. நீங்க ரெண்டு பேரும் என்னை தூக்கி வளர்த்த பாசத்திலே என்னை திட்டாமல் விட்டுட்டீங்க. கண்ணா மாமாவும் அப்படியே விட்டு விடுவார் என்று சொல்ல முடியாதே! எதுக்கும் ஒரு நாலைஞ்சு மாசத்துக்கு அவர் கண்ணில் படாமலே இருக்கேன். அவர் வேற அய்யனார் சிலை மாதிரி வாட்ட சாட்டமா இருக்கார்'' என்று கூறிக் கொண்டே ஓடிப் போனான்.

துர்கா சந்தோஷத்தோடு மருமகனுக்கு இரவு உணவை தயாரிக்கச் சென்றார். சந்தியாவும் ராதிகாவும் அவருக்கு உதவுகிறேன் பேர்வழி என்று சமையல் அறையில் அமர்ந்து வம்பு பேசிச் சிரித்துக் கொண்டனர்.

இரவு எட்டரை மணிக்கு அழைப்பு மணி அடிக்கவும் யாரென்று பார்ப்பதற்காக ராதிகா எழுந்து போனாள்.

கதவைத் திறந்தவள் கண்ணனை கண்டதும், ''என்னங்க அதுக்குள்ளே வந்துட்டீங்க?'' என்று வியந்தாள்.

''உன்னை கூட்டிட்டு லேட் நைட்டிலே போக வேண்டா மென்று பார்த்தேன். நீ நம்ம வீட்டுக்கு வரலியா? இங்கேயே இருக்கப் போறியா?''

''இங்கேயே இருந்துவிடட்டுமா?'' என்று அவள் கெத்தாக கேட்க,

''தாராளமா இருந்துக்கோ. என்னவோ நஷ்டம் எனக்கு மட்டும் என்பது போல் பேசக் கூடாது'' என்றான்.



''வீட்டுக்குள்ளே வாங்க வாசலிலே வைச்சு எல்லாத் தையும் பேசணுமா?''

''அன்னைக்கு நான் மறுவீட்டு விருந்துக்கு வந்த போது பாலு தங்கச்சி ஊருக்கு போயிருந்தாள். இப்போ பார்த்து ஒரு ஹாய் சொல்லிட்டு வரேன்'' என்றதும்.

''நானும் வரேன்'' என்று கூறிய ராதிகா அவனுடன் சென்றாள்.

கண்ணனின் பிரச்சனை முடிவிற்கு வந்த விஷயம் பாலுவின் தங்கைக்கு தன் அண்ணனின் மூலம் தெரிய வந்திருந்தது. அதனால் அவள் இவர்கள் இருவரையும் வெகு உற்சாகத்துடன் வரவேற்றாள்.

''சாரி அண்ணி! நான் தான் கொஞ்சம் சொதப் பிட்டேன்'' என்று அவள் ராதிகாவிடம் மன்னிப்பு கேட்க,

''ஐயோ நீங்க வேறே! அதிகமா சொதப்பினது நான் தான். நீங்க நிதானமா செயல்பட்டு இருக்கீங்க. விஷயம் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காமல்... ரொம்ப தேங்க்ஸ்!'' என்று ராதிகா உளமார நன்றி உரைத்தாள்.

அங்கே ராதிகாவின் வீட்டில் அழைப்பு மணியை அடித்தது யார் என்று ஏகாம்பரம் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கதவையும் திறந்து போட்டுவிட்டு இந்த ராதிகா எங்கே போனாள் என்று பார்த்துக் கொண்டிருக்கும் போதே கண்ணனும் ராதிகாவும் பக்கத்து வீட்டில் இருந்து வந்தனர்.

''வாங்க மாப்பிள்ளை!'' என்று வரவேற்ற ஏகாம்பரம்.

''துர்கா மாப்பிள்ளை வந்துட்டார்'' என்று சமையல் அறை நோக்கி குரல் கொடுத்தார்.

துர்காவும் சந்தியாவும் வெளியே வந்து கண்ணனை வரவேற்றார்கள். வாசல் கதவை பூட்டிவிட்டு வந்த ஏகாம்பரம் கண்ணனின் கைகளை பிடித்துக் கொண்டு,

''என் பொண்ணு பண்ண தப்பை பெருசு பண்ணாமல் கல்யாணத்தை நல்லபடியா நடத்தினதுக்கு ரொம்ப தேங்க்ஸ் மாப்பிள்ளை'' என்று கூறினார்.

துர்கா தன் பங்கிற்கு கண்ணனிடம் ''எங்க பொண்ணு செஞ்ச காரியத்தை உங்ககிட்டே இருந்து மறைச்சது தப்பு தான். ஆனா எங்களுக்கு வேற வழி தெரியலை மாப்பிள்ளை'' என்று மன்னிப்பை வேண்ட,

''அச்சோ! அத்தை மாமா என்ன இது?'' என்று அவன் அலற,

''இதுக்கு பேரு தான் மன்னிப்பு கேட்கும் படலம் மாமா'' என்று கூறி சந்தியா நிலைமையை சகஜமாக்கினாள்.

''ப்ளீஸ் மாமா. நீங்க வயசிலே பெரியவங்க. என் கிட்டே மன்னிப்பெல்லாம் கேட்காதீங்க. முதல்ல விஷயம் கேள்விப்பட்ட போது எனக்கு வருத்தம் கோபம் எல்லாம் இருந்துச்சு. ஆனா அப்போ நான் இருந்த இடம் கடவுளின் சன்னதி. அதனால் தானோ என்னவோ கூடுதல் பொறுமையோடும் நிதானத்தோடும் என்னால இந்த விஷயத்தை கையாள முடிஞ்சது. அதனால நாம அந்தப் பெருமாளுக்கு தான் நன்றி சொல்லணும்'' என்று கண்ணன் அவர்களுக்கு சமாதானம் கூறினான்.

ஆளாளுக்கு மன்னிப்பு வேண்டவும் ராதிகாவிற்கு சங்கடமாய் இருந்தது.



'நான் யோசிக்காமல் அவசரத்தில் எடுத்த முடிவினால் என்னை பெத்தவங்க வயசிலே சின்னவரான இவரிடம் மன்னிப்பு கேட்கும்படி ஆகிடுச்சு.

இவர்கிட்டே அவங்க தலை குனிஞ்சு நிற்கும் போதே மனசு இவ்வளவு சங்கடப்படுதே! நான் நிஜமாகவே ஓடிப் போய் இந்தக் கல்யாணம் நின்னு போயிருந்தால்... அம்மாவும் அப்பாவும் எத்தனை பேர் முன்னாடி தலை குனிஞ்சு நின்னிருப்பாங்க?' என்று நினைத்துப் பார்க்கும் போதே அவளது உடல் நடுங்கியது.

'என்னால் இவர்கள் மூவரும் வெளியே தலை காட்ட முடியாமல் போயிருக்குமோ? சில மணி நேரங்கள் என் றாலும் எப்படி அப்படி ஒரு முடிவெடுக்கத் துணிந் தேன்?'

'நான்', 'என் வாழ்க்கை' என்று எப்படி சுயநலமாய் முடிவெடுத்தேன்? அம்மா, அப்பா, சந்தியா இவர்கள் யாரைப் பற்றியும் யோசிக்காமல் கிறுக்குத்தனம் பண்ண இருந்தேன். அதுவும் உண்மை இல்லாத விஷயத்துக் காக.

இனிமேல் எந்த முடிவெடுக்கிறதா இருந்தாலும் அதனோட எல்லா கோணத்தில் இருந்து ஆராய்ச்சி பண்ணி ஆற அமர முடிவெடுக்க வேண்டும். பதறாக காரியம் சிதறாதுன்னு பழமொழியே இருக்கே.

அதே மாதிரி கேட்ட விஷயம் உண்மையா பொய் யான்னு தெரியாமல் எந்த முடிவுக்கும் வரக் கூடாது. கடவுளே! தெரிஞ்சோ தெரியாமலோ நான் தப்பான முடிவு எடுத்து எனக்கு வேண்டப்பட்டவங்களுக்கு எல்லாம் கஷ்டம் கொடுத்திட்டேன்.

ஆனா பிரச்சனை பெரிசாகும் முன்னாடி எனக்கு நல்ல புத்தியை கொடுத்து, என்னை சரியான பாதையில் யோசிக்க வைச்சு நிலைமையை விபரீதம் ஆக விடாமல் காப்பாற்றிவிட்டாய். உனக்கு கோடான கோடி நன்றி!' என்று மானசீகமாக வேண்டினாள்.

மாமனார் மாமியாரை சமாதானம் பண்ணிக் கொண்டிருந்த கண்ணன் மனைவியின் வாடிப் போன முகத்தை கண்ணுற்றான். தனது தப்பை எண்ணி அவள் மனம் வருந்துவது அவனுக்கு புரிந்தது.

மாமனார் மாமியார் மற்றும் சந்தியாவிடம் ராதிகாவை பார்க்குமாறு கண் ஜாடை காட்டியவன்,

"அத்தை உங்க நிலைமையிலே நான் இருந்திருந்தாலும் இப்படி தானே நடந்துக்கிட்டு இருப்பேன். நாளைக்கே என் பொண்ணு இப்படி ஒரு தப்புப் பண்ணினால் மறைக்க தான் பார்ப்பேன்.

ஆனா ஒண்ணு என் பொண்ணு உங்க பொண்ணு மாதிரி இருக்க மாட்டாள். என்னை மாதிரி அறிவாளியா இருப்பாள். அதனால இப்படி தப்பான முடிவு எடுக்க மாட்டாள்" என்றான்.

அவன் தன் மனைவியை முட்டாள் என்று சீண்டியதும் அவன் எதிர்பார்த்த மாதிரியே அவள் கண்ணனை முறைத்துக் கொண்டு,

"நான் முட்டாளா? உங்க பொண்ணும் நீங்களும் புத்திசாலியா இருப்பீங்களா?" என்று கேட்டாள்.

இன்னும் பிறக்காத பிள்ளையின் புத்திசாலித்தனத்தை பற்றி அவர்கள் இருவரும் சண்டை இடுவதை பார்த்து அனைவரும் சிரிக்க நிலைமை இயல்பானது.



"வாங்க மாப்பிள்ளை சாப்பிடலாம். நேரத்தோட நீங்க வீட்டுக்கு போகணும்" என்று துர்கா அழைக்கவும் அனைவரும் சாப்பிட அமர்ந்தனர்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சந்தியா கண்ணனிடம், "மாமா நீங்க காலத்துக்கும் எனக்கு தாங்க்ஸ் சொல்லணும்" என்றாள்.

"எதுக்கு? நீ அப்படி என்ன பெருசா எனக்கு ஹெல்ப் பண்ணினே?" என்று அவன் வினவ,

சந்தியா ராதிகாவை சுட்டிக் காட்டி, "இவ பண்ணின குளறுபடி வெளியே வராமல் மறைச்சதுக்கு, சரியான நேரத்தில் அவளை கண்டுபிடிச்சதுக்கு... இப்படி சொல்லிக்கிட்டே போகலாம்.

உங்க கல்யாணம் எந்த சிக்கலும் இல்லாமல் நடந்துச்சுன்னா அதுக்கு நான் தான் முக்கியக்காரணம்" என்று பெருமை பீற்ற,

"உங்க அக்காவை என் தலையிலே கட்டி வைச்சு என்னை ஆயுசுக்கும் அவஸ்தை பட வைச்சுட்டே என்று உன்னை நான் திட்ட தான் செய்யணும்" என்று கண்ணன் கூறியதும்,

அருகில் இருந்த ராதிகா, "என்னைக் கட்டிக்கிட்டு அவஸ்தை படறீங்களா?" என்று கேட்டு அவனது இடுப்பில் கிள்ள,

"ஆ!" என்று அலறியவன், "பார்த்தியா உங்க அக்கா நான் சொன்னது சரின்னு நிரூபிக்கிறாள்" என்று கூறி சிரித்தான்.

"இவ என்னத்த பெருசா கிழிச்சாள். நான் என் ரவி அண்ணனன் கூட கொஞ்ச நேரம் கடை கடையா ஏறி

இறங்கினேன். அதுக்குள்ள எனக்கு புத்தி வந்தது. அவனை அப்பா செல்லுக்கு போன் பண்ணச் சொன்னேன். அவன் போன் போட்டான். போனை சந்தியா எடுத்தது தெரிஞ்சதும் அவன் 'ஹாய் சந்தியா!' அப்படின்னு சொன்னதுமே,

இவ காதிலே விழும்படியா 'ரவி அண்ணா யார்கிட்டே பேசிக்கிட்டு இருக்கே?' என்று கேட்டேன். இல்லாட்டி இவ கண்டுபிடிச்சு இருப்பாளாக்கும்?'' என்று ராதிகா நொடிக்க,

''அடிப்பாவி! நீ பெரிய தில்லாலங்கடியா இருப்பே போல! வீட்டுக்கு வரணும் என்று மனசு மாறினால் அப்படியே வர வேண்டியது தானே! அதுக்கு எதுக்கு இப்படி ஒரு போன்?'' என்று சந்தியா சிடுசிடுக்கவும்,

''இதையே தான் நானும் மதியம் கேட்டேன்'' என்று கண்ணன் கூறினான்.

''அது... நீங்களெல்லாம் என்னை கெஞ்சிக் கூப்பிட்டு நான் திரும்பி வந்தால் தான்... அவளே எப்படியோ மனசு மாறி வந்திருக்காள். நாம அவளை திட்டினாலோ அடிச்சாலோ திரும்ப ஓடினாலும் ஓடிடுவாள் என்று பயந்து என்னை அப்படியே விட்டு விடுவீங்கன்னு நினைச்சு அப்படி பண்ணினேன்'' என்று வழிந்து கொண்டே ராதிகா கூறவும்.

'அடிப்பாவி மகளே!' என்று அவளது பெற்றோர்கள் நினைத்துக் கொண்டார்கள். கண்ணன் இல்லாதிருந்தால் அவர்களது செய்கையே வேறாக இருந்திருக்கும்.

மாப்பிள்ளை தன் மனைவியின் செயல்களை எண்ணி சிரித்துக் கொண்டிருக்கும் போது நாம என்னத்தை



சொல்வது என்பது போல் இருவரும் அமைதி காத்தனர்.

''இதுக்கெல்லாம் மட்டும் உன் மூளை சரியா வேலை செஞ்சு இருக்கு ராது'' என்று தங்கை கேலியாய் பாராட்ட,

''தாங்க் யூ!'' என்று அந்தப் பாராட்டை ராதிகா ஏற்றுக் கொண்டாள்.

## 27

அவர்கள் சாப்பிட்டு முடித்துக் கிளம்பும் போது, ''மாமா நாளைக்கு கோயிலுக்கு போகிறதுக்காக மதியம் இரண்டரை மணி போல உங்க வீட்டுக்கு வருவோம். நீங்க எல்லோரும் ரெடியா இருங்க'' என்று கூறிவிட்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றான்.

ராதிகாவும் அனைவரிடமும் விடைபெற்று கிளம்பினாள். அனைவரும் மலர்ந்த முகத்துடன் அவளை வழி அனுப்பி வைத்தார்கள்.

அவனது வண்டியில் இரண்டு பக்கமும் கால் போட்டு அவள் அமர்ந்ததும் அவன் வண்டியை கிளப்பினான்.

அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டே பயணிக்க அவர்கள் வீட்டை நெருங்கும் போது ராதிகா கணவனிடம்,

''அப்பவே கேட்கணும் என்று நினைச்சேன். நாம கோவிலுக்கு காலையிலே போகலையா? மதியதுக்கு மேலா போகப் போகிறோம். ஏன்?'' என்று கேட்டாள்.

''எனக்கு இன்னைக்கு நைட் டியூட்டி இருக்கு மைமா. அதனால காலையிலே கிளம்புவது கஷ்டம்.''

''அப்படின்னா என்னை வீட்டிலே விட்டுட்டு நீங்க கடைக்கு போயிடுவீங்களா?'' என்று கேட்டவள்.

அவன் பதில் சொல்லும் முன்பு, ''நைட்டிலே யாருங்க கடைக்கு வந்து பொருள் வாங்குவாங்க?'' என்று கேட்டதும் கண்ணன் அடக்க மாட்டாமல் சிரித்தான்.

அவனது சிரிப்பு அவன் என்ன சொல்ல வந்தான் என்பதை அவளுக்கு விளக்கியது. அவளுக்கு வெட்கம் வந்தது. தன் முகத்தை கணவனின் முதுகில் புதைத்துக் கொள்ள முயல,

''மைமா ஒழுங்கா உட்காரு. இல்லைன்னா அன்னைக்கு மாதிரி உன்னை ஆட்டோவிலே ஏத்தி விட்டு விடுவேன்'' என்று போலியாய் மிரட்டினான்.

அவன் அவ்வாறு சொல்லும் போது அவனது வண்டி அவர்களின் தெருவுக்குள் நுழைந்திருந்தது.

''ஆட்டோவிலே ஏத்துவீங்க ஏத்துவீங்க. கேட்கிறவள் கேணையா இருந்தா ஆத்திசூடியை எழுதினது பாரதியார் என்று சொல்லுவீங்க.''

''ஹேய் மைமா! இது சினிமா பட டயலாக் தானே?! ஆனா அது இப்படி வராதே.''

''சினிமா பட வசனத்தை தான் சொல்லணுமா என்ன? இந்த ராதிகாக்குன்னு சொந்தமா மூளை இல்லை? அறிவு இல்லை?'' என்று அவள் பெருமை பீற்ற,

''நீ ஓடிப் போன விஷயத்திலேயே உன் அறிவை பற்றியும் மூளையை பற்றியும் எனக்கு தெளிவா



தெரிஞ்சது மைமா'' என்றதும் அவள் ஏதோ சொல்லத் தொடங்க...

''நாம நம்ம ரூமுக்குள்ளே போனப்பறம் பேசுவோம். அம்மாவையும் கயலையும் தொந்தரவு பண்ணாமல் மாடியேறுவோம். என்கிட்டே சாவி இருக்கு. சத்தம் போடாமல் என் பின்னாலே வா'' என்று எச்சரித்து விட்டு மெதுவாக கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

தங்களின் படுக்கை அறைக்குள் நுழைந்ததும், ''எங்கே உன் அறிவுக்கு சாம்பிள் காட்டு'' என்றான்.

''சாம்பிளா? அப்படின்னா?''

தனது உடையை மாற்றிக் கொண்டே, ''அதான்மா சொந்தமா டயலாக் சொல்ல முடியும் என்று சொன்னியே. எடுத்து விடு'' என்றதும்,

''கேட்கிறவன் கேணையா இருந்தால் ரஜினிகாந்த் தம்பி விஜயகாந்த் என்று சொல்லுவீங்க'' என்றாள்.

''ம்ம்ம் அப்புறம்....''

''நான் என்ன கதையா சொல்லிக்கிட்டு இருக்கேன்?'' என்று கடுப்பானவள்.

''எங்க வீட்டுக்காரர்கிட்டே போய் ரொமான்ஸ் என்று சொன்னா அவர் ஒரு டன் வேணுமா? இல்லை ரெண்டு டன் வேணுமான்னு கேட்பார்'' என்றாள்.

''ஓ! உன் ஹஸ்பண்ட் சில்லரை வியாபாரி கிடையாதா? மொத்த வியாபாரியா? ஒரு வேளை ரொமான்ஸ் மட்டும் மொத்த வியாபாரம் பண்ணுறாரோ? அவர்கிட்டே அளவுக்கு அதிகமா ஸ்டாக் இருக்குன்னு சொல்லுறியா?'' என்று அவன் திருப்பி கேட்டதும் அவள் அவனை முறைத்தாள்.

"ஓ. கே கூல் மைமா. ஒரு விஷயம் மட்டும் கேட்டுக் கிறேன்'' என்றவன்.

"அன்னைக்கு நீ நம்ம கடைக்கு வந்த போது எதுக்காக உன் பிரண்டை பார்த்து ஓடி ஒளிஞ்சே?'' என்று கேட்டான்.

"அது அவ்வளவு முக்கியமான விஷயமா? இவ்வளவு சீரியசா முகத்தை வைச்சுக்கிட்டு கேட்கிறீங்க?'' என்று குழப்ப முகம் காட்டியவள், கணவனது கேள்விக்கு பதில் சொல்லவும் தவறவில்லை.

"அவ என் கூட பி.எஸ்.ஸி படிச்சாள். அவங்க அப்பா வுக்கு வேறு ஊருக்கு டிரான்ஸ்பர் ஆனதால சென்னையை விட்டு போயிட்டாள். அதனால அவ கூட கான்டாக்ட் விட்டு போச்சு.

அவ என்கிட்டே எப்போ பார்த்தாலும் நீ படிச்சு முடிச்சு வேலைக்கு போக மாட்டே என்று சொல்லுவாள். எங்க அப்பா அம்மா வேலைக்கு அனுப்ப சம்மதிக்கலைன்னு காரணம் சொல்லிக்கிட்டு நீ வீட்டோட இருக்கியா இல்லையான்னு பார்ப்போமா என்று சவால் விடுவாள்.

நானும் என் கல்யாணத்துக்கு முன்னாடி வேலைக்கு போய் காட்டுறேன் என்று சவால் விட்டேன். என் சவாலில் தோற்றுப் போனேனா அதான் அவளை பார்த்து அந்த ஓட்டம்.

இப்ப சொல்லுங்க. என்ன விஷயம்?'' என்று கேட்டதும் அவன் தனது மனநிலையை விளக்க,

"ஓ மை கடவுளே! ஒண்ணு இவருக்கு கொஞ்சம் புத்தியை கொடு. இல்லை எனக்கு அதிகமான பொறுமையை கொடு'' என்று வேண்டிக் கொண்டாள்.



அவளது காதை பிடித்த வலிக்காமல் திருகியவன், "உனக்கு சம்பாதிக்கணும் என்று ஆசையா இருக்க மைமா?'' என்று கேட்டான்.

"நான் வேலைக்கு போகட்டுமாங்க?'' என்று அவள் உற்சாகத்துடன் தொடங்கவும்.

"ஆபீஸுக்கு போறது சரி வராது. நினைச்ச நேரம் லீவு போட முடியாது. நாளைக்கு குழந்தை குட்டின்னு பிறந் திட்டால் கஷ்டம்'' என்று அவன் அடுக்கவும் அவளது முகம் ப்யூஸ் போன பல்ப்பாக மாறியது.

"இதுக்கு எதுக்கு கேட்கணுமாம்?'' என்று அவள் முணுமுணுக்க.

"நாம நம்ம இடத்திலே டிபார்ட்மெண்டல் ஸ்டோர் கட்டுறது உனக்கு தெரியும் தானே? சொந்த இடத்திலே கடை ஆரம்பிச்சதும் இப்போ இருக்கிற கடையையும் மூட வேண்டாம் என்று பார்க்கிறேன்.

எனக்கு நம்பிக்கையான இன்னொரு ஆள் இருந்தால் வசதியா இருக்கும். அதனால் நீயும் என் கூட சேர்ந்து பிசினஸ் பண்ண. உனக்கு தேவையான சமயத்தில் நீ பிரேக் எடுத்துக்கலாம்'' என்று அவன் விவரிக்கவும்.

அவனது கழுத்தில் தனது கைகளை மாலையாகக் கோர்த்துக் கொண்டு அவனது கன்னத்தில் அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்து தனது சம்மதத்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டாள்.

அவன் அவளது கன்னத்தை மென்மையாக வருடிக் கொடுத்தான்.

"எனக்கு பாரதியார் கவிதைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். நீங்க தான் என் கணவன் என்று முடிவான

உடனே நான் பாரதியார் எழுதிய கண்ணன் பாட்டை தேடிப் பிடிச்சுப் படித்தேன். அதிலே வந்த

**இணைவாய் எனதா வியிலே – கண்ணா!**

**இதயத் தினிலே யமர்வாய் – கண்ணா!**

அப்படிங்கிற வரிகள் எனக்கு ரொம்ப பிடிச்சது'' என்று காதல் பொங்கக் கூறினாள்.

''அப்போ உன் இதயத்திலே நான் அமர்ந்திட்டேனா?'' என்று அவன் கேட்டதும்,

''ம்ம்ம் எப்பவோ!'' என்று அவள் அழுத்தம் திருத்தமாகக் கூற,

அவன் வழக்கம் போல் அவளை சீண்டுவதற்காக, ''என்ன ஏசி மாட்டி இருக்கே? விண்டோ ஏசியா? ஸ்பிளிட் ஏசியா?'' என்று கேட்டான்.

அவள் என்னவென்பது போல் பார்க்க...

''இதயத்திலே குடி வரணும் என்றால் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் சூட் ரூம் மாதிரி இருந்தால் தான் குடி போகணும் என்று என் வைஃப் சொல்லி இருக்காள். அதான் கேட்டேன்.''

''உங்களை...'' என்று அவள் பல்லைக் கடித்துக் கொண்டு இரண்டு அடி வைக்க,

''நோ வன்முறை'' என்று கூறிக் கொண்டே அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

ராதிகாவின் இதயத்தில் அமர்ந்தவனின் வாழ்வில் இனி என்றும் சந்தோஷம் மட்டுமே நிலைத்திருக்க அந்த மாயக் கண்ணன் அருள்புரியட்டும்!